பரணர்
கேட்ட
பரிசு
டாக்டர் பூவண்ணன்
வானதி பதிப்பகம்

பரணர் கேட்ட பரிசு

டாக்டர் பூவண்ணன்

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை—17.

முன்னுரை

சேர மன்னர்களின் திலகமாகத் திகழ்பவன் செங்குட்டுவன். அவனது சிறப்பினைக் கூறுகிறது, பதிற்றுப் பத்தின் ஐந்தாம் பத்து. இதைக் 'கரணமமைந்த காசறு செய்யுட்' பரணர் பாடியுள்ளார். பரணரின் இப்பத்துப் பாடல்களை ஆதாரமாகக் கொண்டே 'கொல்லிமலைச் செல்வி' வரலாற்று நாவலை எழுதினேன்.

மிகப் பல ஆண்டுகளுக்கு முன்னர், நண்பர் எம்.கே. இராசசேகரன் தாம் நடத்திய 'தமிழ்த்தேன்' என்னும் இதழில் நான் ஒரு தொடர்கதை எழுதவேண்டும் என்று வற்புறுத்தினார். அவர் விருப்பத்தையேற்று, 'கொல்லிமலைச் செல்வி'யைத் தமிழ்த்தேனில் எழுதி வந்தேன். பாதி நாவல் முடியும்போது, இதழ் நின்றுவிட்டது. நானும் நாவலை அது நின்ற இடத்திலேயே விட்டுவிட்டேன்; முடிக்க முயல வில்லை.

அத்தொடர்கதையைப் படித்த நண்பர்கள் சிலர் என்னைப் பார்க்கும்போதெல்லாம், "கொல்லிமலைச் செல்வி அருமையான கதை. அதை முடித்து நூலாக வெளியிடலாமே!" என்று யோசனை கூறினர். மேலும் சிலர், "நல்ல நாவலைப் பாதியில் நிறுத்திவிட்டீர்களே! உடனே முடியுங்கள்" என்று எடுத்துச் சொன்னதுடன் இடித்தும்

கூறினர். அதன் பின்னரே நான் சுறுசுறுப்புப் பெற்று எழுதத் தொடங்கினேன். நாவல் முடிவுபெற்றது.

இன்று உங்கள் கரத்திலே 'கொல்லிமலைச் செல்வி' என்னும் முழு நாவல் "பரணர் கேட்ட பரிசு" என்ற பெயர் மாற்றம் பெற்று வீற்றிருப்பதற்கு என் இனிய நண்பர்களின் வேண்டுதலும் தூண்டுதலும் காரணம். அவர்களுடைய அன்பிற்கும் ஆர்வத்திற்கும் ஆதரவிற்கும் என் இதயங்கனிந்த நன்றியை எத்தனை முறை சொன்னாலும் தகும்.

நாவலை முதலில் இதழில் வெளியிட்ட நண்பர் இராசசேகரனுக்கும், இப்போது முழு நாவல் நூலாக வெளியிடும் வானதி பதிப்பகத்தினர்க்கும் என் நன்றி!

அன்பன்,

பூவண்ணன்

கோவை

பரணர் கேட்ட பரிசு

அத்தியாயம் ஒன்று

வாட்போர்

கருவானத்தைக் கிழித்துக்கொண்டு ஒளிரும் மின்னலைப் போல வாள்கள் பளிச்சிட்டன. இடியின் பெருமுழக்கத்தைப் போல வாளோடு வாள் மோதும் ஒலி கேட்டோரை நடுங்கச் செய்தது. புலியுடன் புலி பொருவது போல இருவீரரும் அந்தப் போர் மண்டபத்தின் நடுவில் போரிட்டுக்கொண்டிருந்தனர். சுற்றிலும் அமர்ந்தவாறும், நின்றவாறும் இந்தக் கடும் போரைக் கண்டவர்கள், தாமே போரிடும் உணர்ச்சி பெற்றனர். சிலர் போரின் கொடுமையைக் காண அஞ்சிக் கண்ணை மூடிக்கொண்டனர். 'டங்...டங்' என்று வாள் மோதும் ஒலியைத் தவிர வேறு ஒலி அந்த மண்டபத்தில் கேட்கவில்லை.

போரைக் காண்பதில் தம்மை மறந்து ஈடுபட்ட மக்கள் போர் மண்டபத்துள் இருவர் புகுந்ததைக் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால், "அரசர்க்கரசே வருக! புலவர் பெரும, வருக" என்று அகமும் முகமும் மலர வரவேற்றிருப்பர். அவ்விருவரும் அமரும் வரை எழுந்து நின்று மரியாதையை வெளிப்படுத்தி இருப்பர். இப்போதோ இருவரும் கவனிப்பாரற்றுப் போர் மண்டபத்தில் நுழைந்தனர்.

நுழைந்த அரசர் அந்தச் சேரநாட்டு வீரர்களின் உயிருக்கு உயிரான செங்குட்டுவன். குமரி முதல் இமயம் வரை அக் கொற்றவனின் புகழ் பரவி இருந்தது. அந்த அரசரைத் தம் இறைவனாகக் கருதி வணங்கி வாழ்த்தும் மக்கள்தாம் அன்று அவர் தம் அருகே நிற்பதையும் உணராமல் போரின் ஒவ்வோர் அசைவையும் ஆவலும் அச்சமும் போட்டியிடக் கவனித்தனர்.

சேரமன்னர் செங்குட்டுவனின் அருகே நின்ற புலவரும் சாதாரணமானவர் அல்ல. அவர் தம்மைப் பாடமாட்டாரா என்று தார் வேந்தர்கள் தவமிருக்கும் பாவேந்தர் பரணர்.

காவலரும் பாவலரும் கவனிப்பாரற்று அந்தப் போர் மண்டபத்தில் நின்றனர். மண்டபத்தின் ஒருபுறத்தில் அரச குடும்பத்தினர் அமரும் ஆசனங்கள் இருந்தன. செங்குட்டுவனும் செந்தமிழ் வல்ல பரணரும் அங்கே சென்று அமர்ந்தனர். போரின் வேகமும் விறுவிறுப்பும் அவர்களையும் கவர்ந்தன.

செங்குட்டுவன் போர் புரியும் இருவரையும் பார்த்தார். ஒருவன், செங்குட்டுவன் உள்ளத்தில் எண்ணுவதை உடனே செய்து முடிக்கும் வல்லமை பெற்ற வில்லவன் கோதை; சேரநாட்டுப் படைத்தலைவன். மற்றவன்? அவனையா அவருக்குத் தெரியாது! மணமாகிப் பல்லாண்டுகள் மகப் பேறின்றி வாடி வருந்திய போது, அவர் வருத்தம் துடைத்த மைந்தனல்லவா, அவன்! வேழம் நிறைந்த சேரநாட்டை ஆளப்போகும் இளவரசனாயிற்றே! வீரத்தில் புலியாய், வேகத்தில் புயலாய்ச் சீறிப் போரிடும் அந்தக் குட்டுவன் சேரலைப் பெற்ற தந்தைக்கே தெரியாமல் போகுமா? செங்குட்டுவன் தம் மகனைப் பெருமிதத்தோடு பார்த்தார்.

பண்பட்ட படைத்தலைவனுக்கும் பதினெட்டாண்டு இளைஞனுக்கும் போர். இருவரில் யாருக்குத் திறம் அதிகம்?

வெற்றிபெறக் கூடியவன் எவன்? போர்க்கலையில் நிகரற்ற செங்குட்டுவனால் கூடத் திடமாகச் சொல்ல முடியவில்லை.

ஒரு கையால் உயர்த்த முடியாத பெரு வாளால் இருவரும் பொருதனர். சக்கரம் போலச் சுற்றிச் சுழன்று பொருதனர். ஒருகணம் குட்டுவன் சேரல் நிலை தளர்ந்து சரிவது போலிருக்கும். மறுகணம் குட்டுவன் கோதை பின் வாங்கிச் செல்ல முன்னேறிப் பொருவான். போர் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தது.

திடீரென்று செங்குட்டுவன் தான் வந்து எவ்வளவு நேரமாகியிருக்கும் என்று நினைத்துப் பார்த்தார். 'நிச்சயம் இரண்டு நாழிகைக்கு மேலிருக்கும். நாம் வருவதற்கு முன்னேயே போர் நடந்துகொண்டிருந்தது. எவ்வளவு நேரமாக நடக்கிறதோ?' செங்குட்டுவன் வில்லவன் கோதை யையும் குட்டுவன் சேரலையும் பார்த்தார். இருவரும் வியர்வைக் கடலில் மூழ்கியவாறு போரில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். இனித் தொடர்ந்து போரிட்டால் என்ன நடக்குமோ?

செங்குட்டுவன் திடீரென்று எழுந்தார். போர் நடக்கும் இடத்தை நோக்கி நகர்ந்தார். "குட்டுவா! வில்லவா" என்று உரத்த குரலில் அழைத்தார். அழைத்தவாறு அவர்களை நெருங்கிச் சென்றார். மீண்டும் "குட்டுவா, வில்லவா" என்று அழைத்தார்.

வில்லவன் கோதையின் செவியில்தான் வேந்தனின் குரல் முதலில் நுழைந்தது. ஓங்கிய வாளை இறக்கும் முன் அரசரைப் பார்த்துவிட்டான். உடனே வாளைத் தாழ்த்திக் கொண்டான். குட்டுவன் சேரல் தன் வேகத்தைக் கட்டுப் படுத்த முடியாமல் பாய்ந்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் செங்குட்டுவன் பாய்ந்து சென்று குட்டுவனின் கரத்தைப்

பற்றினார். அப்போதுதான் குட்டுவன் சேரல் தன்னிலை யடைந்தான்.

போர் நடக்கும் இடத்தில் மூன்றாம் மனிதராக ஒருவர் நிற்பதை மக்கள் பார்த்தனர். அப்போதுதான் அவர்களும் போரின் பிடியிலிருந்து விடுபட்டு உணர்ச்சி பெற்று எழுந்து நின்றனர்.

குட்டுவன் சேரலைப் பற்றிய செங்குட்டுவன், "குட்டுவா, வில்லவா, உங்கள் போரைக் கண்டேன், இரட்டிப்பு மகிழ்ச்சி பெற்றேன். வில்லவா, நீ என் படைத்தலைவன் அல்லவா? அதனால் உன் வீரத்தைக் கண்டு மகிழ்ந்தேன். உன்னோடு ஏற்றத் தாழ்வில்லாமல் போரிட்ட குட்டுவன் என் மகன் அல்லவா? அதனால் என் மகிழ்ச்சி இருமடங்காகப் பெருகியது. உங்கள் ஆற்றலை நம் பகைவரிடம் காட்டலாம். அதனால் இப்போது ஓய்வு பெறுங்கள்" என்றார்.

"அரசே, நம் இளவரசர் இன்று என்னுடன் போராட விரும்பினார். களத்தில் அவரும் நானும் மோத முடியா தல்லவா? அதனால் இங்கே போரிட்டோம். வெறும் விளையாட்டுப் போர்தான். ஆனால் அரசே, எத்தனையோ களங்களைக் கண்ட நான், மாவீரர்களைக் கொன்று வென்ற நான் இன்று நம் இளவரசரிடம் சிக்கித் திண்டாடினேன். என்னை நான் காப்பாற்றிக் கொள்ளவே இவ்வளவு சிரமப்பட்டேன். இவரை வெல்ல முடியுமா? முடியாது அரசே! முடியாது! குட்டுவன் சேரலை வெல்லக் கூடிய வீரன் இந்தக் குவலயத்தில் இல்லை" என்று கூறினான் வில்லவன் கோதை. அவன் குரலில் உண்மையான பெருமையும் பூரிப்பும் இழைந்தன.

தன் மகனின் புகழைக் கேட்ட செங்குட்டுவன் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார். என்றாலும், "வில்லவா, குட்டுவன் நல்ல

வீரன்தான்! ஆனால் அவன் இளைஞன். நீ அவனைப் போல இருமடங்கு வயதானவன். உன் வயது மிகுதியைப் பயன்படுத்தியே குட்டுவன் எதிர்த்து நின்றான். அவ்வளவு தான். உன் வீரமும் இளவரசனின் வீரமும் சேரநாட்டுப் புகழை சகமெலாம் பரப்பும், போங்கள்! போய் உடை மாற்றிக்கொண்டு வாருங்கள்" என்றார் செங்குட்டுவன்.

அரசர் சொன்னவாறு கோதையும் குட்டுவனும் கை கோத்தவாறு உடை மாற்றிக்கொள்ளச் சென்றனர். அரசர் பரணர் இருந்த இடத்திற்குச் சென்றார். மக்கள் அப்போது தான் பரணரையும் பார்த்தனர்.

அரசர் பரணரை அழைத்துக்கொண்டு போர் மண்டபத் தின் பின்புறம் சென்றார்.

வீரர்கள் தம் போர்த் திறமையை வெளிப்படுத்தும் இடம் போர் மண்டபம். மண்டபத்தின் பின்னே சின்னஞ்சிறு சோலை இருந்தது. அரசரும் புலவரும் மண்டபத்தின் பின் வாயில் வழியே வெளிவந்து, மலர்க்கரத்தால் வரவேற்கும் சோலைக்குள் நுழைந்தனர்.

"புலவரே, குட்டுவன் சேரலின் தீரத்தைப் பார்த்தீர்களா? வில்லவன் கோதையை எதிர்த்து நிற்பது எவ்வளவு சிரம மானது என்பது எனக்குத் தெரியும். நானும் பலமுறை வில்லவனோடு விளையாட்டுக்காகப் போரிட்டு இருக் கிறேன். அப்பப்பா! அவன் வாளுக்குத்தான் எத்தனை வேகம்! அவனோடு சரிக்குச் சரியாகப் போரிட முடியாமல் தவித்துப் போயிருக்கிறேன். அப்படிப்பட்ட பெரு வீரனோடு இளைஞன் குட்டுவன் எப்படிப் போரிட்டான்! புலவரே, என் மனம் பூரிக்கிறது" என்று கூறினார் செங்குட்டுவன்.

"செங்குட்டுவா, உன் மகன் பிறகு எப்படி இருப்பான்? புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? சேரர் குடியே வீரர்

குடி! குட்டுவன் சேரல் உன் முன்னோர் புகழையும் உன் புகழையும் வென்று சிறப்புறுவான். இவன் புகழுக்கு ஏற்றாற் போல என் புலமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போது தானே தக்கபடி பாடி மகிழலாம்'' என்றார் பரணர்.

புலவரின் புகழுரையைக் கேட்டுச் செங்குட்டுவன் மகிழ்ச்சிக் குன்றின் சிகரத்தில் நின்றார். அதே நேரத்தில் தம் போருடை களைந்து, தமக்குரிய சீருடை அணிந்து வில்லவன் கோதையும் குட்டுவன் சேரலும் சோலைக்குள் நுழைந்தனர். பரணரைக் கண்டதும் அவரை வணங்கினர். பரணர் வாழ்த்தினார்.

“குட்டுவா, உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்'' என்றார் மன்னர்.

“அதற்குத் தாங்கள் வருவதா? சொல்லியிருந்தால் நானே வந்திருப்பேனே'' என்றான் குட்டுவன் சேரல்.

“நீயா?'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தார், செங்குட்டுவன் “நீயா வந்திருப்பாய்? எங்கே இன்னொரு முறை சொல் பார்க்கலாம்! நான் வந்தே இரண்டு நாழிகையாய்க் காத்திருந்தேன். நீ என்னைப் பார்த்தாயா! இல்லை வேறு யாராவது கவனித்தார்களா? நானே உங்கள் போரில் தலையிட்டுத் தடுத்தேன். இல்லையென்றால் நாள் முழுவதும் போரிட்டுக் கொண்டிருப்பாய். உன்னை அழைக்க நான் அனுப்பும் ஆள் காத்துக்கொண்டிருந்திருப்பான், இல்லையா குட்டுவா?''

குட்டுவன் சேரல் நாணி நின்றான். “என்னைப் பார்க்க வந்ததாகக் கூறினீர்களே—'' என்று இழுத்தான்.

“சொல்கிறேன். நீ நாளைதானே வேட்டைக்குப் போவதாகச் சொன்னாய்?''

"ஆம் தந்தையே! நாளைக் காலை புறப்பட்டுச் செல்லப் போகிறேன். இந்த முறை ஒரு பத்து நாள் மலைக்காட்டிலே தங்கி வரத் திட்டமிட்டுள்ளேன். இதையும் தங்களிடம் தெரிவித்துள்ளேனே."

"ஆமாம்! ஆமாம்! தெரிவித்தாய். அதில் ஒரு சிறு மாற்றம் செய்யத்தான் உன்னைத் தேடி வந்தேன். நாளை வெள்ளிக்கிழமையல்லவா? அடுத்த வெள்ளிக்கிழமை மாலைக்குள் வஞ்சி நகரத்துக்குத் திரும்பிவிடு. பத்து நாள் வேட்டையை ஏழு நாளுக்குக் குறைத்துக் கொள்."

செங்குட்டுவன் சொன்னார். குட்டுவன் சேரல் யோசித் தான். பத்து ஏழாகக் குறைந்ததற்குக் காரணம் என்ன? புரியவில்லை.

"குட்டுவா, அடுத்த வெள்ளியன்று நீ அரண்மனைக்குள் நுழைந்தால் அங்கே ஓர் அதிசயம், ஓர் அற்புதம் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கும்" என்றார் செங்குட்டுவன்.

"அதிசயம்— அற்புதம்! அது என்ன தந்தையே?"

"அதை அன்றைக்கு நீயே தெரிந்து கொள்வாய்" என்று சொன்ன செங்குட்டுவன், "புலவரே, நீங்களும் உங்கள் பாண்டி நாட்டுப் பயணத்தைத் தள்ளிப் போடுங்கள். ஒரு திங்கள் வரை நீங்கள் எங்கும் செல்லக் கூடாது. இங்கேயே தங்கியிருக்க வேண்டும்" என்றார்.

"உன் விருப்பமே என் முடிவு" என்று சுருக்கமாகச் சொன்னார் பரணர்.

குட்டுவன் சேரலின் மனம் அரசன் சொன்ன அதிசயத்தை அற்புதத்தை நினைத்தது. 'அது என்னவோ? அதைத் தெரிந்துகொள்ள எட்டு நாளா காத்திருக்க வேண்டும்' என்று எண்ணிய இளவரசன் அதை அன்றே, அப்போதே தெரிந்துகொள்ளத் துடித்தான்.

அத்தியாயம் இரண்டு

சினம் கொண்ட புலி

உலகத்தின் அழகையெல்லாம் சிறைப்பிடித்து வைத்தது போன்ற அழகான அடர்ந்த காடு! எங்கு நோக்கினும் எழில்! இயற்கை எழில்! பல்வேறு இசைக் குழுக்கள் அருகே யிருந்து இசை முழக்குவது போலப் பல்வகைப் பறவைகள் குரலெழுப்பின. பல் நிறத்து மலர்கள் பூத்துக் குலுங்கின. பறவைகளின் இசையைச் செவிமடுப்பதா? மலர்களின் நறுமணத்தை நுகருவதா, காட்டின் அழகைக் கண்டு களிப்பதா என்று திகைக்கச் செய்யும் அந்தக் காட்டின் நடுவே பேரியாறு பொங்கிப் பெருகி ஓசையிட்டுப் பாய்ந்தது.

பேரியாற்றங் கரையில் இருந்த பாறையொன்றில் குட்டுவன் சேரல் உட்கார்ந்தான். கையிலிருந்த வில்லை அருகே சாய்த்து நிறுத்தினான். முதுகில் தொங்கிய அம்புகள் நிறைந்த ஆவத்தைக் கழற்றிப் பாறையில் வைத்தான். காலை யிலிருந்து அதுவரை வேட்டையாடிக் களைத்திருந்தான். அதனால் அ்தே பாறையில் களைப்புத் தீரப் படுத்தான்.

மேலே நீலவானம்! கானகத்து மரங்கள் வானகத்தை மறைத்து வளர்ந்து நின்றன. அதனால் அவற்றினிடை யிடையே வானம் தீவுகள் போலத் தெரிந்தது. அந்த அழகைக் குட்டுவன் ரசிக்கவில்லை. கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தான்.

அன்று காலை வேட்டைக்குப் புறப்பட்ட குட்டுவனுடன் பல வீரர்கள் வந்தனர். குட்டுவனின் வில் வன்மையைக் கண்டு அவர்கள் திகைத்தனர். அவன் அடித்து வீழ்த்திய விலங்குகளை எடுத்துக்கொண்டு சென்றனர். குட்டுவன் வேட்டையை நிறுத்திவிட்டு அனைவரையும் தங்கியிருந்த இடத்திற்கு அனுப்பிவிட்டான். தானும் சற்று நேரத்தில் வருவதாகச் சொல்லிவிட்டுத்தான் ஆற்றங்கரைப் பாறையில் அமர்ந்தான்.

அவன் மனம் தந்தை சொன்ன அதிசயத்தைப் பற்றி நினைத்தது. அது என்ன என்பதை அறிந்துகொள்ள அவன் எவ்வளவோ முயன்றான். தாய் இளங்கோ வேண்மாளையும் கேட்டான். அவள் "ஏன் அவசரப்படுகிறாய்? பொறுத்திருந்து பார்" என்று புன்னகையுடன் கூறிவிட்டாள். குட்டுவனின் உள்ளம் பொறுமை பெறவில்லை. அப்போதும் அதைப் பற்றியே சிந்தித்தது.

கண்ணை மூடியவாறு எண்ணமிட்ட குட்டுவனின் செவியில் ஏதோ ஓர் ஓசை கேட்டது. குட்டுவன் சிந்தனையை நிறுத்தி உற்றுக் கேட்டான். அது குறிஞ்சி நிலம். அதனால் பேரியாறு பேரிரைச்சலோடு இழிந்து சென்றது. அந்த இரைச்சலோடு வேறு ஏதோ ஓர் சத்தம்! அது என்ன?

குட்டுவன் எழுந்து உட்கார்ந்தான். மீண்டும் அவன் உற்றுக் கேட்டான். அவன் முகத்தில் வியப்பு நிறைந்தது. அவன் செவியில் விழுந்த ஓசை புலியின் உறுமலைப் போல இருந்தது. குட்டுவன் ஓசைபடாமல் எழுந்து நின்றான். சுற்று முற்றும் பார்த்தான். சற்றுத் தூரத்தில் ஆற்றின் கரையிலிருந்த பாறையின் மேல் ஒரு புலி நின்றிருந்தது. குட்டுவன் வியப்போடு அதை நோக்கினான்.

ஆற்றின் இடையே ஒரு பெரும் பாறை. ஆறு அதை சுற்றிக்கொண்டு சென்றது. ஆற்றின் நீர் பாறையின் உச்சியைத் தொட்டுக்கொண்டிருந்தது. கரையிலிருந்த பாறைக்கும் ஆற்றின் இடையே இருந்த பாறைக்கும் இடைவெளி அதிகமில்லை. புலி ஆற்றுப் பாறையை நோக்கித் தாவியது. மறுவிநாடி ஆற்றினிடையே இருந்த பாறையில் நின்றது. பிறகு பாறையைத் தொட்டுச் செல்லும் நீரை நாவால் சுவைத்தது.

குட்டுவன் புலியின் செயலைக் கண்டான். புலி நீர் குடிக்க நேர்த்தியான இடத்தைத் தேர்ந்தெடுத்ததைக் கண்டு வியப்பதற்குப் பதில், அந்த விவேகம் நிறைந்த விலங்கைத் தன் வில்லுக்கு இரையாக்க விரும்பினான். உடனே தன் வில்லை இடக்கையில் எடுத்தான். வலக்கையால் ஆவத்தி லிருந்து ஒரே ஓர் அம்பை எடுத்துக் கொண்டான். மறு விநாடி புலியிருக்கும் இடத்தை நோக்கிப் பூனையைப் போலப் பதுங்கிச் சென்றான்.

முன்பு புலி கரையில் நின்ற பாறையைக் குட்டுவன் அணுகுவதற்கும் புலி நீர் குடித்து முடிப்பதற்கும் சரியாக இருந்தது.

குட்டுவன் விரைந்து பாறை மீது ஏறினான். வில்லில் அம்பை இணைத்தான். அதைத் தன் காது வரை இழுத்துப் புலியின் கழுத்துக்குக் குறி வைத்தான். இவ்வளவும் இமைக்கும் நேரத்தில் நடந்தன. குட்டுவன் இழுத்த அம்பை இலக்குப் பார்த்துவிட்டான். அம்பு காற்றைக் கிழித்துச் சென்றது. அடுத்த நொடி புலி துடிதுடித்து வீழ்ந்து மடிந் திருக்கும். ஆனால் புலி மீண்டும் நீர் குடிக்கத் தலையைத் தாழ்த்தவே குட்டுவன் விட்ட அம்பு அதன் கழுத்தை லேசாக உரசிச் சென்று தீப்பொறி பறக்கப் பாறையில் பட்டு முறிந்தது.

அம்பின் 'சர்'ரென்ற சத்தமும் பின் கழுத்தில் ஏதோ உரசிய உணர்ச்சியையும் அம்பு முறிந்த ஓசையும் அறிந்த புலி திடுக்கிட்டது. எதிர்த்திசையை ஊடுருவிப் பார்த்தது. கரையில் மொட்டைப் பாறையில் குட்டுவன் ஏமாற்றத்தோடு நிற்பதைக் கண்டதும் காடே அதிர உறுமியது!

அத்தியாயம் மூன்று

இசையருவி

சினங்கொண்ட புலியின் உறுமலைக் கேட்டு எதற்கும் கலங்காத குட்டுவன் சேரலின் மனம் கலங்கியது. அம்புக்குத் தப்பிய புலியின் ஆத்திரம் எப்படியிருக்கும் என்று அவனால் யூகிக்க முடிந்தது. அப்போது மட்டும் அவனிடம் இன்னோர் அம்பு இருந்திருந்தால் புலியைத் தவறாது வீழ்த்தியிருப்பான். அவசரத்தில் அம்புகள் நிறைந்த ஆவத்தை எடுத்து வராமல் ஒரே ஓர் அம்பைக் கொணர்ந்த தனது பேதமையினை நினைத்து வருந்தினான்.

வருந்திக்கொண்டு நிற்க நேரம் ஏது? ஆற்றின் இடையிலுள்ள பாறையில் நிற்கும் புலி குட்டுவனை நெருங்க வெகு நேரம் பிடிக்காது. அதற்குள் தன் உயிரைக் காத்துக்கொள்ள நினைத்துக் குட்டுவன் கையிலிருந்த வில்லைக் கீழே போட்டுவிட்டுப் பாறையிலிருந்து குதித்து ஓடினான்.

குட்டுவன் பாறையிலிருந்து குதிப்பதைப் பார்த்ததுமே புலி அவன் இருந்த பாறைக்குத் தாவியது; அங்கிருந்து கீழே குதித்தது; ஓட்டமாக ஓடும் குட்டுவனைப் பற்ற விரைந்தது.

பசி கொண்ட புலியிடமிருந்துகூட எளிதில் தப்பி விடலாம். அடிபட்ட புலியிடமிருந்து தப்புவது அரிது. போர்க்களங்களில் வீராதி வீரர்களைப் புறமுதுகு காட்டி

ஓடச்செய்த அதே குட்டுவன் இப்போது புலிக்குப் புறங் காட்டிப் பறந்துகொண்டிருந்தான். புலி தன்னை எளிதாக நெருங்குவதைக் குட்டுவன் உணர்ந்தான்; அவன் இதயம் நின்றுவிடும் போல இருந்தது. அவன் வேகமாகத்தான் ஓடினான். புலியின் வேகத்தோடு மனிதன் போட்டியிட முடியுமா?

குட்டுவன் வழியில் எதிர்ப்பட்ட பாறைகளைத் தாண்டிக் குதித்து ஓடினான். காலில் கல் குத்தியது; முள் கிழித்தது. குட்டுவன் கவலை கொள்ளாமல் ஓடினான். இன்னும் வேகமாக ஓட முயன்றான். கால்கள் ஒன்றோடு ஒன்று பின்ன தடாலென்று தரையிலே விழுந்தான். விழுந்தவன் எழுவதற்குள் புலி அவனை நெருங்கிவிட்டது. 'இனி அவன் தப்ப முடியாது' என்று உறுதி செய்து கொண்டது போலக் குட்டுவனுக்கு அருகே நின்றது.

வைரக் கற்களைப் போல மின்னும் கண்கள்! வேல்கள் பலவற்றை வேலியாக நிறுத்தியது போன்ற கூர்மையான பற்கள்; குருதியைச் சுவைத்துச் சுவைத்து, அதனால் சிவந்தது போன்ற செந்நிற நாக்கு. குட்டுவன் இவற்றைத் தனக்கருகே கண்டான். 'இமயம் வரை செல்ல வேண்டும். எதிர்த்தோரை வெல்ல வேண்டும்! விற்கொடியின் புகழை வையக மெல்லாம் பரப்ப வேண்டும்!'– என்றெல்லாம் எண்ணிய தான் புலிக்கு இரையாகப் போவதை நினைத்துத் துயருற்ற குட்டுவன், இந்தக் கொடும் புலியின் கொலை வெறி நிறைந்த முகத்தைப் பார்க்க முடியாமல் கண்களை மூடிக் கொண்டான்.

'புலி பாயும்! வளைந்த நகத்தால் உடலைப் பிளக்குமா? கூரிய பற்களால் கழுத்தைக் கவ்வுமா? ஆயிற்று! ஒரு நொடி! ஒரு நொடிக்குள் செங்குட்டுவனின் செல்வப்

புதல்வன், சேரநாட்டின் வீரர் தலைவன் பிணமாகப் போகிறான்.

குட்டுவன் நினைத்துக்கொண்டே இருந்தான். புலி அவன் மீது பாய்ந்ததாகத் தெரியவில்லை. புலி அவனைத் தீண்டிய உணர்வும் பெறவில்லை. ஏன்? 'அச்சம் கொண்ட கோழையரைக் கொல்லாது விடும் மாவீரர்களைப் போல விழியை மூடிக்கொண்ட-என்னைக் கோழையென எண்ணிப் புலி தீண்டாமல் போய்விட்டதா?'– குட்டுவன் விழியைத் திறந்தான்.

புலி போய்விடவில்லை. முன்பு இருந்த அதே இடத்தில் அவனுக்குச் சற்றுத் தூரத்தில் அது நின்றுகொண்டிருந்தது; அனலாக மின்னிய கண்கள் பாதி மூடிய நிலையிலே ஆடாமல் அசையாமல் நின்றுகொண்டிருந்தது. அது அவனைப் பார்க்கவில்லை! வேறு எதையும் பார்க்கவில்லை. தன்னை மறந்த நிலையில் நின்றது.

குட்டுவனின் வியப்புக்கோ எல்லை இல்லை. கொல்ல வந்த புலி கல்லைப் போல நிற்பது ஏன்? குட்டுவன் தரையி லிருந்து மெதுவாக எழுந்தான்! புலியைக் கவனித்தவாறு எழுந்தான். புலி அவன் எழுந்ததைப் பார்த்ததாகவே தெரியவில்லை.

இப்போதுதான் குட்டுவனைப் பற்றிக்கொண்டிருந்த அச்சம் கொஞ்சம் கொஞ்சமாக அகன்றது. அச்சம் நீங்கிய நிலையில் அவன் செவி ஏதோ ஓர் ஓசையைக் கேட்டது! ஓசையா அது? குட்டுவன் உற்றுக் கேட்டான். இல்லை! அது ஓசையல்ல! இசை! இனிய இசை! இதயத்தை மயக்கி ஈர்த்துத் தன்னோடு இணைத்துக் கொள்ளும் இசை! இரும்பையும் பாகாய் உருகச் செய்யும் உன்னத இசை!

'யாரோ பாடுகிறார்கள்!' என்று நினைத்த குட்டுவன் புலியைப் பார்த்தான். உடனே புலி ஏன் அசைவற்று நிற்கிறது என்பதை உணர்ந்து கொண்டான்.

'இசை வயப்பட்ட எந்த உயிரும் தன்னை மறந்து நிற்கும். விலங்கும் கூட இசையில் மயங்கிச் செயலற்று நிற்கும்' என்பதைக் குட்டுவன் கேட்டிருந்தான். இன்றுதான் அதைத் தன் கண்களால் கண்டான். சினம் கொண்ட புலி சிலையாகவல்லவா நிற்கிறது! இசை மயக்கத்திலிருந்து மீள்வதற்கு முன் அங்கிருந்து ஓட நினைத்தான்; நினைத்த தைச் செய்தான். ஆம்! குட்டுவன் அங்கிருந்து ஓடினான்.

புலியோ அமுத கானத்திற்கு அடிமையாகி நின்றது!

குட்டுவன் விரைந்து ஓடினான். இசை வந்த திசையில் ஓடினான். ஓடிய போதே அவன் கண்களில் சில விலங்குகள் பட்டன; சில பறவைகள் தெரிந்தன. அவை உயிருள்ளவை தாமா! குட்டுவன் ஐயுறத்தக்க விதத்தில் அவை அசைவற்று நின்றன. காரணம்? கொடும்புலியை அடிமை கொண்ட அதே இசைதான்.

இசை வந்த திசையிலே குட்டுவன் ஓடிக்கொண்டிருந் தான். அதனால் அவன் செல்லச் செல்ல இசை தெளிவாக அவன் செவியில் கேட்டது. குட்டுவன் நின்றான். புலி தன்னைத் தொடர்ந்து வருமா என்ற சிந்தனையை நிறுத்தி இசையைக் கேட்டான்.

குட்டுவன் நல்ல வீரன். போர்க்கலைகளின் எல்லா நுணுக்கங்களும் அவனுக்குத் தெரியும். ஆனால் நுண்கலை களின் நுழைவாயிலைக் கூட அவன் எட்டிப் பார்த்ததில்லை. ஆடல், பாடல், யாழ், குழல், ஓவியம், சிற்பம்— இவற்றி லெல்லாம் மனத்தைப் பறிகொடுத்துப் பழக்கப்பட்டவன் அல்ல. அவையிலே இசை முழக்கம் என்றால், இளவரசன்

போர் மண்டபத்திற்குச் சென்றுவிடுவான். தற்செயலாக இசையைக் கேட்டதுண்டு! ஆனால் அதைப் பொருட் படுத்தாமல் சென்றுவிடுவான். அந்த இசை மற்ற ஒலிகளைப் போல ஓர் ஒலியாகத்தான் அவனுக்குத் தெரியும்.

இன்று, பேரியாற்றங்கரையிலே நின்று அவன் கேட்ட இசை, இதற்குமுன் அவன் கேளாத இசை. இசைக்கு இத்தனை இனிமையா? தேனையும் பாலையும் தோற்கச் செய்யும் இனிமையா? ஊனையும் உயிரையும் உருகச் செய்யும் வலிமையா? குட்டுவன் முதன்முறையாக இசையைச் சுவைத்தான்! முதன்முறையாக இசையின் வலிமையை உணர்ந்தான்!

அங்கேயே அதே இடத்தில் எந்தப் புலனுக்கும் வேறு வேலை தராமல் அந்த இசை அமிழ்தத்தை உண்ண விரும்பினான்; அந்த இசை மழையில் நனைய விரும்பி னான்; அந்த இசை வெள்ளத்தில் மூழ்கித் திளைக்க விரும்பினான்.

ஆனால் இசை நின்றுவிட்டது!

குட்டுவன் உள்ளம் துடித்தது. வேட்கையால் வேதனை யுற்றவன் குளிர்நீர்க் குவளையைக் கண்டு, அதைக் குடிக்க முனைகையில் யாரோ தட்டிவிட்டதுபோல ஓர் உணர்ச்சி. கலையின் மென்மைக்கு வணங்காத தன் கல் மனத்தையும் கரைத்த அந்த இசை எங்கிருந்து வந்தது? அதைப் பாடியவர் யார்?

ஆவல் மேலிட ஓடினான். மலைச்சிகரத்தை அடைந் தான். 'இங்கிருந்துதான் இசை வந்திருக்கும். இனியதினும் இனிய குரலில் இசையருவியைத் தந்தவர் யார்?' குட்டுவன் சுற்று முற்றும் பார்த்தான்.

எதிரே ஒரு சந்தனமரம். அதன் அடியை அவன் பார்வை தொட்டது. குட்டுவன் உடல் ஒருமுறை சிலிர்த்தது; இதயம் ஒரு கணம் நின்று, பின் இயங்கியது. குட்டுவன் இசை கேட்ட புலியைக் காட்டிலும் உணர்வற்றுப் போனான். ஏதோ சொல்ல விரும்பினான். இதழ்கள் பிரியவில்லை; நா எழவில்லை. அங்கிருந்து உடனே செல்ல விரும்பினான். கால்கள் நிலத்தோடு ஒட்டிக் கொண்டனவோ? அவனால் அவற்றைப் பெயர்க்க முடியவில்லை. குட்டுவன் மரங்களின் நடுவே மற்றொரு மரமாகி நின்றான்.

அத்தியாயம் நான்கு

ஒரு கல்லில் இரு காய்கள்

சோலைகள் சூழ நிற்கும் மாமலை போலத் திகழ்ந்தது மோகூர் அரண்மனை. அரண்மனையின் நிலா முற்றத்தில் தந்தக் கட்டிலில் படுத்தவாறு வானத்தில் ஊர்ந்து செல்லும் முழு நிலவை ரசித்துக் கொண்டிருந்தான் மோகூர் மன்னன் பழையன். எதிரே இருந்த தட்டில் பாலும் தேறலும் பழ வகைகளும் நிறைந்திருந்தன. அவற்றைத் தொட்டும் பார்க்காத பழையன் பன்மீன் நடுவிருக்கும் பால் மதியையே பார்த்துக் கொண்டிருந்தான். வெண்ணிலவின் தண்கதிர் அவன் உடலை ஊடுருவிச் சென்று உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்தது.

பழையன் கட்டிலிலிருந்து எழுந்தான். நிலா முற்றத்தின் விளிம்பை அடைந்தான். அங்கிருந்து பார்த்தால் ஊரின் ஒரு பகுதி தெரியும். சோலைகளோடு போட்டியிட்டு உயர்ந்து நிற்கும் மாடமாளிகைகள், இரவைப் பகலாக்கும் ஒளி வெள்ளத்தில் எழிலோடு திகழ்ந்தன. ஒவ்வொரு வீடும் விழாக்கோலம் பூண்டிருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் மகிழ்ச்சியும் ஆரவாரமும் நிறைந்திருந்தன. எல்லா நாட்களும் மோகூர் மக்களுக்கு விழா நாட்கள்தாம். எல்லாம் மோகூர் வளத்தின் விளைவு.

மோகூர் வளம் நிறைந்த ஊர். பெய்ய வேண்டிய காலத்தில் மழை பொய்க்காது பெய்யும்; மக்கள் ஓரளவு உழைத்தே பேரளவு பயன் பெறுவர். எங்கும் செழுமை! எங்கும் பசுமை! எனவே வறுமை என்ற சொல்லைக் கூட மோகூர் மக்கள் கேட்டதில்லை. "மழையொழுக்கு அறாப்பிழையா விளையுள் பழையன் மோகூர்" என்று புலவர்கள் சிறப்பித்தனர். அத்தகைய வளம் நிறைந்த ஊருக்கு மன்னனாதலால் பழையன் குறுநில மன்னனா யினும் பெருநில மன்னன் போல வாழ்ந்தான். அப்போதும் தன் ஊரின் ஒரு பகுதியைக் கண்டு களிப்புற்ற பழையன், "இத்துணை செல்வம் நிறைந்த ஊருக்கு அரசன் நான்; எனக்கு என்ன குறை?" என்று இறுமாந்தான்.

'தட தட'வென்று யாரோ நிலா முற்றத்துப் படிகளில் ஏறிவரும் ஓசை கேட்டுத் திரும்பினான். நிலா முற்றத்தில் இருக்கும்போது பொதுவாக யாரும் அவனைக் காண அனுமதிக்கப்படுவதில்லை. அவசர காரியமாக இருந்தால் அமைச்சரோ படைத்தலைவரோ அங்கே வரலாம். "இப்போது வருவது யார்?" பழையன் தன் விழியை நிலா முற்றத்து வழியில் பதித்தான்.

படைத்தலைவர் விறல் வேங்கையும் அமைச்சர் அருளாளரும் உள்ளே நுழைந்தனர். இருவரையும் கண்ட பழையன் ஏதோ இன்றியமையாத செய்தியைக் கொண்டு வருகிறார்கள் என்று எண்ணினான். அரசனை அடைந்த அமைச்சர் "அரசே, நம் ஒற்றர் சொன்னது முற்றிலும் உண்மை! அறுகை நம் நாட்டு எல்லையோரமாக உள்ள இடைக்குன்றின் வலப்பக்கத்துச் சாலையிலே செல்லப் போகிறார்" என்று கூறினார். படைத்தலைவர், "பெரும்பா லும் நாளை மாலை இடைக் குன்றத்துச் சாலையை அவர் அடையக் கூடும்" என்றார்.

செய்தியைக் கேட்ட பழையனின் கண்கள் தீப்பிழம் பாய்ச் சிவந்தன. "அறுகைக்கு என் நாட்டு எல்லையோர மாகச் செல்லும் துணிவு வந்துவிட்டதா? புலியின் குகைக்குள் நுழையாவிட்டாலும், அதன் வாயிலில் நிற்கக் குறுநரிக்கு என்ன உரிமை? ஏது திறமை? "விறல் வேங்கையாரே, அறுகை எங்கே செல்கிறான் என்பதை அறிந்தீரா!" என்று கேட்டான் பழையன்.

"அறிந்தேன் அரசே. அறுகை தம் நண்பர் சேரன் செங் குட்டுவரைக் காண வஞ்சிநகரம் நோக்கிச் செல்கிறாராம். அவருடன் ஒரு சிறு படையும் செல்கிறது. படையில் ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்று சற்று முன்தான் ஒற்றர்கள் கூறினர். உடனே தங்கட்கு உணர்த்த நானும் அமைச்சரும் வந்தோம்" என்றார் விறல் வேங்கை.

"நன்று செய்தீர்! இச்செய்தி உடனே உரைக்கத்தக்க சிறப்புப் பெற்றதே. விறல் வேங்கையாரே, அருளாளரே, என் ஒரு பகைவன் செங்குட்டுவனைப் பார்க்க மற்றொரு பகைவனான அறுகை என் நாட்டு வழியே செல்வதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதனால்..."

பழையன் முடிக்கும் முன் அருளாளர் குறுக்கிட்டு, "மன்னிக்க வேண்டும் அரசே! அறுகை செல்லப் போவது நம்நாட்டு வழியல்ல. இடைக்குன்றின் இடப்பக்கத்து வழிதான் நம் நாட்டைச் சேர்ந்தது. வலப்பக்கத்து வழி நம் எல்லைக்கு அப்பாற்பட்டது" என்று கூறினார்.

"இருக்கட்டுமே, அதனால் என்ன? அச்சம் சிறிதுமின்றி என் நாட்டு எல்லையோரம் செல்லத் துணிந்த அறுகையின் ஆணவத்தை அடக்கியே தீரவேண்டும். அவனைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். அதை அறிந்து செங்குட்டுவன் துடிதுடிக்க வேண்டும். ஒரு கல்லில் இரு காய்கள் அடித்து வீழ்த்துவது போல இந்த ஒரு செயலால்

இரு பகைவர்களின் செருக்கழிக்கப் போகிறேன். விறல் வேங்கையாரே, அறுகையின் ஆயிரம் பேர் கொண்ட படையை அழித்தொழிக்கப் போதுமான வீரர்களைத் தயார் செய்யுங்கள். நானே படை நடத்திச் செல்லப் போகிறேன்" என்றான் பழையன்.

"ஆயிரவருடன் வரும் அறுகையைக் கைது செய்யத் தாங்களே செல்வதா? தேவையில்லை அரசே! என் கீழ் உள்ள படைத்தலைவர்களில் ஒருவர் சென்றாலும் போதும். வேண்டுமானால் நானே செல்கிறேன். தாங்களே செல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை" என்றார் விறல் வேங்கை.

பழையன் முகத்தில் குறும்புப் புன்னகை அரும்பி மறைந்தது. "விறல் வேங்கையாரே, அறுகையுடன் வரும் ஆயிரம் பேரை மட்டும் அழிப்பதானால் அதற்குத் துணைப் படைத்தலைவர் ஒருவர் செல்வதே போதும். ஆனால் ஆயிரவரை அழிப்பது கூட அவ்வளவு முக்கியமல்ல! அறுகையை என் கைதியாக்க வேண்டும். அதுதான் முக்கியம். அறுகை ஒருவன் மட்டும் பல்லாயிரம் வீரர்க்குச் சமம்! அவனைக் கைது செய்வது அவ்வளவு எளிதல்ல. அதனால் நானே செல்வதுதான் ஏற்றது. விறல் வேங்கையாரே, தேவையான படையை ஆயத்தம் செய்யும்" என்று கட்டளையிட்டான் பழையன்.

அமைச்சரும் படைத்தலைவரும் அரசரை வணங்கிச் சென்றனர். பழையன் வானத்தைப் பார்த்தான். "வண்ண நிலாவே, உன் ஒளியால் கூட என் உள்ளம் குளிராது! அறுகையைக் கைது செய்யும் போதுதான் என் உள்ளம் குளிரும்! என் உள்ளம் நிறையும்" என்று கூறினான்.

*　　*　　*

பொழுது இன்னும் புலரவில்லை, இருட் போர்வை மெல்ல விலகிக் கொண்டிருந்தது. மோகூர் கோட்டை இருளிலிருந்து வெளிக்கிளம்பியது போல மெல்ல மெல்லத் தெளிவாகப் புலப்பட்டது. வலிமை வாய்ந்த அரண் மேலே விறல் வேங்கையாரும், அருளாளரும் நின்று, இடைக்குன்றம் இருந்த திசையை இமைககாது பார்த்துக்கொண்டிருந்தனர்.

அருளாளர் பெருமூச்சு விட்டார்.

"என்ன அமைச்சரே, உங்கள் கவலை பெருகிக் கொண்டேயிருக்கிறதே" என்று வினவினார் விறல் வேங்கை.

"பெருகாமல் அருகுமா, வேங்கையாரே? அளவான நாடு. அதுவும் வளமான நாடு. அழிக்கப் பெருகும் செல்வம் நிறைந்த அற்புதமான நாடு. இத்தகைய நாட்டைப் பெற்ற அரசர் கேட்டை விழைந்து தேடிக் கொள்வது என்னை வாட்டுகிறது. பிறர் சொல்வதை ஏற்கும் பண்பற்ற அரசரிடம் அமைச்சராக இருந்து பயன் என்ன? அதனால் என் கவலையை மனத்திலேயே குழிதோண்டிப் புதைக்கிறேன்" என்று கூறினார் அருளாளர்.

"அமைச்சரே, செல்வச் செழிப்பால் பல அரசர்கள் நம் மன்னர்க்கு நண்பர். நாட்டின் அளவுக்குத் தேவையானதைப் போலப் பதின்மடங்குள்ள படையை உடையவர் நம் மன்னர். பணமும் படையும் பல மன்னர் துணையும் இருப்பதால் எதையும் செய்யலாம் என்று இறுமாந்து நிற்கிறார். அவர் செயலில் நாம் குறுக்கிடுவதால் பயன் இல்லை" என்றார் விறல் வேங்கை.

"அறுகை ஆற்றல்மிக்க அரசர். அவரைக் கைது செய்தால், அறுகையின் நாட்டார் அமைதியாக இருப்பார் களா? ஆர்த்தெழ மாட்டார்களா? அப்படியே எழுந்தால்,

அந்தப் படையை வேண்டுமானால் நாம் எதிர்த்து நிற்கலாம். ஆனால் அறுகை சேரமன்னர் செங்குட்டுவரின் ஆருயிர் நண்பர். அவர் கொதித்தெழுந்தால், படை கொண்டு வந்தால் என்ன நேரும் என்பதை நினைத்துப் பாருங்கள். மன்னர் செய்யும் ஒரு பிழைக்காக இந்த வளமான நாடு பாழ்பட்டுப் போவதா? சோலைகள் நிறைந்த மோகூர் பாலையாக மாறுவதா? வேங்கையாரே, நினைக்கும் போதே என் நெஞ்சம் நடுங்குகிறது.''

அமைச்சர் கூறியது உண்மை என்பது படைத் தலைவருக்கும் தெரியும். ஆனால் பழையனின் பழைமை யான குணம், பிறர் சொல்லைக் கேட்காமை. அதனால் அவர் தம் கருத்தை மன்னரிடம் தயங்காமல் எடுத்துச் சொல்வதைக் குறைத்துக் கொண்டார். அமைச்சர் ஒருவர் தான் அவ்வப்போது அறிவுரைகள் கூறுவார். ஆனால் அவை பாலையில் பாயும் நீரெனப் பயனற்றுப் போகும். இது தொடர்ந்து வரும் வழக்கம்.

விறல் வேங்கை இதையெல்லாம் மீண்டும் நினைத்தார். அவர் உள்ளமும் கலங்கியது. அரசரின் போக்கால் நாட்டுக்கு அழிவு வரக்கூடும் என்று அவர் மனமும் கூறியது. 'அதைத் தடுக்க முடியுமா?' என்று சிந்தித்துச் சோர்ந்த விறல் வேங்கையும் நெட்டுயிர்த்தார்.

இடைக்குன்றத்துத் திசையிலே புகைமண்டலம் கிளம்பியது. அறுகையைக் கொணரச் சென்ற பழையன் படையுடன் திரும்புவதை அறிந்து படைத்தலைவரும் அமைச்சரும் பரபரப்படைந்தனர்.

பழையனின் படை கோட்டையை நெருங்கியது. அரண் மேல் நின்ற இருவரும் படையைத் துருவிப் பார்த்தனர். அறுகை கைதிக் கோலத்தில் எங்கேனும் இருக்கிறாரா என்று

பார்த்தனர். அவர் எங்கே இருக்கிறார் என்பதை இருவரா லும் அறிய முடியவில்லை.

இதற்குள் கோட்டைக் கதவுகள் திறந்தன. படை உள்ளே நுழைந்தது. விறல் வேங்கையும் அருளாளரும் அரணிலிருந்து இறங்கி வந்தனர்.

உள்ளே நுழைந்த படையிலே ஒரு தேரிலே வீற்றிருந் தான் பழையன். தேர் நின்றது. பழையன் அதிலிருந்து இறங்கினான். படைத்தலைவரும் அமைச்சரும் அவனை நெருங்கினர். பழையன் முகத்தில் அளவிட முடியாத பூரிப்பைக் கண்டனர்.

'இத்தனை மகிழ்ச்சியோடு இவர் இருக்கக் காரணம் என்ன? தம் பகைவர் அறுகையைக் கைதுசெய்து கொணர்ந்து விட்டாரோ?'

ஒன்றும் புரியாமல் அமைச்சர், "அரசே, அறுகையை..." என்று இழுத்தார்.

"கைது செய்யவில்லை அமைச்சரே, கைது செய்ய வில்லை" என்று கூறினான் பழையன். குரலில் ஏமாற்றம் இல்லை. எல்லையற்ற மகிழ்ச்சி தொனித்தது.

'கைது செய்யாமல் திரும்பி வந்ததில் மன்னர்க்கு என்ன மகிழ்ச்சி?' என்று நினைத்த விறல் வேங்கை, "கைது செய்ய வில்லையா? அரசே, அப்படியிருந்தும் நீங்கள் இத்தனை மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் இருக்கிறீர்களே" என்று கேட்டார்.

"ஆம் படைத்தலைவரே, என் பகைவன் அறுகை யைக் கண்ட பிறகும் கைது செய்யாமல் திரும்பினேன். அதனால்தான் களிப்போடு இருக்கிறேன். புதிராக

இருக்கிறதா, என் செயல்? வாருங்கள் விளக்குகிறேன்" என்ற பழையன் முன்னே சென்றான்.

படைத்தலைவரும் அமைச்சரும் அரசரைப் பின் தொடர்ந்து சென்றனர். இருவர் உள்ளத்தும் ஒரே கேள்வி எழுந்து நின்றது. 'அறுகையைக் கைது செய்யச் சென்று, வெறுங்கையராய்த் திரும்பியதில் மன்னர் ஏன் மகிழ்ச்சி யடைகிறார்?' என்பதுதான் அந்தக் கேள்வி.

அத்தியாயம் ஐந்து

கொல்லிப் பாவை

சந்தன மரத்தடியை நோக்கி, அச்சமும் ஆசையும் மேலிட, வியப்பும் வேதனையும் மோதச் செயலற்றுப் போன குட்டுவன் சேரல், பேரொளிப் பிழம்பைக் கண்டவன் போலக் கண்களை மூடிக்கொண்டான்.

கண்ணை மூடியதும் எதிரே தெரிந்த காடு மறைந்தது; கவின் மரங்கள் மறைந்தன. ஒரே இருள்! ஆனால் அந்த இருளுக்கு நடுவே, வானத்துச் சுடர் போல ஒரு வடிவம் தெரிந்தது.

'ஆம்! அதே உருவம்தான். சற்றுமுன் சந்தன மரத்தடியில் நான் கண்ட அதே உருவம்! கண்டவர்க்குப் பித்தேற்றும் பெண் உருவம். ஐயையோ, அந்த உருவத்தைக் காணக் கூடாது என்றுதானே கண்ணை மூடிக்கொண்டேன். மூடிய விழிக்குள்ளே அந்த மோகன உருவம் தோன்றுகிறதே. நான் கொல்லி மலைக்கு வழி தவறி வந்துவிட்டேனா? என் எதிரே இருப்பது கொல்லிப்பாவையா? ஆம்! ஆம்! இது கொல்லிப்பாவை! நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்ற பாவை! இப்போது செங்குட்டுவனின் ஒரே புதல்வனைக் கொல்லப்போகும் பாவை, இல்லை! இல்லை! கொன்று கொண்டிருக்கிற பாவை!'

கண்ணை மூடிய நிலையில் கடுந்தவம் புரியும் முனிவரென நின்ற குட்டுவன் சேரலின் மனம் இவ்வா றெல்லாம் எண்ணி வேதனையுற்றது.

குட்டுவன் சந்தன மரத்தடியில் சிந்தையை மயக்கும் ஒரு பெண் உருவத்தைத்தான் பார்த்தான். ஆடவர் கண்டு அகல முடியாத உருவம். பெண்ணே கண்டாலும் பித்துறும் உருவம். உலகத்தின் எழிலெல்லாம் ஒன்று திரண்டு ஒரு வடிவு கொண்டதோ என ஐயுறச் செய்யும் அழகிய உருவம். அந்த உருவத்தைத்தான் குட்டுவன் பார்த்தான். ஒருகணம் பார்த்தான். மறுகணம் அந்த உருவத்தை உற்று நோக்கும் சக்தியற்றுக் கண்ணை மூடிக்கொண்டான். ஆசை ஒருபுறம் அவனை விழுங்க, அச்சம் மறுபுறம் அவனைக் கொன்று கொண்டிருந்தது.

ஆசை பிறப்பது இயல்பு. அச்சம் பிறந்தது ஏன்? குட்டுவன் பேரழகு உருவத்தைக் கண்டதும் அதைக் கொல்லிப்பாவை என்று நினைத்துவிட்டான். எனவே அவன் அச்சம் கொண்டான்.

கொல்லி மலையிலே இயற்கைச் சூழலின் நடுவே ஒரு பெண்ணின் சிலையிருக்கிறது. அதற்குக் கொல்லிப்பாவை என்று பெயர். அதைப்போன்ற அழகான சிலை உலகில் இல்லை. உயிரும் உணர்வும் பெற்று உலவும் அழகிகளிடமும் கொல்லிப்பாவையின் அழகில் ஆயிரத்தில் ஒரு பகுதியும் இல்லை. எந்தச் சிற்பி எந்தக் காலத்தில் அதைச் செய்தானோ, யாருக்கும் தெரியாது. கொல்லி மலையிலே கொலு வீற்றிருக்கும் அந்தப் பாவை உயிருள்ள பெண் ணைப் போல நிற்கும். கொல்லிப் பாவையை ஒருமுறை கண்டவன் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து அதைவிட்டுச் செல்ல முடியாதவனாகி நின்று விடுவான். உணவையும் உறக்கத்தையும் துறந்து நிற்பான்; ஊரையும், பேரையும்

மறந்து நிற்பான். கொல்லிப் பாவையே அவன் உள்ளத்தில், உணர்வில் நிறைந்து நின்று அவனை மெல்ல மெல்லக் கொல்லுவாள். நின்றவன் நின்ற நிலையிலேயே சில நாட்களில் எலும்புக்கூடாய் இறந்து வீழ்வான். கொல்லிப் பாவை என்பதற்குக் கொல்லி மலையில் இருக்கும் பாவை என்று மட்டுமா பொருள்? தன்னைக் கண்டவனின் உயிரைக் கொல்லும் பாவை, ஆட்கொல்லிப் பாவை என்றும் பொருள்.

கொல்லிப் பாவையைப் பற்றிய விவரங்கள் குட்டுவனுக் குத் தெரியும். மலைச் சிகரத்தில் சந்தன மரத்தடியில் இதற்குமுன் அவன் கண்டறியாத, கேட்டறியாத ஓர் அற்புத உருவத்தைக் கண்டதும் அதுதான் கொல்லிப்பாவை என்று நினைத்துவிட்டான். எனவே ஆசை மட்டும் பொங்க வேண்டிய உள்ளத்தில் அச்சமும் தங்கியது.

கண்ணை மூடிய பின்னும் காட்சி தரும் உருவத்தை மறப்பது எப்படி! குட்டுவன் தன் கைகளால் கண்ணைப் பொத்தினான். பகைவரின் பலமான அரண்களையும் கடந்து நுழையும் சேரனின் படையைப் போல அவன் கையையும் இமையையும் கடந்து அந்தக் கவின் உருவம் கண்ணிலே நின்றது; கண்ணின் கருமணிக்குள் சென்றது; அவன் ஊனில் உயிரில் கலந்து அவனைக் கொன்றது.

"நாம் இருப்பது கொல்லி மலையல்ல! பேரியாற்றங் கரையிலிருந்து மேலேறி வந்தோமே தவிரக் கீழிறங்கி வேறு மலைக்குச் செல்லவில்லையே. எதிரே கண்டது சிலையா, ஜீவனுள்ள பெண்ணா? சிலைக்கும் பெண் ணுக்கும் வேறுபாடு தெரியாது மயங்குகிறேனா? மண்ணக மடந்தைக்கு இத்தனை அழகு இருக்குமா?"

குட்டுவன் மனப்போராட்டத்தைக் கணப்பொழுது நிறுத்தினான். கண்ணைப் பொத்திய கைகளை விலக்கி

னான். இதயம் துடிதுடிக்க இமைகள் படபடக்க மிகச் சிரமப்பட்டு விழிகளைத் திறந்தான். சந்தன மரத்தடியில் கண்ட உருவம் பேசும் பொற்சிலையா, பேசாத கற்சிலையா என்று அறிந்துகொள்ளும் ஆவலோடு பார்த்தான்.

சந்தன மரத்தடி வெறுமையாகக் கிடந்தது. திடுக்கிட்டான் குட்டுவன். அவனை மயக்கிய உருவம் அங்கேதானே இருந்தது? அது எங்கே? சிலை நடக்காதே! நகராதே! அப்படியானால் அவன் உயிருள்ள பெண்ணையா கண்டான்?

அவள் எங்கே? எங்கே அவள்?

குட்டுவன் சந்தன மரத்தின் பின்னே ஓடினான். அங்கும் வெறுமை! அருகே இருந்த மரங்களின் பின்னே தேடினான். அந்த உருவத்தைக் காணோம்.

'கண்ணை மூடிய நேரத்தில் ஓடி ஒளிந்துகொண் டாளோ? கண்ணாரக் காண வேண்டிய காட்சியைக் கண்டு விழிமூடி நிற்கும் என்னைப் பித்தன் என எண்ணிப் பயந்து ஓடிவிட்டாளோ? எங்கே ஓடியிருப்பாள்? இங்கேதான் எங்காவது மறைந்திருப்பாள்!' என்று எண்ணினான், குட்டுவன்.

உடனே, "ஏ, பெண்ணே, பேரழகுப் பெட்டகமே. இந்த மலைக்காட்டில் நீ எங்கே மறைந்தாலும் விடப்போவதில்லை. ஒவ்வொரு மரமாகத் தேடுவேன். ஒவ்வொரு கிளையையும், இலையையும் கூட விடமாட்டேன். மலைக்காட்டையே அலசிப் பார்த்து உன்னைக் கண்டுபிடிப்பேன். தெரிகிறதா? வேண்டுமானால் இன்னும் நன்றாக ஒளிந்துகொண்டு என் திறமையைச் சோதித்துப் பார்!" என்று உரக்கக் கூவினான். பிறகு ஒவ்வொரு மரமாகத் தேடினான். அலுக்காமல் களைக்காமல் தேடினான். காற்றால் கிளைகள் அசைந்தால்,

இலைகள் உதிர்ந்தால், அந்த அழகிதான் அங்கே ஒளிந்து நிற்கிறாள் என்று நினைத்து அங்கெல்லாம் ஓடினான்; தேடினான்.

பல மணி நேரம் தேடித் தேடி அலுத்த குட்டுவனால் மேலே நடக்க முடியவில்லை. கால்கள் தளர்ந்தன; கண்கள் இருண்டன; நா வறண்டது. நண்பகலுக்கு முன் தேடத் துவங்கிய இளவரசன் கதிரவன் மேற்றிசையில் இறங்கும் நேரத்தில் மேலே நடக்க முடியாமல் சோர்ந்து விழுந்தான். அணிதேர், புரவி, ஆட்கள்சூழப் புறப்பட்ட அரசிளங்குமரன் குட்டுவன் மலைக்காட்டில் அனாதை போல விழுந்து கிடந்தான்.

குட்டுவன் சேரலுடன் வந்த வீரர்கள், நண்பகலுக்கு முன் இளவரசர் வருவார் என்று காத்திருந்தனர். வராமல் போகவே, அவரைத் தேடிப் புறப்பட்டனர். அரணாக வளர்ந் திருந்த மரங்களிடையே நுழைந்து தேடினர். இருள் சூழும் நேரத்தில் மலைக்காட்டில் மரங்களிடையே விழுந்து கிடக்கும் இளவரசரைக் கண்டு பதறினர். உணர்வற்றுக் கிடந்த அவரைத் தூக்கிக்கொண்டு தம் இருப்பிடத்தை நோக்கிச் சென்றனர்.

அத்தியாயம் ஆறு

கண்டது கனவோ?

மருத்துவர் குட்டுவன் சேரலின் நாடியைப் பிடித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். வீரர்கள் பலர் கவலையுடன் குட்டுவன் சேரலின் படுக்கையைச் சுற்றி நின்றிருந்தனர். 'இளவரசருக்கு என்ன நேர்ந்தது? ஏன் அவர் மலைக் காட்டில் மயங்கி வீழ்ந்திருந்தார்?' என்பது விளங்காமல் குழம்பினர். அத்தனை பேரும் மருத்துவரின் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

மருத்துவர் நாடியைப் பார்த்து முடித்தார். பிறகு, "கவலைப்படும்படி ஒன்றும் இல்லை, வெறும் காய்ச்சல் தான். நான் தரும் மருந்தைத் தேனிலே குழைத்து, மூன்று வேளை கொடுங்கள். காய்ச்சல் பறந்துவிடும்" என்று கூறி மருந்துப் பெட்டியைத் திறந்தார். ஒரு சிமிழிலிருந்த தூரணத் தைக் கொட்டி ஒரே அளவான மூன்று பொட்டலங்களாக மடித்துக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

வீரர்கள் தாயின் அன்போடும் அக்கறையோடும் இளவரசருக்கு மருந்து கொடுத்தனர். மருத்துவர் மூன்று வேளையில் பறக்கும் என்ற காய்ச்சல் மூன்று நாளுக்குப் பிறகுதான் ஓரளவு குறைந்தது. வேட்டைக்கு வந்த நான்காம் நாள் குட்டுவன் உணர்வு பெற்றான். அருகேயிருந்த வீரனிடம் "எனக்கு என்ன நேர்ந்தது? நீங்களெல்லாம் ஏன்

இப்படிச் சோர்வும் சோகமுமாய் இருக்கிறீர்கள்” என்று கேட்டான்.

இளவரசருடன் வேட்டைக்குச் செல்லப் போகிறோம் என்பதை அறிந்ததும் துள்ளிக் குதித்த வீரர்கள் முதல் நாளே இளவரசர் காய்ச்சலால் படுத்துவிட்டதால் வேட்டையை நிறுத்தினர். வேட்டை நின்றது மட்டுமா? தங்கள் அன்பிற் குரிய இளவரசரின் உயிருக்கே ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சினர். வந்த காய்ச்சல் நீடித்து நிலைத்த போது சோர்வும் சோகமும் கொண்டனர். இதைச் சுருக்கமாக எடுத்துரைத் தான் ஒரு வீரன்.

“காய்ச்சல் எனக்கு ஏன் வந்தது?” என்று கேட்டான், குட்டுவன்.

“அது புரியாமல்தானே நாங்கள் தவிக்கிறோம். உங்களைத் தேடிவந்த நாங்கள் மரங்களிடையே விழுந்து கிடந்த உங்களைக் கண்டோம். உடல் மாசடைந்து, உடைகள் கிழிந்திருந்த காரணம் புரியவில்லை. உங்களை இங்கே எடுத்து வந்தோம். உடல் அனலாய்க் கொதித்தது. மருத்துவரை அழைத்து வந்தோம். கடந்த மூன்று நாட்களும் கடுங்காய்ச்சலால் துன்புற்றீர்கள். உணர்வில்லாமல் ஏதேதோ பிதற்றிக் கொண்டிருந்தீர்கள். இன்றுதான் ஓரளவு காய்ச்சல் குறைந்திருக்கிறது” என்றான் அந்த வீரன்.

“நான் ஏதோ பிதற்றியதாகச் சொன்னாயே, என்ன பிதற்றினேன், சொல்” என்று கேட்டான் குட்டுவன்.

வீரன் தயங்கினான். அவன் தயக்கத்தைப் புரிந்து கொண்ட குட்டுவன் அவனை அருகே வருமாறு தலை யசைத்தான். வீரன் குட்டுவனை நெருங்கினான். குட்டுவன் மெல்லிய குரலில், “இதோ பார், உணர்வற்ற நிலையில் எதை உளறியிருந்தாலும் தயங்காமல் சொல்” என்று கேட்டான்.

“இளவரசே, நீங்கள் கொல்லிப்பாவை கொல்லிப்பாவை என்று சிலமுறை கூறினீர்கள். பாவையல்ல, பெண்தான். பெண்தான் என்று சொன்னீர்கள். பிறகு எங்கே சென்றாலும் விடமாட்டேன்! கண்டுபிடிப்பேன் என்று கத்தினீர்கள். இப்படிப் பலவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள்” என்றான் அந்த வீரன்.

அவன் சொன்னதைக் கேட்ட குட்டுவனுக்கு முதல்நாள் கண்ட காட்சி நினைவுக்கு வந்தது. சிலை போல நின்ற அழகி மீண்டும் அவன் உள்ளத்தில் தோன்றினாள். அன்று நடந்த யாவும் மெல்ல மெல்ல மனக்கண் முன் தோன்றின.

‘அவளைத் தேடித் தேடி அலுத்து மயங்கி வீழ்ந்து விட்டேனோ?’ என்று நினைத்தான்.

அந்த நேரத்தில் மருத்துவர் உள்ளே நுழைந்தார். இளவரசர் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டதும் மருத்துவரின் முகம் மலர்ந்தது.

“இளவரசே, உடல்நிலை எப்படியிருக்கிறது?” என்று கேட்டவாறு அருகே வந்து அமர்ந்து, அவன் கையைப் பிடித்துப் பார்த்தார்.

“ஓ, நீங்கள்தான் எனக்கு மருத்துவம் பார்க்கிறவரா! இப்போது பரவாயில்லை. காய்ச்சல் நீங்கிவிட்டது என்று நினைக்கிறேன்” என்றான் குட்டுவன்.

“காய்ச்சல் முழுக்கப் போய்விடவில்லை. இன்னும் மூன்று வேளையாவது மருந்து சாப்பிட வேண்டும். மூன்று நாளாவது ஓய்வு பெறவேண்டும். பிறகும் கூட வேட்டையை நிறுத்திவிட்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும்” என்ற மருத்துவர் மூன்றுவேளை மருந்தை மடித்துக் கொடுத்தார்.

குட்டுவன் அருகே இருந்தவர்களிடம், “சற்று நேரம் மருத்துவரிடம் தனித்துப் பேசவேண்டும்” என்றான். அதன்

பொருள் உணர்ந்த வீரர்கள் நொடியில் அந்த அறையை விட்டு நீங்கினர். அறைக்குள் குட்டுவனும் மருத்துவருமே இருந்தனர்.

குட்டுவன் தன் எதிரே அமர்ந்திருந்த மருத்துவரைக் கூர்ந்து நோக்கினான். பிறகு, தான் நினைப்பதைக் கேட்கலாமா, வேண்டாமா என யோசிப்பது போலத் தயங்கினான். பின்னர் கேட்டான்:

"மருத்துவரே, இந்த மலையில் அழகே உருவான ஒருத்தியைக் கண்டிருக்கிறீரா? அவள் பெயர் தெரியுமா?"

மருத்துவர் சிரித்தார்.

"இளவரசே, அழகே உருவான ஒருத்தியா? அப்படிப் பட்டவர்கள், எண்ணற்றவர் உள்ளனர். இது குறிஞ்சி நிலம்! குறிஞ்சி நிலத்துக் குமரி ஒவ்வொருத்தியும் கொள்ளையழகு கொண்டவள்! வைத்த கண் வாங்காமல் பார்க்கச் செய்யும் பருவமும் உருவமும் இணைந்த பாவைகள் இந்நிலமெங்கும் நிறைந்திருக்கின்றனர். இவர்களில் நீங்கள் குறிப்பிடும், அழகே உருவான ஒருத்தி யார் என்பது புரியவில்லையே" என்றார் மருத்துவர்.

"புல்லுக்கும் பூவுக்கும் வேறுபாடு இல்லையா? நீங்கள் சொல்லும் பெண்கள் புல்லைப் போன்றவர்கள் என்று கொண்டால், பூவை ஒத்தவர்களை, அதுவும் செந்தாமரையை ஒத்தவர்களைக் கண்டதில்லையா? ஐயா, மருத்துவரே, கொல்லிப்பாவையைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீரே, அந்தப் பாவையோ என மயங்கத்தக்க பேரழகுள்ள பெண் இந்த மலைக்காட்டில் இருக்கிறாளா!"

இளவரசன் பேசும்போதே அவன் முகத்தில் பொங்கிப் பெருகிய உணர்ச்சியைக் கவனித்துக்கொண்டிருந்த மருத்துவர், "இளவரசே, அழகு என்பது பொருளில் மட்டு

மில்லை. அதைப் பார்க்கும் கண்ணிலும் கருத்திலும் இருக்கிறது. என் கண்ணுக்கு மண்ணாகத் தெரியும் உருவம் உங்கள் கண்ணுக்குப் பொன்னாகத் தெரியக்கூடும். அது பார்ப்பவர்களின் மனநிலையைப் பொறுத்தது. ஏன், பருவ நிலையையும் பொறுத்தது! நீங்கள் சொல்லும் கொல்லிப் பாவையை ஒத்த பெண் யார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் அப்படிப்பட்ட பெண் ணைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

இளவரசன் நெட்டுயிர்ப்போடு சொன்னான்: "ஆம் ஐயா! ஆம்! இந்த மலை முகட்டில் சந்தன மரத்தின் கீழே அப்படிப்பட்ட ஒருத்தியைச் சந்தித்தேன். அவளது பேரழகும், அசையாது நின்ற தோற்றமும் கண்டு அவளைக் கொல்லிப் பாவை என்று பயந்து கண்களை மூடிக்கொண்டேன். மீண்டும் கண் திறந்து பார்க்கையில் அவளைக் காணோம். சுற்றுமுற்றும் தேடினேன். அவளைக் காணோம். 'அவள் இந்தக் காட்டில் எங்கோ மறைந்திருக்கிறாள்' என்று எண்ணித் தேடி அலைந்தேன். அதனால் மயங்கி விழுந்தேன். அவ்வளவுதான். அவளைக் காணவில்லை."

"இளவரசே நீங்கள் கண்டது உருவெளித் தோற்றமாக இருக்குமோ?"

மருத்துவரின் ஐயத்தை இளவரசன் ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. "உருவெளித் தோற்றமா? மருத்துவரே, நான் எந்தப் பெண்ணையாவது நினைத்து ஏங்கியிருந்தால் காண்பன யாவும் அவள் உருவமாகத் தோன்றக்கூடும். நான் அப்படிப்பட்ட மனநிலையில் இல்லையே. அப்படி இருக்க உருவெளித் தோற்றம் என்று எப்படிக் கூற முடியும்?"

மருத்துவர் சற்று நேரம் அமைதியாக இருந்தார். பிறகு "இளவரசே, கனவில் கண்டதை நினைவு என்று மயங்கு கிறீர்களோ?" என்று கேட்டார்.

"இல்லை! இல்லை! நான் கண்டது கனவு அல்ல!" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினான் குட்டுவன்.

மருத்துவர், அவன் மனம் எவளையோ கண்டு, அல்லது கண்டதாகக் கற்பனை செய்துகொண்டு கலங்குகிறது என்பதை உணர்ந்தார். அதனால் வேறு ஒரு சூரணத்தை எடுத்துக் கொடுத்தார். "இளவரசே, காய்ச்சல் முழுக்க நீங்க வில்லை. நீங்கள் எதையோ எண்ணிக் கலங்குவது உடல் நிலையைப் பாதிக்கும். அதனால் நடந்ததை மறந்துவிடுங்கள். இதோ, இந்தச் சூரணத்தை முதலில் சாப்பிடுங்கள். மாலை யில் வந்து பார்க்கிறேன்" என்று கொடுத்துவிட்டுப் புறப்பட்டார்.

மருத்துவர் வெளியே சென்றதும் வீரர்கள் உள்ளே வந்தனர். மருத்துவர் கடைசியில் கொடுத்த சூரணத்தை முதலில் தேனில் குழைத்துத்தரச் சொல்லிச் சாப்பிட்டான் குட்டுவன். மருத்துவர் கொடுத்தது உறக்கம் தரும் மருந்து. அதனால் குட்டுவன் தன்னை மறந்து உறங்கினான்.

மறுநாள்!

குட்டுவன் நலமுற்றான். மருத்துவர் வெற்றி கண்ட வீரனைப் போலப் பூரித்துப் போனார். இளவரசன் அவருக்குத் தக்க பரிசு அளித்தனுப்பினான். அவன் சொன்னது போல் வேட்டைக்கும் போகாமல் வீட்டுக்கும் கிளம்பாமல் இரண்டு நாள் ஓய்வு எடுத்துக்கொண்டான்.

ஏழாம் நாள், வியாழக்கிழமை!

'அடுத்த வெள்ளிக்கிழமை மாலைக்குள் வஞ்சி நகரத்துக்கு வந்துவிடு. அன்று அரண்மனைக்குள் நுழைந்தால் அங்கே ஓர் அதிசயம்— ஓர் அற்புதம் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கும்' என்று செங்குட்டுவன் கூறியது நினைவுக்கு வந்தது. உடனே வீரர்களை அழைத்தான். "ஓய்வு

பெற்றது போதும். விடிந்ததும் வஞ்சிக்குச் செல்ல வேண்டும். ஆவன செய்யுங்கள்" என்று ஆணையிட்டான்.

வெள்ளிக்கிழமை, கதிரவன் மேற்கே மறையுமுன் வஞ்சி நகரத்தில் நுழைந்துவிட்டான் குட்டுவன் சேரல். சந்தன மரத்தின் கீழ் சந்தித்த உருவமே நிறைந்திருந்த அவன் மனம் அதை மறந்து, தந்தை கூறிய அதிசயத்தை— அற்புதத்தைப் பற்றி எண்ணியது.

'என்ன அதிசயமோ? என்ன அற்புதமோ?' என்று எண்ணியவாறு அரண்மனையடைந்த குட்டுவனை வரவேற்றான் ஒரு வீரன்.

"இளவரசே, மாமன்னர் அந்தப்புரத்தில் இருக்கிறார். நீங்கள் வந்ததும் உங்களை அங்கே வரச் சொன்னார்" என்றான் வீரன்.

"தந்தை கூறிய அற்புதம் அந்தப்புரத்தில்தான் இருக்கிறதா?" குட்டுவன் அந்தப்புரத்தை நோக்கி நடந்தான். நடையின் வேகம். மனத்தின் பரபரப்பை வெளிப் படுத்தியது.

அத்தியாயம் ஏழு

கோதையின் உள்ளம்

குன்றென உயர்ந்த மாளிகைக்குள் குட்டுவன் சேரல் நுழைந்தான். அந்தப்புரத்தின் எந்தப் பக்கத்திலும் எழில் கொஞ்சியது. குட்டுவன் சேரல் விரைவாக நடந்தான். அவன் இதற்குமுன் பார்த்த அதே இடந்தான். இன்று அது விழாக்கோலம் பூண்டு விளங்கியது. அந்தப்புரத்தில் அவன் சந்தித்த அத்தனைபேர் முகத்திலும் பூரிப்பு. காரணம் புரியாமல் மேலே சென்றான். அன்னை இளங்கோ வேண்மாளின் அறையை அடைந்தான்.

அறை வாயிற்கதவுகள் அகலத் திறந்திருந்தன. எனினும், உள்ளே இருப்பவரை வெளியிலிருந்து பார்க்க முடியாத வாறு வாயிலில் முத்துச்சரங்கள் திரைபோலத் தொங்கின; சரங்களை விலக்கி உள்ளே செல்ல நினைத்த குட்டுவனின் செவியில், பொற்காசுகளை வெண்கலக் கிண்ணத்தில் ஒரு சேரக் கொட்டியது போன்ற கலகலென்ற சிரிப்பொலி கேட்டது. செவிமடுத்த சேரலின் இதயம் ஒருமுறை சிலிர்த்தது.

உள்ளே சிரிப்பது யார்? அன்னை வேண்மாள் புன்னகை செய்வதைத் தவிர வாய்விட்டுச் சிரித்ததைக் கேட்டதில்லையே!

சிந்தித்தவாறு குட்டுவன் முத்துச் சரங்களை விலக்கி உள்ளே நுழைந்தான். தந்தக் கட்டிலில் இளங்கோ வேண்மாள் உட்கார்ந்திருந்தாள். அருகே இருந்த பொற்சிலை ஒன்று உள்ளே நுழைந்த குட்டுவனைக் கண்டதும் உயிர் பெற்று எழுந்து அன்னையின் பின்னே தன்னை மறைக்க முயன்றது.

யார் அவள்?

குட்டுவன் அவளையே பார்த்தான். வட்ட நிலாவை இருபுறம் சற்றே தட்டிக் கீழ்ப்புறத்தைக் கூர்மையாக்கியது போன்ற கோலமுகம். வெண்ணெயில் விழுந்த நாவல்கனி களாய் விளங்கும் விழிகள். பட்டுப் பூச்சியின் இறகுகள் போலப் படபடக்கும் இமைகள். கொல்லும் தொழிலிலும் கொள்ளை அழகிலும் தன் நாட்டு வில்லை நிகர்க்கும் புருவம், பிறை நிலவாய்க் குளிரும் நெற்றியில் சுட்டெரிக்கும் சூரியன் போல ஒளிரும் சிவந்த திலகம். அதற்குமேலே கொடியின் நுனியைப் போலச் சுருள் சுருள்களாகத் திகழ்ந்து, அலைஅலையாகப் பாயும் கருமேகம் போன்ற கூந்தல், பவழ வாசல் இதோ இங்கிருக்கிறது என்று சுட்டிக் காட்டுவது போல, இதழை விளக்க இறங்கி நிற்கும் நாசி, பவழ இதழுக்கிடையே பனிநிற முத்தாய் மின்னும் பற்கள். கவிழ்ந்த பொற்கலம் போன்ற பூரித்த கன்னங்கள்!

குட்டுவனின் விழிகள் ஆராய்ச்சியை முடிக்கவில்லை. "குட்டுவா, ஏன் இப்படிச் சிலையாக நிற்கிறாய்?" என்ற வேண்மாளின் கேள்வி அவனைத் தன் நிலைக்குத் திருப்பியது.

"அம்மா, இந்தப் பொற்சிலை யார் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்."

குட்டுவன் முடிக்கவில்லை. "அந்த யோசனையில் மூழ்கிச் சிலையாகிவிட்டாய். அப்படித்தானே?" என்று

கேட்டாள் செங்குட்டுவன் தேவி. குட்டுவன் முகத்தில் நாணம் படர்ந்தது.

"குட்டுவா, நீ உள்ளே நுழைந்ததும், உன்னைப் புரிந்து கொண்டாள் இந்தப் பெண். உன்னால் இவளை யார் என அறிந்துகொள்ள முடியவில்லையா?"

குட்டுவனுக்கு அப்போதும் அவள் யார் என்பது புரிய வில்லை. அவனை மேலும் புதிருள் அழுத்த விரும்பாத வேண்மாள், "குட்டுவா, பைந்தமிழ் நாட்டில் பாண்டிய நாடு என்று ஒரு நாடு இருக்கிறது. அந்தப் பாண்டிய நாட்டிலே குன்றத்தூர் என்று ஓர் ஊர் இருக்கிறது. அந்த ஊரை அறுகை என்னும் ஆற்றல் மிக்க அரசர் ஆண்டு வருகிறார். அவருக்கு அழகும் அறிவும் நிறைந்த மகள் ஒருத்தி இருக்கிறாள்" என்று குழந்தைக்குக் கதை சொல்லும் பாணியில் குட்டுவனுக்குக் கூற ஆரம்பித்தாள்.

கருக்கிருட்டில் கதிரவன் உதயமானதும் படரும் புத்தொளி, குட்டுவன் முகத்தில் படர்ந்திருந்தது. ஆம், அவள் யார் என்பதை அவனும் அறிந்து கொண்டான்.

"அம்மா இந்தப் பொற்சிலை நம் அறுகையின் அருமைச் செல்வி கோதையா? பல ஆண்டுகளுக்கு முன்பு பார்த்திருக் கிறேன். சின்னக்கல், சிலையாகிவிட்டதைப் போல, சிறுமுகை நறுமலராய் விரிந்ததைப் போலச் சிறுமியாய்த் திகழ்ந்த கோதை சித்திரப்பாவையாய் மாறியிருக்கிறாள். அம்மா, காலம் செய்யும் ஜாலத்தாலும் கோலத்தாலும் நமக்குத் தெரிந்தவற்றைக் கண்டு நாமே மயங்க நேருகிறது" என்ற குட்டுவனின் குரலில் குதூகலம் குடிகொண்டிருந்ததை அறிந்த அரசி குறுநகை புரிந்தாள்.

"கோதை, உன்னைப் பேதைப் பருவத்தில் கண்டேன். பேதுறச் செய்யும் மங்கைப் பருவத்தில் இப்படித்தான்

இருப்பாய் என்று கற்பனை செய்திருந்தாலும் அதைப் பொய்யாக்கும் பொலிவோடு திகழ்கிறாய். அறிமுகமான உன்னை வரவேற்காமல், நலம் வினவாமல் நின்றமைக்கு வருந்துகிறேன்.”

குட்டுவன் கூற்று கோதையின் நாணத்தை வளர்த்து விட்டது. அவள் தன் முகத்தை வேண்மாளின் முதுகில் புதைத்துக்கொண்டாள்.

பாண்டி நாட்டுக் குன்றத்தூருக்கும் சேரநாட்டு வஞ்சி நகருக்கும் இடையே உள்ள தூரம் அதிகம். ஆனால் குன்றத்தூர் கோமான் அறுகையின் உள்ளத்துக்கும் வஞ்சி யின் வேந்தன் செங்குட்டுவனின் உள்ளத்துக்கும் இடையே நூலிழையளவு இடைவெளியும் இல்லை. இருவரும் நண்பர்கள்; இளமையிலிருந்தே நண்பர்கள்; இதயங்கலந்த நண்பர்கள். அதனால் அறுகை வஞ்சிக்கு வருவதும், செங்குட்டுவன் குன்றத்தூருக்குச் செல்வதும் அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சிகள்.

குன்றத்தூருக்குப் பல ஆண்டுகளுக்கு முன் குட்டுவன் தன் தாயுடன் சென்றிருந்தான். அப்போது கோதை குறும்பு மிக்க சிறுமியாய்த் திகழ்ந்தாள். அவளுடன் ஓடி ஆடியது, ஓயாது பேசியது, எல்லாம் இப்போது அவன் கண்முன் தோன்றின. பிறகு கோதையைப் பற்றிய பேச்சு அடிக்கடி நடக்கும். இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவன் தாயும் தந்தையும் குன்றத்தூருக்குச் சென்றுவந்தனர். வந்ததிலிருந்து அன்னை கோதையின் அழகையும், தந்தை அவள் அறிவையும் பற்றியே பல நாள் பேசினர். குட்டுவன் அதை யெல்லாம் கேட்டுக் கேட்டு, கோதை இப்போது எப்படி யிருப்பாள் என்று கற்பனை செய்தான். ஆனால் அவன் நேரில் கண்ட அழகில் கால் பகுதிகூடக் கற்பனை உருவில் இல்லை.

திடீரென்று குட்டுவன் பேரியாற்றங்கரையிலே கண்ட உருவத்தை நினைத்தான். "சந்தன மரத்தடியில் கண்டது பெண்ணல்ல, உருவெளி என்று மருத்துவர் கூறினாரே! ஒருவேளை கோதையைப்பற்றி முன்னர் நினைத்தது, அப்படி ஒரு. தோற்றத்தைக் காட்டியிருக்குமோ?"

குட்டுவனின் கண்முன் கோதையும் அவன் பேரியாற்றங் கரையில் கண்ட உருவமும் தோன்றின. "கோதை பேரழகி தான்! அவள் அழகைச் சொல்லில் சிறை பிடிக்கலாம். ஆனால் ஆற்றங்கரையிலே கண்ட உருவத்தின் அழகை, வார்த்தைகளில் கூறிவிட முடியுமா? அந்த அழகை நெஞ்சிலே நினைத்தாலும் முழுமையாக நினைக்க முடியாது! அப்படிப்பட்ட உருவம் மானிட மங்கைக்கு ஏது? ஒருவேளை நான் கண்டது கானகத்து அணங்காய் இருக்கும். இல்லையேல் வானகத்துப் பெண்ணாய் இருக்கும். ஆனால்... அவள் மேனி மாநிறத்தது. கோதையோ தங்கப்பதுமை! சே... சே... அன்னையின் முன்னே நின்றே ஏதேதோ எண்ணு கிறேன்."

குட்டுவன் உடலை ஒருமுறை உலுக்கிக்கொண்டான். பிறகு, "கோதை, உன் தந்தை அறுகை வந்திருக்கிறாரா?" என்று கேட்டான்.

வேண்மாளின் முதுகில் பதிந்த முகம், முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதிபோல் எட்டிப்பார்த்தது. பவழ வாசல் மெயத் திறந்தது. பைந்தமிழ் புதிய இனிமை பெற்றது.

"தந்தையுடன்தான் வந்தேன். அவர் தங்கள் தந்தையுடன் இளமரக்காவில் இருக்கிறார். உங்களைக்கூட அங்கே வருமாறு சொன்னாரே" என்ற கோதை, வேண்மாளைப் பார்த்தாள்.

"ஆமாம் குட்டுவா, நீ வந்ததும் , இளமரக்காவிற்கு அனுப்பச் சொன்னார். நான் மறந்துவிட்டதைக் கோதை

குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறாள். போய்ப் பார்த்து வா" என்றாள் வேண்மாள்.

குட்டுவன் சேரல் அறையைவிட்டுச் சென்றான். அவன் பின்னே கோதையின் கண்கள் சென்றன. அவை சிறிது தூரம்தான் சென்றன. ஆனால் கோதையின் உள்ளமோ குட்டுவனைத் தொடர்ந்து சென்றது.

குட்டுவன் சென்ற திசையை இமைக்காமல் பார்க்கும் கோதையின் முகம் புதிய எழில் பெற்றுத் திகழ்ந்தது. கோதையின் முகத்தைப் பார்த்து, அவள் அகத்தையும் புரிந்து கொண்ட வேண்மாள் தான் விரும்பியதைப் பெற்ற மன நிறைவு கொண்டாள்.

அத்தியாயம் எட்டு

அடிகள் முன்னர் ஆரணங்கு

இளமரக்காவின் வளமான மரங்கள்; வனப்பு நிறைந்த வண்ண மலர்கள்; மலர்கள் பரப்பும் நறுமணம் இவை அனைத்தும் ஆருயிர் நண்பர் அறுகைக்கு முன் சிறப்பிழந்து நின்றன. செங்குட்டுவன் இளமையில் அறுகையோடு சேர்ந்து விளையாடிய காட்சிகளையும், பின்னர்ச் சேர்ந்து போராடிய களங்களையும் பற்றி நண்பருடன் பேசிப் பேசி மகிழ்ந்தார்.

செங்குட்டுவன் இப்பரந்த உலகில் இழக்க முடியாதது, இழக்க விரும்பாதது, ஏதாவது இருக்குமானால் அது அறுகையுடன் கொண்ட நட்பாகத்தான் இருக்கமுடியும். மணிமுடியை, மாநிலத்தை, மற்றுள்ள பொருள்களை இழந்து பெறக்கூடியது அந்நட்பென்றால், அவை அனைத்தையும் மகிழ்ச்சியுடன் துறந்து தன் மனத்திற்குகந்த நண்பரைப் பெறுவார், சேர மன்னர். இது உலகறிந்த செய்தி.

கடந்த ஓராண்டாக இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் பார்த்துக்கொள்ளவில்லை. அதனால் செங்குட்டுவன் தன் பிறந்த நாள் விழாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். இம்முறை அறுகையின் அருமைப் புதல்வி கோதையைத் தவறாது அழைத்து வருமாறு உரிமையால்

பணித்தார். நண்பரின் ஆணைக்குக் கட்டுப்படுவது அன்புள்ளத்தின் பண்பு. அறுகை தம் மகளுடன் சேர நாட்டிற்கு வந்தார்.

நண்பர் வந்த மகிழ்ச்சி செங்குட்டுவனின் ஒவ்வோர் அசைவிலும் தெரிந்தது. இருவரும் பிறர் தலையிடாதவாறு பேச அந்தப்புரத்து இளமரக்காவைத் தேர்ந்தெடுத்தனர். பெருமழை பொழிந்தால் ஏரி நிரம்பும்; குளம் நிரம்பும்; ஆறு பெருகும்! ஆழ்கடல் நிரம்புமா? நண்பர்கள் உள்ளம் பேச்சு மழையால் நிரம்பி வெள்ளம் பெருக்கெடுக்க வில்லை. இன்னும் அது வற்றியிருப்பதாகவே பட்டது.

குட்டுவன் சேரலின், "தந்தையே" என்ற அன்புக் குரல் அவர்கள் பேச்சை நிறுத்தியது. செங்குட்டுவன், "குட்டுவா, அரசியாரைக் கண்டாயா? அங்கே நான் சொன்ன அதிசயம் இருந்ததா?" என்று கேட்டார்.

"அன்னையைக் கண்டேன். குன்றத்தூரிலிருந்து வந்த அதிசயத்தைக் கண்டு குன்றாகச் சமைந்துவிட்டேன். தந்தையே, கோதை வெறும் அதிசயமல்ல, பேரதிசயம்!" என்ற குட்டுவன் அறுகையின் பக்கம் திரும்பி, "அறுகையாரே, வணக்கம்! எங்கள் நாட்டுக்கு உங்கள் நாட்டு அழகுப் பெட்டகத்தை, அற்புதப் பொற்சிலையை கோதை எனும் குமரியை அழைத்து வந்தமைக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை" என்றான்.

அறுகை சிரித்தார். "குட்டுவா, கோதை செங்குட்டுவன் சொற்படித்தான் நடப்பாள் என்பது உனக்குத் தெரியுமா? அவள் என் மகள்! ஆனால் செங்குட்டுவன்தான் அவளுக்குத் தாய், தந்தை, குரு, தெய்வம் எல்லாம். செங்குட்டுவன் அழைக்க, அவள் வந்தாள். அதனால் நன்றியை உன் தந்தைக்கே தெரிவி" என்றார்.

குட்டுவனின் கண்கள் தந்தையைக் கண்டன. நன்றியை நவின்றன.

“குட்டுவா, வேட்டை எப்படியிருந்தது?”

தந்தையின் கேள்விக்கு உண்மையைச் சொல்லலாமா என்று எண்ணிய குட்டுவன், முடிவில் பொய்யே புகன்றான்.

“வேட்டை நன்கு நடந்தது.”

“நல்லது, நாளை என்ன நாள் என்று தெரியுமா?”

குட்டுவன் யோசித்தான். ‘வஞ்சிக்குள் வரும் வழியெல்லாம் விழாக்கோலம் கண்டேன். அரண்மனையிலும் அதே கோலம். இது புனல் விழாக் காலமா? இல்லை. புது மலர்கள் பூத்துக் குலுங்கும் இளவேனிற் காலமல்லவா? இளவேனில் காலத்தில்தானே மன்னர் செங்குட்டுவனின் பிறந்த நாள் வரும்! ஆம் நாளை மன்னரின் பிறந்த நாள் தான்.’

குட்டுவன் காணாமல் போனதைக் கண்டுபிடித்துவிட்ட குழந்தையின் களிப்புடன், “தந்தையே நாளை தங்கள் பிறந்த நாள் விழா” என்று சொன்னான்.

“குட்டுவா, நம் அடிகளை நாளை அரண்மனைக்கு வருமாறு அழைக்கவேண்டும். உன்னை அனுப்ப விரும்பித் தான் வரச் செய்தேன். இப்போதே போய் அழைத்துவிட்டு வா. அறுகையின் வருகையைச் சொல்லி, அவசியம் வரச் சொல்” என்றான், செங்குட்டுவன்.

அரசர் அடிகள் என்று குறிப்பிட்டது, தன் சிறிய தந்தை இளங்கோ அடிகளைத்தான் என்பது குட்டுவன் சேரலுக்குத் தெரியும். இளங்கோ அடிகளைப் பார்ப்பதென்றாலே அவனுக்கு எல்லையற்ற இன்பம். அதனால் உடனே புறப்பட்டான். வெள்ளைப் புரவியிலேறி அரண்மனை

யிலிருந்து வெளிவந்தான். குணவாயில் கோட்டத்தை நோக்கிக் குதிரை பறந்தது.

வஞ்சி நகரின் தெருக்களெல்லாம் விழாக்கோலம் பூண்டு திகழ்ந்தன. எந்த வீட்டைப் பார்த்தாலும், அந்த வீட்டில் திருமணம் நடக்கிறதோ என்று எண்ணத்தக்க விதத்தில் அலங்காரத்துடன் காட்சி தந்தது. கோயில்கள் நாளை நடக்கும் விழாவை இன்றே தொடங்கியிருந்தன. பட்டிமன்றங்களில் பல்கலை வல்ல புலவர் பெருமக்கள் கூடியிருந்தனர். வெளிநாட்டு மக்களும் நிறைந்திருந்தனர். பாணர் குழுக்களும் பொருநர் குழுக்களும் ஆங்காங்கே தங்கியிருந்தன.

சேர நாட்டில் செங்குட்டுவனின் பிறந்த நாள் விழா, சோழ நாட்டின் இந்திர விழாவைப் போலச் சிறப்புடையது.

அன்று சேர நாட்டு மக்களுக்கு விடுமுறை; வேறு எந்த வேலையும் செய்யமாட்டார்கள். நகரின் பல்வேறு பகுதி களில் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெறும். சமயப் பெருமக்களின் அறவுரைகளையும் புலவர் பெருமக்களின் புதுப் புனைவுகளையும் கேட்கலாம்.

மன்னர் வந்தார்க்கெல்லாம் வரையாது வழங்குவார். குற்றம் புரிந்து சிறைக்கோட்டத்தில் இருப்போரும் அந் நன்னாளில் விடுதலை பெறுவர்; கெடுநினைப்பு விடுவர்; விருந்தும் பரிசும் பெற்றுப் பழமையை மறந்து புதிய வாழ்வைத் தொடங்குவர்.

"அரசனை இறைவனாக மதிப்பது தமிழரின் தொன்று தொட்ட வழக்கம். ஆனால் சேரன் செங்குட்டுவனை இந்த மக்கள் இறைவனாக மட்டுமா கருதி இறைஞ்சி நிற்கின்றனர்? இல்லை. அதோ அந்த முதியவரின் முகத்தில் முதல் பிள்ளைக்குப் பிறந்த நாள் கொண்டாடும் மகிழ்ச்சி! இந்த இளையவர்களுக்குத் தம் தந்தையின் விழாவில் பெறும்

பேருவகை! மாதர்களுக்குத் தம் மைந்தனின் விழாவில் பெறும் மனமகிழ்ச்சி! யாரைப் பார்த்தாலும் தம் குருதியிற் கலந்த உறவினரின் திருவிழாவில் கலந்துகொள்ளும் களிப்போடு திகழ்கின்றனர். காரணம் என்ன? செங்குட்டு வன் இம் மக்களை எப்படிக் கவர்கிறார்? எப்படி அவர்கள் உள்ளத்தில் கலக்கிறார்? எப்படி அவர்களைத் தம் ஊனிலும் உயிரிலும் ஒன்றச் செய்கிறார்? அன்பாலா? ஆணையாலா? வீரத்தாலா? விவேகத்தாலா? பொருளாலா? புகழாலா?"

குட்டுவனின் இதயம் எண்ணி எண்ணிப் பூரித்தது. பூரிப்பு, குதிரையின் வேகத்தைத் தடைசெய்தது. ஓடிய குதிரை ஒய்ந்து நடந்தது. இரவின் கடுமையை எண்ணற்ற விளக்குகள் விலக்கிக்கொண்டிருந்தன. ஒவ்வொரு விளக்கும் ஒவ்வொரு நிலாவாக ஒளிர்ந்தது.

குட்டுவன் ஒரு சோலையை நெருங்கினான். அந்தச் சோலையைச் சுற்றிக்கொண்டு சென்றால் அருகனின் அடியவர் உறையும் குணவாயில் கோட்டம் வரும். குட்டுவனின் விழிகள் சோலையைத் தொட்டன.

சோலைக்குள்ளே கூட்டம். கூட்டத்திலிருந்து பாகும் தேனும் தோற்கும் யாழிசை எழுந்து, மென் காற்றில் தவழ்ந்து வந்தது. குட்டுவன் குதிரையைச் சோலைக்குள் செலுத்தி னான். கூட்டத்திற்குச் சற்று தூரத்தில் நிறுத்தி, குதிரை யிலிருந்தவாறே எட்டிப்பார்த்தான்.

விழாவில் கலந்து மகிழவந்த பாணர் கூட்டம் ஒன்று யாழ் வாசித்துக்கொண்டிருந்தது. மது உண்டு மயங்கிய வண்டைப் போல, மகுடிக்கு மயங்கிய அரவு போல, மக்கள் யாழிசைக்கு மயங்கித் தம்மை மறந்து நின்றனர்.

அங்கே ஆடவரும் பெண்டிரும் ஆடித் திரியும் சிறுவரும் நிறைந்திருந்தனர். குட்டுவன் அத்தனைபேரையும் பார்த்தான். பெண்கள் இருந்த பக்கம் அவன் பார்வை சென்றது.

பெண்கள் மத்தியில் நிற்கும் ஒருத்தியின் முகம், ஒளி மிகுந்த முகம்; ஆம், அந்த முகத்தைக் குட்டுவன் பார்த்திருக் கிறான். வேட்டைக்குச் சென்ற இடத்தில் வேட்கையைத் தூண்டி மறைந்த முகமல்லவா அது? கொல்லிப் பாவையோ, கனவில் வந்த கன்னியோ என்று அவனைக் கலங்கச் செய்த முகமல்லவா அது?

குட்டுவன் இதயம் துடித்தது! குருதியின் ஓட்டம் விரைவு கொண்டது! இளம் நரம்புகள் புடைத்து முறுக்கேறின! குட்டுவன் குதிரையைத் தட்டிவிட்டான். அந்தத் தட்டொலி கேட்டு நிமிர்ந்த முகங்களில் அவள் முகமும் ஒன்று.

குட்டுவன் கண்ட அப்பெண் குதிரையைக் கிளப்பிய இளவரசனைப் பார்த்தாள். உடனே கூட்டத்தின் பின்னே நழுவினாள். இளவரசன் அதைக் கண்டுவிட்டான். கால் களால் குதிரையின் அடிவயிற்றை உந்தினான். குதிரை கிளம்பியது; வேகமாக ஓடியது. வட்டமாய் நின்ற கூட்டத் தைச் சுற்றிக்கொண்டு பெண்கள் நின்ற பகுதியை அடையும் போது அருகே இருந்த மரங்களிடையே ஒரு பெண்ணுருவம் ஓடுவதைக் கண்டுவிட்டான் குட்டுவன்.

“பெண்ணே, பேரியாற்றங்கரையிலே என்னை ஏமாற்றி ஓடினாய்! இங்கே அது நடக்காது! வஞ்சி நகரத்தின் ஒவ்வொரு சாலையும் சோலையும் சந்தும் பொந்தும் எனக்கு நன்றாகத் தெரியும்! இதோ ஒரு கணத்தில் உன்னைப் பிடிக்கிறேன் பார்” என்று தனக்குத் தானே கூறிக்கொண்டே குட்டுவன் குதிரையை இன்னும் விரைவாகச் செலுத்தி னான்.

இதயத்தின் தாகமும் ஏறிய குதிரையின் வேகமும் நொடிக்கு நொடி அதிகரித்தன. சோலையின் மரங்கள் பின்னே செல்லக் குதிரை முன் நோக்கிப் பாய்ந்தது.

சில நிமிடங்களில் சோலையைக் கடந்தான் குட்டுவன். பிறகு சாலையின் மறுபுறம்! குணவாயிற் கோட்டம்! குட்டுவன் குதிரையை நிறுத்தினான்.

அவன் முன்னே சென்ற பெண் எங்கே? செடிகளின் அசைவை உன்னிப்பாகக் கவனித்தல்லவா குதிரையைச் செலுத்தினான். அவன் அறிவுக்கு எட்டிய வரை அவன் திசை மாறவில்லை. அவள் சென்ற வழியில்தான் அவன் வந்தான். ஆனாலும் அவளைக் காணவில்லையே!

'சோலைக்குள்ளேயே தங்கிவிட்டாளா? திரும்பிப் பார்க்கலாமா?'

குட்டுவன் நினைத்தவாறே குணவாயிற் கோட்டத்தைப் பார்த்தான். "மனித வடிவில் வந்த புனிதர் இளங்கோ அடிகள் இருக்கும் இடம் இது. அண்ணன் முகம் வாடியதைத் தாங்காமல் அரச வாழ்வைத் துறந்த அடிகளின் இருப்பிடம் இது. அவரைக் காண்பதற்காக, அவர் தம் அருளுரையைக் கேட்பதற்காக எத்தனையோ நாடுகளிலிருந்தெல்லாம் புலவர்கள், புரவலர்கள், சமயச் சான்றோர்கள் அடிக்கடி வருகிறார்கள். அப்படிப்பட்ட அருங்குண அடிகளை அழைக்க வந்த நான் யாரோ ஓர் அழகியைத் தேடித் திரிவதா?"

குட்டுவன் சஞ்சல மனத்தை மாற்றிக்கொண்டான். அடிகளின் நினைவு உள்ளத்தெழுந்ததும் அறிவும், ஆசையும் மறைந்தன. குட்டுவன் குதிரையைக் குணவாயிற் கோட்டத் திற்குச் செலுத்தினான்.

'அறவுரை கேட்க அனைவரும் வாரீர்! அருகனின் கருணை வெள்ளத்தில் மூழ்க எவரும் வரலாம்; எப்போதும் வரலாம்' என்று கூறுவதைப் போல அந்த இரவு நேரத் திலும் குணவாயிற் கோட்டத்துக் கதவுகள் திறந்திருந்தன. குதிரையை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான் குட்டுவன்.

கோட்டத்தின் மையத்தில் பெரிய கூடம். குட்டுவன் அதனுள் நுழைந்தான். 'நடுவிலே உள்ள ஆசனத்தில் இருப்பவர் யார்? அடிகள்தாம்! நம் இளங்கோ அடிகள்தாம்! அவருக்கு எதிரே யாரோ இருக்கிறார்களே' குட்டுவன் நின்று பார்த்தான்.

அவன் கண்கள் வியப்பால் அகல விரிந்தன! அவன் பின்தொடர்ந்து வந்த பெண் அணங்குதான், அந்த இரவு நேரத்தில் அறவோர் தங்கும் கோட்டத்தில் இளங்கோ அடிகள் முன் நின்றுகொண்டிருந்தாள்.

அத்தியாயம் ஒன்பது

இனிக்கும் செயல்கள்

குட்டுவன் சற்றுநேரம் நின்று அடிகளையும் அவர் முன்னின்ற ஆரணங்கையும் உற்றுப் பார்த்தான். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைச் சற்று நெருங்கி நின்று கேட்கலாமா என்று நினைத்தது அவன் மனம். உடனே, 'புனிதத்திற்கும் புனிதத்தைப் போதிக்கும் இளங்கோ அடிகள் பேசுவதையா ஒட்டுக்கேட்க விரும்புகிறேன்? அவர் நிழலை மிதித்தவர்களும் அழலில் இட்ட பொன்னாக மாறுவார்களே! அவரை நன்கு அறிந்த நான் அவர் பேசுவதை ஒட்டுக்கேட்பதா? ஏன் என் மனம் இந்த இழிநிலைக்கு இறங்குகிறது?' என்று எண்ணித் தன் நிலைக்கு வருந்தினான்.

குட்டுவன் தன் நினைவுகளை உதறித் தள்ளினான். அடிகளின் பெயரை மனத்திலே உச்சரித்து, கட்டுப்படாமல் திரியும் மனக்குதிரையை அடக்க முயன்றான். பிறகு அவர்கள் இருவரும் இருந்த இடத்தை நோக்கி நடந்தான்.

காலடி ஓசை தன்னை நெருங்கியதை அறிந்த இளங்கோ அடிகள் நிமிர்ந்தார். குட்டுவன் அவரைப் பார்த்துக் கை குவித்தான்.

"குட்டுவனா? வா, குட்டுவா! உட்கார்" என்று உபசரித்தார் அடிகள். குட்டுவனைக் கண்டதும் அடிகளின்

எதிரே அமர்ந்திருந்த பெண் எழுந்து நின்றாள். குட்டுவன் அவள் இருக்கும் திசையைப் பார்க்கக்கூடாது என்று மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு உட்கார்ந்தான்.

"நீயேனம்மா நிற்கிறாய்? இவன் இளவரசன் என்பது தெரியுமா? இது அடியவர் உறைவிடம். இங்கே யாவரும் சமம். நீ உட்காரலாம்" என்றார் அடிகள்.

நின்ற பெண்ணுக்கு உட்கார மனமில்லை என்றாலும் அடிகள் சொல்லை மீறமுடியாமல் அமர்ந்தாள்.

அடிகள் அருகே உட்கார்ந்த குட்டுவன் தரையிலிட்ட மீன் போலத் தவித்தான். எதிரே இருக்கும் பெண்ணைக் காண எழும் முகத்துக்கும் தாழ்த்தமுயலும் மனத்திற்கும் போராட்டம். மெல்ல மெல்ல மனத்தின் முயற்சி தோல்வியுற அவன் முகம் அவளை நோக்கி உயர்ந்தது. கண்கள் அவள் மீது தாவின. அந்தப் பார்வையைத் தாங்க முடியாத பெண் தலைகவிழ்ந்து நிலம் நோக்கினாள்.

"இவளை உனக்குத் தெரியும் போலிருக்கிறதே?"

அடிகளின் கேள்வி அம்பாகப் பாய்ந்தது. குட்டுவன் குற்றம் புரிந்தவனைப் போலக் கலங்கினான்.

"அடிகளே, வேட்டைக்குச் சென்றபோது பேரியாற்றங் கரையிலே கல்லைக் கனிவிக்கும் இசையைக் கேட்டேன். பிறகு ஒருத்தியைக் கணநேரம் கண்டேன். அவள் உடனே மறைந்துவிட்டாள். அவள்தான் அந்த இசை வெள்ளத்தைப் பாய்ச்சியவளா என்று தெரியவில்லை. இன்று சோலைக் குள்ளே அவளைக் கண்டேன். கொல்லும் புலியைக் கல்லாக நிற்கச் செய்தவள் அவள்தானா என்று கேட்க விரும்பினேன். அவள் என்னைக் கண்டதும் ஓடிவிட்டாள். அவளைப் பின்தொடர்ந்து வந்தேன். இங்கே உங்கள் முன் இருப்பவள் அவள்தானா என்று பார்த்தேன்."

குட்டுவன் கூறியதும் அடிகள் முகத்தில் அருள்நகை தவழ்ந்தது.

"ஓ, அப்படியா? நீ என்னைப் பார்க்க வந்தாய் என்றல்லவா நினைத்துவிட்டேன்" என்றார்.

குட்டுவனின் முகம் நாணத்தாலும் அச்சத்தாலும் சிவந்து வெளுத்தது.

"அடிகளே, நான் உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். செங்குட்டுவ மன்னர் தங்களைப் பார்க்குமாறு பணித்தார்."

"நீயாக என்னைப் பார்க்க வரவில்லையா? அரசனின் ஆணைக்குப் பணிந்துதான் வந்திருக்கிறாயா?"

குட்டுவன் திகைத்தான். 'என்ன இது! எப்படிப் பேசினாலும் அடிகள் மடக்குகிறார்' என்று நினைத்தான்.

"குட்டுவா, இவள் இப்போதுதான் வந்தாள். இவள் பெயர் செல்வி. கொல்லி மலையைச் சேர்ந்தவள். குன்றக் குமரன் என்னும் பாணரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறாயா? இசையறிந்தவர், அவரை அறியாமல் இருக்க முடியாது. கொல்லிமலைப் பாணர் குழுவுக்குத் தமிழகத்தின் எப்பகுதியிலும் நல்ல வரவேற்பு இருக்கும். அந்தக் குழுவின் தலைவர் குன்றக்குமரன் பேரியாழ் வாசிப்பதில் நிகரற்றவர். அவருடைய அருமை மகள்தான் இந்தச் செல்வி. இவளும் யாழ் வாசிப்பாள். ஆனால் இவளுடைய குரலே யாழையும் குழலையும் தோற்கச் செய்யும் இசைக்கருவியாய் இருக்கிறது. இவளது இசையைக் கேட்டால் பாறை உருகும்; பட்டமரம் துளிர்க்கும். குட்டுவா நீ இவள் இசையைக் கேட்டாயா?"

குட்டுவன் செவியில் உடனே முன்னர் கேட்ட தேவகீதம் ஒலித்தது. அதனால் அவன் முகம் ஒளிர்ந்தது. அவன் அச்சமும் நாணமும் அகன்ற நிலையில் இசையைப் பற்றிய புனித நினைவோடு எதிரே இருந்த பெண்ணை, குன்றக்

குமரனின் மகள் செல்வியைப் பார்த்தான். இப்போது செல்வியும் தலைகுனிந்து கொள்ளவில்லை.

"அடிகளே, இந்தச் செல்வியின் இசை வெள்ளத்தில் மூழ்கித் திளைக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. என் உயிரைக் காத்தது அந்த இசையே" என்ற குட்டுவன், கொல்ல வந்த கொடும்புலி இசைவயப்பட்டு நின்றதையும் தான் உயிர் தப்பி ஓடியதையும் கூறினான். பின் செல்வியைக் கண்டு கொல்லிப்பாவை என அஞ்சியதையும் கூறினான்.

"அடிகளே, காட்டிலே செல்வியைக் கண்டுபிடிக்காத தால் நான் கண்டது கனவோ என்றுகூட ஐயுற்றேன். இன்று சோலையிலே கண்டதும் அது நினைவுதான் என்பதை உறுதி யாக்கிக் கொள்ளவே வந்தேன். நான் கண்டது கனவு அல்ல; நினைவு, நினைவு." உணர்ச்சிப் பெருக்குடன் குட்டுவன் கூறினான்.

"குட்டுவா, கொல்லிமலைப் பாணர் குழுவில் செல்வி இருந்தாலும், குழுவினர் செல்லும் இடமெல்லாம் சென்றாலும் கண்ட இடங்களில் பாடமாட்டாள். உயர்ந்து நிற்கும் மலைச்சிகரத்தில், ஓடும் ஆற்றங்கரையில், அடர்ந்த காட்டின் இடையில் அவளாகப் பாடுவாள். இயற்கை யன்னை ஆணையிட்டால்தான் இவள் பாடுவாள் போலும்."

அடிகள் சொன்னதும் செல்வி குறுக்கிட்டுப் பேசினாள்.

"இளவரசே, இயற்கை அன்னையின் ஆணைக்குப் பாடுவேன். அதை மீறினாலும் இளங்கோ அடிகளின் ஆணையை மீறுவதில்லை. எங்கே பாடினாலும் எனக்குக் கிடைக்காத இன்பம் இப்பெருமானின் முன்னே பாடினால் கிடைக்கிறது. என் இசை அப்போதுதான் பூரணமாகிறது; புனிதமடைகிறது."

செல்வி தன்னை விளித்துக் கூறியதும் குட்டுவன் மகிழ்ச்சிக் குன்றில் நின்றான். இசையரசி செல்வி அமுதக் குரலில் தன்னோடு பேசியதை எண்ணிப் பூரித்துவிட்டான்.

“செல்வி, அடிகளின் ஆணை அன்பிலே பிறப்பது, அருளிலே பிணைந்தது. அந்த ஆணைக்கு யார்தான் கட்டுப் படாமல் இருக்க முடியும்?” என்று கூறினான் குட்டுவன்.

“குட்டுவா, அரசர் உன்னை அனுப்பினார் என்றாயே” என்று அவன் வந்த காரியத்தை நினைவுறுத்தினார் அடிகள்.

“அடிகளே, நாளை அரசரின் பிறந்த நாள். தாங்கள் அவசியம் வரவேண்டும். இந்த அழைப்பு விடுக்கவே என்னை அனுப்பினார். குன்றத்தூர் அறுகையும் இங்கு வந்திருக்கிறார். இதையும் உங்களிடம் கூறச் சொன்னார்,” என்று நிறுத்திய குட்டுவன், “அடிகளே, நாளை அரண் மனையில் இச்செல்வியின் இசையும் இருந்தால் மிகச் சிறப்பாக இருக்கும். நீங்கள் சொல்லி...” என்று இழுத்தான்.

“நான் சொல்வதென்ன? நீயே கேள்” என்றார் அடிகள்.

குட்டுவன் செல்வியைப் பார்த்தான். அவன் பார்வை நாவை விட நன்றாகப் பேசியது. செல்வி அடிகளை நோக்கினாள். அவர் முகத்தில் புன்னகை மின்னியது.

“அடிகள் ஆணையிட்டால் நான் பாடுகிறேன்” என்றாள் செல்வி.

“நான் யார் ஆணையிட? நான் வெறும் துறவி! வேண்டிக்கொள்ளலாமே தவிர ஆணையிட முடியுமா?” என்றார் அடிகள்.

செல்வி அடிகளையே கூர்ந்து நோக்கினாள். தான் அரண்மனையில் பாடவேண்டும் என்று அடிகளும் விரும்பு

கிறார் என்று எண்ணினாள். உடனே, "இளவரசே, தங்கள் விருப்பப்படி பாடுகிறேன்" என்றாள்.

குட்டுவன் மகிழ்ந்தான்.

"குட்டுவா, அரசரிடம் நாளை நான் வருவதாகக் கூறு" என்றார்.

அடிகள் விடை கொடுத்துவிட்டார் என்பதைப் புரிந்து கொண்ட குட்டுவன் புறப்பட எழுந்தான்.

"குட்டுவா, நீ பார்த்த சோலையின் அருகேயுள்ள விடுதியில்தான் குன்றக்குமரன் இருக்கிறார். நீ அந்த வழியாகத் தானே போகவேண்டும்? செல்வியை அங்கே விட்டு விட்டுச் செல்கிறாயா?" என்று கேட்டார்.

குட்டுவன் திகைத்துவிட்டான். 'இன்றைக்கு யார் முகத்தில் விழித்தோம்? இனிக்கும் செயல்கள் அடுத்தடுத்து நிகழ்கின்றன. இன்று செல்வியைக் கண்டேன்! பேசினேன். நாளை அரண்மனையில் பாட அவள் இசைவையும் பெற்றேன். இச்செயல்களுக்கெல்லாம் சிகரமாக அவளோடு துணையாக நடந்து செல்லும் பேறு கிடைக்கிறதே.'

குட்டுவன் சிந்தனையால் உடனே பதில் சொல்லவில்லை.

"அடிகளே, இளவரசர் குதிரையில் வந்திருக்கிறார். என்னை அழைத்துச் செல்வதனால் அவரும் நடந்து வர வேண்டும். அவருக்கேன் வீண் சிரமம்!" என்றாள் செல்வி.

"சிரமம் ஒன்றும் இல்லை. உடலைக் குளிர்விக்கும் நிலவின் ஒளியில், உயிரைக் குளிர்விக்கும் இசைச் செல்வியுடன் செல்வதில் சிரமம் என்ன? கரும்பு தின்னுவது சிரமமானது என்று யாராவது சொல்வார்களா?"

குட்டுவன் சொன்னான்.

“செல்வி, நீ குட்டுவனுடன் செல். நாளை விடியற்காலை அரண்மனைக்குச் செல்லத் தயாராய் இரு. நானே வந்து அழைத்துச் செல்கிறேன்” என்றார் அடிகள்.

செல்வி மேலே பேசவில்லை. எழுந்தாள். செல்வியும் குட்டுவனும் அடிகளை வணங்கினர். பிறகு சேர்ந்தே புறப்பட்டார்கள். வாயிலில் நின்ற குதிரையை அவிழ்த்து விட்டான் குட்டுவன். குதிரை குட்டுவன் பின்னே மெல்ல நடந்தது.

இருவரும் சோலையைச் சுற்றிச் செல்லும் சாலையில் நடந்தனர். குட்டுவன் ஏதேதோ கேட்க வேண்டும் என்று துடித்தான். ஆனால் இதழ்கள் அசையவில்லை. அவனருகே அதே நிலையில் நடந்து வந்தாள் செல்வி. இவ்விருவரின் அழகையும் பார்த்துப் பார்த்து ஆசை தீராமல் இன்னும் பார்க்கும் ஆவல் கொண்டதைப்போல வெண்ணிலாவும் அவர்களுடன் நடந்தது.

வெண்ணிலா மட்டுந்தானா அவர்களுடன் நடந்தது. இல்லை! விண்ணிலே வெண்ணிலா செல்வியையும் குட்டுவனையும் தொடர்ந்து சென்றதைப்போல மண்ணிலும் ஒருவன்— முக்காடிட்ட ஒருவன்— அவர்களைத் தொடர்ந்து வந்தான். நிலா மேகங்களில் பதுங்கிப் பதுங்கிச் சென்றது. பின்தொடர்ந்து வந்தவனும் முன்னே செல்பவர்கள் தன்னைக் கண்டு விடுவார்களோ என்ற அச்சத்துடன் சாலை ஓரமிருந்த மரங்களிடையே பதுங்கிப் பதுங்கிச் சென்றான்.

அத்தியாயம் பத்து

இளவரசனின் ஏமாற்றம்

பொழுது புலர்வதற்கு முன், வஞ்சி மாநகரம் விழித்துக் கொண்டது. பல சமயங்களைச் சார்ந்த கோயில்களில் மணிகள் ஒலித்தன; முரசுகள் முழங்கின. உள்ளே, செங்குட்டு வன் வாழ்நாள் பெருக, வளம் சிறக்க, புகழ் ஓங்க வழிபாடுகள் நடந்துகொண்டிருந்தன. புலவர்கள் ஆங்காங்கே மக்களைக் கூட்டி, மன்னரைப் பற்றித் தாம் பாடிய பாக்களைப் படித்துக் காட்டிக்கொண்டிருந்தனர். கேட்ட மக்கள், 'வாழ்க தமிழ்!' 'வாழ்க செங்குட்டுவன்!' என்று முழங்கினர். இசை மேடைகளில் செங்குட்டுவனின் புகழ் வெள்ளமே பொங்கித் ததும்பியது. ஆடல் அரங்குகளில் செங்குட்டுவனின் வீரச் செயல்கள் நடித்துக் காட்டப்பட்டன.

எங்கு நோக்கினும் மலர்ச்சி! எங்கு நோக்கினும் மகிழ்ச்சி! செங்குட்டுவனின் பிறந்த நாளை எல்லாரும் தத்தம் பிறந்த நாளாகக் கருதிக் கொண்டாடினர்; குதூகலம் கொண்டனர்.

பிறந்த நாளின்போது பேரரசனைக் காண்பதற்காக அரண்மனை நோக்கிச் சென்றனர், மக்கள். பல்வேறு ஆறுகள் கடலில் கலப்பதைப் போலப் பல்வேறு தெருக்கள் வழியாக வந்த மக்கள் அரண்மனை முன்னே அலைகடல் போலக் குழுமினர். அரண்மனைக்குள்ளே போகும் உரிமை

பெற்றவர்களும், முன்னமே அதற்கான அனுமதி பெற்றவர்களும் உள்ளே சென்றனர்.

அரசனின் அறை முன்னே, அவனைக் கண்டு வாழ்த்த புலவர் பெருமக்களும், அரசியல் அதிகாரிகளும் திரண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தைப் பிளந்துகொண்டு சென்ற இளவரசன் குட்டுவன் அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான்.

செங்குட்டுவன் அவைக்குப் புறப்படத் தயாராய் இருந்தார். அவர் அருகே அறுகையும் இருந்தார். அரசரைக் கண்டதும் குட்டுவன் பேசத் துடித்தான். நேற்றிரவு செல்வியை அவள் தங்கியிருந்த இடத்தில் விட்டுவிட்டு வேகமாக அரண்மனைக்குத் திரும்பினான். மன்னரின் பிறந்த நாளையொட்டிக் கூடும் அவையில், செல்வியின் இசை நிகழ்ச்சியை இணைக்க அரசரின் அனுமதியைப் பெற விரும்பினான். வழக்கமாக நெடுநேரம் கழித்து உறங்கும் செங்குட்டுவன் நேற்றுக் குட்டுவன் வருவதற்குள் உறங்கப் போய்விட்டான். அரசரை எழுப்பி, "செல்வியின் இசையைக் கேட்கும் பேறு நமக்குக் கிடைத்திருக்கிறது. பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் அதையும் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லத் துடித்தான். பின்னர் அவ்வாறு செய்யும் துணிவு இன்றித் திரும்பிச் சென்றான். செல்வியின் நினைவே அவன் உள்ளத்தில் நிறைந்திருந்தது. அதனால் அவன் தூங்கவில்லை. விடிவதற்கு முன் அரசரைக் கண்டு அனுமதி பெற்றுவிட வேண்டும் என்று முடிவு செய்தான். ஆனால் விடியற்காலையில் அயர்ந்து தூங்கிவிட்டான். விழித்தெழுந்தபோது, அரண்மனை விழாவைக் கொண்டாடிக் கொண்டிருப்பதை அறிந்தான். அரசர் அவைக்குச் செல்வதற்கு முன்பாவது அனுமதி பெற நினைத்தே ஓடோடி வந்தான்.

தந்தையைக் கண்டதும், வந்த வேலையை முடிக்க நினைத்தான். அன்று தந்தையின் பிறந்த நாள் அல்லவா? குட்டுவன் தன் அவசரத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டே, "தந்தையே, தமிழ் உலகத்திற்கே தனிப் பெருமைதரும் தங்கட்கு நீண்ட ஆயுளைத் தருமாறு இறைவனை வேண்டு கிறேன்! வாழ்க விற்கொடி! வாழ்க சேரர் குடி" என்று உணர்ச்சி வயப்பட்டவனாகக் கூறினான் குட்டுவன். செங்குட்டுவன் தம் செல்வப் புதல்வனை அணைத்துக் கொண்டார்.

அந்த அன்புப் பெருக்கிலிருந்து விடுபட்டதும், குட்டுவன், "தந்தையே, தாங்கள் கூறியவாறு அடிகளாரை அழைத்தேன். அவர் தவறாது வருவதாகக் கூறினார். அடிகளாருடன் கொல்லி மலையைச் சார்ந்த குமரி ஒருத்தியிருந்தாள். அவள் பெயர் செல்வி. அவள் இசையரசி! அவள் இசை கேட்டால் கல்லும் கனிந்துவிடும்; கொல்லும் விலங்கு பணிந்துவிடும்! அந்த இசையின் பெருமையை நம் அடிகளாரே எடுத் துரைத்தார். அதனால் இன்றைய விழாவில் பாடுமாறு செல்வியை வேண்டினேன். அவளும் இசைந்தாள்" என்று கூறிவிட்டுத் தந்தையின் முகத்தைப் பார்த்தான்.

"குட்டுவா, நல்ல இசை நம் மனத்தைப் பண்படுத்தும். ஆனால் இன்று அவையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நேற்றே முடிவு செய்துவிட்டோமே! மேலும் சில நிகழ்ச்சி களை இணைப்பது முறையாகாது. நேரமும் இருக்காது. இளவரசன் அழைத்த செல்விக்கு உரிய மதிப்பு அளிக்காமல் இருப்பதும் பெரும் பிழை! இப்போது என்ன செய்வது?" என்று சிந்தனையில் ஆழ்ந்தார், சேரமன்னர்.

அரசர் எங்கே மற்றோர் நாள் அவையில் செல்வியின் இசை நிகழ்ச்சியை வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லி விடுவாரோ என்று அஞ்சினான் குட்டுவன். செங்குட்டுவன்,

"குட்டுவா, அறுகையின் வருகையைச் சிறப்பிக்க இன்று மாலை ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்துள்ளேன். அதில் செல்வி பாடட்டும்" என்றார். குட்டுவன் மகிழ்ந்தான். "சரி தந்தையே. அப்படியே செய்யுங்கள்" என்று கூறிவிட்டு, அதை அப்போதே செல்விக்கு அறிவிக்க நினைத்துப் புறப்பட்டான்.

அவை கூடும் இடத்திற்குக் குட்டுவன் ஓடினான். இளங்கோ அடிகள் வந்தாரா என்று விசாரித்தான். சற்று முன்னர்தான் அடிகள், ஒரு பெண்ணோடு வந்தார் என்றும், அடிகளை வந்தவுடன், நேரே தம் அறைக்கு அழைத்து வருமாறு அரசர் ஆணையிட்டதால் அவர்கள் இருவரும் அரசரிருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் அருகே இருந்த வீரர் கூறினர்.

இளவரசன் மீண்டும் அரசரின் அறை நோக்கி ஓடினான். அங்கே அரசர் தம்மைக் காண வந்த புலவர்கள் அதிகாரிகள் முதலியோரின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டிருந்தார். அவருடன் அறுகையும் அடிகளாரும் இருந்தனர். ஆனால் செல்வியைக் காணோம்.

அவள் எங்கே?

குட்டுவன் அதைத் தெரிந்துகொள்ளத் துடித்தான். அடிகளாரை அணுகிக் கேட்டால் அவர் சொல்வார் என்று நினைத்த குட்டுவன் அவரை நோக்கி நகர்ந்தான். செங்குட்டுவன் அதைக் கண்டார். உடனே, "வாருங்கள் அவைக்குச் செல்வோம்" என்று கூறியபடி, "குட்டுவா போகலாமா?" என்று கேட்டார்.

"செல்லலாம் தந்தையே" என்று குட்டுவன் கூறினான்.

செங்குட்டுவன் பாசத்தோடு தன் மகனை மற்றவர்கள் முன் தழுவிக்கொண்டார். "குட்டுவா, என் ஆயுளும் நீ

பெறுக! உன் புகழ் என் புகழை வெல்லட்டும்" என்று கூறினார்.

தந்தை அன்பைக் கண்டு பிறர் வியந்தனர்; பாராட்டினர். குட்டுவனோ, 'தந்தை முதலிலே என்னைத் தழுவிக் கொண்டாரே, பிறகு இச்செயல் ஏன் இப்போது?' என்று குழம்பினான். அதற்குள் அரசர் குட்டுவன் கையைப் பற்றியவாறு, அவையை நோக்கி நடந்தார். பிறர் அவன் பின்னே சென்றனர்.

அனைவரும் அவையில் நுழைந்தனர். அவை நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. "எங்கள் மன்னர் சேரன் செங்குட்டுவன் வாழ்க, வாழ்க" என்ற பெருமுழக்கம் செவியைச் செவிடாக்கியது. மகளிர் தூவிய மலர்மழையில் நனைந்து மன்னர் தம் அரியணையில் அமர்ந்தார்.

இளவரசன் குட்டுவனும் இளங்கோ அடிகளும் அமர்ந்தனர். பரணர் முதலிய புலவர்களும், வில்லவன் கோதை, அழும்பில்வேள் முதலிய அரசியல் அதிகாரிகளும் அமர்ந்தனர். அவை தொடங்கியது.

புலவர் எழுந்து புகழ்மாலை சூட்டினர். பிறநாட்டு மன்னர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்திகளும் பரிசுப் பொருள்களும் குவிந்தன. மக்களில் பலரும் மன்னரை வாழ்த்தினர். மன்னனின் இதயம் விம்மியது; மக்களின் அன்புச் சுமையைத் தாங்க முடியாமல் தவித்தது.

அவைக்கு வந்திருந்த புலவர்களில் பரணர் ஒருவர்தான் பாமாலை சூட்டி மகிழ்விக்காதவர். அவர் எழுந்து சில சொற்களில் மன்னரை வாழ்த்திவிட்டு அமர்ந்தபோது செந்தமிழ்ப் பாக்களை எதிர்பார்த்த மக்கள் ஏமாற்றமடைந்தனர். ஏன், செங்குட்டுவனின் முகத்தில்கூட இந்த

ஏமாற்றம் ஒரு நொடி தெரிந்தது. என்றாலும் அதை மறு நொடியே மறைத்துக்கொண்டார்.

அரசர் அவையில் இருந்த புலவர்கட்கெல்லாம் பல்வேறு பரிசுகளை அள்ளிக் கொடுத்தார். பிறகு தம்மைக் காணும் பேராவலுடன் வெளியே காத்திருக்கும் மக்களைக் காண எழுந்தார். அவை கலைந்தது. அரசர் மற்றவர் பின்தொடரச் சென்றார். அரண்மனையின் வெளியே கூடி நின்ற மக்கள் முன் நின்றார். கடலோசை போல, மக்களின் வாழ்த்தொலி பெருகியது.

மன்னர் மக்களின் வாழ்த்தைப் பெற்ற பிறகு செய்ய வேண்டியது என்ன? அரண்மனை முன்னிடத்தின் ஒரு புறத்தில் பொன்னும், மணியும், பட்டும், துகிலும் குவிந்து கிடந்தன. மன்னர், பிறந்த நாளில் தம்மை நாடி வரும் மக்கள் எல்லாருக்கும் இல்லை என்னாமல் ஈந்து மகிழ்வது வழக்கம். அந்தக் கொடைச் செயலுக்காகச் சிறு குன்றுகள் போலப் பொருள்கள் குவிந்திருந்தன.

மன்னர் அருகே சென்றார். மக்கள் மன்னரிடம் பரிசு பெற வரிசையாக நின்றனர். மன்னர் தம் கைகளால் பொருளை எடுத்துப் பூரிப்போடு வழங்கினார். பெற்றவர் மகிழ்ந்து வாழ்த்திச் சென்றார். மன்னர் மூவருக்கு வழங்கி னார். இன்னும் பரிசு பெற நிற்பவர் ஆயிரக்கணக்கானோர்! அவ்வளவு பேர்களுக்கும் அவரே பரிசு தர இயலுமா? அதனால் தம் சார்பில் பரிசு வழங்குமாறு அமைச்சர்களில் ஒருவரை, நியமிப்பது வழக்கம். இன்று மூவருக்குப் பரிசு வழங்கியதும் நிறுத்தினார். தம் அருகே நிற்பவர்களைப் பார்த்தார். பிறகு,

"குட்டுவா, என் சார்பில் இப்பொருள்களை மக்களுக்கு வழங்குக! அவர்கள் எத்தனை பேர் வந்தாலும் ஒருவர்

கூட ஏமாற்றத்துடன் செல்லக்கூடாது” என்று கூறியவாறு தாமிருந்த இடத்தை விட்டுப் பெயர்ந்து நின்றார்.

குட்டுவன் சற்று நேரம் திகைத்து நின்றுவிட்டான். செல்வியைப் பார்க்க வேண்டும் என்று காலையிலிருந்து துடித்துக்கொண்டிருந்தான். அவையின் மேன்மாடத்தில் அரச மகளிர் அமர்வது வழக்கம். அங்கே செல்வி இருக்கிறாளா என்று பார்க்க ஓரிரு முறை நிமிர்ந்து பார்த்தான். முன் வரிசையில் இருந்த அன்னையும் கோதையும் கண்ணில் பட்டனர். அவர்களுக்குப் பின்னே மகளிர் கூட்டம் இருந்தது. அதில் செல்வி இருக்கிறாளா என்று பார்க்க விரும்பினான். ஆனால் அரசர் தன்னைக் கவனிப்பது போலத் தோன்றவே நிமிர்ந்து பார்ப்பதை நிறுத்திக்கொண்டான். அவை முடிந்த பிறகு அந்தப்புரத் திற்குச் சென்று செல்வியைச் சந்திக்கலாம் என்று அமைதி யடைந்தான்.

‘ஆனால் அரசர் செய்தது என்ன? அவர் என்னை யல்லவா இந்தப் பொன்னையும் மணியையும் வழங்கச் சொல்கிறார். இச்செயல் இப்போது முடியாதே! இது நாள் முழுதும் நீடிக்குமே, செல்வியை எப்போது பார்ப்பது?’

குட்டுவன் சிந்தித்தவாறு நின்றான். செங்குட்டுவன், “குட்டுவா, நான் இட்ட பணியைச் செய்வாயல்லவா?” என்று கேட்டார்.

குட்டுவன் தன் சிந்தனையை உதறி, “செய்கிறேன் தந்தையே! கொடுப்பதே மகிழ்ச்சியான செயல்! தங்கள் சார்பில் கொடுப்பதோ இன்னும் மகிழ்ச்சி நிறைந்தது” என்று கூறிய குட்டுவன், பொருள்கள் குவிந்த இடத்திற்குச் சென்றான். உடனே அவற்றை எடுத்து மக்களுக்கு வழங்கி னான். மகன் பரிசு வழங்கும் காட்சியைச் சிறிது நேரம்

பார்த்துக்கொண்டு நின்றார், மன்னர். பிறகு அங்கிருந்து சென்றார். பிறரும் அவருடன் சென்றனர்.

நேரம் பறந்தது. காலை கடந்து நண்பகல் வந்தது. பகல் மறைந்து மாலை பிறந்தது. குட்டுவன் பொருள்களைக் கொடுத்துக்கொண்டே இருந்தான். வழங்கிச் சிவந்தன அவன் கைகள்! வாங்கிச் சிவந்தன பிறர் கைகள்! கொடை கொடுக்கும் கைகளுக்கும் சோர்வு உண்டல்லவா? குட்டுவன் கைகள் சோர்ந்தன! இதயமோ அவற்றினும் சோர்ந்தது.

வாங்க வந்தவர்களின் கூட்டம் குறைந்து மறைந்தது. சில நிமிடங்களுக்கு ஒருவர் என்ற நிலையில் யாராவது வந்துகொண்டிருந்தனர். குட்டுவனால் அந்த மாலை நேரத்திலும் அங்கேயே இருக்க முடியவில்லை.

'மாலையில் அறுகையைச் சிறப்பிக்கும் விருந்து நடக்கும்! அதில் செல்வியின் இசை விருந்தும் இருக்கும். அந்த இசையைக் கேட்காமல் இருப்பதா? முடியாது! முடியாது!'

குட்டுவன் இருந்த இடத்தை விட்டு எழுந்தான். தன்னருகே கருவூலக் காப்பாளர் இருந்தார். அவரிடம் 'இனி வருபவர்க்குத் தாங்களே பரிசு வழங்குங்கள்' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

அங்கிருந்து அந்தப்புரத்தை நோக்கி வேகமாக நடந்தான். ஓட்டமும் நடையுமாகச் சென்றான். அந்தப்புரம் ஒளிமயமாக இருந்தது.

'விருந்து எங்கே நடக்கும்! அந்தப்புரத்து மாளிகைக் குள்ளா? இளமரக்காவில் இருக்கும் மண்டபத்திற்குள்ளா?'

குட்டுவனுக்குத் தெரியவில்லை. அந்தப்புரத்து மாளிகைக்குள் நுழைந்தான். அங்கே விருந்து நடக்கும் அறிகுறியே இல்லை. அங்கிருந்தோரிடம் விசாரித்தான்.

விருந்து அங்கே நடக்கவில்லை என்பதையும், அரசர், அரசி, அறுகை, கோதை முதலியோர் நண்பகல் முதல் அந்தப் புரத்தில் இல்லை என்பதையும் அறிந்தான்.

'அத்தனை பேரும் எங்கே சென்றனர்? அரசர் விருந்துக்கு ஏற்பாடு செய்ததாகக் கூறினார். ஆனால் எங்கே என்று சொல்லவில்லையே? விருந்து மாலையில் நடக்கும் என்றார். இந்நேரம் அது நடந்து கொண்டிருக்கும். அரசர் ஏன் என்னிடம் விருந்து நடக்கும் இடத்தைச் சொல்ல விரும்பவில்லை! சொல்ல மறந்து விட்டாரா? சொல்லாமல் மறைத்து விட்டாரா?'

குட்டுவன் கோபம் கொண்டான். நேரே அரசவை மாளிகைக்குச் சென்றான். அதிகாரிகளிடம் விருந்து எங்கே நடைபெறுகிறது என்று கேட்டுத் தெரிந்து கொண்டான்.

வஞ்சி நகரத்து எல்லையிலே ஓடும் ஆன்பொருநை ஆற்றங்கரையில் வேனில் மாளிகை ஒன்றுண்டு. அந்த மாளிகையில் விருந்து நடக்கிறது என்பதை உணர்ந்தான். அரண்மனையிருக்கும் இடத்திற்கும் வேனில் மாளிகைக்கும் வெகு தூரம்! குதிரையில் ஏறி வேகமாகச் சென்றாலும் பல நாழிகையாகும். குட்டுவனின் கோபம் கூடியது.

குட்டுவன் தன் குதிரையில் ஏறினான். வேனில் மாளிகையை நோக்கி வேகமாகச் சென்றான். அவன் நினைத்த அளவு வேகமாகச் செல்ல முடியாதபடி வீதிகளில் மக்கள் கூட்டம்! ஆங்காங்கே ஆடல் பாடல் அரங்குகள் இருந்தன. அங்கே கூடிய கூட்டம் தெருக்களையும் அடைத்துக்கொண்டது. தந்தையின் பிறந்த நாளை மக்கள் கொண்டாடும் முறையைக் கண்டு மகிழ வேண்டிய குட்டுவன் அன்று கோபத்தால் கொதித்தான். கோபத்தை யாரிடம் காட்டுவது என்பது புரியாமல் குசைக் கயிற்றால் குதிரையை அடித்தான்.

அன்பாகத் தடவிக் கொடுக்கும், தட்டிக் கொடுக்கும் குட்டுவன் அன்று அடித்ததைப் பொறுக்காத குதிரை பறந்தது. அந்த வேகமும் அவனுக்குப் போதுமானதாக இல்லை. அவன் மேலும் கால்களால் உந்திக் குதிரையை விரட்டினான். குதிரை வேனில் மாளிகையை அடைந்தது.

குட்டுவன் குதிரையை விட்டு இறங்கினான். வேனில் மாளிகையின் வாயிலில் நின்று நோக்கினான். வேனில் மாளிகை அமைதியாய் இருந்தது. குட்டுவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. 'ஒருவேளை விருந்து இங்கும் நடக்காமல் வேறெங்காவது நடக்கிறதோ?' குட்டுவன் மாளிகையினையே வெறித்து நோக்கியவாறு நின்றான்.

வேகமாக வந்த குதிரை வாயிலில் நிற்பதை உணர்ந்து உள்ளே இருந்த ஒருவன் ஓடி வந்தான். அவன் வேனில் மாளிகையின் காவலாள். வெளியே நிற்கும் குட்டுவனைக் கண்டதும் "வணக்கம் இளவரசே! தாங்கள் நேரம் கழித்து வருகிறீர்கள் என்று நினைக்கிறேன். அரை நாழிகைக்கு முன்புதான் விருந்து முடிந்தது! இசை முடிந்தது! எல்லோரும் சற்று முன்தான் இங்கிருந்து சென்றனர்" என்றான்.

இளவரசன் அடைந்த ஏமாற்றத்திற்கு எல்லை இல்லை. என்றாலும் காவலாள் 'இசை முடிந்தது' என்று குறிப்பிட்டதைக் கேட்டு மகிழ்ந்தான். 'அரசர் சொன்னவாறு செல்வியின் இசை நிகழ்ச்சிக்கு இடம் கொடுத்துள்ளார்! நான் சொன்ன சொல் பழுதாகவில்லை' என்று திருப்தி அடைந்தான்.

'அரசர் முதலியோர் அரண்மனைக்குத் திரும்பியிருப்பர். செல்வி எங்கே போயிருப்பாள்? அவளை அழைத்து வந்த அடிகள், மீண்டும் அவளை அழைத்துச் சென்று விடுதியில்

விட்டிருப்பார். நேரே விடுதிக்குச் சென்று செல்வியைப் பார்த்தால் என்ன? ஆம்! பார்க்க வேண்டும்! அவளுடைய இசை நிகழ்ச்சி இடம்பெற வேண்டும் என்று விரும்பிய நான் ஏன் அதைச் சுவைக்க வரவில்லை என்பதை விளக்க வேண்டும்!'

குட்டுவன் இதற்கு மேலும் சிந்தித்துக் கொண்டு நிற்க வில்லை. குதிரையில் ஏறிப் பறந்தான். விடுதியிலும் ஏமாற்றமே அவனை எதிர்கொண்டு வரவேற்றது.

அத்தியாயம் பதினொன்று

காதல் உள்ளம்

இளங்கோ அடிகள் தம் அருகே இருந்த விளக்கின் திரியைத் தூண்டிவிட்டார். அறையில் பெருகிய இருள் குறைய, ஒளி நிறைந்தது. பின் கைகளிலிருந்த ஓலைச் சுவடியில் கண்ணைச் செலுத்தினார். அதே நேரத்தில் அறை வாயிலை யாரோ அணுகிய மெல்லிய அரவம் கேட்டது. அடிகள் நிமிர்ந்து வாயிலை நோக்கினார்.

அங்கே இளவரசன் குட்டுவன் நின்று கொண்டிருந்தான். அடிகள், "வா குட்டுவா" என்று அழைத்தார். குட்டுவன் உள்ளே வந்தான். அடிகள் "உட்கார்" என்றார். குட்டுவன் அவர் எதிரே உட்கார்ந்தான். அப்போதும் குட்டுவன் ஒன்றும் பேசவில்லை. குட்டுவனை உற்றுப் பார்த்தார் அடிகள். முகத்தைச் சோகம் முற்றுகையிட்டிருந்தது. அவனது அகத்தின் நிலையும் அதுவே என்பதையும் அடிகள் அறிந்தார்.

"குட்டுவா, இந்தச் சுவடியை வைத்துக்கொள். இது மனக்கவலை நீக்கும் மாமருந்து! வள்ளுவர் தந்த தெள்ளமிழ்து! திருக்குறள்! உன் மனம் இதில் படிந்தால், மாசும் மயக்கமும் பறக்கும்! முகத்தில் தேசும் தெளிவும் பிறக்கும்."

அடிகள் சுவடியை நீட்டினார். குட்டுவன் அதை இரு கையாலும் பெற்றுத் தன் இதயத்தோடு சேர்த்து அழுத்திக்

கொண்டான். பிறகு, "அடிகளே, குறள் நீங்கள் கூறியதைச் செய்யும். மருந்துக்கே ஒரு தனிக்குணம் உண்டு. அது பிணியை மெதுவாகக் குறைப்பது, இக்குறள் என் கவலையை மெல்லப் போக்கும். ஆனால் உங்கள் குரல் என் கவலையை உடனே போக்கும். அடிகளே, காலை முதல் இதுவரை நான் கண்டது ஏமாற்றம். அது இயல்பாய் நேர்ந்ததா? எவராவது திட்டமிட்டு என்னை ஏமாறச் செய் தார்களா? ஒன்றும் புரியவில்லை. அடிகளே, உள்ளத்தில் உள்ளதை உங்களிடம் மறைக்காமல் உரைக்கிறேன். செல்வி யைக் காணவும், அவள் கானத்தைக் கேட்கவும் துடித்தேன். ஆனால்... ஆனால்..." என்று முடிக்காமல் நிறுத்தினான். பிறகு அவனே தொடர்ந்தான்.

"அடிகளே செல்வியை அரண்மனையில் பார்க்க முடிய வில்லை. விருந்தில் கலந்துகொள்ள முடியவில்லை. விடுதி யிலாவது பார்க்கலாம் என்று ஆவலாய்ச் சென்றேன். அங்குச் செல்வி இல்லை. செல்வியும் அவள் தந்தையும் தம் கூட்டத்தாருடன் விடுதியை விட்டே சென்றுவிட்டனராம். அதுவும் அரண்மனைத் தேர்களில் ஏன் சென்றார்கள்? எங்கே சென்றார்கள்? அடிகளே உங்களுக்கு இதைப்பற்றித் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அருள் கூர்ந்து செல்வி இப்போது எங்கே இருக்கிறாள் என்பதைச் சொல்லுங்கள்."

அடிகள் இளவரசனை அருளோடு நோக்கினார். பிறகு, "குட்டுவா, ஏமாற்றம் இல்லாமல் வாழ்க்கை இல்லை. ஏமாற்றத்தைப் போக்க ஏற்ற வழி, எதையும் எதிர் பார்க்காமல் இருப்பதுதான். துறந்தார் பெறும் இந்த மனநிலை, இன்பங்களைத் துய்ப்பார் பெற இயலாது. செல்விக்கு அரசர் செங்குட்டுவன் மிகுந்த மதிப்பளித்தார். செல்வியின் இசையைக் கேட்டுப் பூரித்தார்! அவளைப்

புகழ்ந்தார், சிறந்த பரிசுகளை அளித்தார். மேலும் ஒரு சிறப்பினைச் செய்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஆண்டு தோறும் புதிய பாடல்களை அரங்கேற்றும் விழா நடக்கு மல்லவா? அவ்விழாவில் கலைநிகழ்ச்சியும் உண்டு. அதற்குச் சேரநாட்டுப் புலவர்களையும் கலைஞர்களையும் அனுப்பி வைக்குமாறு பாண்டியன் நெடுஞ்செழியன் கேட்டிருந்தார். புலவர் குழு ஏற்கெனவே பாண்டி நாட்டுக்குப் புறப்பட்டு விட்டது. கலைஞர் குழுவை யார் தலைமையில் அனுப்ப லாம் என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்த சேரமன்னர் செல்வியின் இசையைக் கேட்ட பிறகு, செல்வியின் தந்தை குன்றக்குமரனைத் தலைவனாக்கிவிட்டார். உரிய நேரத்தில் மதுரையை அடைய வேண்டுமானால் உடனே புறப்பட வேண்டும். அதனால் இன்றிரவே புறப்படுமாறு கூறினார். எனவே குன்றக்குமரன் செல்வியுடன் புறப்பட்டுவிட்டார். இந்நேரம் அவர்கள் பேரியாற்றைக் கடந்து அதன் மறு கரையில் ஏற்கெனவே ஆயத்தமாக இருக்கும் கலைஞர் களுடன் கலந்து விட்டிருப்பார்கள். நாளை அவர்கள் தமிழ் மதுரையை நோக்கிச் செல்வார்கள்."

அடிகள் கூறியதைக் கேட்டதும், குட்டுவன் எழுந்தான்.

"அடிகளே, விடை கொடுங்கள், நான் உடனே செல்வி யைச் சந்திக்க வேண்டும். அவளை மட்டுமாவது மதுரைக்குச் செல்லாமல் தடுக்கவேண்டும். நடந்ததையெல்லாம் ஒருசேர நினைத்துப் பார்த்தால் செங்குட்டுவ மன்னர் நான் செல்வி யைச் சந்திக்கக் கூடாது என்று திட்டமிட்டு இத்தனை ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார் என்பது புரிகிறது. ஆனால் புரியாதது ஒன்றிருக்கிறது. மலைக்காட்டிலே செல்வி யைக் கண்டபோது என் மனம் ஆசை வலைப்பட்டதுண்டு. அப்போது அதைக் காதல் என்று நினைக்கவில்லை. ஆனால் நேற்றிரவு அவளை இங்குக் கண்டு உரையாடி உடன் நடந்து

சென்றபோதுதான் செல்வி என் உள்ளத்தில் நிறைந்து விட்டதையும், அவளின்றி என் வாழ்வு நிறைவேறாது என்பதையும் உணர்ந்தேன். அது மன்னருக்கு எப்படித் தெரியும்?" என்று கூறிய இளவரசன் திடீரென்று அடிகள் முன் பணிந்தான்.

"அடிகளே, நான் செல்வியை விரும்புகிறேன். கலை யுணர்வற்ற என் கல் நெஞ்சத்தைக் கனியச் செய்தவள் அவள். என் உயிரைத் தன் இசையால் காத்து அதனுடன் கலந்துவிட்டவள், அவள். அவள் இன்றி நான் இல்லை என்பது என் நிலை. அடிகளே, செல்வியை மணக்க விரும்பும் எனக்கு ஆசி கூறுங்கள்" என்றான் குட்டுவன்.

குட்டுவனின் காதல் உள்ளத்தை உணர்ந்த அடிகள், "குட்டுவா, செல்வியை நீ மணக்க நான் ஆசி கூறிப் பயனில்லை. உன் தந்தை ஆசி கூற வேண்டும். அதனால் செல்வியைப் பின்தொடர்ந்து செல்வதைக் காட்டிலும் உன் தந்தையிடம் உன் எண்ணத்தை உடனே கூறி அவர் ஆசியைப் பெறு. நீ இளவரசன். வருங்கால அரசன். அதனால் உன் தந்தையின் விருப்பத்திற்கு விரோதமாக எதையும் செய்ய முடியாது. எனவே அரசரிடம் உன் ஆசையை உடனே கூறு. அவர் வேறு முடிவுக்கு வரும் முன் உன் முடிவை அவரிடம் கூறுவது நலம்."

குட்டுவன் எழுந்தான். "அடிகளே, இப்போதே போகிறேன். அரசரிடம் என் விருப்பத்தைச் சொல்கிறேன்" என்று கூறி அடிகளை வணங்கிவிட்டு, வந்த வழியே வெளியேறினான்.

அத்தியாயம் பன்னிரண்டு

குள்ள நரி

குன்றமாய் நிமிர்ந்து நின்ற அரண்மனைக்குள்ளே குட்டுவன் கொடும் புயலாய் நுழைந்தான். அவன் உள்ளக் கடல் கொந்தளித்துக்கொண்டிருந்தது. உடலோ வியர்வையில் குளித்துக்கொண்டிருந்தது.

'அடிகளிடம் என் காதலைக் கூறினேன். அவர் உடனே என் தந்தையிடம் கூறி ஆசிபெறச் சொன்னார். அதுவும் உடனே என்பதை அழுத்திச் சொன்னாரே? ஏன்?'

குட்டுவன் குணவாயில் கோட்டத்திலிருந்து அரண்மனைக்குள்ளே வருவதற்குள் இதே கேள்வியை ஆயிரம் முறை கேட்டுக்கொண்டான். பதில் சொல்லத்தான் ஆளில்லை. 'என் தந்தை, அடிகளின் தமையன். அதனால் அரசரின் அறிவு, ஆற்றல், சூழ்ச்சி முதலியவற்றை என்னைவிட அவரே அறிவார். அவர் என் காதல் தகாது என்று தடுக்கவில்லை! மாறாகத் தந்தையின் ஆசியைப் பெறச் சொன்னார். அடிகள் என் காதலுக்கு ஆசி கூறுகிறார். அது போதும்! அதைக் கொண்டு, அரசரை என்ன, இந்த அகிலத்தையே என் காதலை ஏற்குமாறு செய்வேன்.'

குட்டுவன் சிந்தனை வயப்பட்டாலும் அவன் கால்கள் திசை மாறவில்லை. அவை, அரசனின் அறைக்கு அவனை

அழைத்துச் சென்றன. மூடியிருந்த சந்தன மரக் கதவுகளின் முன்னே நிறுத்தின. நடை தடைப்பட்டதும் உணர்வு பெற்ற இளவரசன் எதிரே இருந்த கதவுகளைக் கண்டான். அவற்றை இரு கைகளாலும் திறந்தான். இருபெரும் கதவுகள் ஒருசேர விலகின. உள்ளே இரண்டு இருக்கைகளில் அரசர் செங்குட்டுவனும் அவர் நண்பர் அறுகையும் இருந்தனர். கதவு திறந்த ஓசையைக் கேட்டு இருவருமே வாயிலை நோக்கினர். வெறுமனே மூடியிருந்த கதவை வேகமாகத் திறந்துகொண்டு உள்ளே கால் வைத்த இளவரசன், தந்தையையும் அவர் நண்பரையும் கண்டதும் சற்றே நின்றான்.

மகனைக் கண்டதும் மாமன்னரின் முகம் மகிழ்ச்சியால் விளக்கம் பெற்றது. அவர் இருந்த இடத்தை விட்டு எழுந்து நின்று "வா, குட்டுவா வா" என்று அழைத்தார்.

மன்னரின் முகமலர்ச்சி இளவரசனை மருட்டியது. 'இது இயற்கையான மலர்ச்சியாகத் தெரியவில்லையே! மன்னர் தமக்கே உரித்தான தனித் திறமையால் வரவழைத்துக் கொண்ட பொய்ப் புன்னகை இது! போலி மகிழ்ச்சி இது!' என்று நினைத்தான் குட்டுவன். 'உன் தந்தையிடம் உன் எண்ணத்தை உடனே கூறி அவர் ஆசியைப் பெறு' என்று இளங்கோ அடிகள் கூறியது அவன் நினைவுக்கு வந்தது. 'அரசர் தனித்திருக்கவில்லை. இனிய நண்பர் அறுகையுடன் இருக்கிறார். இப்போது சொல்லலாமா? அடிகள் உடனே கூறச் சொன்னார். அதனால் செல்வியை நான் விரும்புவதைக் கூறி அவர் ஆசியை வேண்டிவிட வேண்டும்' என்று முடிவு செய்தான்.

இளவரசனின் இதயத்தில் எழுந்த எண்ணங்களைச் செங்குட்டுவன் அறிந்து கொண்டிருப்பாரோ! இளவரசன் அரசரின் அருகே வந்தான். தன் விருப்பத்தை உரைக்க

இதழ்களை அசைத்தான். ஆனால் ஒரு நொடிப்பொழுதில் அவனை முந்திக்கொண்ட அரசர் பேசினார்.

“குட்டுவா, இந்த வேடிக்கையைப் பார்த்தாயா? ஆருயிர் நண்பர் அறுகையை வருந்தி, வருந்தி இங்கே வரவழைத்த நானே, இப்போது திரும்பிச் செல்லுமாறு கோருகிறேன். அதுவும் அவருடைய மகளையும் பிறரையும் அழைத்துக் கொண்டு செல்லுங்கள் என்கிறேன். எவ்வளவு சீக்கிரம் செல்ல முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செல்லச் சொல்கிறேன்.”

வேந்தரின் பேச்சு அவனை வியப்பில் ஆழ்த்தியது. குட்டுவன் அறுகையைத் திரும்பிப் பார்த்தான். அவர் முகத்தில் இயல்பான புன்னகை தவழ்ந்துகொண்டிருந்தது. ‘வரவேற்ற விருந்தினரை உடனே திரும்பிச் செல்லுமாறு சொல்வது ஏன்? அதைக் கேட்டுச் சினங்கொள்ளாமல் அறுகையார் சிரித்து மகிழ்வது ஏன்? இதென்ன புரியாத புதிர்!’ குட்டுவன் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கச் சேரர்கோன் தொடர்ந்து பேசினார்.

“குட்டுவா, குன்றத்தூர் குலக்கொடி சேரர்குடியை வாழ்விக்க வேண்டும் என்று நானும் உன் அன்னையும் அறுகையின் இருகைகளையும் பிடித்துக்கொண்டு கெஞ்சினோம். அறுகையின் வண்மையை அறியாதார் யார்? இரந்த எம்மை ஆதரித்து ‘அவ்வாறே ஆகுக! என் கோதை உம் குட்டுவனின் மார்பில் தவழட்டும்’ என்று கூறிவிட்டார். உன் அன்னை அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. என்னை மணந்த போதும், உன்னை ஈன்றபோதும் கூட அந்த அளவு மகிழ்ச்சி ஏற்பட்டதில்லை. அந்தப்புரத்திற்குச் சென்று பார்! ஒரே ஆடல் பாடல் மயந்தான்! என் பிறந்த நாள் என்பதை மறந்து தன் மகனின் திருமணம் உறுதியான பெருநாளாக இதைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறாள்.”

குடவர்கோ தொடர்ந்து பேசக் குட்டுவன் இதயம் சட்டென்று நின்றது! 'இதென்ன விபரீதம்! எனக்குத் திருமணமா? என் காதலி செல்வி என்பதைச் சொல்வதற்கு முன் உன் மனைவி கோதை என்று கூறிவிட்டாரே அரசர்! இதை அறிந்துதான் அடிகள் உடனே கூறச் சொன்னாரா? இனியும் தாமதிக்கக்கூடாது' என்று எண்ணிய குட்டுவன், "தந்தையே" என்று அழைத்தான். ஆனால் அவன் மேலே பேசுவதற்கு அனுமதிக்கவில்லை செங்குட்டுவன்.

"குட்டுவா, இச்செய்தி உன்னை என்ன பாடுபடுத்துகிறது என்பதை நான் அறிவேன். நீ சொல்லாதே! கோதையை மணக்கும் செய்தியை, இனிக்கும் செய்தியை, இப்படித் திடீரென்று கேட்டு மகிழ்ச்சியில் மூழ்கி, மீளத் தெரியாது தவித்துத் திணறுகிறாய் என்பதை உணருகிறேன். அதே நேரத்தில் உன் முகத்தில் வினாக்குறி தோன்றுவதையும் பார்க்கத் தவறவில்லை. உங்கள் மகனுக்குத் தம் தங்க மகளைத் தருபவரை ஏன் விரட்டுகிறீர்கள் என்று கேட்கிறாய். குட்டுவா, பெண் வீட்டார் இருக்கும் இடம் தேடிச்சென்று பிள்ளை வீட்டார் பெண் கேட்பது முறை. எனவே இப்போது திருமணத்தை உறுதிசெய்துவிட்டாலும், முறைப் படி நானும் உன் அன்னையும் குன்றத்தூர் சென்று மணம் பேச விரும்புகிறோம். அதனால் அறுகையை உடனே தம் ஊர் செல்லுமாறு கோருகிறேன். எப்படி வேடிக்கை! குட்டுவா, நீ களைத்திருப்பதாகத் தெரிகிறது. நீ இந்த அறையில் ஓய்வு எடுத்துக்கொள். நானும் அறுகையும் சென்று, அறுகையின் பயணத்துக்குரிய ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும்" என்ற அரசர் அறுகையை நோக்கி, "நண்பரே! வாருங்கள்! உங்களை இங்கிருந்து விரட்டி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்" என்று கூறி உரக்கச் சிரித்தார். அந்தச் சிரிப்பில் பங்கு கொண்டவாறே அறுகை

எழுந்தார். இருவரும் வாயிலை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

குட்டுவனின் உடல் நடுங்கியது! உள்ளம் துடித்தது! நரம்புகள் புடைத்தன! "தந்தையே, சற்று நில்லுங்கள்! உங்களிடம் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்..."

குட்டுவன் பேசுவதற்குள் செங்குட்டுவன் குறுக்கிட்டார். "குட்டுவா, நடு யாமத்தை நெருங்கும் நேரம் இது! நீயோ மிகவும் களைத்திருக்கிறாய்! சொல்ல விரும்புவதை நாளை சொல்; இப்போது படுத்துத் தூங்கு. செங்குட்டுவன் சொல்வதைச் செய்தே முடிப்பான்! இந்த அறுகையை நாளையே ஊருக்கு அனுப்பாமல் விடமாட்டான். அதுவரை தன் நேரத்தை வேறெதற்கும் செலவிடமாட்டான்" என்று கூறி மீண்டும் சிரித்தார். சிரித்தவாறே அறுகையின் கையைப் பற்றி, "அறுகையாரே தப்ப முயன்றாலும் முடியாது" என்று கூறி அவரை அழைத்துக்கொண்டு அறையைவிட்டு வெளியேறினார். ஆனால் நினைவாக, அறைக் கதவுகளைத் தம் கையால் இழுத்து மூடிவிட்டுச் சென்றார்!

அறைக்குள்ளே நின்ற குட்டுவனுக்கு உரக்க அழ வேண்டும் போலிருந்தது. 'அரசர் அறையின் கதவுகளை எவ்வளவு எளிதாக மூடிவிட்டார்! அதைவிட எளிதாக என் இதயக் கதவுகளையும் மூடிவிட்டாரே! என் செல்வி உள்ளே நுழைய முடியாமல் மூடிவிட்டாரே! செங்குட்டுவர் வீரத்தில் சிங்கம் என்றால் சூழ்ச்சியில் நரி! குள்ள நரி!!' என்று ஓலமிட்டது குட்டுவனின் ஏமாந்த இதயம்.

அத்தியாயம் பதின்மூன்று

பழையனின் பெரும் படை

பாண்டிய நாட்டை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது அறுகையின் தேர். தேரிலே அறுகையின் அருகே அமர்ந் திருந்தாள், கோதை. கோதை தேருக்கு முன்னும் பின்னும் படைவீரர்கள் குதிரையில் ஏறி வந்தனர். தேர் முன்னோக்கிப் பாய்ந்தது. ஆனால் அறுகையின் மனமும் கோதையின் மனமும் பின்நோக்கிச் சென்றன; அவர்கள் விட்டுப் பிரிந்த சேரநாட்டோடு ஒட்டி நின்று உறவாடின.

'செங்குட்டுவனுக்குத்தான் நம் மீது எத்தனை அன்பு! அவர் மகனை என் மருமகனாய் அடைய நான் கொடுத்து வைத்திருக்கவேண்டும். இந்தப் பெருமை வேறு எந்த மன்ன னுக்குக் கிடைக்கும். பெருநில வேந்தனுக்கும் கிடைக்காத பேறு இக்குறுநில மன்னனுக்குக் கிடை த்திருக்கிறதே. ஆனால் செங்குட்டுவன் என்ன நினைக்கிறார்? என் மகளைத் தம் மருமகளாகப் பெறப் பேறு செய்திருக்க வேண்டும் என்று கூறிப் பூரிக்கிறார். நான் மகளைத் தரச் சம்மதித்ததற்காக எப்படியெல்லாம் நன்றி கூறினார்! அவர் எங்கே? நான் எங்கே? நட்புக்கு ஏது வேற்றுமை? இளமையில் எப்படி இருந்தாரோ அதேபோல இப்போதும் இருக்கிறார். ஆனால் அன்பில்தான் மாற்றம். முந்தைய அன்பு குன்றுமணியள வென்றால், இப்போதைய அன்பு குன்றளவு!'

அறுகையின் உள்ளம் செங்குட்டுவனின் அன்பை நினைத்துப் பெருமையடைந்துகொண்டிருக்க, அவர் மகள் கோதையின் உள்ளமோ காதலை எண்ணி மகிழ்ந்தது.

'சேரநாட்டு இளவரசர் குட்டுவன் சேரல் எனக்குக் கிட்டப்போகிறார். அவரையே மணக்கவேண்டும் என்று நான் கண்ட கனவு நினைவாகப்போகிறது. அது நினைவாகு மென்பது எனக்கு முன்னரே தெரியும். ஆனால் இவ்வளவு விரைவில் நிறைவேறும் என்பது தெரியாது. அரசர் செங்குட்டுவனுக்குத்தான் என்மேல் எத்தனை அன்பு! அரசியாரோ, என் அன்னையினும் அதிக அன்பைப் பொழிந்தார். இளவரசருடன்தான் நன்கு பழக முடிய வில்லை. தந்தையின் பிறந்த நாளில் தனயனுக்கு எத்தனையோ வேலை! தவிர்க்க முடியுமா? ஆனாலும் புறப்பட்டுவரும்போது அவரைப் பார்க்க முடியவில்லையே என்னும் பெருங்குறை என்னை வதைக்கிறது. இரவெல்லாம் விழித்ததால் இன்னும் உறங்கிக்கொண்டிருக்கிறார் என்று கூறிவிட்டார்கள். என்றாலும் நான் தயங்கி நின்றேன்! அரசர் பொல்லாதவர். 'கோதை, நீ குட்டுவனைப் பார்க்கத் தவித்து நின்றதையும் துடித்துப் பிரிந்ததையும் நானே அவனிடம் கூறிவிடுகிறேன்' என்று கூறிச் சிரித்துவிட்டார். மேலும் தயங்காமல் தேரில் ஏறிவிட்டேன். இருக்கட்டும்! இந்த இளவரசர் என் ஆட்சிக்குள் வரும்போது, என்னைப் பார்க்க வராமல் ஏங்கித் தவிக்கச் செய்த குற்றத்துக்குத் தகுந்த தண்டனை தருகிறேன்.'

சிந்தனையில் மூழ்கியிருந்த தந்தையும் மகளும் தேர் திடீரென்று நின்றதால் நேர்ந்த அதிர்ச்சியால் தம்முணர்வு பெற்றனர். 'காற்றாய்ப் பறந்த தேர் ஏன் கல்லாய் நின்று விட்டது? எவ்வளவு விரைவாகச் செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாகச் செல்லவேண்டும் என்பதல்லவா

என் ஆணை' என்று நினைத்த அறுகை வெளியே பார்த்தார். அவருடன் வரும் படையின் தலைவர் அவரை நோக்கி வந்துகொண்டிருந்தார்.

"தேர் நின்றமைக்குக் காரணம் சொல்ல வருகிறார்! பயணத்தைத் தடைப்படுத்திய காரணம் எதுவாக இருக்கும்?"

அறுகை யோசிப்பதற்குள் படைத்தலைவர் அவரை அடைந்தார்.

"அரசே, நாம் மோகூரின் எல்லையில் உள்ள இடைக் குன்றத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இன்னும் இரண்டு நாழிகையில் அதை, அடைந்துவிடலாம். ஆனால் அதற்குள் முன்னோடிகளாகச் சென்ற நம் வீரர்களில் இருவர் வந்து கூறிய செய்தியைத் தெரிவிக்கவே பயணத் தைச் சற்று நிறுத்தச் செய்தேன்."

படைத்தலைவர் சற்று நிறுத்தினார். அறுகை 'மேலே சொல்' என்பதுபோல் தலையசைத்தார். படைத்தலைவர் தொடர்ந்தார்:

"நம் படையின் ஆறு வீரர்களை நாம் செல்லும் வழி செம்மையாக இருக்கிறதா என்று பார்த்துச் செல்ல அனுப்பினேன். அவர்கள் இடைக்குன்றத்தை அடையும் போது, மோகூரின் படை அதன் எல்லையில் அணி வகுத்து நிற்பதைக் கண்டனர். அந்தச் செய்தியை நம்மிடம் தெரிவிக்க இருவரை அனுப்பியுள்ளனர். மற்ற நால்வரும் அங்கேயே தங்கி அப்படையின் போக்கைக் கவனித்து வருகிறார்களாம்."

படைத்தலைவர் சொன்னதும் அறுகை சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு "நாம் வரும்போது கூட மோகூரின் எல்லையில் படையிருந்ததாகக் கூறினீர்கள். இல்லையா?" என்று கேட்டார்.

"அப்போது இரவு நேரம். மோகூரின் எல்லையில் படையிருப்பதை உணர்ந்தோம். ஆனால் அதன் அளவையும் நோக்கத்தையும் அறிவதற்குள், அப்படை திரும்பிச் சென்று விட்டது. அதனால் நாம் பொருட்படுத்தவில்லை."

"உம். மோகூர் பழையன் நம் சேரவேந்தரின் பகைவன்! நமக்கும் பகைவன்! அவன் எல்லையை ஒட்டிய இடைக் குன்றத்து வழியில் நாம் எத்தனையோ முறை சென்று வந்திருக்கிறோம். நம்மை எதிர்க்கும் துணிவு அவனுக்கு ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. என்றாலும் நம் ஒற்றர்கள் மோகூரின் படைபலம் நாளுக்கு நாள் பெருகி வருவதாகக் கூறியதையும் மறக்கவில்லை. பழையன் நம்மைத் தாக்க நினைப்பானா? அவன் பண்பில் குறைந்தவன் தான். என்றாலும் சின்னஞ்சிறிய படையுடன் நண்பரைக் கண்டு திரும்பும் நம்மை நடுவழியில் மறித்துப் போரிடுவானா? அந்த அளவுக்கு அறநெறி மறந்தவனா?"

"பழையன் எதற்கும் துணிந்தவன் என்று கூறுவார்கள். வருவதை உணராமல் நினைத்ததைச் செய்து முடிப்பானாம். அமைச்சர், புலவர் முதலியோரின் அறவுரையைப் புறக்கணிப்பது அவனது பிறவிக் குணமாம்"— படைத் தலைவர் கூறினார்.

"ஆமாம்! கேள்வியுற்றிருக்கிறேன்" என்று கூறிய அறுகை தம் அருகே இருந்த மகளைத் திரும்பிப் பார்த்தார்.

"படைத்தலைவரே, இளவரசியை வேறு தேரில் அமர்த் துங்கள். படையின் ஒரு பகுதி தேரைச் சுற்றி நிற்கட்டும். மற்றவர்கள் போரை எந்தக் கணமும் எதிர்பார்த்து முன்னே செல்லட்டும். பழையனின் படை நம்மைத் தாக்குமானால், நாம் எதிர்த்து நிற்போம். அதே நேரத்தில் இளவரசியின் தேரைச் சூழ்ந்த வீரர்கள் ஒரு நொடியும் தாமதிக்காமல், தேருடன் விரைந்து குன்றத்தூருக்குச் சென்றுவிடவேண்டும்."

அறுகை சொன்ன பிறகும் படைத்தலைவர் தயங்கி நின்றார். "அரசே, நாம் இப்போது முழுப்படையுடன் இல்லை. ஆயிரம் பேர் கொண்ட சிறு படையுடன் இருக்கிறோம். அதனால் பழையன் நம்மை வெல்ல இதுவே நல்ல தருணம் என்று நினைக்கக்கூடும். ஆசை ஆட்டுவித்தபடி ஆடும் பழையன், அறம் துறந்த சிந்தையன். அதனால் அவனுடன் வீணாக மோதாமல் வேறு வழியாகக் குன்றத்தூருக்குச் செல்லலாம். அது சுற்று வழி. எனவே இரண்டொரு நாள் பயணம் நீடிக்கும். என்றாலும் அவ்வழியே செல்வது நலம்" என்றார் படைத்தலைவர்.

அறுகையின் இரு கண்ணும் சிவந்தன. "படைத் தலைவரே, உணர்வுடன்தான் பேசுகிறீர்களா? பண்பற்ற இளைஞன் பழையன்! அவனுக்குப் பயந்தா பதுங்கிச் செல்லச் சொல்கிறீர்கள்! முடியாது! முடியாது! குன்றத்தூர் கோமான் கோழையல்ல! அதனால் நம் திட்டப்படி இடைக் குன்றத்து வழியே செல்வோம்! பழையன் எதிர்த்தால், நாமும் எதிர்ப்போம்! அவன் கடல் போன்ற படையுடன் வந்தாலும் கவலையில்லை. முடிந்தவரை அழிப்போம்! முடிவில் அழிவு நேரினும் ஆனந்தத்தோடு ஏற்போம்."

அறுகையின் உறுதிமிக்க சொற்களைக் கேட்டுத் தலை கவிழ்ந்தார் படைத்தலைவர்; நிலை குலைந்தாள், பக்கத்திலிருந்த கோதை.

"அரசே, நம் மரபுக்கு ஏற்ற செயல் தாங்கள் குறிப்பிட்டதே. எனினும் நம்முடன் இளவரசி இருப்பதை எண்ணியே அவ்வாறு கூறினேன்" என்றார் படைத் தலைவர்.

இதைக் கேட்டு உரக்கச் சிரித்தார் அறுகை. "ஒரு பெண்மகள் நம்முடன் இருப்பதால் நாம் பெண்மை அடைய வேண்டியதில்லை. நம்முடன் இருக்கும் பெண்

ஆண்மை பெறவேண்டும். கோதை கோழையல்ல! தேவை யானால் வாளேந்திப் போராடத் தயங்கமாட்டாள். படைத் தலைவரே, உடனே நான் சொன்னபடி செய்யுங்கள்" என்று கூறினார்.

படைத்தலைவர் உடனே வணங்கி விடைபெற்றார். அதன்பின் பல செயல்கள் விரைந்து நடந்தன. கோதை வேறு தேரில் அமர்த்தப்பட்டாள். அந்தத் தேரை நூறு வீரர்கள் சூழ்ந்து நின்றனர். பிறர் போருக்கேற்ற நிலையில் அணிவகுத்து, கோதையைக் காக்கும் வீரர்க்கு முன்னே நின்றனர். அறுகை தம் மகளிடம் விடைபெற்றுக்கொண்டு தம் தேரில் ஏறினார். அத்தேர் அணிவகுப்பின் ஆரம்பத்தில் நின்றது. பிறகு படை புறப்பட்டது. இடைக்குன்றத்தைப் படை நெருங்கும்போது, அங்கே தங்கியிருந்த அறுகையின் வீரர் நால்வர் வந்தனர். அவர்கள் தந்த செய்தி படைத் தலைவரை மேலும் கலக்கி விட்டது. அவர் அறுகையிடம் ஓடினார்.

"அரசே, இடைக்குன்றத்தில் தங்கிய நம் வீரர்கள் சற்று முன்வந்தனர். குன்றின் இடப்பக்கத்துப் பாதையை ஒட்டிப் பழையனின் படை நின்றதாம். சற்று நேரத்துக்கு முன்பு, பழையனே மற்றொரு படையுடன் வந்து சேர்ந்துள்ளானாம். நாம் செல்வது வலப்பக்கத்து வழி. இடப்பக்கத்திலிருந்து படை நம் பக்கம் வர கால் நாழிகைதான் பிடிக்கும்."

படைத்தலைவர் நிறுத்தினார். அறுகை, "அதனால் திரும்பிவிடலாம் என்று சொல்கிறீர்களா? அல்லது தாக்க வருபவரின் தாளைப் பற்றிக்கொண்டு பணிந்து விடலாம் என்கிறீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை அரசே! அறிந்த சேதியை அறிவித்தேன்" என்றார் படைத்தலைவர்.

"நல்லது. படை மேலே செல்லட்டும். பழையன் தாக்காத வரை நாம் தாக்க வேண்டியதில்லை. தாக்கினால், திருப்பித் தாக்குவோம்" என்றார் அறுகை.

படைத்தலைவர் உடனே கையை உயர்த்திச் சைகை செய்தார். படை நடந்தது. இடைக்குன்றத்தைச் சுற்றிக் கொண்டு சென்றது. அதைக் கடந்ததும், பழையனின் படை தென்பட்டது. கண்ணுக்கெட்டிய வரை படை கடலெனப் பரந்து நின்றது. அத்தனை பெரிய படையைப் பார்த்து அறுகையே அயர்ந்து போனார். அந்தக் கடற்படைக்கு முன்னே, தன் படை வற்றிப்போன வாய்க்காலுக்குச் சமம்! அறுகை பழையனின் படையைப் பார்த்துக்கொண்டிருந்த போதே, அப் பெரும்படை அவர் படையை நோக்கி நகரத் தொடங்கியது.

அத்தியாயம் பதினான்கு

நாடகம் நடந்தது

பழையனின் பெரும்படை நகர்ந்துகொண்டிருந்தது. அதை வேடிக்கை பார்ப்பதோ வியந்து நிற்பதோ அறுகை யின் பண்புக்கு ஏற்றதன்று. அறுகை உடனே தம் படையைப் போருக்கான நிலையில் நிற்கச் செய்தார். ஆனால் பழைய னின் படையை நோக்கிச் செல்லவில்லை. ஆம். ஆத்திரத் தாலும் அவசரத்தாலும் படை நடத்தி மோகூரின் எல்லை யைத் தொடும் தவற்றை அறுகை செய்யவில்லை. பழைய னின் படை தாக்கும் அளவு நெருங்கினால் போரிட வேண்டும். இதுவே அவரது முடிவு. போர் தொடங்கினால், கோதையிருக்கும் தேர் உடனே குன்றத்தூர் நோக்கிப் பறக்க வேண்டும். இது அவரது உத்தரவு.

நொடி, ஒரு நாழிகையாய் மெல்ல நகர்ந்தது. அடிமேல் அடிவைத்துப் பழையனின் படை ஊர்ந்து வந்தது. அறுகை யின் வீரர்கள் தம் போர்க் கருவிகளை இறுக்கிப் பிடித்தனர். அரசரின் உத்தரவை எதிர்பார்த்து நின்றனர். அரசர் அறுகையோ பழையனின் படையை வைத்த கண் வாங்காது பார்த்தார். பழையனின் வீரர்கள் வாளை உறையிலிருந்து எடுக்காமல் வருவதைக் கண்டார். படை பாதி தூரத்தைக் கடந்ததும், திடீரென்று சங்குகள் ஒலித்தன; முழவுகள் முழங்கின; முரசுகள் அதிர்ந்தன! அந்த இசைக்கருவிகள்

போர் வெறியைத் தூண்டுமாறு ஒலிக்கவில்லை. அவை மகிழ்ச்சியைத் தெரிவித்தன! எல்லையற்ற இன்பத்தை வழங்கின!

"களத்திலே களிப்புக் கூட்டும் இசை முழக்கமா? அறுகை சிறு படையோடு வந்து சிக்கிக் கொண்டார் என்று பெருமகிழ்வடைகிறானோ பழையன்!"

அறுகையின் இந்த எண்ணமும் தவறு என்பதை அடுத்த நொடி அவரே புரிந்து கொண்டார். பழையனின் படை வீரர்கள், "குன்றத்தூர் கோமான் வாழ்க! குணத்திலே குன்றே வாழ்க! அன்புக் கடலே வாழ்க! அரசர் அறுகை வாழ்க" என்று முழக்கமிட்டனர்.

'இது என்ன கனவா? நினைவா? பகைவன் பழையனின் படையினரா அறுகையின் புகழ்பாடுகிறார்கள்!' வியப்பு அறுகைக்கு மட்டுமா? அவர் படைவீரர்கள் அத்தனை பேருக்குந்தான்.

படை நெருங்கிவிட்டது. அதன் நடுவில் மலைபோன்ற பெரிய தேர்! அதில் பழையன் இருந்தான். அவன் மட்டுமா? அதே தேரில் அறிவிலே முதிர்ந்த அமைச்சர் அருளாளர் இருந்தார். ஆற்றலிலே சிறந்த படைத்தலைவர் விறல்வேங்கை இருந்தார். மூவரும் இருந்த தேர் அறுகையின் படையை நெருங்கியபின் நின்றது. உடனே பழையனின் படையும் நின்றது. 'வாழ்க வாழ்க' என்று வானைப் பிளக்கும் முழக்கம் நின்றது. இசை பெருக்கிய கருவிகள் அமைதியாயின.

மூவரும் தேரிலிருந்து இறங்கினர். யாரும் தம் வாளைத் தொடவில்லை. எதிரே இருந்த அறுகையின் தேரை நோக்கி நடந்தனர். இந்தக் காட்சி அறுகையைச் சிலையாக்கிவிட்டது. படம் விரித்துச் சீற வேண்டிய பாம்பு பணிந்து வருவது

ஏன்? பாய்ந்து தாக்க வேண்டிய புலி பதுங்கி வருவது ஏன்? அறுகை எண்ணமிட்டவாறு எதிரே வந்து, தம் தேரின் முன் நின்ற மூவரையும் பார்த்தார். பழையனையும் அவன் அமைச்சனையும் படைத்தலைவனையும் அறுகைக்குத் தெரியும்.

வந்தவர்கள் நின்றார்கள். பழையன் இன்னும் சற்றுத் தேரை நெருங்கி நின்று, "அறுகையாரே, எம் நாட்டு எல்லையை ஒட்டித் தாங்கள் செல்வதை அறிந்தேன். உங்களை வரவேற்கவே இங்கே வந்தேன். என் பெரும் படையும் உங்களை வரவேற்கவே நிற்கிறது. அறுகையாரே, நீரும் நானும் பாண்டிய நாட்டு எல்லைக்குட்பட்ட குறுநில மன்னர்கள். என்றாலும் நண்பர்களாக இருக்க முடியாமற் போய்விட்டது. ஏன் அப்படி நேர்ந்தது என்பதை ஆராய வேண்டாம். இன்றுமுதல் நாம் நண்பர்களாக விளங்குவோம். மோகூரும் குன்றத்தூரும் பழைய பகையை மறந்து ஒன்று படட்டும்."

பழையன் சொல்லி முடித்ததும், பழையனின் படை "வாழ்க மோகூர்! வாழ்க குன்றத்தூர்! வாழ்க நம் நட்பு" என்று முழங்கியது.

அறுகை பழையனையும் அவன் படையையும் கூர்ந்து பார்த்தார். எல்லாம் ஏதோ ஓர் உள்நோக்கத்துடன் நடக் கின்றன என்பதை உணர்ந்தார். அந்த நோக்கம் என்ன? அதுதான் புரியவில்லை.

செல்வம் கொழிக்கும் மோகூரின் அரசன் தமக்கு எதிரே தரையில் நிற்கிறான்; அறுகையின் பண்பு, அவரைத் தேரில் இருக்க விடவில்லை. அவர் தேரைவிட்டு இறங்கினார். அவ்வளவுதான்! "அறுகையாரே, என் நட்பை ஏற்றுக் கொண்ட நண்பரே" என்று கூறிக்கொண்டே ஓடிவந்து

அறுகையைத் தழுவிக்கொண்டான் பழையன். மோகூர் படை உடனே ஆரவாரித்தது.

இந்த நாடகம் அறுகையின் சினத்தைத் தூண்டிவிட்டது. அதை அடக்கிக்கொண்டு தம் படையைப் பார்த்தார். அவருக்கு மகிழ்ச்சி. அறுகையின் படைவீரர், பழையனின் நாடகத்தைக் கண்டு மயங்கிவிடவில்லை. வாழ்த்தொலியைக் கேட்டு மகிழ்ந்துவிடவில்லை. அத்தனைபேரும் கடுகடுத்த முகத்தோடு காட்சியளித்தனர்.

"பழையா, உன் பகல் வேடத்தை என் படையின் வீரர்கள்கூடப் புரிந்துகொண்டார்கள். நான் புரிந்துகொள்ள மாட்டேன் என்று நினைக்கிறாயே, என்னே உன் பேதைமை!" என்று மனத்துக்குள் கூறிக்கொண்ட அறுகை, சினத்தை வெளிப்படுத்த வேண்டிய முகத்தில் மிகவும் சிரமப்பட்டுச் சிரிப்பை வரவழைத்தார்.

"பழையா, நான் சேரநாட்டிலிருந்து வருகிறேன். சென்ற போதும் இந்த வழியாகத்தான் சென்றேன். அப்போதும் உன் படை என்னை வரவேற்க வந்ததாகத் தெரிகிறதே."

அறுகை உரைத்ததும் பழையன் விழித்தான். "நள்ளிரவில் நம் படை வந்தது அறுகைக்கு எப்படித் தெரியும்? நல்லவேளை நானும் படையுடன் வந்ததை அறியவில்லை" என்று நினைத்த பழையன், சிரிப்பை உதிர்த்து "ஆமாம் அறுகையாரே, அப்போதே வரவேற்க வேண்டும் என்றுதான் படையை அனுப்பினேன். ஆனால் தங்களைப் போன்ற உயர்ந்த ஒருவரை படை வரவேற்பது தக்கதன்று. நானே வரவேற்க வேண்டும் என்று நினைத்தேன். அதனால் உடனே ஆளை அனுப்பிப் படையை திரும்பி வரச்செய்தேன். நீங்கள் திரும்பி இவ்வழியே செல்லும் நேரத்தை எதிர்பார்த்தேன். இன்று தாங்கள் வருவது அறிந்து ஓடோடி வந்தேன்."

பழையன் சொல்வதைப் பதுமைபோல் அமைதியாகக் கேட்டார், அறுகை. பிறகு பார்வையை உயர்த்திப் பழைய னின் பெரும்படையைப் பார்த்தார். "பழையா, என்னை வரவேற்க உன் படை முழுவதும் வந்திருக்கிறதே" என்று சொன்னார்.

"அதில் ஐயம் வேண்டாம்! என்னைப்போலவே என் படைவீரரும் உங்கள் நட்புறவை விரும்புகிறார்கள். அவர்கள் போரிட வந்திருக்கிறார்கள் என்று நினைத்து விட்டீர்களா?"

"இல்லை, அப்படி நினைக்கவில்லை. அறுகையின் பகையை அவ்வளவு எளிதாக யாரும் நினைக்க முடியாது."

அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் அறுகை.

"முடியாதுதான்! அதனால்தானே பெருவேந்தர்கள் உங்கள் நட்பை நாடுகிறார்கள். அறுகையாரே நான் வந்த வேலையை விட்டுவிட்டு ஏதோ பேசுகிறேனே! தாங்கள் என் அரண்மனைக்கு வரவேண்டும். உங்களை அழைத்துச் செல்லவே வந்துள்ளேன். என் நட்பை ஏற்றுக்கொண்டதைப் போல என் அழைப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்."

பழையன் குழைந்து கூறினான்.

"பழையா, நான் செங்குட்டுவனின் நண்பன். அவரோடு பயின்றவன்; பழகியவன். அதனால் அவரிடமுள்ள சில நல்ல பண்புகள் என்னிடமும் ஓரளவு இடம்பெற்றுவிட்டன. அதனால் என் நட்பைக் கோரும் உன்னை ஏமாற்ற விரும்ப வில்லை.

"பழைய பகையை மறக்கக் கோரும் உன் வேண்டு கோளைப் புறக்கணிக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்று, சேரன் செங்குட்டுவனின் பகைவர்கள் எல்லாரும் என் பகைவர்கள். அவரைப் பழிக்கும் வாயைக் கிழித்தெறிவது

என் தொழில்! இதை நினைவில் கொள்! சேரனை வெறுக்கும்– பகைக்கும் எவனும் என் எதிரி. நீ சேரனின் பகைவனா என்பதைத் தெரிவித்துவிடு! சேரனின் பகைவன் என் பகைவன்!"

அறுகை கூறியதும் பழையனின் முகம் கறுத்தது ஒரு நொடி. மறு நொடி அது மறைந்து மகிழ்ச்சி பிறந்தது.

"அறுகையாரே, நீங்கள் சொல்வது புரிகிறது. சேரன் செங்குட்டுவர் என் பகைவரானதற்குக் காரணம் என்ன? நான் அவரைப் பகைத்தேனா? இல்லை, சோழ இளவரசர்கள் என் உதவியை நாடினார்கள். என் படையை அனுப்பி வைத்தேன். அதை உங்கள் சேரர் முற்றும் அழித்து விட்டார். என்றாலும் என்னிடம் பகை கொண்டார். அவ்வளவுதான்! எனக்கும் அவருக்கும் நேரிடையான பகையில்லை. அறுகையாரே! சேரமன்னர் என் பகைவரல்ல! நீங்கள் என் நண்பரானால் அவரும் என் நண்பராகிவிடுவார். உண்மையைச் சொல்கிறேன். எனக்குப் போரே அலுத்துவிட்டது. என் நாடு அழகான நாடு! அதை அமைதியான நாடாக்க வேண்டும் என்பதே என் எண்ணம்! போரும் பூசலும் பகையும் வெறுப்பும், என்னிடம் மட்டுமல்ல, என் நாட்டிலும் இடம் பெறாமல் பார்த்துக்கொள்ளப் போகிறேன்."

பழையனின் உதடுகள் உரைத்தவற்றைக் கேட்டு, அவன் உள்ளத்தை உணர முயன்றுகொண்டிருந்த அறுகை, "பழையா, உன் உயர்ந்த எண்ணங்கள் எனக்கு உவகை தருகின்றன. செங்குட்டுவன் உன் மாற்றத்தை அறிந்தால் மகிழ்வார். நிச்சயம் உன் நட்பை ஏற்றுக்கொள்வார். இப்போது இன்றியமையாத ஒரு கடமையாற்றக் குன்றத் தூருக்கு விரைந்து செல்கிறேன். அதனால் உன் அரண் மனைக்கு வர இயலவில்லை. பிறிதொரு முறை வருகிறேன்.

உன் வரவேற்பிற்கும் வாழ்த்திற்கும் நன்றி. உன் அன்பிற்கும் அழைப்பிற்கும் நன்றி" என்றார்.

"அறுகையாரே, தாங்கள் மட்டுமா சேரநாட்டிலிருந்து வருகிறீர்கள்" என்று கேட்டான் பழையன்.

அறுகை, "என் மகளும் என்னுடன் வந்திருக்கிறாள்," என்று கூறியவாறு தன் படைத்தலைவரை நோக்கிச் சைகை செய்தார். உடனே படை மேலே நடந்தது.

"சென்று வருகிறேன்" என்று கூறி அறுகை தம் தேரில் ஏறினார்.

"நம் நட்பு வளர்க!" என்று கூவினான் பழையன். உடனே அறுகையின் தேர் பறந்தது. அந்தச் சிறுபடை கண்ணுக்குத் தெரியும்வரை அதையே பார்த்துக்கொண்டு நின்றான் பழையன்.

தேரிலே இருந்த அறுகையின் உள்ளத்தில் குழப்பம். 'எதற்கு இந்தப் பழையன் நட்பு—நட்பு என்று பேசுகிறான். அவன் கூறியது பொய்! அவனது மகிழ்ச்சி வெறும் நடிப்பு! பழையன் ஏன் இந்த நாடகம் ஆடவேண்டும்! என்னைத் தன் நண்பனாக்கிக் கொண்டால், செங்குட்டுவன் என்னை வெறுத்து ஒதுக்கிவிடுவார் என்று நினைக்கிறானோ? சேரரையும் என்னையும் பிரிக்கச் செய்யும் சூழ்ச்சியா இது?' அறுகை ஒரு முடிவுக்கு வரமுடியாமல் மேலும் குழப்ப மடைந்தார்.

அத்தியாயம் பதினைந்து

சேரனின் ஓலை

குட்டுவன் சேரலின் வீரவிழிகள் மெல்லத் திறந்தன. ஒருமுறை தன் கைகளினால் விழிகளைத் தூய்மை செய்பவன் போலத் துடைத்துக்கொண்டு, பார்வையைச் சுழலவிட்டான்.

அவன் இருக்கும் அறை அவனுடைய அறையல்ல என்பதை அறிந்துகொண்டவுடன், இந்த அறைக்குத் தான் எப்படி வந்தான் என்பதை எண்ணிப் பார்த்தான். சில நொடிகளில் நேற்றிரவு நடந்தவை நினைவுக்கு வந்தன.

இளங்கோ அடிகளிடம் இளவரசன் குட்டுவன் தன் மனம் செல்வியை நாடுவதைச் சொல்லி ஆசி கேட்டான். அவர் "உன் விருப்பத்தை உடனே அரசரிடம் கூறு" என்று சொன்னார். அதனால் விரைவாக அரண்மனைக்குத் திரும்பி அரசரைத் தேடினான். அரசரும் அறுகையும் இந்த அறையில் இருந்ததும், குட்டுவனுக்குக் கோதையை மணம் முடிக்க அரசர் முடிவு செய்ததைச் சொன்னதும், குட்டுவன் வாய் திறக்கவும் வாய்ப்பளிக்காமல் 'ஓய்வு பெறுக' என்று இந்த அறையில் அவனை விட்டுவிட்டு நண்பருடன் அவர் வெளியேறியதும் நன்றாக நினைவுக்கு வந்தன.

செங்குட்டுவன் தம் நண்பருடன் அறையைவிட்டு வெளி யேறும்போது கவனமாக அறைக் கதவுகளை மூடிவிட்டுச்

சென்றார். அறையின் நடுவே நின்ற குட்டுவனின் குருதி கொதித்தது; விழிகள் சிவந்தன.

செங்குட்டுவனின் இராஜதந்திரத் திறமை உலகப்புகழ் பெற்றது. அதனால் பெற்ற மகனே சஞ்சலப்பட நேரும் என்பதை அதுவரை அவன் நினைத்தும் பார்க்கவில்லை.

குட்டுவன் பேசினால் தன் காதலை வெளிப்படுத்தக் கூடும் என்பதை அறிந்தவர் போல் அவன் வந்ததும் பேச விடாது, எத்துணைத் தந்திரமாக அவனது திருமணம் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்டது என்பதையும், அவன் கோதையை மணப்பதில் அவனுடைய அன்னைக்கே அதிக மகிழ்ச்சியென்பதையும் கூறிவிட்டார். அதுவும் நகைச் சுவை விருந்து நல்கும் பாவனையில் நஞ்சினை ஊட்டி விட்டார்.

குட்டுவன் தன் மனத்தைத் திறந்து காட்டத் துடித்தான். ஆனால் கோதையின் தந்தையான அறுகையும் அங்கே இருந்ததால் அவனால் ஏதும் செய்ய முடியவில்லை. அறைக் கதவுகளை மூடிவிட்டு அரசர் சென்ற பிறகும், அவன் இருந்த இடத்தைவிட்டு அசையாது சிலையாக நின்றான்.

சேரன் செங்குட்டுவன் என்னும் ஓர் உருவத்திற்குள் எத்தனையோ உருவங்கள் ஒளிந்திருக்கின்றன என்று ஒரு முறை பரணர் கூறியதை இப்போது நினைத்துப் பார்த்தான் குட்டுவன். அதுவரை அவன் அறியாத புதிய செங்குட்டு வனை இப்போதுதான் அவன் புரிந்துகொள்ளத் தொடங்கி யிருந்தான்.

குட்டுவனுக்கும் கோதைக்கும் திருமணம் என்னும் செய்தி இதற்குள் அரண்மனை முழுதும் பரவியிருக்குமோ? மன்னரைத் தனியே சந்தித்து இந்த மணத்தை நான் ஏற்க முடியாது, என் மனம் செல்வியைத் தவிர பிற

சேயிழையாரை ஏற்கவே ஏற்காது என்று எடுத்துச் சொன்னால்....? செங்குட்டுவனிடம் சொல்வதைக் காட்டிலும் அன்னை வேண்மாளிடம் சொல்லுவோம். அவளுக்குக் கோதையைத் தன் மருமகளாகக் கொள்ளவேண்டும் என்ற ஆசையிருந்தாலும் ஒரே மகனின் காதலுக்கு மதிப்பளிப்பாள். அன்னை செல்வியைப் பார்த்திருப்பாளே! அவளது தீங்கனி இசையைக் கேட்டிருப்பாளே! அவளது பேரழகைக் கண்டு திகைத்திருப்பாளே! அவளிடம் என் காதலைக் கூறினால், தந்தையின் மனத்தை மாற்றி, கோதைக்கும் எனக்கும் நடக்கவிருக்கும் திருமணத்தைத் தடுக்கக் கூடும்.

குட்டுவன் அப்போதே அன்னையைப் பார்க்க விரும்பினான். அவளிடமாவது தன் காதலைத் தாமதிக்காமல் அறிவிக்க விரும்பினான். அதுவரை சிலையாக நின்ற குட்டுவன் புயலாகக் கிளம்பினான். அறையின் நடுவிடத்திலிருந்து, அறைவாயிலை அரைநொடிக்குள் அடைந்தான். இருகைகளாலும் அறையின் இரு கதவுகளையும் அதே வேகத்தோடு பற்றி இழுத்தான். இழுத்த வேகத்தில் இரு கதவுகளும் 'மடார்' எனத் திறந்திருக்க வேண்டும். ஆனால், கதவுகள் அசையவில்லை.

அப்படியென்றால்...?

ஆம்! குட்டுவன் நினைப்பதுபோல அறைக்கதவுகளை மூடிய செங்குட்டுவன் வெளிப்புறத்தில் தாழிட்டுவிட்டுத் தான் சென்றான்.

குட்டுவனின் ஆத்திரம் அடக்க முடியாதபடி வெடித்தது!

"யாரங்கே! அறைக்கதவைத் திற!" என்று உரக்கக் கூவியபடி, இளவரசன் இருகைகளாலும் கதவுகளைத் தட்டினான்; குத்தினான்.

அறைக்கு வெளியே யாரோ நடமாடுவதை உணர முடிந்தது. அவர்களுக்கு அவனது குரலும், கதவை இடிக்கும் ஒலியும் நிச்சயம் கேட்டிருக்கும். என்றாலும் கதவுகளைத் திறக்கவில்லையே! ஏன்? ஒருவேளை, கதவைத் திறக்கக் கூடாது என்று அரசர் ஆணையிட்டிருப்பாரோ?

குட்டுவன் மேலும் கதவைத் தட்டவில்லை. ஆத்திரம் அவமானமாக மாறியது! 'சேரநாட்டு இளவரசன் ஒரு சிறைக் கைதிபோல அறைக்குள் அடைக்கப்பட்டிருக்கிறான்.' வேதனையின் மிகுதியால் குட்டுவனின் வீரவிழிகளில் ஈரம் படிந்தது. கனல் தெறித்துப் பழக்கப்பட்ட கண்களில் புனல் சொட்டியது.

குட்டுவன் அந்த அறையிலிருந்த படுக்கையில் விழுந்தான்! எப்போது உறங்கினானோ? அது அவனுக்கே தெரியாது.

இவையெல்லாம் முன்னிரவு நடந்த நிகழ்ச்சிகள்.

குட்டுவனின் விழிகள் அறையில் பரவிய ஒளியைக் கண்டு பொழுது புலர்ந்து வெகு நேரமாயிருக்கும் என்பதைப் புரிந்துகொண்டான். இப்போதாவது கதவுகள் திறந்திருக்குமா? அல்லது சிறைத்தண்டனை இன்னமும் நீடிக்கிறதா?

குட்டுவன் நடுங்கும் கைகளால் கதவுகளை மெல்ல இழுத்தான். அவை விலகித் திறந்தன. ஓரளவு மகிழ்ந்தவனாகி வெளியே பார்த்தான். காவலுக்கென்று சேவகர்கள் யாரும் இல்லை. பகைவனின் சிறையிலிருந்து விடுதலை பெற்றவனின் மகிழ்ச்சியோடு குட்டுவன் சேரல் அறைக்கு வெளியே வந்தான்.

இப்போதும் குடிமுழுகிப் போகவில்லை. அன்னையைக் கண்டு தன் எண்ணத்தைச் சொல்லி, அவளைத் தன் பக்கம்

சேர்த்துக்கொள்ள வேண்டும். அரசி வேண்மாள் தன் காதலை அங்கீகரித்துவிட்டால், அதன்பின் அவள் துணை யோடு அரசரிடம் போய்விடலாம். நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை நிறுத்தலாம்; குறிஞ்சித்தேன் குரலாளைத் தன் இதயத்தில் குடியேற்றியது போல இந்த அரண்மனையிலும் குடியேற்றலாம்...

எண்ணங்கள் அகிற்புகை போல மேலே மேலே சென்றன. குட்டுவனின் வேதனை குறைந்து, நம்பிக்கை அரும்பியது. அவன் புத்துணர்ச்சி பெற்றவனாகி, இரவின் கசப்பை மறந்து அன்னை வேண்மாளின் இருப்பிடத்தை நோக்கி நடந்தான்.

அந்தப்புரம் எப்போதுமே கலகலப்பாகத்தான் இருக்கும். கதிரவன் கண்விழித்துக் கொள்வதற்கு முன்னரே அந்தப் புரம் விழித்துக்கொண்டு விழாக்கோலம் பூண்டுவிடும். அங்கும் இங்குமாகப் பொற்சிலைகள் போன்ற தோழியர் போவதும் வருவதுமாக இருப்பர்.

அந்த அந்தப்புரம் விடிந்து பல நாழிகையான பிறகும் விழித்ததாகத் தெரியவில்லையே! புவி போற்றும் பேரரசரின் பிறந்த நாள் விழா! நள்ளிரவுக்குப் பின்னும் ஆடலும் பாடலும் நீடித்திருக்கலாம். அதனால் பணிப் பெண்கள் அயர்ந்து து'ங்குகிறார்களோ?

இளவரசன் குட்டுவன் சிந்தித்தவாறே அந்தப்புரத்துள் நுழைந்தான். அன்னையின் அறையை நோக்கி நடந்தான். பழக்கப்பட்ட பாதங்கள் அவனை அங்கே அழைத்துச் சென்றன!

அன்னை வேண்மாள் அறையின் பொற்கதவுகள் மூடியிருந்தன.

இளவரசன் வியப்போடு நின்றான்.

குட்டுவன் அங்கே நிற்பதைக் கண்ட பணிப்பெண் ஒருத்தி ஓடிவந்து அவன்முன் பணிந்து நின்றாள். அவன் கேட்கும் முன்னரே, "இளவரசே, அரசமாதேவியும் பேரரசரும் மலைவளம் காண்பதற்காகப் பொழுது புலர்வ தற்கு முன்னரே புறப்பட்டுச் சென்றுவிட்டனர்" என்று கூறினாள்.

மலைவளம் காண மன்னர் அடிக்கடி செல்வது வழக்கந் தான். வஞ்சிமாநகரின் மாடமாளிகைகளைக் காட்டிலும் சேர நாட்டு மலைச்சிகரமும், மரஞ்செடி கொடிகளும், மாசற்ற மனத்தோடு மன்னரைப் பார்க்க வரும் மலைநாட்டு மக்களும் அவருக்கு மிகவும் பிடிக்கும். அதனால் இரண்டு மூன்று நாள் ஓய்வு கிடைத்தாலும் மலைவளங் காணச் செல்வது மன்னரின் வழக்கந்தான். ஆனால் முன்னறிவிப்பே யின்றி, மகனிடம் கூடச் சொல்லிக்கொள்ளாமல் அவர் சென்றதில்லையே.......

அறுகையும் கோதையும் மலைவளங் கண்டு மகிழட்டும் என்று அழைத்துச் சென்றிருப்பாரோ?

"குன்றத்தூர் கோமானும் அவர் மகள் கோதையும் உடன் சென்றார்களா?"

"இல்லை இளவரசே. நம் அரசர், அறுகையாரையும் அவருடைய அருமைப் புதல்வியையும் வழியனுப்பிவிட்டு, மறுநாழிகையே அரசியுடன் மலைவளங் காணப் புறப்பட்டுச் சென்றார்.

அறுகையும் கோதையும் அரசருடன் செல்லவில்லை என்பது அவனுக்கு ஒருவகை ஆறுதல் அளித்தது. என்றா லும் பிறந்த நாள் விழாவுக்கு வந்த குறுநில மன்னர்கள், புலவர் பெருமக்கள் முதலானோர் இன்னும் வஞ்சிநகரை விட்டுச் சென்றிருக்க மாட்டார்களே! விழாவின் சிறப்பு ஒரு

நாளிலே முடிந்துவிடாதே! அதற்குள் அரசர் அரசியோடு மலைவளம் காணச் சென்றது ஏன்? ஒருவேளை என்னைக் கண்டு பேசக்கூடாது என்பதற்கான சூழ்ச்சியோ, இது?

நினைக்க நினைக்க அவன் நெஞ்சம் கொதித்தது. 'தந்தையே, உங்களை அந்த மலைப்பகுதிக்கே வந்து சந்திக்கிறேன். என் செல்வியைத் தவிர பிற பெண்களை மனத்தாலும் தீண்டமாட்டேன் என்னும் என் உறுதியை நீங்கள் உணரச் செய்கிறேன்' என்று மனத்துக்குள் முழங்கியபடி இளவரசன் அந்தப்புரத்தைவிட்டு வெளியே வந்தான்.

அந்தப்புரத்தின் படிகளில் இறங்கிக் கொண்டிருக்கும் போதே எதிரே சேரநாட்டு அமைச்சர் அழும்பில்வேள் அவனை நோக்கி வருவதைக் கண்டான்.

அழும்பில்வேள் செங்குட்டுவனின் மதிப்புக்குரிய மதிமந்திரி. அரசரைக் காட்டிலும் வயதிலே பெரியவர். நெடுஞ்சேரலாதன் காலத்திலிருந்தே அமைச்சராக இருந்து வருபவர். அவர் மகன் செங்குட்டுவன் காலத்திலும் அமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றி வருபவர். வயதிலே மட்டுமன்றி அறிவிலும் அரசாளும் நெறியிலும் தேர்ந்தவர். அரசர் குட்டுவன், அழும்பில்வேளுக்கு புலவர் பரணருக்குத் தருவது போன்ற மரியாதை தந்தார். சேரநாட்டின் சிறப்புக்கும் செங்குட்டுவனின் பெரும்புகழுக்கும் அழும்பில் வேளின் திறமையும் ஒரு காரணம் என்பதை அனைவரும் அறிந்தது போலவே, குட்டுவனும் அறிந்திருந்தான்.

அமைச்சர் அழும்பில்வேள் அந்தப்புரம் நோக்கி வருகிறாரே... அரசர் தலைநகரைவிட்டு மலைப்புறத்தை நாடிச் சென்றுவிட்டார் என்பது அவருக்குத் தெரியாதா? அழும்பில்வேளுக்குத் தெரியாமல் ஓர் அணுவும் அசையாது என்று கூறுவார்களே...

சிந்தனையால் மேலே நடக்க மறந்து நின்றான், குட்டுவன். தலை முழுதும் நரைத்து, தாடியும் நரைத்து அறிவுப்பழமாக, அனுபவக்கிழமாகத் திகழ்ந்த அமைச்சர் தன் சீரான நடையில் எந்த மாற்றமும் செய்யாமல் இளவரசனுக்கு அருகே வந்து நின்றார்.

"அமைச்சரே, அரசர் அந்தப்புரத்தில் இல்லை என்பதைத் தாங்கள் அறிவீர்கள் என்று நினைக்கிறேன்"— இளவரசனே முதலில் பேசினான்.

"இளவரசே, நீங்கள் அந்தப்புரம் சென்றிருப்பதை அறிந்து, உங்களைப் பார்க்க வந்தேன்; அரசரைப் பார்க்க அல்ல."

"என்னைப் பார்க்கவா?"— வியப்போடு கேட்டான், குட்டுவன்.

"ஆமாம். உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். அரசர் எனக்கெழுதிய ஓர் ஓலையை நீங்களும் பார்க்கவேண்டும் என்பதற்காக உங்களைத் தேடி வந்தேன்."

அமைச்சர் சொன்ன பிறகுதான், அவரது வலக்கரத்தே ஓர் ஓலை இருப்பதைக் கண்டான், குட்டுவன்.

"உங்களுக்கு எழுதிய ஓலையை நான் பார்ப்பதா...?" குட்டுவன் கேள்வியில் தலைதூக்கியது தயக்கமா, வியப்பா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

"பார்க்கலாம், இதில் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய செய்தியும் இருக்கிறது" என்று கூறியவாறு அமைச்சர் நீட்டிய ஓலையை இளவரசன் அவசரத்தோடு வாங்கி ஆவலோடு படித்தான்.

"அமைச்சர் அழும்பில்வேளுக்கு அரசர் எழுதுவது: பிறந்த நாள் விழாவின் ஆரவாரத்துக்குப் பிறகு என் மனம் அமைதியை நாடுகிறது. அதனால் இன்றே, இப்

போதே பேரியாற்றின் பிறப்பிடமான மலைச்சிகரத்துக்குச் செல்கின்றேன். அங்கே கிடைக்கும் அமைதி, அரச கடமைகளை ஒதுக்கி அந்தப்புரத்தின் அறைக்குள்ளே அடைப்பட்டாலோ, நந்தவனத்திலேயே நாள் முழுவதையும் கழித்தாலோ கிடைக்காது. அதனால் செல்கிறேன். நான் திரும்பி வரும்வரை, இளவரசன் குட்டுவன் சேரலை அரசனாகக் கருதி அனைவரும் நடக்கவேண்டும். நான் வஞ்சிக்குத் திரும்பும் வரையில் ஆட்சிப் பொறுப்பை இளவரசனிடம் அளித்திருக்கிறேன் என்பதை இந்த ஓலையைக் காட்டி அவனிடம் கூறுங்கள். இளவரசன் கடமை உணர்ந்தவன். சேரநாட்டையென்ன, உலகம் முழுவதையும் காக்கும் திறம் அவனுக்கு உண்டு என்பது நான் அறிவதுபோல அரசவையினர் அனைவரும் அறிவர்! அதனால் கவலையற்று மலைவளம் காணச் செல்கின்றேன்.

— செங்குட்டுவன்."

அரசரின் ஓலையை ஒருமுறைக்கு இருமுறை படித்த இளவரசன் அமைச்சர் முகத்தைப் பார்த்தான். அகத்தில் ஆயிரம் எண்ணங்கள் இருந்தாலும், அவற்றில் ஒன்றைக்கூட உணர்த்தாத சமநிலை பெற்றது, அமைச்சர் முகம். அந்த முகத்தைப் பார்த்து இளவரசனால் ஏதும் உணரமுடியவில்லை.

"அமைச்சரே, ஈதென்ன விந்தை! பிறந்த நாள் விழாவின் ஆரவாரம் இன்னும் அடங்கவில்லை. வந்தவர்களை வழியனுப்பவில்லை. அதற்குள் மலைக்குச் சென்று ஓய்வு பெறவேண்டிய அவசியம் என்ன? அப்படியே சென்றாலும் ஆட்சிப் பொறுப்பை என்னிடம் ஏன் அளிக்கிறார்? இதற்கு முன் எத்தனையோ முறை மலைவளங் காணச் சென்றுள்ளார்; மாற்றார் நாட்டுக்குப் படை நடத்திச் சென்றுள்ளார்;

மாக்கடல் நடுவில் கடம்பர்களை ஒடுக்கக் கலம் செலுத்திச் சென்றுள்ளார். அப்போதெல்லாம், அரசர் நிலையில் நின்று நீங்கள்தானே அனைத்தையும் கவனித்துக் கொண்டீர்கள்! இப்போது மட்டும் ஆட்சிப் பொறுப்பை என்னிடம் தருவது ஏன்?"

கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டான், இளவரசன்.

"இளவரசே, எதிர்காலத்தில் சேரநாட்டின் பேரரசராகப் போகும் உங்களுக்குப் போர்ப் பயிற்சி இருப்பது போல, ஆட்சிப் பயிற்சி இல்லையே என்று அரசர் அடிக்கடி சொல்வதுண்டு. ஆட்சிப் பயிற்சிக்காக இந்த முறை உங்களிடம் முழுப் பொறுப்பையும் ஒப்படைத்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அதைத் தவிர இப்போதெல்லாம் என்னால் முன்போல் எதிலும் திறமையாகச் செயல்பட முடியவில்லை. முதுமையே என் முடியாமைக்குக் காரணம். என் பணிகளில் சிலவற்றைப் படைத்தலைவர் வில்லவன் கோதையிடம் ஒப்படைத்து வருகிறேன். அதனால்தான் அரசர் இம்முறை ஆட்சிப் பொறுப்பை இந்தக் கிழவனிடம் தராமல் இளஞ்சிங்கமான தங்களிடம் ஒப்புவித்திருக்கிறார். இளவரசே, அரசவை இன்று காலை ஒரு நாழிகை முன்னதாகவே கூடுகிறது. பிறந்த நாள் விழாவுக்கு வந்த சிற்றரசர்கள் முறைப்படி அவைக்கு வந்து விடைபெற்றுச் செல்வார்கள். அதனால் உரிய நேரத்தில் அவைக்குத் தாங்கள் வரவேண்டும்."

குட்டுவனின் உள் மனம் 'இதுவும் ஒரு சூழ்ச்சி!' என்று கூவியது. 'அரசர் எப்படியோ என் காதலை அறிந்துகொண்டிருக்கிறார். அதை அவரிடம் நான் நேரில் கூறுவதற்குமுன் கோதைக்கும் எனக்கும் திருமணம் நிச்சயம் செய்து, அதை இனிமேல் மாற்ற முடியாது என்ற நிலையை உண்டாக்கத் திட்டமிடுகிறார். பின்னே என் காதலைச் சொல்லும்போது,

‘காலம் கடந்துவிட்டதே! உன் காதல் முன்னரே எனக்குத் தெரியாமல் போய்விட்டதே’ என்று கூறி, அனுதாபச் சொற்கள் சிலவற்றை அள்ளி வீசி, என் காதலை அழித்து விட்டுத் தான் நினைத்ததையே முடிக்கப் பார்க்கிறார். மலைவளம் கண்டபிறகு வஞ்சிக்கு வராமல், அங்கிருந்து குன்றத்தூருக்கு நேரே சென்று பெண் கேட்கும் சடங்கை முறைப்படி செய்யும் திட்டமும் இருக்கலாம். அரசரின் உடல் முழுதும் சூழ்ச்சி! உடலின் ஒவ்வோர் அணுவிலும் வஞ்சகம்!’

இதயக் கொதிப்பால் இளவரசன் முகத்தில் இரத்தநிறம் பரவியது. குட்டுவன் கோபம் தன் மீது பாய்ந்துவிடும் என்று அஞ்சி, அங்கிருந்து விலகிச் செல்ல அவசரப்படுபவரைப் போல, அமைச்சர் அழும்பில்வேள், “இளவரசே, மீண்டும் அவையில் சந்திப்போம்” என்று கூறிவிட்டுத் திரும்பி நடந்தார்.

குட்டுவன் அரசரின் ஓலையைப் பற்றியபடி அதே இடத்தில் நின்றான்.

‘செல்வியை நான் காதலிக்கும் செய்தி அரசர்க்குத் தெரிந்ததால்தான் இத்தனை நரிச்செயல்கள் செய்கிறார். என் காதலை அவர் எப்படி அறிந்தார்? இளங்கோ அடிகளைத் தவிர வேறு யாருக்கும் என் காதல் தெரியாதே... பின் அரசர் அறிந்தது எப்படி?’

யோசித்த குட்டுவனுக்குத் திடீரென்று வில்லவன் கோதையின் நினைவு வந்தது.

‘அரசர்க்கு எனது காதல் எப்படித் தெரிந்தது என்னும் இரகசியம் வில்லவன் கோதைக்குத் தெரிந்திருக்கலாம். படைத்தலைவரை இப்போதே சந்திக்க வேண்டும்’ என்று முடிவு செய்தான் குட்டுவன்.

அத்தியாயம் பதினாறு

பழையன் தூது

வியப்பு! திகைப்பு! களிப்பு!

அறுகையின் அரசவையினர் இம்மூன்று உணர்ச்சிகளையும் அன்று பெற்ற அளவு அதற்குமுன் பெற்றதில்லை.

அறுகையும் செங்குட்டுவனும் நண்பர்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு செங்குட்டுவனைச் சந்திக்க அறுகை புறப்பட்டபோது, அவர் நாடு திரும்ப ஒரு திங்கள் ஆகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அறுகை பத்தே நாட்களில் குன்றத்தூருக்குத் திரும்பியதும் அனைவரும் வியப்படைந்தனர்.

திரும்பிய அறுகை பெருமகிழ்ச்சியோடு, அவையைக் கூட்டி, "அவையோரே, நாவலந்தீவின் மாபெரும் மன்னரான சேரன் செங்குட்டுவன், நம் குன்றத்தூருக்கு விரைவில், மிக விரைவில் வரப்போகிறார்" என்று அறிவித்தார். "உலகம் போற்றும் மாவீரரை உள்ளூரிலிருந்தே சந்திக்கப் போகிறோம்" என்னும் எதிர்பாராத செய்தி அவர்களைத் திகைக்க வைத்தது.

அறுகை தொடர்ந்து, "என் அருமை நண்பர் செங்குட்டுவன் நம் ஊருக்கு வருவதன் காரணம் அறிய ஆவலோடு இருப்பீர்கள். அதையும் கூறிவிடுகிறேன்.

சேரமன்னரின் மைந்தன் குட்டுவன் சேரலுக்குப் பெண் கொடுக்கப் பேரரசர்கள் காத்து நிற்கிறார்கள். ஆனால் என் ஆருயிர்த் தோழர், இளவரசன் குட்டுவனுக்குத் தகுந்த மனைவியாக என் கோதையை, உங்கள் இளவரசியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். முறைப்படி மகள் கேட்பதற்காகவே செங்குட்டுவன் நம்நாட்டுக்கு வரப்போகிறார்" என்று கூறியதும், அவையோர் களிப்படைந்து சின்ன குழந்தை களைப் போல ஆரவாரம் செய்தனர்.

"செங்குட்டுவனின் திருவடி நம் ஊரில் படாதா என்று சேரநாட்டு ஊர்களிலேயே பலர் ஏங்கித் தவிக்கையில் அவரை வரவேற்கும் வாய்ப்புக் குன்றத்தூருக்குக் கிடைத்தது, நம் முன்னோர் செய்த புண்ணியத்தின் பயன் என்றே சொல்லவேண்டும். அதனால் கோவேந்தர்களுக்கெல்லாம் கோமானாய்த் திகழும் செங்குட்டுவனை வரவேற்பதற்காக இந்த அரண்மனை மட்டுமன்றி, குன்றத்தூர் முழுவதுமே விழாக்கோலம் பூணவேண்டும். இந்திர விழாவின்போது புகார் நகரமும், கடம்பரை வென்று திரும்பிய செங்குட்டு வனை வரவேற்கும்போது வஞ்சிநகரமும், தமிழ்ச் சங்கத்தில் புதுப்பாக்களை அரங்கேற்றும் நாளில் மதுரை நகரமும் கொள்ளும் கோலத்தைக் குன்றத்தூர் கொள்ளவேண்டும். பார்க்குமிடத்திலெல்லாம் நம் பரவசம் பிரதிபலிக்க வேண்டும். அதற்கான செயல்களை இன்றே, இப்போதே, இந்நொடியே தொடங்கவேண்டும். ஏனென்றால் சேரமன்னர் எப்போது வருவார் என்று சொல்ல முடியாது. அவர் நாளையே வந்தாலும் வியப்பதற்கில்லை."

அறுகை கூறியபடி குன்றத்தூரை அழகின் குன்றம் என்று கூறத்தக்க அளவில் வீரரும் மக்களும் மாற்றி யமைத்தனர். ஒவ்வொரு வீட்டினரும் தம் மகளுக்குத் திருமணம் நடக்கப்போகிறதென்றால் எப்படி இல்லத்தைப்

புதுப்பித்து எழில்மிளிரச் செய்வார்களோ அப்படித் தம் வீட்டை அழகுபடுத்தினர்.

குன்றத்தூர்க் கோட்டையின் மேற்கு வாயிலில் காவலர் பலர் இரவும் பகலும் இமைக்காமல் எதிரே தெரிந்த நீண்ட பாதையில் விழிகளைப் பதித்துச் சேரவேந்தரின் வரவை எதிர்பார்த்தனர்.

அறுகை ஊர் திரும்பிய ஆறாம் நாள்.

மேற்கு வாயிலில் கோட்டைச் சுவரின்மேல் நின்றிருந்த ஒருவன், “அதோ... புழுதிப்படலம் எழுவது தெரிகிறது. சேர மன்னர் வருகிறார்” என்று கூவினான். வாயிலைக் காத்து நின்ற அனைவரும் விழுந்தடித்துக் கொண்டு மதில் மேல் ஏறி, விழிகளின் மேலே கையை விதானமாகப் படர விட்டுப் பார்வையைக் கூர்மையாக்கிப் பார்த்தனர்.

புழுதிப்படலம் நன்றாகத் தெரிந்தது.

சேரர் வருவது தெரிந்ததும் மதில் மேலுள்ள முரசை முழக்கி அச்செய்தியைத் தெரிவிக்க வேண்டும் என்பது ஆணை. அதனால் ஒருவன் முரசு நோக்கி ஓடினான்.

“அடேய்! கொஞ்சம் பொறு” என்ற குரல் அவனைத் தடுத்தது. குரல் கொடுத்தவன், மேற்கு வாயிலைக் காத்து நிற்கும் சேவகர்களின் தலைவன். அதனால் முரசை முழக்க ஓடியவன் நின்றான்.

சேவகர் தலைவன் மற்றவர்கள் மகிழ்ச்சியோடு பார்த்த அதே திசையில், அதே புழுதிப்படலத்தைப் பார்த்தான். அவன் முகம் சுருங்கியது.

“செங்குட்டுவர் போருக்கு வரவில்லை. மணவினை பேசத்தான் வருகிறார். என்றாலும் அவருடன் ஒரு படை வரவேண்டுமே! நம் அரசர் சென்றபோதே ஆயிரம் பேர் கொண்ட படையை அழைத்துச் சென்றார். சேரவேந்தர்

ஐயாயிரம் பேர் கொண்ட படையையாவது அழைத்து வர வேண்டுமே... புழுதிப்படலத்தைப் பார்த்தால், ஐந்நூறு பேர் வருவதுபோலக் கூடத் தெரியவில்லையே?"

தலைவன் சொன்னதைக் கேட்ட மற்ற வீரர்கள் மீண்டும் மேற்றிசைப் பாதையைப் பார்த்தார்கள். புழுதிப்படலம், ஒரு சிறுபடை வருவதைக்கூடத் தெரிவிக்கவில்லை என்பது உண்மையே! ஒரு வணிகச் சாத்து வருகிறதோ என ஐயுறச் செய்தது.

வாயில் தலைவன் இரு காவலர்களைக் குதிரையில் ஏறிப் பாதையில் சென்று, வருவது யார் என்று பார்த்து வரச் சொன்னான். சிறிது நேரத்தில் இரு குதிரைகள் வீரர் களைச் சுமந்தபடி பாதையில் பறந்தன.

மதில் மேல் நின்றவர்கள் தம் பார்வையை மாற்றாமல் பார்த்தனர். புழுதிப்படலம் மெல்ல நெருங்கிக்கொண் டிருந்தது. தலைவன் அனுப்பிய குதிரை வீரர்கள் ஒரு நாழிகையில் திரும்பி வருவது தெரிந்தது. தலைவனும் பிறரும் மதிலிலிருந்து கீழிறங்கி வந்தனர்.

வேகமாக வந்த குதிரைகளை இழுத்துப் பிடித்து நிறுத்திய வீரர்கள், குதிரையிலிருந்து கீழே குதித்தனர். ஒரு வீரன், "வருவது சேர மன்னரோ அவரைச் சேர்ந்தவரோ அல்ல" என்றான். மற்றொருவன், "சேரனின் பகைவனான மோகூர்ப் பழையனின் படைத்தலைவரும் அமைச்சரும் ஒரு தேரில் வருகிறார்கள். அதன் பின்னே மற்றொரு தேரில் சில பேழைகள் இருக்கின்றன. இவ்விரண்டு தேர்களுக்கு முன்னும் பின்னும் பத்துப் பத்து வீரர்கள் வருகிறார்கள்" என்றான்.

பழையன் என்ற பெயரைக் கேட்டதுமே வீரர்களின் அகமும் முகமும் சுருங்கின. தலைவன் இந்தச் செய்தியை

அரசர்க்குத் தெரிவிக்க ஆளை அனுப்பினான். செய்தியைக் கேட்டதும் அறுகையும் வியப்படைந்தார். 'பழையனின் அதிகாரிகளுக்கு நம்மிடம் என்ன வேலை? இடைக்குன்றத்தில் சந்தித்து நட்பு நாடகம் நடத்திய பழையன் இப்போது ஏன் படைத்தலைவரையும் அமைச்சரையும் இங்கு அனுப்புகிறான்?'— அறுகைக்குப் புரியவில்லை. என்றாலும் அவர் மனத்தில் ஏதோ ஒரு கவலை படர்ந்தது. "வருபவர்களைக் கோட்டைக்குள் அனுப்புங்கள்" என்று உத்தரவிட்டு அனுப்பிய அறுகை, தம் அமைச்சர் அழகரிடம், "நீங்கள் போய்ப் பாருங்கள். என்ன செய்தி என்று அறிந்து வாருங்கள்" எனக் கூறினார்.

அமைச்சர் அழகர் சென்று நான்கு நாழிகை ஆயிற்று. அதுவரை அறுகை அமைதி கொள்ளாது தவித்தார். 'பழையன் பண்பற்றவன்! சேர நாட்டுக்கு நாம் செல்லும் போதும் அவன் படை பாதையில் பதுங்கியிருந்தது. திரும்பி வரும்போதோ நமக்கு வரவேற்பு வழங்கியது. அந்த வரவேற்பின் பின்னே வஞ்சம் இருக்க வேண்டும். நட்பு, நட்பு என்று அவன் பிதற்றிய சொற்கள் உதட்டிலிருந்து வந்தவை; உள்ளத்தின் கள்ளத்தை மறைத்தவை! இப்போது அவன் அதிகாரிகளை இங்கே எதற்காக அனுப்பியிருக்கிறான்?'

அறுகையின் குழப்பம் அதிகரித்தது. அவர் ஓரிடத்தில் அமரமுடியாமல் கூண்டுப் புலியைப் போல இங்கும் அங்குமாக அறைக்குள் உலாவினார்.

மேலும் ஒரு நாழிகை சென்றது.

அமைச்சர் அழகர் வந்தார். அறுகை 'என்ன செய்தி' என்று கேட்பதற்கு முன்னரே தான் அறிந்ததைச் சொன்னார்.

"அரசே, பழையனின் அமைச்சர், அவனுடைய தூதராக வந்திருக்கிறார். பழையனின் படைத்தலைவர் அவருடன்

துணையாக வந்திருக்கிறார். அமைச்சர் அருளாளர் தங்களைச் சந்தித்துத் தூதுரையைக் கூற விரும்புகிறார். இருவரும் தூதுச் செய்தி நம்மை மகிழ்விக்கும் செய்திதான் என்று கூறுகிறார்கள்."

"பழையனுக்குப் பிறரை மகிழ்விக்கவும் தெரியுமா? தூது என்பதில் ஏதோ சூது இருக்கக்கூடும். அமைச்சரே, உடனே அவையைக் கூட்டுங்கள். பழையனின் தூதுரையை அறியும் வரை என் மனம் அமைதியுறாது" என்றார் அறுகை.

குன்றத்தூர் அரசவை உடனே கூடியது.

அறுகையைப் போலவே அவையிலிருந்த அனைவரும் அமைதியற்றவராயும் பழையனின் தூதர் என்ன சொல்லப் போகிறாரோ, என்பதை ஒருவித அச்சம் கலந்த ஆவலோடு அறிய விரும்புபவராயும் வீற்றிருந்தனர். அறுகை அனுமதி யளிக்க, பழையனின் அமைச்சரும், படைத்தலைவரும் அவைக்குள் நுழைந்தனர். அவர்களுக்குப் பின்னே, மோகூர் வீரர்கள் மூன்று பேழைகளைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டுவந்து அரசர் முன் வைத்தார்கள்.

மூத்தவரான அமைச்சர் அருளாளர் பேசினார்.

"குன்றத்தூர் கோமான் அறுகையாருக்கு என் வணக்கம். தமிழகத்தே சிறந்த அரசர்கள் சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் என்றுரைக்கும் மரபை மாற்றிச் சேரரோடும், சோழரோடும், பாண்டியரோடும் சேர்த்து எண்ணத்தகும் சிறப்பைப் பெற்றவரும், மழைவளம் குன்றாமையால் ஒவ்வொரு குடிமகனின் வீட்டிலும் குன்றளவு செல்வம் குவிந்திருக்கும் செல்வச் செழிப்புமிக்க மோகூரை ஆள்பவரும், கடல் போன்ற மாபெரும் படையை உடையவரும், தமிழகத்தே தொன்றுதொட்டிருந்துவரும் பழையன் குடியில் வந்தவருமான எங்கள் அரசர் மோகூர்ப்

பழையன் அனுப்பிய தூதனாக வந்திருக்கும் நான், மோகூர் அமைச்சர் அருளாளர். என்னுடன் வந்திருப்பவர் படைத் தலைவர் விறல் வேங்கையார்.

"எங்கள் அரசர் உங்கள் நட்பை நாடி நிற்கிறார். இடைக் குன்றூர் வழியே நீங்கள் திரும்பியபோது அவரே நேரில் வந்து உங்களை வரவேற்றார். அரசர் அந்த நட்பை மேலும் வலிமைப்படுத்திக்கொள்ள விரும்புகிறார். அதனால் தங்கள் இளவரசி கோதையை, மோகூர் அரசியாக்கிக்கொள்ள விரும்புகிறார். தம் விருப்பத்தை வெளிப்படுத்தும் நேரத்தில் அரசர் இளவரசிக்கு இப்பேழைகளைப் பரிசளிக்கிறார்."

அருளாளர் சொல்லிவிட்டு மோகூர் வீரர்களை நோக்கித் தலையசைத்தார். வீரர்கள் மூன்று பேழைகளின் மூடிகளைத் திறந்தனர். உள்ளிருந்த பொருள்களால் அரசவை ஒளிவெள்ளத்தில் ஆழ்ந்தது. ஒரு பேழையில் தங்கக் கட்டிகள்! அடுத்த பேழையில் நவமணிகள்! மூன்றாம் பேழையில் நவமணிகள் பதித்துச் செய்யப்பட்ட பொன்னாபரணங்கள்! மூன்று பேழைகளில் உள்ள' பொருள்களின் மதிப்பினால், குன்றத்தூரையே விலைக்கு வாங்கிவிடலாம்.

அறுகையும் பேழைகளைப் பார்த்தார். மோகூரின் செல்வச் சிறப்பு அவர் அறியாததல்ல! பழையனின் செருக்குக்குக் காரணமாய் இருப்பதே இச்செல்வந்தான் என்பதும் அவருக்குத் தெரியும். அந்தப் பேழைகளைப் பார்க்கும்போதே, பழையனின் தூதர் சொன்ன வார்த்தை களையும் ஒருமுறை நினைத்துப் பார்த்துக்கொண்டார்.

'திரும்பும் வழியில் பழையன் ஆடிய நட்பு நாடகத்தின் உட்பொருள் இதுதானா? என் மகளை மணக்க விரும்பிப் பகையைப் பாசமாக மாற்றிக்கொண்டானா?' என்று நினைத்த அறுகை, தம் மறுமொழியை எதிர்பார்த்து

அருளாளர் காத்து நிற்பதை உணர்ந்து தொண்டையைக் கனைத்துக்கொண்டார்.

"தூது வந்த பெரியவரே! மோகூர்ப் பழையனின் நட்பை அறிந்து மகிழ்கிறேன். நட்பை உறவாக்க விரும்பி என் மகளை மணக்க முன் வந்தமையும் எனக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. ஆனால் என் மகளின் திருமணம், பழையன் தன் நட்பைத் தெரிவிப்பதற்கு முன்பே உறுதியாகிவிட்டது. வஞ்சி மாநகரில் சேரன் செங்குட்டுவன், தன் செல்வனுக்கு என் கோதையை மணமுடிக்க விரும்பி என்னிடம் கேட்டார். கரும்புதின்னவும், தமிழ்க் கவிதையைச் சுவைக்கவும் தயங்குவார் உண்டா? சேரர் குலத்தில் பெண் தருவதற்குத் தயங்குவோர் உண்டா? நானும் என் முன்னோர் செய்த பெருந்தவத்தின் பயனே, இத்திருமணம் என்று மகிழ்ந்து, அப்போதே, அங்கேயே என் மகள் கோதையைச் சேர இளவரசன் குட்டுவன் சேரலுக்குக் கொடுக்கச் சம்மதித்து விட்டேன். என் மகள் கோதைக்குக் குட்டுவன் சேரலை மணப்பதே வாழ்வின் குறிக்கோளாக இருந்தது. அவள் விருப்பத்தைச் செங்குட்டுவனின் அருள் உள்ளம் நிறை வேற்றிவிட்டது. நானும் சேரரும் இளமைத் தோழர்கள். எங்கள் நட்பு, இந்தத் திருமணத்தால் உறவாக மலர்கிறது. அருளாளரே, இந்த ஊருக்குள் நுழைந்ததுமே இந்த ஊர் கொண்ட விழாக் கோலத்தைப் பார்த்திருப்பீர்களே! செங்குட்டுவன் முறைப்படி மகள் கேட்க இவ்வூருக்குத் தாமே வரப்போகிறார். அவரை வரவேற்பதற்காகவே நானும் என் மக்களும் காத்திருக்கிறோம். அதற்காகவே ஊர் புதுக்கோலம் பூண்டு நிற்கிறது. அருளாளரே, உங்கள் அரசரின் கோரிக்கையை ஏற்க முடியவில்லை என்பதைத் தெரிவியுங்கள். கோதைக்கும் குட்டுவனுக்கும் நடக்கும் திருமணத்துக்கு அழைப்பு அனுப்புவேன். வந்திருந்து மணமக்களை வாழ்த்தச் சொல்லுங்கள்! உங்கள் பேழை

களுக்கு இங்கே வேலை இல்லை. அவற்றை எடுத்துச் செல்லுங்கள்.”

அறுகை கூறியபடி பேழைகள் அருகே நின்ற வீரர் களைப் பார்த்தார். அவர்கள் அருளாளர் சொன்னபடி நடக்கவேண்டியவர்கள். என்றாலும் அரசர் அறுகையின் பார்வை அவர்களைப் பணியச் செய்தது. உடனே பேழைகளை மூடினார்கள்!

அவையில் திடீரெனப் பரவிய ஒளி மங்கியது போலவே அருளாளரின் முகத்திலும் ஒளி குன்றியது.

“பழையனிடம் நான் உரைத்ததைச் சொல்லுங்கள், நீண்ட தூரம் பயணம் செய்து வந்திருக்கிறீர்கள், களைப்பு நீங்க ஓய்வு பெற்றுப் பின்பு நாடு திரும்புங்கள்” என்றார் அரசர்.

அமைச்சரும் படைத்தலைவரும் அவையைவிட்டுச் சென்றனர். பேழைகள் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றன.

பயணக் களைப்பு இருந்த போதிலும், ஓய்வு தேவை என்று உடல் உரைத்தபோதும், அருளாளர் குன்றத்தூரில் தங்கவில்லை. அன்று மாலையே அவரும், படைத்தலைவரும் தம் வீரருடன் மோகூருக்குக் கிளம்பினர்.

பெயருக்கேற்றபடி உள்ளத்தாலும் அருளாளரான அமைச்சரின் உள்ளம் நடுங்கியது. அறுகை உரைத்ததைக் கேட்கும் பழையன் என்ன செய்வான் என்பதை ஓரளவு உணர்ந்ததால் அவர் உள்ளம் காற்று வெளியினில் ஏற்றப் பட்ட தீபச்சுடராய் நடுங்கியது.

அத்தியாயம் பதினேழு

வில்லவன் தந்த விளக்கம்

இளவரசன் குட்டுவன் சேரலைப் படைத்தலைவன் வில்லவன் கோதை பரவசத்தோடு வரவேற்றான். "வாருங்கள் இளவரசே! உங்கள் வருகையால் என் இல்லம் பெருமை பெறுகிறது" என்று உள்ளன்போடு உரைத்தான்.

"வில்லவரே, நான் இப்போது இளவரசனாக வர வில்லை. உங்கள் இதய நண்பனாக வருகிறேன். உங்களோடு நான் மனம் திறந்து பேசலாமா? என் மனக் கவலைகளைக் கொட்டலாமா?"

"இதய நண்பனாக வந்ததால் மகிழ்ச்சி இரட்டிக்கிறது! மனம் திறந்து பேசினால், பிரச்சினைக்கு விடிவு தோன்றா விட்டாலும் இதய பாரம் ஓரளவாவது இறங்கும். இன்பத்தை நண்பனோடு பகிர்ந்து கொண்டால் அது பெருகும். துன்பத்தை நண்பனோடு பகிர்ந்து கொண்டால் அது சுருங்கும். முதலில் இருக்கையில் அமர்ந்து கொள்ளுங்கள். அப்புறம் மனக் கவலைகளைச் சொல்லுங்கள்."

இளவரசன் அமர்ந்தான். வில்லவனும் அமர்ந்து கொண்டான்.

அரசவை அதிகாரிகளில் படைத்தலைவனிடம்தான் அவனுக்குப் பழக்கம் அதிகம். அதிகாரிகளில் வயதிலே

இளையவனும் அவனே. அதனால் குட்டுவன் தன் மனக் கவலைகளை அவனிடம் கொட்டினான்.

வேட்டைக்குப் புறப்பட்ட நாள் முதல், அன்று காலை அழும்பில்வேளைச் சந்தித்த வரை நடந்த எல்லா நிகழ்ச்சி களையும் ஒன்றுவிடாமல் கூறினான். கூறி முடித்ததுமே அவனது மனச்சுமை பாதியாய்க் குறைந்ததுபோல உணர்ந்தான்.

"வில்லவரே, என்னையும் செல்வியையும் தவிர என் காதலை அறிந்த மூன்றாவது மனிதர் இளங்கோ அடிகள் ஒருவர்தான். என் தந்தையாரின் தொடர்ச்சியான சூழ்ச்சி களைப் பார்க்கும்போது அவருக்கு என் காதல் தெரியும் என்பது உறுதியாகிறது. அதனால்தான் நேற்று முழுவதும் நான் செல்வியைச் சந்திக்காதபடி செய்தார். செல்வியைச் சேரநாட்டை விட்டே வெளியேற்றுவதுபோலப் பாண்டிய நாட்டுக்கு விரட்டினார். என் காதலை அவரிடம் கூறும் முன், எனக்கும் கோதைக்கும் திருமணம் என்று அறிவித்தார். அறையை விட்டு வெளிவராமல் சிறை வைத்தார். இன்றோ, அவர் மலைச்சிகரத்தில் அமர்ந்துகொண்டு, இந்த வஞ்சி நகரத்தை விட்டு வெளியேற முடியாதபடி 'ஆட்சிப் பொறுப்பு' என்னும் பொற்சங்கிலியால் என் கால்களைப் பிணைத்து விட்டார். வில்லவரே, நான் செல்வியிடம் கொண்ட காதலை அரசர் எப்படி அறிந்தார் என்பதை அறியத் துடிக்கிறேன். அது உங்களுக்குத் தெரிந்திருந்தால் எனக்கும் தெரிவிக்க வேண்டும்."

குட்டுவன் கேட்டான்.

"இளவரசே, சேரநாட்டின் ஒற்றர் படை ஒப்புயர்வற்ற ஆற்றல் கொண்டது. அதனால் அரசர் அறைக்குள்ளே இருந்தாலும், நாடு முழுவதும் நடக்கும் செயல்கள் யாவும்

அறிவார். அவருக்கு உங்கள் காதல் விவகாரம் தெரிந்ததில் வியப்பில்லை" என்றான், வில்லவன்.

"வில்லவரே, என் தந்தை என்னைக் கண்காணிக்க ஓர் ஒற்றரை நியமித்திருக்கிறார் என்று சொல்கிறீர்களா?"

"இல்லை, இளவரசே. ஆனால் நம் நாட்டு ஒற்றர்கள் மகா கெட்டிக்காரர்கள். இயல்புக்கு மாறாய் ஏதேனும் ஒரு செயல் அவர்கள் பார்வையில் பட்டால் போதும். விட மாட்டார்கள். ஐயந்தீரும் வரை கண்காணிக்கத் தவற மாட்டார்கள். இளவரசே, நீங்களும் செல்வியும் சேர்ந்து செல்வதைப் பார்க்கும் சாதாரண ஒற்றனே, பின்தொடர் வான். பார்த்தவன் ஒற்றர் தலைவன் அம்பலவாணன். அவன் உங்களைப் பின்தொடர்ந்து வந்ததோடு நில்லாமல், உங்கள் காதல் இரும்பினும் வலியது, எழு பிறப்பும் தொடர வல்லது என்பதை உங்கள் இருவரையும் கண்டதுமே உறுதி செய்து விட்டான். அதை அரசரிடமும் அறிவித்தான்."

"அம்பலவாணன் எங்களைத் தொடர்ந்து வந்தானா? நான் கவனிக்கவில்லையே."

வில்லவன் மெல்ல நகைத்தான்.

"அப்போது நீங்கள் இருந்த நிலையில் அம்பலவாணன் உங்கள் எதிரே வந்திருந்தாலே அறிந்திருக்க மாட்டீர்கள்; பின்னே வந்தவனை எப்படியறிய முடியும்? உண்மைக் காதலுக்கு அத்தனை வலிமை உண்டு."

"அம்பலவாணன் சொன்னால் அரசர் அதை அப்படியே நம்பிவிடுவது முறையா?"

"அம்பலவாணன் சொல்வதை அப்படியே நம்பலாம். ஐயமற அறிந்த பிறகே ஒன்றைச் சொல்வான். அதன்பின் நீங்கள் அரசரிடம் செல்வியைப் பற்றிப் பேசியபோது உங்கள் முகத்தில் படர்ந்த மலர்ச்சியை— மகிழ்ச்சியை—

மன்னர் பார்த்திருக்கிறார். அது அம்பலவாணன் சொன்னது உண்மையென அறிவித்து விட்டது. இரும்பினும் வலியது உங்கள் காதல் என்பதை அரசர் உணர்ந்து கொண்டார்."

"உணர்ந்தவரா எங்கள் இரும்புக் காதலை முறிக்க முயல்கிறார்?"

"ஆம்! இரும்புங்கூட அதற்கேற்ற வெப்பநிலையில் இட்டால் அது திரவமாக உருகி ஓடும் என்பதை அரசர் அறிவார்."

"பெற்ற மகனின் காதலை இப்படி அழிக்க முயல்வது ஒரு தந்தைக்கு அழகா?"

"இளவரசே, அம்பலவாணன் உங்கள் காதலை அரசரிடம் சொல்லிவிட்டு என்னிடம் வந்தான். 'ஒற்றர் தலைவனுக்குரிய கடமையைச் செய்வதற்காக மாசற்ற காதலை அழிக்கும் பாவச் செயலுக்குத் துணை செய்து விட்டேனே' என்று வருந்தினான். இப்போது அரசருங்கூட, 'அரசன் என்னும் நிலையில் என் கடமையைச் செய்ய என் மகனின் காதலை அழிக்கும் பாவத்தைச் செய்ய நேரிட்டதே' என்று வருந்திக்கொண்டிருப்பார்."

இதைக் கேட்ட இளவரசன் "மகனின் காதலைச் சிதைப்பது மன்னரின் கடமையா? சேரநாட்டு நீதி மிக நன்றாக இருக்கிறதே" என்று எள்ளலும் சீற்றமும் இணையக் கேட்டான்.

"இளவரசே! இதுதான் சேரநாட்டு நீதி! இதே நீதிதான் வேறுநாட்டிலும் நிலவுகிறது! ஒரு தந்தை தன் மகனிடம் கொண்ட பாசத்தால், அவன் காதலிக்கும் காரிகை ஏழையள் ஆயினும் இழிகுலத்தள் ஆயினும் தன் மருமகளாக ஏற்றுக் கொள்வான். ஆனால் ஓர் அரசன் தன் மகன், நாளைய மன்னன் என்பதால் அவன் மன்னர் குடியில் பிறந்த

மங்கையை அல்லது குறுநில வேந்தனின் குமரியை மணக்க வேண்டும் என்று மட்டுமே விரும்புவான்! அரசர் குடி அரசர் குடியோடு தொடர்புகொள்வது, அரசரின் சிறப்பை உயர்த்தும்; ஆபத்துக் காலத்தில் துணை செய்யும்; இளவரசே, தமிழ்நாட்டின் பழைய வரலாற்றை அறிந்திருப்பீர்களே... அரசன் ஒருவன் குடிமக்களிலிருந்து ஒருத்தியை— அரச குலத்தைச் சாராத ஒருத்தியை மணந்துகொண்டதாக ஒரு சான்று காட்ட முடியுமா? வேந்தர்கள் வேறு குலத்தில் மண வினை செய்துகொள்வதில்லை. அதனால் செங்குட்டுவர் தம் ஒரே மகன், பாடியும் ஆடியும் வாழ்வு நடத்தும் பாணர் குடியிலே வந்த ஒரு பாவையை மணக்க விரும்புவதைத் தடுப்பது, தன் கடமையாகக் கருதுகிறார். அதுவும் ஆருயிர் நண்பர் அறுகையின் மகளைத் தம் மகனுக்கு மணமுடிக்க விரும்பியதால் மகனின் காதலைத் தடுக்கும் கடமை இன்னும் முக்கியத்துவம் பெற்றுவிடுகிறது.''

''ஓ! அரச குலத்தில் பிறந்ததால் எனக்குக் காதலிக்கும் உரிமை இல்லை! அப்படித்தானே?''

''இளவரசே, ஒரு குடிமகன் யாரை மணக்கிறான் என்று மற்றவர்கள் கவனிப்பதில்லை; கவலைப்படுவதில்லை. ஆனால் சேர இளவரசனுக்குத் திருமணம் என்ற செய்தியைக் கேட்டதும் செழியனும் சென்னியும் 'மணமகள் யார்' என்று கேட்பார்கள். மணமகள் ஒரு பாடினி என்றால், அவர்கள் எள்ளி நகையாடுவார்கள். பாடினியின் மகன் நாளை பட்டத்துக்கு வந்தால், இந்த அரசன் சேரன் செங்குட்டுவனின் பேரன், வீரன் குட்டுவன் பெற்ற மைந்தன் என்பதற்குப் பதில், 'இவன் ஒரு பாடினியின் மகன்' என்று ஏளனமாய்ப் பேசுவார்கள்; இழிசொற்களால் ஏசுவார்கள். சேரர் பரம்பரைக்கு இப்படி ஒரு பழி வராமல் காப்பது அரசர்தம் கடமையாகக் கருதுவதில் தவறென்ன?''

குட்டுவன் சேரல் முதன்முறையாகத் தன் பிறப்பை நினைத்து வருத்தப்பட்டான். "இமய வரம்பன் பேரன், செங்குட்டுவனின் செல்ல மகன், சேரர் குடி தழைக்க வந்த குலக் கொழுந்து. வேழமுடைய சேர நாட்டை ஆளப்போகும் வேந்தன்" என்றெல்லாம் தன் சிறப்புகளை— பிறப்பால் தனக்குக் கிடைத்த சிறப்புகளை— நினைத்து நினைத்துப் பூரித்துப் பழக்கப்பட்ட குட்டுவன், அன்று குட்டுப்பட்டவன் போலக் குன்றிப் போனான். காதலுக்குத் தடையாக இருப்பது அவன் மன்னன் மகன் என்ற நிலையல்லவா? 'நானும் பாணர் குடியிலோ, பாவலர் குடியிலோ, பாடு பட்டுழைக்கும் தொழிலாளர் குடியிலோ பிறந்திருந்தால் என் காதலுக்கு எதிராக இத்தனைச் சூழ்ச்சிகள் நடைபெறாதே! அரசர் குடியில் பிறப்பது எவ்வளவு இன்பமானது என்று நினைத்தேன்! ஒரு சாதாரண குடிமகனுக்கு இருக்கும் காதலிக்கும் உரிமை கூட இளவரசனுக்கு இல்லையே...' என்று வேதனையடைந்தான்.

திடீரென்று இளவரசன் எழுந்து நின்றான். "படைத் தலைவரே, அரசன் ஒருவன் குடிமக்களில் ஒருத்தியை மணந்ததாக வரலாறு உண்டா என்று கேட்டீர்களே! அந்த வரலாற்றை மாற்றிக் காட்டுகிறேன். சேரநாட்டு இளவரசன் குட்டுவன், பாடிப் பிழைக்கும் பாணர் மகளைத் தன் துணைவியாக்கி அரண்மனையில் குடியேற்றினான் என்று வருங்கால வரலாற்றாசிரியர்கள் எழுதுமாறு ஒரு புரட்சி செய்யப் போகிறேன். வில்லவரே, ஒரு செங்குட்டுவரல்ல, ஓராயிரம் செங்குட்டுவர் வந்தாலும் என் காதலை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. மலைவளம் காணும் அரசர் எப்போது வேண்டுமானாலும் திரும்பட்டும்; அவர் திரும்பி வந்ததும், அவரிடம் என் முடிவைச் சொல்லப் போகிறேன். ஒருவேளை அவர் வஞ்சிக்கே வராமல், குன்றத்தூருக்கே சென்று திருமணத்தை நிச்சயம் செய்துகொண்டு வந்தாலும்

அதை ஏற்காமல் எதிர்ப்பேன்.... செல்வியே என் வாழ்க்கைத் துணைவி! இதை யாரும் மாற்ற முடியாது" என்று உறுதி தோன்றக் கூறினான், குட்டுவன்.

'தந்தைக்கும் தனயனுக்கும் இடையே ஒரு பெண்ணால் ஏற்பட்ட பிளவின் விளைவு எப்படியிருக்குமோ?' என்று எண்ணிக் கலங்கினான், வில்லவன் கோதை.

* * *

பேரியாற்றங்கரையின் மணல்திட்டிலே அமர்ந்திருந்த மன்னர் செங்குட்டுவனின் மனம் குறிஞ்சியின் அழகில் படியவில்லை. அவர் தம் மைந்தனைப் பற்றியே சிந்தித்தார்.

பிறந்த நாள் விழாவின் முந்தைய இரவில், ஒற்றர் தலைவன் அம்பலவாணன் அவரைக் கண்டு அன்றைய செய்திகளைத் தெரிவித்தான். விடை பெற்றுத் திரும்பும் போது ஒரு நொடி தயங்கினான். அரசரின் கூரிய பார்வை அதைக் கண்டு, "வேறு ஏதோ செய்தி இருக்கிறது போல் தோன்றுகிறதே" என்று கூறினார்.

'சொல்வதா, வேண்டாமா' என்று அதுவரை ஒரு முடிவுக்கு வராத அம்பலவாணன் இளவரசன் செல்வியைக் குதிரையில் விரட்டிச் சென்றதையும், பின் குணவாயிற் கோட்டத்திலிருந்து இருவரும் இணைந்து வெளிவந்து நடந்து சென்றதையும் கூறினான். அரசர் இதைச் சாதாரணமாகத் தான் கேட்டார். என்றாலும், "அம்பலவாண, அவர்களைப் பற்றி உன் கருத்தென்ன?" என்று கேட்டார்.

அம்பலவாணன் தயங்கினான். பிறகு, "அரசே, இளவரசர் அந்தப் பெண்ணிடம் அளவற்ற காதல் கொண் டிருக்கிறார் என்று தோன்றுகிறது. அவளுடன் இணைந்து நடந்தபோது அவர் முகத்தை முன்புறம் வந்து பார்த்தேன். அவ்வளவு மகிழ்ச்சி, அவ்வளவு பொலிவு, அவ்வளவு

பிரகாசம் அந்த முகத்தில் அதற்கு முன் பார்த்ததில்லை. இளவரசரின் காதல் இரும்பினும் வலியது, எழுபிறப்பும் தொடர வல்லது என்று எனக்குத் தோன்றியது" என்றான்.

அரசர் அவனை அனுப்பிவிட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தார். மறுநாள் இளவரசன் செல்வியைப் பற்றிப் பேசிய போது அவன் முகத்தைப் பார்த்தார். நீலவானம் போன்ற கோலமுகம், செல்வி என்னும் சொல்லைச் சொல்லும் போது நிலா பெற்ற வானமாகப் பொலிவுறுவதைக் கண்டார். அம்பலவாணன் சொன்னது உண்மை என்று அறிந்தார். அதனால் நெருப்பையும் பஞ்சையும் நெருங்க விடாமல் காப்பது போலக் குட்டுவனையும் செல்வியையும் பிரித்தார். அதன்பிறகும் தம் மகனை நேருக்குநேர் சந்தித்து 'உன் காதலை மாற்றிக்கொள்' என்று சொல்லும் துணிவு அற்று, இதோ இங்கே மலையின் மடியில் அமர்ந்திருக்கிறார்.

மலைவளம் காணப் புறப்படுவதற்கு முன், வில்லவன் கோதையிடம் தனயனின் காதலையும், தனது முடிவையும் கூறி, "இதைப் பக்குவமாக இளவரசனுக்கு எடுத்துச் சொல்!" என்று கூறிவிட்டுத்தான் வந்தார். என்றாலும் அவர் மனம் ஆறுதலடையவில்லை.

"ஆட்சிப் பொறுப்பில் ஆழ்ந்து விட்டால் குட்டுவன் காதலை மறப்பான். கடமையில் நாட்டம் கொள்வான். கடமையில் பற்று மிகுதியானால் காதலின் வேகம் தானாகக் குறையும். அதனால் ஆட்சிப் பொறுப்பு அவனிடமே இருக்கட்டும், அவனுக்கு அறிவிக்காமலே வேண்மாளுடன் குன்றத்தூருக்குச் சென்று திருமணத்தை நிச்சயம் செய்து, மணமகளையும் உடனழைத்துக்கொண்டு வரவேண்டும்" என்று திட்டமிட்டார், செங்குட்டுவன்.

அத்தியாயம் பதினெட்டு

முரசு பேசியது

குன்றத்தூர்க் கோட்டையின் மேற்கு வாயில்.

மதில்மேல் நின்ற வீரர்கள் மேற்றிசையினையே ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தனர்.

அது பிற்பகல் நேரம். சூரியன் மேற்றிசை வழியே இறங்கிக்கொண்டிருந்தான்.

திடீரென்று ஒருவன், "அதோ, பார் புழுதிப்படலம்" என்று கையினால் சுட்டியவாறு கூறினான். மதில்மேல் நின்ற வீரர்கள் சிலரும் அதைப் பார்த்தார்கள். தூரத்தில், மேற்றிசையில் புழுதிப்படலம் மெல்ல எழுந்து பரவிப் படர்வது தெரிந்தது.

இரண்டு நாளுக்கு முன்னர் அவர்கள் பார்த்த சாதாரணமான புழுதிப்படலமல்ல; படை நடந்தால் எழும் புழுதிப்படலம் மேற்கே எழுந்து, கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தது.

வாயில் தலைவனும் மதில்மேல் ஏறிப் பார்த்தான்.

"சேர மன்னர் வருகிறார்... நான் சொன்னது போல் ஒரு படையோடு வருகிறார்" என்று தன்னைத் தானே பாராட்டிக்கொள்ளும் பான்மையில் பரவசத்தோடு கூறினான்.

“தலைவரே, முரசு முழங்கட்டுமா?” என்று கேட்டான் ஒருவன்.

“உம்... உம்... சீக்கிரம் செய்! அரசர் அறுகை வாயிலுக்கே வந்து சேரமன்னரை வரவேற்க விரும்புகிறார்” என்றான், தலைவன்.

உடனே முரசு முழங்கியது! களிப்பை உணர்த்தும் சந்தத்தில் முரசு முழங்கியது! அதைக் கேட்டு மேற்கு வாயிலில் நின்ற வீரர்களும் ஆரவாரித்தார்கள்.

குன்றத்தூரின் அரண்மனை, நகரின் நடுவே இருந்தது. மேற்கு வாயிலில் முழங்கும் முரசொலியை அங்கிருந்து கேட்க முடியாது. அதனால் வாயிலுக்கும் அரண்மனைக்கும் இடையே மூன்று இடங்களில் முரசுகள் அமைக்க ஏற்பாடு செய்திருந்தார், அறுகை. வாயிலின் முரசு முழங்கியதைக் கேட்டதும் முதல் முரசு முழங்கும்; அதைக் கேட்டு... இரண்டாம் முரசும் முழங்கும்... அதைக் கேட்டு... மூன்றாம் முரசு முழங்குவதை அந்தப்புரத்திலிருந்தும் தெளிவாகக் கேட்கலாம். ஏறக்குறைய ஊரின் பெரும் பகுதியினர் இந்த முரசுகளின் முழக்கத்தைக் கேட்க முடியும்.

மேற்கு வாயிலின் முரசு முழங்கியதைத் தொடர்ந்து, மற்ற மூன்று முரசுகளும் ஒன்றின் பின் ஒன்றாகத் தொடர்ந்து முழங்கின. உடனே ஊர் முழுவதிலும் ஆரவாரம் எழுந்தது. மக்களில் பெரும்பாலோர் சேரவேந்தரை வரவேற்க மேற்கு வாயிலுக்கே செல்ல முற்பட்டனர். செங்குட்டுவன், அறுகையின் அரண்மனைக்கு எந்த வழியே செல்வார் என்பது தெரியும். அந்தச் சாலையின் இரு மருங்கும் மக்கள் குழுமி நின்றனர். சாளரங்களில் எல்லாம் முகத்தாமரைகள் மொய்த்தன.

முரசொலியைக் கேட்ட அறுகை, உடனே புறப்பட்டார். தம்மைப் போலவே அரசவையினரும் புறப்பட்டு அரண் மனை வாயிலில் தேரிலும் குதிரைகளிலும் கூடியிருப் பார்கள் என்பது தெரியும். அறுகை அரண்மனைக்கு வெளியே வந்தார். அவரது தேர் புறப்பட ஆயத்தமாக இருந்தது. அதன் முன்னே குதிரை வீரர்கள்! பின்னே பிற அதிகாரிகளின் தேர்கள்! அதற்குப் பின்னே குதிரை வீரர்கள்.

அறுகை தேரில் ஏறினார். உடனே குதிரைப் படை கிளம்பியது... தேர்ச்சக்கரங்கள் சுழன்றன... அறுகை தன் விழிகளை வழியின் இருபுறமும் சுழல விட்டார். உத்தம நண்பனை வரவேற்பதில் நாட்டு மக்களும் தம்மைப் போல ஆர்வத்தோடு இருப்பதைக் கண்டு களித்தார்.

'செங்குட்டுவன் மேற்கு வாயிலில் தரப்படும் உபசாரங் களை ஏற்பதற்கு முன்பு அங்கே நாம் போய்விடலாம்' என்று நினைத்தார், அறுகை.

வாயிலில் மலர் தூவ, மாலை அணிவிக்க, வாழ்த் தொலிகள் எழுப்ப, முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்பணியை ஏற்றோர்கள், அல்லும் பகலும் அறுபது நாழிகையும் இச்செயல்களைச் செய்யக் காத்திருந்தார்கள். சேரமன்னர் இந்த மாலை நேரத்தில் வராமல் நள்ளிரவில் வந்தாலும் கோலாகல வரவேற்பு நடக்கும்படி அறுகை ஏற்பாடு செய்திருந்தார்.

அறுகையின் உள்ளம் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது! நண்பராகக் குன்றத்தூரில் நுழையும் செங்குட்டுவன் உறவினராக— சம்பந்தியாகத் திரும்பப் போகிறார்! அறுகைக்குக் கிடைத்த பேறு வேறு யாருக்குக் கிடைக்கும்!...

அறுகை நினைவுத் தேரேறிக் கதிர்மண்டலத்தில் பவனி வந்துகொண்டிருந்தார்.

மேற்கு வாயிலில், மதில்மேல் நின்ற வாயில்தலைவன் மேற்றிசையைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டே இருந்தான். கால் நாழிகை நேரத்தில், தூரத்தில் அவன் பார்த்த புழுதிப் படலம் தெற்கு வடக்காகப் பரந்து, கிழக்கு மேற்காக நீண்டு நீண்டு... நீண்டு கொண்டே வருவதைப் பார்த்து மலைத்தான். புழுதிப்படலம் வான மண்டலத்தை நிறைத்துச் சூரியனின் கதிர்களை மறைத்துப் பூமண்டலத்தே காரிருள் பரவச் செய்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டான். ஆச்சரியம் சில நிமிடங்களில் அச்சமாக மாறியது!

"அடேய், இதென்ன... சேர வேந்தர் தம் முழுப் படையை யும் அழைத்துக்கொண்டு வருகிறாரே!"

தலைவன் கூறினான். இதற்குள் மற்ற வீரர்களும் ஆரவாரம் அடங்கி அச்சத்தால் பதுமைகளாயினர்.

புயற் காலத்தில் வரும் மேகக் கூட்டமாகப் புழுதிப் படலம் கோட்டையை நோக்கி வருவது தெரிந்தது. நேரமாக ஆக, புழுதியைக் கிளப்பிய அந்தப் பெரிய படையே காட்சிக்குத் தெரிந்தது.

உற்றுக் கவனித்த ஒரு வீரன், "ஐயோ, வருவது பழையன் படை" என்று கூக்குரலிட்டான்.

"மூடு! மூடு! கதவுகளை மூடு."

வாயில் தலைவன் கத்தினான். வீரர்கள் வாயிலின் இரு பெருங்கதவுகளை மூட முயன்றார்கள்.

முரசு முழக்கிக்கொண்டிருந்தவனும் எதிரே வரும் படையை— படைக்கடலைப் பார்த்தான். "இந்தப் படை வெள்ளம் மோதினால் மதிலே நொறுங்கிப் போகுமே...

கதவுகள் எம்மாத்திரம்... சேரவேந்தர் வருகிறார் என்று மகிழ்ச்சியுடன் வரும் ஊர்மக்களுக்கு மரணதேவன் ஓங்காரமிட்டு வருகிறான்... ஓடிப் போங்கள் என்று எப்படித் தெரிவிப்பது...?"

முரசு முழங்குவோனின் மூளை அந்த ஆபத்து வேளையிலும் வேலை செய்தது! பளிச்செனை ஒரு வழி அங்கே உதயமானது!

ஒரு படை போருக்குக் கிளம்பினால், அதனோடு போர் முரசுகள் பல செல்லும். படை வீரர்கள் எப்படிச் செல்ல வேண்டும் என்பதை முரசின் பல்வகை முழக்கங்கள் வெளிப்படுத்தும். இயல்பாக நட, வேகமாகச் செல், ஓட்டமும் நடையுமாகப் போ, ஓடு, வேகமாக ஓடு, தாக்கும் வேகத்தில் ஓடு என்னும் இத்தனை கட்டளைகளையும் முரசு அதற்கு ஏற்ற வேகத்தில் முழங்கி வெளியிடும்... இப்போது பகைவன் பழையன் தாக்க வருகிறான்... இதை ஊரிலிருக்கும் வீரர்களுக்குச் சொல்ல வேண்டும்...

முரசு முழங்குவோன், 'தாக்கும் வேகத்தில் ஓடு' என்னும் கட்டளை பிறப்பிப்பதற்கான தாளகதியில் முரசை முழக்கினான். தன் உடலின் வலிமையை ஒன்று திரட்டிப் பெருத்த ஒலி எழ முழங்கினான்.

அந்த நேரம் கதவுகள் மூடப்பட்டன. பழையனின் படை, கோட்டையின் அகலத்துக்குச் சமமாகப் பரவி நின்ற படை, வந்த வேகத்தில் கதவையும் கற்சுவரையும் மோதிற்று. ஆயிரக்கணக்கான அம்புகளும் வேல்களும் குறிபார்க்கும் அவசியமின்றி மதிலை நோக்கி வரிசை வரிசையாகப் பறந்தன... மதிலிலிருந்து இறங்கி ஓடியவர்கள் தவிர நின்ற ஒவ்வொருவரும் ஒன்றுக்கு மேற்பட்ட அம்பும் வேலும் பட்டு வீழ்ந்தனர். தக்க நேரத்தில் அறிவுக் கூர்மையோடு முரசின்

முழக்கத்தால் அபாய அறிவிப்புத் தந்த, தொடர்ந்து தந்துகொண்டிருந்த அந்த வீரனும் வீழ்ந்தான்.

பழையன் படையினர் மதிலைத் தகர்ப்பதிலும், கதவை உடைப்பதிலும், மற்றொருபுறம் மதில் மேல் ஏறுவதிலும் ஈடுபட்டனர்.

வாயிலுக்கும் அரண்மனைக்கும் இடையில் வைக்கப் பட்ட மூன்று முரசுகளும், சேரரின் வருகையை அறிவித்து ஓய்ந்தன. முரசை முழங்கியவர்கள் முரசு மேடையிலிருந்து இறங்காமல் அங்கேயே நின்றனர். அரைநாழிகையில் மீண்டும் மேற்கு வாயிலின் முரசு பெருத்த முழக்கம் செய்தது. முதல் முரசறைபவன் செவியில் விழுந்தது. அவன் எச்சரிக்கை அடைந்து காதைத் தீட்டி முழக்கத்தைக் கேட்டான்... "தாக்கும் வேகத்தில் ஓடு என்றல்லவா முரசு முழங்குகிறது? ஏன் இப்படியொரு முழக்கம்! முழக்கத்தில் ஏதோ முக்கியத்துவம் இருக்கும்... இதை நாமும் அடுத்த முரசுக்கு அறிவிக்க வேண்டும்" என்று கருதினான். மறு நொடியே முதல் முரசு, வாயில் முரசுபோலவே "தாக்கும் வேகத்தில் ஓடு" என்று ஒலித்தது... தொடர்ந்து மற்ற இரு முரசுகளும் முழங்கின!

அரசர் அறுகையின் தேர் இரண்டாவது முரசை அணுகிய நேரத்தில் அந்த முரசு ஒலித்தது! இத்தகைய முரசொலிக்குப் பழக்கப்பட்ட வீரர்கள் குழப்பமடைய, அறுகையின் செவியும் அதைக் கேட்டது. அவர் "நிறுத்து" என்று ஆணையிடத் தேர் நின்றது. மற்றத் தேர்களும் குதிரை களும் நின்றன. இப்போது மூன்றாவது முரசின் முழக்கம் மெதுவாகக் கேட்டது.

"தாக்கும் வேகத்தில் ஓடு! இதன் பொருள் என்ன?" என்று கேட்பது போல், அதற்குள் அவர் தேரருகே வந்த அமைச்சரைப் பார்த்தார், அரசர்.

“வாயில் முரசு இப்படி முழங்கியிருந்தால்தான், மற்ற முரசுகள் முழங்கும். வாயில் முரசறைவோன் கண்ட காட்சியில் இப்படி முழங்கியிருக்கிறான். பகைவன் வருகிறான். தாக்க ஓடி வாருங்கள் என்றோ, தாக்கும் வேகத்தில் ஓடிப்போங்கள் என்றோ இந்த முரசொலி சொல்வதாக நினைக்கிறேன்.”

அமைச்சர் சொன்னதும் அறுகையின் முகம் கலவர மடைந்தது. “நமது பகைவன்...” என்று அவர் தொடங்க, “பழையனாகத்தான் இருக்கவேண்டும்! மகளைத் தர மறுத்ததற்காக அறிவிப்பின்றிப் படையெடுத்து வந்திருப் பானோ என்று ஐயுறுகிறேன்” என்று முடித்தார், அமைச்சர்.

இதற்குள் மேற்கு வாயிலைத் தாக்கும் பழையனது பெரும்படையின் ஆவேசக் கூச்சல் அறுகையிருந்த இடத்துக்கும் கேட்டது. உடனே வஞ்சியிலிருந்து வரும் வழியில் இடைக்குன்றூர்ப் பாதையில் அவர் பார்த்த பழையனின் பெரும்படைகள் நினைவுக்கு வந்தன. அறுகை உடனே தேரிலிருந்து இறங்கினார்.

“அமைச்சரே, பழையன்தான்! அறத்துக்கும் அவனுக்கும் தொடர்பு அறவே கிடையாது! நம் மக்களை உடனே வீடு வாசலை விட்டு, அணிமணிகளை விட்டு, கிழக்கு வாயிலை நோக்கி ஓடச் சொல்லுங்கள். கிழக்கு வாயிலைக் கடந்தும், ஓடச் சொல்லுங்கள். கீழ் மலைக்காட்டை அடைந்து மறைந்து கொள்ள வேண்டும்... மாதர்களையும் குழந்தைகளையும் தேர்களில் ஏற்றி அனுப்புங்கள். குதிரையில் செல்லக் கூடியவர்களுக்கெல்லாம் குதிரைகளைக் கொடுங்கள். நம் வீரர்களுக்கு இறைவன் தந்த கால்களே வாகனங்களாக இருக்கட்டும்... பழையனின் பெரும்படையோடு போரிடுவ தல்ல நம் கடமை... நம் மக்களைக் காப்பாற்ற வேண்டும்... அவர்கள் தப்பிச் செல்லும்படி, எதிரிகளைத் தடுக்க

முயலுங்கள்... பிறகு... பிறகு... உயிர்பிழைக்கும் வீரர்கள் கீழ் மலைக்காட்டுக்கு வரட்டும்... அமைச்சரே! என் மகள் கோதை அரண்மனையில் இருக்கிறாள்... அவளைப் பத்திரமாக ஒரு தேரிலேற்றி மக்கள் செல்லும் மலைக்காட்டிற்கே அனுப்புங்கள்... சிவபிரானும், சேரர் பெருமானும் நம்மைக் காப்பார்கள்."

உரத்த குரலில் உரைத்த அறுகை, ஒரு குதிரையில் பாய்ந்து ஏறி, அதைத் தட்டிவிட்டார். குதிரை மேற்கு வாயில் நோக்கிப் பறந்தது.

அறுகை கூறியதை அமைச்சருடன் மற்ற அதிகாரிகளும் வீரர்களும் கேட்டனர். உடனே அறுகையின் ஆணையைச் செயல்படுத்துவதில் தீவிரமாயினர்.

அமைச்சர், அரசரின் தேரில் ஏறிக்கொண்டார். "பாகனே, தேரை அரண்மனைக்கு வேகமாகச் செலுத்து! இளவரசியைக் காப்பது உன் தேரின் வேகத்தைப் பொறுத்தது" என்றார். அவர் கடைசிச் சொல்லைச் சொல்வதற்கு முன்னரே தேர், நளன் செலுத்தும் தேரானது.

அரண்மனையின் முன்னே அரசரின் தேர் நின்றது. அமைச்சர் வாயிலில் நின்ற காவலர்களிடம், "இளவரசியாரை உடனே இங்கே அழைத்து வாருங்கள்" என்றார்.

"இளவரசியார் அரண்மனையில் இல்லை. அரசர் தேரிலே சென்ற சில நொடிகளில் இளவரசியார் மற்றொரு தேரிலே புறப்பட்டார். சேர வேந்தரைத் தாமும் கோட்டை வாயிலுக்குச் சென்று வரவேற்க விரும்பினாராம். அரசர் வேண்டாம் என்று தடுத்துவிட்டார். அதையும் மீறி இளவரசியார் புறப்பட்டுச் சென்றுவிட்டார்."

காவலர் சொன்னது அமைச்சரின் இதயத்தைத் தாக்கியது.

"நான் வரும் வழியில் இளவரசியின் தேரைப் பார்க்க வில்லையே..."

அமைச்சர் கூறினார்.

"அரசரும் பிறரும் வலப்பக்க வழியில் சென்றனர். இடப் பக்கமாகவும் மேற்கு வாயிலுக்குச் செல்லலாம். ஆனால் அது சுற்று வழி. இளவரசியின் தேர் இடப்பக்க வழியில் சென்றது" என்றனர், காவலர்.

"பாகா, இளவரசியை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும்... தேரைச் செலுத்து" என்று சொன்னதும், இளவரசியின் தேர் சென்றதாகக் காவலர் சொன்ன வழியில் தேர் பறந்து, மின்னலாய் மறைந்தது.

* * *

பழையனின் படை வெள்ளம் கோட்டைக் கதவு களையும், மதிலின் ஒரு பகுதியையும் உடைத்துக்கொண்டு உள்ளே பாய்ந்தது!

சேர வேந்தரை வரவேற்கவும், வாழ்த்தவும் உற்சாகத் தோடு வந்த குன்றத்தூர் மக்கள் மோகூர் வீரர்களைக் கண்டு நடுங்கினர். பழையன் படைவீரர்கள் மக்கள் மீது பாய்ந் தார்கள். எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் கொன்றார்கள். எதிர்ப்பட்ட நபர், படைவீரனா, குடிமகனா, ஆணா, பெண்ணா, குழந்தையா, கிழவனா என்பதைக் காணாத குருடர்களாய்க் கொன்றார்கள். கொடும்புலிகள் ஆயிரக் கணக்கில் நகரில் புகுந்தால் எப்படி மக்களைச் சிதைத்துச் சின்னபின்னமாக்குமோ, அப்படி மோகூர் மிருகங்கள் ஆயுதம் ஏந்தாதவர்களை, ஆலத்தித் தட்டு ஏந்தியவர்களை,

இரக்கமின்றி, கருணையின்றிக் கொன்றார்கள்! அபயம் கேட்டவர்களை, அஞ்சி ஓடியவர்களை, ஓலமிட்டவர்களை, ஒளிந்து மறைந்தவர்களை அந்தச் சூராதி சூரர்கள் தொட்டிழுத்து வெட்டி வீழ்த்தினார்கள். மோகூர் வீரர்கள் நகரையே நாசமாக்கி இரத்தவெறி பிடித்த பேய்களாய் நர்த்தனமாடினர்.

அறுகையின் ஆணைப்படி குன்றத்தூர் வீரர்கள், பகைவருடன் போரிடுவதற்குப் பதில் மக்களைக் கிழக்கு வாயில் வழியே வெளியேற்றும் பணியிலே ஈடுபட்டனர். தம்முயிர் நீங்கும் முன் சில உயிர்களையாவது காத்தோம் என்ற நிம்மதி, இறந்து வீழ்ந்த அறுகையின் வீரர்கள் ஒவ்வொருவரும் பெற்றனர்.

குன்றத்தூரின் அவலக்குரலை அழுகைக்குரலை கோட்டைக்கு வெளியே, தன் தேரிலே வீற்றிருந்தபடி இரசித்து மகிழ்ந்தான் இராட்சசப் பழையன்.

“அடேய் அறுகையே, சேரனின் பகைவன் என் பகைவன் என்று என் முன்னே சொன்ன உன் வாயைக் கிழிக்கப்போகிறேன். பழையன் பெண்ணைக் கேட்ட பிறகும் துணிவோடு மறுத்த உன் நாக்கை ஆயிரம் துண்டுகளாய் அறுக்கப்போகிறேன். இந்த மோகூர் மன்னன் பெண்மோகம் கொண்டவனல்ல... பேரழகுப் பெட்டகமான உன் மகளைப் பார்த்தபோதுதான் என் மனம் முதன்முதலாகக் காதல் என்றால் என்ன என்பதை உணர்ந்தது... அடடா... இளவரசி கோதையின் கொள்ளையழகு... அதை வர்ணிக்க வார்த்தை ஏது!”

பழையன் இப்படி நினைத்தபோதே, அவன் மனக்கண் முன் கோதையை முதன்முதலாகக் கண்ட அந்த எதிர்பாராத நிகழ்ச்சி தோன்றியது.

இடைக்குன்றூர்ப் பாதையில் அரசர் அறுகை ஆயிரம் வீரருடன் செல்கிறார் என்பதை அறிந்ததும், அவரைக் கைது செய்யப் போதுமான படையுடன் புறப்பட்டுப் போனான்.

அறுகையின் ஆயிரம் வீரர் கொண்ட படையை அப்படியே ஒரு மலைப்பாம்பு போலச் சுற்றி வளைத்துக் கொண்டு, திடீர்த்தாக்குதல் நடத்தவேண்டும் என்பது அவன் திட்டம். அதனால் அறுகை வரும் பாதையை ஒட்டி, தன் ஊர் எல்லைப்புறக் காட்டில், தன் பெரும்படையை மறைவாக நிறுத்தி வைத்திருந்தான்.

அது இரவு நேரம். என்றாலும் முழு நிலா நிலப்பரப்பு முழுவதையும் வெள்ளித்திரவத்தில் தோய்த்தெடுத்து மெருகேற்றிக் கொண்டிருந்தது.

அந்த நிலவொளியில் அறுகையின் படை வருவது தெரிந்தது.

முன்னே குதிரை வீரர்கள்! பின்னேயும் குதிரை வீரர்கள்! நடுவிலே இரண்டு தேர்கள்! முதல் தேரில் அறுகை இருந்தார். அடுத்த தேரில்... ஒளி வெள்ளம். தேருக்குள் நாற்புறத்தும் தீப்பந்தங்கள், வீசும் காற்றையும் எதிர்த்து ஒளி வழங்க, அதன் நடுவே இருந்த ஆசனத்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்த இளவரசி கோதை, அதே நிலையில் கண்ணயர்ந்திருந்தாள்.

அந்தப் பொற்சிலையைக் கண்ட பழையன் கற்சிலை யானான். வேகமாகப் போனால் இளவரசியின் உறக்கம் கலைந்துவிடுமோ என்று நினைத்தது போல, கோதையின் தேர் மெல்ல அசைந்தது. பழையனின் பார்வை அதையே தொடர்ந்தது. தேர் அவனைக் கடந்த பிறகும் அவன் கண்முன் அழகுத் தேவதையின் நித்திரைக் கோலமே நின்றது.

பழையனுடன் வந்திருந்த வீரர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. பழையன் சைகை செய்ததும், படை முன்னேறி, அறுகையின் படையை அப்படியே ஒரு வட்டமாகச் சுற்றி வளைத்துக்கொள்ள வேண்டும் என்பது உத்தரவு.

பழையன் அசைவற்று, மரங்களின் நடுவே ஒரு மரமாக நின்றுவிட்டானே! அறுகையின் படை, அவர்களைக் கடந்து போனாலும் அதை விரட்டிப்பிடிப்பது அரிய செயலல்ல! அதனால் அருகேயிருந்த ஒரு சிறு படைத்தலைவன், "அரசே, அறுகையின் படை நம்மைக் கடந்துவிட்டதே... தங்களிட மிருந்து ஆணை பிறக்கவில்லையே! இப்போது உத்தர விட்டாலும், பகைவர்கள் அனைவரையும் சுற்றி வளைத்துப் பற்றிக்கொள்ளலாம்" என்றான்.

கோதையின் உருவம் தந்த போதையிலிருந்து முழுமை யாக மீளாத பழையன், "வேண்டாம்... படை கோட்டைக்குத் திரும்பட்டும்" என்று கூறினான்.

அறுகைக்கு ஒரு மகள் உண்டு என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அவள் இவ்வளவு அழகாய் இருப்பாள் என்பது தெரியாது! அறுகையை மட்டும் எதிர்பார்த்து வந்தவன் அவர் மகளைக் கண்டான்! பெண்களைப் பற்றிய சலனமற்ற அவன் இதயத்தில் இப்போது மோக அலைகள் ஆர்ப்பரித்தன. 'மூடியிருக்கும் விழிகளோடே மோகனப் பதுமையாய்த் திகழும் இளவரசி, விழி திறந்தால், எப்படி யிருப்பாள்? இப்படிப்பட்டவளே என் மனைவியாக ஏற்றவள்' என்று நினைத்தான்.

அதனால்தான் அறுகையைக் கைது செய்யவில்லை. அறுகை திரும்பிவந்தபோது, வரவேற்று நட்பைத் தெரிவித் தான். அத்தனை செயலுக்கும் அடிப்படை நோக்கம், அறுகையின் மகள் மோகூர் அரசியாக வேண்டும் என்பதே!

ஆனால்... என்ன! ஏமாற்றம்.

அறுகையின் மகள் சேர இளவரசனை மணக்கப் போகிறாள்! பழையனின் வேண்டுகோள் மறுக்கப்பட்டது! அடிபட்ட புலியாகப் பொங்கியெழுந்து, படையுடன் புறப்பட்டான்! இதோ குன்றத்தூர் 'கோ'வென்றழுகிறது! குன்றத்தூரில் பிணக்குன்று எழுகிறது!

இத்தனைக்கும் காரணம் அவன் இதயத்தில் தூங்கிய காதலை எழுப்பிவிட்ட, கோதையின் நித்திரைக்கோலம்!

குன்றத்தூரின் அழிவைக் கண்டு அகமகிழும் அந்த நேரத்திலும் பழையனின் மனத்தே விழி மூடிய ஒளிமுகமே தோன்றியது.

கோதையின் குவளை விழிகள், குளிர்நிலாவைக் கண்டனபோல் அகல மலர்ந்த அழகுத்தோற்றம் எப்படி யிருக்கும் என்பது அவனுக்குத் தெரியாது.

அவன் படைத்தலைவர் விறல்வேங்கையாரை எதிர் பார்த்துக்கொண்டிருந்தான்.

"படைத்தலைவரே, குன்றத்தூர் இன்னும் ஓர் ஆயிரம் ஆண்டுக்கு எழுந்து நிற்காதபடி அழித்துவிடவேண்டும். இது படைக்கு இடும் கட்டளை. நிறைவேற்றுவது வீரர் கடமை. உங்கள் கடமை என்ன தெரியுமா? இளவரசி கோதையைச் சிறைப்பிடிக்க வேண்டும். கோதையைக் கைப்பற்றாமல் திரும்பினால், என் கையாலேயே உங்கள் தலையைக் கொய்துவிடுவேன்... இது சத்தியம்" என்று பழையன், படைத் தலைவர் விறல்வேங்கையிடம் கூறியிருந்தான்.

கோதையின் நினைவிலே ஆழ்ந்திருந்த பழையனுக்குத் திடீரென்று விறல்வேங்கைக்குத் தான் இட்ட பணி நினைவுக்கு வந்தது. 'கோட்டைக்குள் படை நுழைந்து நான்கு நாழிகைகள் ஆகியிருக்கும்! கதிரவனின் ஒளி முற்றிலும்

மறைந்து அந்தி நேரத்தின் அரைகுறை வெளிச்சம் பரவி யுள்ளது. இன்னும் விறல்வேங்கையைக் காணவில்லையே! கோதையைச் சிறைப்பிடிக்கும் முயற்சியில் தோற்று விட்டாரோ? அதனால் என்னைப் பார்க்கப் பயந்து கோட்டைக்குள்ளே பதுங்கிக்கொண்டாரோ?'

"அரசே" என்ற குரல் பழையனின் சிந்தனையைக் கலைத்தது.

பழையன் விழியை உயர்த்தி எதிரே பார்த்தான்.

அங்கே படைத்தலைவர் விறல்வேங்கை நின்றுகொண் டிருந்தார்! அவர் முகத்தில் வேதனை தெரியவில்லை! வெற்றிக் களிப்பு ஒளிவிட்டது!

அத்தியாயம் பத்தொன்பது

சினத்தீ

செங்குட்டுவன் நினைத்தபடி இளவரசன் குட்டுவன் சேரல் ஆட்சிப் பொறுப்பில் கவனம் செலுத்திக் காதலை ஓரளவாவது மறந்து போனான் என்றுதான் வில்லவன் கோதை நம்பினான். அவனை அப்படி நம்பச் செய்தது இளவரசன் அரசியல் கடமைகளில் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்ட செயல். ஆனால் அவன் தன் காதலை மறக்கவில்லை; காதலியையும் மறக்கவில்லை.

மலைவளம் காணச் சென்ற மன்னர் இறங்கி வரத் தானே வேண்டும். வந்ததும் 'நீங்கள் என்னிடம் ஒப்படைத்த வேலையை ஒழுங்காகப் பார்த்துவிட்டேன். இனி என் திருமணம் பற்றிப் பேசலாமா?' என்று கேட்டு, 'என் உள்ளத்தில் செல்வியைத் தவிர வேறொருத்திக்கு இட மில்லை' என்பதை உறுதியாகச் சொல்லிவிட வேண்டும் என்று முடிவு செய்திருந்தான், குட்டுவன்.

'செல்வி, அவளுடைய தந்தையைத் தலைவராகக் கொண்ட கலைஞர் குழுவுடன் மதுரைத் தமிழ்ச் சங்க விழாவுக்குச் சென்றிருக்கிறாள். சேரன் செங்குட்டுவன் தம் அரசின் சார்பில் அனுப்பிய கலைஞர் குழு அது. அதனால் விழா முடிந்ததும் கலைஞர்குழு சேரநாட்டுக்கு வந்து விழாவைப் பற்றி அரசரிடம் விளக்கிப் பின் அவர்

அளிக்கும் பரிசு பெற்றுச் செல்வது முறை. அதனால் செல்வி மீண்டும் வஞ்சிக்கே வருவாள். அவளையே அழைத்துப் போய் அன்னைமுன் நிறுத்தி, அரசர்முன் நிறுத்தி 'இந்த வஞ்சியே என் வாழ்க்கைத் துணைவி' என்று அறிவித்து இருவரையும் ஒரே அதிர்ச்சியடையச் செய்ய வேண்டும்!' இப்படியும் இளவரசனின் இதயத்தில் ஓர் எண்ணம் இருந்தது.

எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் குட்டுவன் சேரல் தந்தையிட்ட பணிகளைச் செவ்வனே செய்து வந்தான். எந்த விஷயத்திலும் வேகமாகவும் விவேகமாகவும் முடிவெடுத்துச் செயல்படுத்திய இளவரசன் அனுபவமிக்க அழும்பில்வேளையும் அவருடைய துணையதிகாரிகளையும் ஆச்சரியத்தில் மூழ்கச் செய்தான்.

ஒருநாள்...

இரவு வெகுநேரம் கண்விழித்து அரசகாரியங்களில் ஈடுபட்டதால், பொழுது புலரும் நேரத்திலும் இளவரசன் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான். "இளவரசே! இளவரசே!" என்று உரக்க அழைத்த குரல் அவன் உறக்கத்தைக் கலைக்க, விழிமலர்த்தியவன் எதிரே படைத்தலைவரும், அமைச்சரும் பயமும் பதற்றமுமாக நிற்பதைக் கண்டு பதறி "என்ன செய்தி" என்று கேட்டான்.

அமைச்சர் பேசினார்:

"அறுகை அனுப்பிய வீரன் ஒருவன் கொஞ்ச நேரத்துக்கு முன் வந்தான். தந்த செய்தியைக் கேட்டு என் இதயம் ஒருகணம் நின்றேவிட்டது. மோகூர்ப் பழையன், அறுகையின் மகளை மணக்க விரும்பினானாம். மகளைத் தர அறுகை மறுக்கவே, அறிவிப்பின்றி உடனே படை யெடுத்துச் சென்றான். சேரன் செங்குட்டுவன் வருகிறார்

என்று தவறாக நினைத்த குன்றத்தூர் மக்களை அவனது படை அறமற்ற முறையில் கொன்று குவித்தது. இளவரசே, இளவரசி கோதையைப் பழையன் சிறைப்படுத்திச் சென்று விட்டான். உயிர் தப்பிய மக்களோடு அறுகை கீழ்மலைக் காட்டில் மறைந்து வாழ்கிறார். தம் நிலையைச் சேரர்க்கு உரைக்கவே வீரனை அனுப்பியுள்ளார், அறுகை."

கேட்ட இளவரசன் முதலில் கோதையின் நிலையை நினைத்தான். சேர இளவரசனை மணக்கப் போவதாகக் கனவு கண்டு கொண்டிருக்கும் இந்தப் பேதை, குட்டுவன் அவளை மணக்க மறுப்பதையும், பாணர் குலத்துப் பாவை ஒருத்தியை மணக்க விரும்புவதையும் அறிந்தால் எப்படித் துடித்துப் போவாள் என்று சில நாள்களாகவே சிந்தித்து நொந்து வந்தான் இளவரசன். அவனை, அமைச்சர் உரைத்த செய்தி அனலிலிட்ட புழுவாகத் துடிக்க வைத்தது. பேதையே! கோதையே! மூர்க்கன் பழையனிடமா நீ சிக்கவேண்டும்? இந்தத் துயரச் செய்தியை என் தந்தை கேட்டால் அவர் இதயம் வெடித்துவிடுமே..."

இளவரசனின் கண்கள் பனித்தன! கலங்குவது, கண்ணீர் விடுவது காரிகையர் செய்ய வேண்டியன. வீரர் குடியிலே வந்த இளவரசன் என்ன செய்ய வேண்டும்...?

குட்டுவன் மஞ்சத்திலிருந்து திடீரென எழுந்து நின்றான். "அறுகையிடமிருந்து வந்த வீரனை என் தந்தையார் தங்கி யிருக்கும் மலைப்பகுதிக்கு அனுப்புங்கள். அவன் வாயி லிருந்தே அரசர் செய்தியை அறியட்டும்" என்றான்.

"தங்கள் முடிவு இதுவாகத்தான் இருக்கும் என்று உணர்ந்து, அரைநாழிகைக்கு முன்னரே, நம் வீரர்களுடன் பாதுகாப்பாக மாமன்னர் இருக்கும் இடத்துக்கு அறுகையின் வீரனை அனுப்பிவிட்டேன்."

அமைச்சர் உரைத்தார்.

"படைத்தலைவரே! நம் படை முழுவதையும் ஒன்று திரட்டி வஞ்சி வாயிலில் அணிவகுத்து நிற்க ஆவன செய்யுங்கள்," என்றான் இளவரசன்.

"இளவரசரின் ஆணை இதுவாகத்தான் இருக்கும் எனவுணர்ந்து, உடனடியாக நம் படைகள் வஞ்சி வாயிலில் திரண்டு நிற்குமாறு படைப் பிரிவுகளின் தலைவர்களுக்கு உத்தரவிட்டுவிட்டேன். நண்பகலுக்கு நமது படை அணி வகுத்து நிற்கும்.

படைத்தலைவர் சொன்னார்.

திணறிவிட்டான், குட்டுவன் சேரல்.

"அரசர் நிலையில் நின்று ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த சில தினங்களாகத்தான், அழும்பில்வேளும் வில்லவன் கோதையும் என்னை அரசனாக நினைத்து, அணுகிப் பழகினார்கள். இந்தச் சில தினங்களுக்குள்ளேயே என் மனக்கருத்து இப்படித்தான் இருக்கும் என்று யூகித்துவிட்ட திறமை நம்ப முடியாதது! சேரவேந்தருடன் பல்லாண்டு களாகப் பழகும் இருவரும், அவர் நினைப்பதையும் நினைக்கப் போவதையும் பழுதின்றி அறிந்து செயல்படு வார்கள் என்று பிறர் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அதை என்னால் இப்போது நம்ப முடிகிறது," என்று தனக்குத் தானே பெருமிதத்தோடு கூறிக்கொண்டான்.

* * *

நெற்றிக்கண்ணைத் திறக்கும்போது கற்றைச் சடைமுடி கண்ணுதலானின் முகம் எப்படிச் சீற்றத்தால் சிவந் திருக்குமோ, அப்படிச் சிவந்தன, அவனுடைய பக்தனான செங்குட்டுவனின் முகம்.

"என் ஆருயிர் நண்பன் அறுகைக்கும் அவனுடைய அன்பு மகள் கோதைக்கும் இத்தனை துன்பமா? குன்றத்தூர்

மக்களுக்கு இப்படி ஓர் அழிவா! வீரனே, இன்னொரு முறை குன்றத்தூரில் நடந்தவற்றை ஒன்றுவிடாமல் கூறு!"

அரசர் கூறினார். வீரன் விழியில் வழியும் நீரைத் துடைக்கவும் மறந்து அந்தத் துயரக்கதையை மீண்டும் சொன்னான்.

படை வருகிறது என்றதும் சேரர் படை என்று எண்ணி, இன்பம் பொங்க மக்கள் திரண்டது...

பழையனின் படை பெரும் கோட்டையைத் தாக்கியது...

முரசறைவோன் அறிவின் கூர்மையால் அபாய அறிவிப்புச் செய்தது...

படையிடமிருந்து மக்களைக் காக்குமாறு வீரர்களுக்கு அறுகை ஆணையிட்டது...

கோதை சிறைப்பட்டது...

மக்களைப் பழையனின் படை இரக்கமின்றிக் கொன்றது...

அறுகையும் குன்றத்தூர் மக்கள் தொகையில் சரிபாதியினரும் மலைக்காட்டில் மறைந்தது...

இத்தனையும் சொன்னான் வீரன்.

செங்குட்டுவனின் செவ்விழிகளிலிருந்து கண்ணீர் கொட்டியது... இல்லை; செந்நீரே கொட்டியது!

"முரசறைவோன் அறிவுத் திறத்தால் அபாய அறிவிப்புத் தந்ததால் குடிமக்களில் சரிபாதியினர் தப்பினர். முரசறைவோனின் அறிவே அறிவு! அந்த அறிவு முரசறையும் வள்ளுவக்குடிக்கு வழிவழியாக இருந்ததாலன்றோ, ஒரு வள்ளுவன் 'திருக்குறள்' என்னும் அறநூலைத் தர முடிந்தது. குன்றத்தூர் மக்களைக் காத்து உயிர் நீத்த அந்த முரசறைவோனுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கம்."

வேந்தரின் வணங்காமுடி வணங்கியது.

"என்னை வரவேற்பதற்காக அன்போடு, ஆர்வத்தோடு, ஆனந்தப்பெருக்கோடு கூடிய மக்கள் பழையனின் வெறிப் படைக்கு இரையானார்கள்! உயிர் துறந்த மக்களே உங்களை விழுப்புண் பெற்ற வீரர்களினும் பெரிதாக மதிக்கிறேன். மாசற்ற அன்பைத் தவிர வேறேதுமறியாத உங்களைக் கொன்ற மோகூர்க் கொலைஞர்களைப் பழிக்குப் பழி வாங்குவேன்."

செங்குட்டுவன், குன்றத்தூர் வீரனை நோக்கினார்.

"கோதை எப்படிச் சிறைப்பட்டாள், அறுகை தப்பினார்! அமைச்சர் தப்பினார்! அரசிளங்குமரி மட்டும் சிறைப்பட நேர்ந்தது எப்படி?"

வீரன் விளக்கினான்.

"அரசர் அறுகையோடு தானும் கோட்டை வாயிலுக்கு வந்து உங்களை வரவேற்க விரும்பினார் இளவரசி. அரசர் அதை மறுத்துத் தாம் மட்டும் புறப்பட்டார். தங்களை எப்படியும் வாயிலுக்குச் சென்றே வரவேற்க வேண்டும் என்று விரும்பிய இளவரசி, ஒரு தேரில் ஏறி வேறு வழியாகக் கோட்டை வாயிலை நோக்கிச் சென்றார். இளவரசியைக் கைது செய்வதற்காகவே ஒரு படையுடன் புறப்பட்ட விறல்வேங்கையிடம் அவர் சிக்கிக்கொண்டார். இளவரசியைக் காப்பதற்காக அரண்மனைக்குச் சென்ற அமைச்சர், அங்கே அவரைக் காணாமல், அவரைத் தேடிச் சென்றார். இளவரசி சிறைப்பட்டதை அறிந்தார். வேந்தர் வேந்தே, எங்கள் இளவரசி சிறைப்பட்டதால் இரு நன்மைகள் ஏற்பட்டன. அரசர் அறுகை மோகூர் வீரர்கள் முன்னேறாமல் தடுத்துப் போரிட்டுக் கொண்டிருந்தார். எவ்வளவு முயன்றாலும் பகைவர்களே வெல்வார்கள்

என்பது உறுதி! அறுகையார் புறங்கொடுத்து மீளார் என்பது உறுதி! இந்நிலையில் அமைச்சர் அரசரை நெருங்கி இளவரசி சிறைப்பட்டதைக் கூறினார். அவளைச் சிறை மீட்பதற்காக அவர் உயிர் வாழவேண்டும் என்பதை உணர்த்தி, அவரைப் போரிலிருந்து விலக்கித் தம்மோடு அழைத்துச் சென்று காத்தார் அமைச்சர். இது ஒரு நன்மை! எங்கள் அரசரை நாங்கள் இழக்கவில்லை."

"மற்றொரு நன்மை என்ன?"

"பழையனின் இலட்சியமே இளவரசியைச் சிறைப் படுத்திச் செல்வது. அதனால் இளவரசி கிடைத்ததும், திருப்தி யடைந்தான். மறுநாளே படையுடன் தன் நாட்டுக்குத் திரும்பி விட்டான். இளவரசி தப்பிச் சென்றிருந்தால், மக்கள் மறைந்துகொண்ட மலைக்காட்டையே அழித்து, அரசர் உட்பட அனைவரையும் அழித்திருப்பான். இது மற்றொரு நன்மை."

செங்குட்டுவனின் உடல் சிலிர்த்தது. "கோதாய், என்னைக் காணும் ஆவலில் வந்த உன்னைச் சிறைப்படுத்தி விட்டான், சிறியோன். என்னால் நீ சிறைப்பட்டாய்! உன்னைச் சிறை மீட்கும் வரை என் கண்ணுறங்காது! ஆருயிர் நண்பா, அறுகை! உன் குன்றத்தூர் இமயக்குன்றாய் எழுந்து நிற்கச் செய்வேன்! பாதகப் பழையா, சேரனின் சினத்தீ, அதைத் தூண்டிய அரசை எப்படி அழிக்கும் என்பதை உன் நாட்டு அழிவைக் கண்டு உலகினர் அறியும் படி செய்வேன்! ஆலமர் செல்வன் மீது ஆணை!"

செங்குட்டுவன் சபதம் செய்தார்.

* * *

அறுகை அனுப்பிய வீரன் வந்த அன்று மாலையே செங்குட்டுவன் வஞ்சிநகரத்துக்குத் திரும்பிவிட்டார்.

தலைநகரத்திலிருந்த படை வஞ்சி வாயிலில் அணி வகுத்து நிற்பதை இளவரசன் குட்டுவனே தந்தையிடம் கூறினான்.

செங்குட்டுவன் தம் மைந்தனைக் கண்டார். அதுவரை அவரே படைக்குத் தலைமை வகித்துப் புறப்பட நினைத்தவர், அந்தக் கருத்தை உடனே மாற்றிக்கொண்டார்.

"குட்டுவா, பழையனை அழித்து, மோகூரைச் சிதைத்துக் கோதையைச் சிறைமீட்கச் செல்லும் நமது படைக்கு நீ தலைமை வகித்துச் செல்வதே பொருந்தும். இப்போதே புறப்படு" என்றார் அரசர்.

குட்டுவனுக்கு, அப்போதிருந்த சூழ்நிலையில் "என்ன பொருத்தம்" என்று கேட்பது பொருத்தமாகத் தெரிய வில்லை. "தங்கள் ஆசியுடன் புறப்படுகிறேன்," என்று கூறி, அரசர்முன் பணிந்தான்.

வஞ்சி வேந்தர், தம் மைந்தனை வாஞ்சையுடன் வாரியணைத்தார். "மகனே! செல்க! சிறு செயல் செய்தோனைக் கொல்க! சேரநாட்டுக்குரியவளைச் சிறை மீட்டு வெல்க!" என்றார்.

"சேரநாட்டுக்குரியவள் கோதை" என்று அந்தப் போர்ச் சூழலிலும் செங்குட்டுவன் கூறியது, குட்டுவனைக் குழப்பியது.

செங்குட்டுவன், "குட்டுவா, வில்லவன் கோதை உன்னுடன் துணையாக வருவான். விரைந்து செல்! அதனினும் விரைவாக வாகைச் செய்தியை அனுப்பு" என்றார்.

குட்டுவன், புறப்பட்டான்! வில்லவன் கோதை பின் தொடர்ந்தான்!

வஞ்சி நகரத்துக்குக் கிழக்கு வாயிலிலிருந்து சேரன் படை, காரிருள் சூழ்ந்ததையும் பொருட்படுத்தாமல் அன்றிரவே புறப்பட்டது.

எழுகடல் ஒருசேர இணைந்தது போலச் சேரர் படை நடந்தது.

இம்மாபெரும் சேனைக்குத் தலைவனான சேர இளவரச னின் உள்ளத்தில் அச்சம் மெல்லத் தலைகாட்டியது!

ஆம், அவன் அஞ்சினான்!

போரைக் கண்டு அவன் அஞ்சவில்லை; போருக்குப் புறப்படும் முன் 'கோதை சேரநாட்டுக்குரியவள்' என்று செங்குட்டுவன் சொன்ன சொற்களை நினைத்து அஞ்சினான்.

அத்தியாயம் இருபது

விழி மூடிய முகம்

மோகூர் அரண்மனை!

எந்தப் பகுதியைப் பார்த்தாலும் பொன்னும் மணிகளும் பொருத்திய சுவர்கள்! தந்த வேலைப்பாடு பதிந்த சந்தன மரக்கதவங்கள்! வாயில்களிலும் சாளரங்களிலும் திரையாகத் தொங்கிய முத்துச்சரங்கள்! சித்திர வேலைப்பாட்டில் சிந்தையைக் கவரும் விதானங்கள்! செல்வத்துக்கு அதிபதியான குபேரனின் அரண்மனை இப்படித்தான் இருக்கும் என்று அனுமானிக்கச் செய்யும் சீரும் செல்வச் சிறப்பும் மிக்க அரண்மனை!

அரண்மனைச் சாளரங்களில் ஒன்றின் பின்னே ஒளிந்து நின்று, அறைக்குள்ளே பார்த்துக் கொண்டிருந்தான் ஒருவன். ஒளிந்து நின்று பார்ப்பவன் ஒற்றனா? திருடனா? இருவருமல்ல! பின் யார்?

அவன் பழையன்.

மோகூர் அரசன் பழையனா தன் சொந்த அரண்மனையில், அன்னியன் போல, அதிலும் கள்ளன் போல ஒளிந்து நின்று பார்க்கிறான்?

ஆமாம்! காவலன்தான் இங்கே கள்ளனாய் நின்று அறைக்குள்ளே பார்த்தான்! உள்ளே அறுகையின் புதல்வி கோதை வீற்றிருந்தாள்.

'சேரவேந்தரைப் பார்க்கப் போகிறோம்' என்ற ஆவலுடன் சென்ற கோதையின் தேரைச் சூழ்ந்து முற்றுகை யிட்டது பகைவன் பழையனின் படை என்பதை அறிந்ததும் அதிர்ச்சியால் மூர்ச்சையானாள். அவள் உணர்வு பெற்று விழித்தெழுந்த போது பகைக் கூடாரத்தில் இருந்தாள். குன்றத்தூர் வீழ்ந்ததையும், இந்த எதிர்பாராத போருக்குக் காரணம் தானே என்பதையும் உணர்ந்தபோது அவள் சின்னக் குழந்தை போலத் தேம்பினாள்.

அப்போதுதான் பழையன் அவள் இருந்த கூடாரத் துக்குள் நுழைந்தான். கோதை தலைகுனிந்தாள். மோகூர் மன்னன் மோக வெறியோடு அவளை முதன்முதலில் பார்த்த நித்திரைக் கோலத்தை வர்ணித்தான். "பெண்ணே, அன்று முதல் உன் மலர்ந்த முகத்தைக் காணவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். எங்கே வனப்பின் உறைவிடமான உன் வதனத்தை நிமிர்த்தி, அங்கே சுழலும் வாள் விழிகளை என்மேல் பாய்ச்சு!" என்று கூறினான்.

உடனே சட்டென்று தலைநிமிர்த்தினாள், கோதை. ஆனால் அவள் விழிகள் மூடியிருந்தன!

"பெண்ணே, இந்த விழி மூடிய முகத்தைத்தான் என் அகக்கண்ணில் எப்போதும் பார்த்து வருகிறேனே! விழி மலர்த்தி என்னைப் பார்."

வேண்டினான், பழையன்.

"பழையா, தன்னை விரும்பாத பெண்ணை மனத்திலும் நினைக்காமலிருப்பது தமிழரின் பண்பு. சேர இளவரச னுக்கும் எனக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டதை என் தந்தை கூறியதும், உன் ஆசையை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். பணபலத்தால் உண்டாக்கிய படைபலத்தால் வீணாக என் நாட்டு மக்களை வேட்டையாடிக் கொன்றாய்!

பண்பாடு அறியாத பழையா, உன் முகத்தைப் பார்க்கவே நாணுகிறேன். பார்ப்பது பாவம் என்று நினைக்கிறேன். அதனால் இனி என் இமைகள் திறக்கமாட்டா! என் கண்மணிகள் உன் உருவத்தை, உன் உருவத்தின் நிழலைக் கூடக் காணமாட்டா! இது உறுதி."

கோதை தன் விழிகளை இன்னும் இறுக மூடினாள்.

பழையன் அடிபட்ட பாம்பாகச் சீறினான். "பெண்ணே, என்ன துணிவோடு இப்படிப் பேசிவிட்டாய்? நான் நினைத்தால் இப்போதே உன் இமைகளைக் கிழித்தெறிந்து, அது இனிமேல் மூட முடியாதபடி செய்துவிடுவேன், தெரியுமா?"

"பழையன் கயவன் என்று பலரும் கூறக் கேட்டிருக் கிறேன். அநாகரிகம் உன் பிறவிக்குணம். அதனால் நீ சொன்னபடி செய்வாய் என்பது தெரியும். ஆனால் பழையா, தமிழ்க்குலத்துப் பெண் தன்னைப் பிறன் தீண்டாமல் எப்படியெல்லாம் காத்துக்கொள்வாள் என்பது உனக்குத் தெரியாதா? உயிர்வாழக் காரணமான உயிர்ப்பை ஒடுக்கி, மூச்சையடக்கிப் பிணமாக விழுவது பெண்ணுக்கு அரிதல்ல! என்னை நீயோ, உன் ஆட்களோ தொட்டால், உடனே என் மூச்சையடக்கி உயிர்விடுவேன்! இது சத்தியம்."

பழையன் இரண்டடி பின்வாங்கி நின்றான். மானத் துக்கு மாறு நேராமல் மூச்சடக்கி உயிர்விடும் பண்பு உத்தம மாதர்களிடம் உண்டு என்பதை அவனும் அறிவான்.

ஆத்திரம் அடங்கி ஏமாற்றம் எழுந்தது.

"கோதை, இனி உன் கண்ணையே திறக்க மாட்டாயா? என்னைப் பார்க்கமாட்டாயா?" ஏக்கத்தோடு கேட்டான், பழையன்.

"திறப்பேன்! பார்ப்பேன்! என்னைச் சிறைப்படுத்திய உன்னை என் தந்தை விட்டுவிட மாட்டார்! என் தந்தை விட்டுவிட்டாலும் என் கரம் பற்றப் போகும் சேரர் புதல்வர் விடமாட்டார்! அவர் விட்டுவிட்டாலும், என் தந்தையினும் ஆயிரம் கோடி மடங்கு என்னிடம் அன்பு செலுத்தும் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் விட்டுவிட மாட்டார். மூவரில் ஒருவர் முன்னே நீ தலைகுனிந்து நிற்பதையோ, உயிரிழந்து கிடப்பதையோ அறியும் போது என் கண்ணைத் திறப்பேன்! உன்னைப் பார்ப்பேன்."

சொற்கள் வெடித்துச் சிதறின.

பழையன் பின்வாங்கி விட்டான்.

கோதை மோகூர் அரண்மனைக்கு வந்த பிறகும் மூடிய விழிகளைத் திறக்கவில்லை. பழையன் வருகிறான் என்பதை அறிந்தால், ஏற்கெனவே மூடியிருக்கும் அவள் இமைகள் இன்னும் இறுக்கமாகும்.

பழையன் அவள் பதும முகத்தை ஒரு முறையாவது விழிமலர்ந்த நிலையில் பார்த்துவிட வேண்டும் என்னும் ஆவலால்தான் சாளரத்தின் பின்னே ஒதுங்கிப் பதுங்கி நின்றான். 'அறைக்குள்ளேயிருக்கும் கோதை எப்போதாவது கண்ணைத் திறக்க மாட்டாளா' என்று காத்திருந்தான்.

கால்கள் நொந்தன; கண்கள் பூத்தன. ஆனால் கோதையின் விழியழகை அவனால் பார்க்க முடியவில்லை.

கோதைக்குச் சேவை செய்யும் பணிப்பெண்கள், "அவள் விழியை எப்போதுமே திறப்பதில்லை" என்று கூறியதைப் பழையனால் நம்பமுடியவில்லை. தன் எதிரில் கண் திறக்காதவள், மற்ற நேரத்தில் சில நொடிகளாவது விழி மலர்வாள் என்று நினைத்தான். அதை அறியவே சாளரத்தின் அருகே மறைந்து நின்று பார்த்தான்.

பணிப்பெண்கள் கோதையிருந்த அறையின் உள்ளே வந்தார்கள்; வெளியே சென்றார்கள். எதையும் கோதை பொருட்படுத்தவில்லை. அவள் முகத்தின் விழிகள் தளர்வதும் இறுகுவதுமாக இருந்தனவேயன்றி அலர்வதும் குவிவதுமாக இல்லை.

பழையன் சாளரத்தை விட்டு விலகினான். மெல்ல நடந்து, அறைவாயிலுக்குள் நுழைந்தான். அங்கிருந்த பணிப் பெண்கள் பணிந்து அகன்றார்கள்.

நடையின் ஓசையைக் கொண்டே வந்தவன் பழையன் என்பதை உணர்ந்த கோதையின் இமைகள் இறுகின.

"கோதை, ஒருமுறை, ஒரே ஒருமுறை என்னை விழி திறந்து பார். பிறகு உன்னை விடுதலை செய்துவிடுகிறேன்" என்று கெஞ்சினான் பழையன்.

"முடியாது, பழையா முடியாது! நான் முன் சொன்ன அந்த நிலையில் கைதியாக, அல்லது பிணமாக இருந்தால் தான் கண்ணைத் திறந்து உன்னைப் பார்ப்பேன். எனக்கு விடுதலையை நீ வழங்கி, அதை நான் பெற விரும்பவில்லை. என்னை விடுவிக்கச் சேரர் படை இந்நேரம் வந்துகொண் டிருக்கும் என்று என் உள்ளம் சொல்கிறது. அதனிடமிருந்து உன்னை விடுவித்துக்கொள்ள முடியுமா என்று பார்," என்றாள் கோதை.

"ஆணவம் பிடித்தவளே! சேரர்படை வருகிறது என்னும் செய்தி வந்துவிட்டது. அதை இதோ உனக்கு நானே சொல்லி விட்டேன். இதுவரை தோற்றறியாத செங்குட்டுவன் முதன் முறையாகப் பழையனிடம் தோற்றான் என்னும் செய்தி யையும் நானே உன்னிடம் சொல்வேன்! பெண்ணே, உலகத்தில் இல்லாத புதுமையாக, என்னிடம் தோற்றவனுக்கு ஒரு பரிசு தரப்போகிறேன். பரிசுப் பொருள் நீதான்,

கோதை! ஆனால் என்னைப் பார்க்க விரும்பாத உன் விழிகளைத் தோண்டிக் குருடாக்கி, உன் கருமேகம் போன்ற கூந்தலை மழித்துத் தலையை மொட்டையாக்கி, முகத்திலும் மொட்டைத் தலையிலும் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, கழுதைமேல் ஏற்றி, செங்குட்டுவனின் தோல்விக்குப் பரிசாக அளிக்கப்போகிறேன்."

பழையன் நரம்புகள் புடைக்க ஆத்திரத்தோடு கூறி, 'ஹா ஹா' என்று சிரித்தான். அந்தச் சிரிப்பொலி நிற்கும் வரை அமைதியாகக் காத்திருந்தாள், கோதை. சிரிப்பு நின்றது. கோதை மெதுவாகக் கேட்டாள், "நீ சொன்னதையெல்லாம் செங்குட்டுவனைத் தோற்கச் செய்த பிறகுதானே செய்யப் போகிறாய்? அப்போது நீ சொல்லும் சீர்களை நானே சித்த மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறேன்! ஏன் இப்படிச் சொல் கிறேன் என்பது புரிகிறதா? கடல் வற்றாது! காவலன் சேரன் படை தோற்காது! செங்கதிரோன் குளிர்வதுண்டா? செங்குட்டுவன் தோற்பதுண்டா?"

இப்போது கோதை வெடிச் சிரிப்புச் சிரித்தாள். அந்த நகையொலி இடியொலியாகத் தாக்கப் பழையன், அந்த அறையை விட்டு அகன்றான். அதன் பின்னும் கோதையின் சிரிப்பொலி தொடர்ந்து எதிரொலித்தது.

அத்தியாயம் இருபத்தொன்று

கயவன்! கயவன்!

மோகூரின் மதில்மேல் நின்று, எதிரே வந்து திரளும் சேரர் படையைப் பார்த்த பழையன் பிரமித்துவிட்டான்.

குறுநில மன்னர்களிடம் சிறுபடை மட்டுமே இருக்கும். ஆனால் பழையனிடம் இருந்த படை, பேரரசர் படை போலப் பெரியது. தமிழகத்துச் சிற்றூர்களில், படைவீரனாக வேண்டும் என்று விரும்பி, சொந்த நாட்டுச் சேனையில் சேரும் வாய்ப்பில்லாமல் வாடும் வாலிபர்களிடம், "மோகூருக்குப் போ! பழையனின் படையில் எளிதாய்ச் சேரலாம்" என்று பெரியவர்கள் சொல்வது வழக்கம். பழையன் வந்தவர்களையெல்லாம் படையில் சேர்த்தான். அவன் படைக்கு எல்லையில்லை.

மோகூரின் செல்வச் செழிப்பால், சேனைப் பெருக்கத் துக்குச் சேரனைப் போல, செழியனைப் போல, சென்னியைப் போலப் பெரும் பொருள் செலவிட்டான் பழையன். அதனால் மூவேந்தர்கள் கூடப் பழையனிடம் கொஞ்சம் எச்சரிக்கையுடனே இருந்தார்கள். பழையன் தன் பெரும் படையை அடிக்கடி அணிவகுக்கச் செய்து அதைப் பார்வை யிட்டு, "இப்படை தோற்றால் எப்படை வெல்லும்" என்று பரவசத்தோடு சொல்லிக்கொள்வான். அதே பழையன் சேரனின் படையைப் பார்த்து, "விற்படை தோற்றால்

எப்படை வெல்லும்" என்று மனத்துக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

சேரர் பெரும்படை மோகூர்க் கோட்டையை முற்றுகை யிடுவது போல நாற்புறமும் சுற்றி வளைத்து நின்றது.

பழையனின் மனம் நடுங்கியது.

'சேரனின் சேனையைச் சரியாகக் கணிக்கத் தவறி விட்டோம். மூவேந்தரில் ஒருவனான பாண்டியனிடமுள்ள படையின் அளவு தெரியும். அதே அளவுதான் சேரனிடமும் இருக்கும் என்று அனுமானித்தது, எவ்வளவு அறிவீனம்? நமது படை குன்றத்தூர்ப் படையை அழிக்கப் போதுமானது; பாண்டியன் படையை வெல்லும் வல்லமையும் உண்டு. ஆனால் இந்தச் சேரனின் படை... இதன் அளவை நன்றாக அறிந்துதான் அந்த ஆணவம்பிடித்த கோதை, 'செங் கதிரோன் குளிர்வதுண்டோ? செங்குட்டுவன் தோற்ப துண்டோ' என்று செருக்கோடு மிடுக்கோடு கேட்டாள் போலும். ஆனால் எனக்குச் சாதகமான செய்தி ஒன்றும் இருக்கிறதே! இந்த மாபெரும் படைக்குத் தலைமை வகித்து வருவது, களம் பல கண்ட கடம்பர்களை வென்ற செங்குட்டுவன் அல்ல! அவன் புதல்வன் வருகிறான்! சிங்கத் துக்குப் பதிலாகச் சிங்கக்குட்டி வருகிறது. நம் திறத்தையும் தந்திரத்தையும் பயன்படுத்தினால், சிறுவன் வீழ்வான்! தலைவன் வீழ்ந்தால், அவன் பின்னேயுள்ள படை, எத்துணைப் பெரியதாயினும் பின்வாங்கும். அதன்பின் மோகூர் சேனை முன்னேறித் தாக்கலாம்! வெற்றி முழக்கம் செய்யலாம்!'

பழையனின் பயம் படர்ந்த முகத்திலே ஒரு திடீர் நம்பிக்கை. அதனால் சேர இளவரசனை எப்படி ஏமாற்ற லாம் என்று யோசித்தபடியே, மதிலை விட்டிறங்கி அரண் மனையை அடைந்தான்.

இளவரசனின் கூடாரத்தில், அவனும் படைத் தலைவனும் வீற்றிருந்தார்கள். வாயிலில் நெடிதுயர்ந்த தோற்றமும் நெருப்புமிழும் கண்களுமாக ஒரு வீரன் வேலோடு நின்றான். அவன் பார்வை அடிக்கடி கூடாரத் துக்குள் சென்று மீண்டது. அவன் செவிகள் ஒரு புழுவின் அசைவையும் கேட்கத் தயாராக இருப்பது போலத் தெரிந்தது, குட்டுவனுக்கு.

"படைத்தலைவரே, என் மெய்க்காப்பாளனாக நிறுத்தி யுள்ள இவன் யார்? அவன் பார்வை வெளியே செல்வதைக் காட்டிலும் உள்ளே வருவது போலத் தெரிகிறதே!" என்று கேட்டான், இளவரசன்.

"இளவரசே, இவன் நம் அரசரின் நம்பிக்கைக்குரிய வீரன். அரசரின் அந்தரங்க ஒற்றனாகப் பல நாடுகளுக்குச் சென்று வந்த தீரன், பெயர் வானவன். மோகூரிலும் இவனுக்குப் பழக்கமுண்டு. அதனால் இவனே உங்கள் மெய்க்காப்பாளனாக இருக்கவேண்டும் என்று அரசர் என்னிடம் கூறினார். அவன் பார்வையோ, செயலோ கண்டு ஐயுற வேண்டாம். முழுக்க முழுக்க நம்பத் தகுந்தவன்" என்றார், படைத்தலைவர் வில்லவன் கோதை.

"படை கோட்டையைச் சுற்றி நிற்கிறது. கோட்டைக் கதவுகள் யாவும் மூடப்பட்டுவிட்டன. நாளைக் காலையில் கதவைத் திறந்து அவர்களாக வெளியே வந்தால் போரிடுவோம். இல்லையேல், கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைவோம்" என்றான் குட்டுவன்.

"இளவரசே, இவ்வளவு வேகமாக, மூன்று நாளில் கடக்க வேண்டிய தூரத்தை ஒன்றரைநாளில் கடந்துவந்த நாம், விடியும்வரை காத்திருக்கவேண்டாம். இப்போதே கதவை உடைத்து உள்ளே செல்லலாம்!" என்றார், வில்லவன் கோதை.

"வேண்டாம் வில்லவரே! போதுமான ஓய்வின்றி ஓட்டமும் நடையுமாய் வந்த வீரர்கள், மாலையும் இரவும் இளைப்பாறட்டும்! களைப்பு நீங்க உறங்கட்டும். போரை நாளையே தொடங்கலாம்."

இளவரசன் உறுதியாய்ச் சொன்னதும், படைத் தலைவரின் விழிகள் வாயிலைப் பார்த்தன. வாயிலில் நின்ற வானவனோ எதிரே எங்கோ பார்த்துக்கொண்டிருந் தான்.

"வானவா," என்று வில்லவர் அழைத்ததும் உள்ளே வராமல் அவன் வெளிநோக்கி நகர்ந்தான். சிறிது நேரத்தில் ஓர் ஓலையுடன் உள்ளே வந்தான்.

"இளவரசரே, அரசன் பழையன் அனுப்பிய ஓலை இது. இதைக் கொண்டுவந்த மோகூர் வீரன் வெளியே நம் வீரர் களின் காவலில் நிற்கிறான்" என்று கூறி ஓலையைக் குட்டுவனிடம் நீட்டினான்.

குட்டுவன் ஓலையை வாங்கிப் படித்துவிட்டு, வில்லவ னிடம் தந்தான். வில்லவன் கோதை ஓலையை உரக்கப் படித்தார்.

"சேர இளவரசே வருக! போருக்கு யார் வந்தாலும் வரவேற்பது பழையனின் பழக்கம். கோட்டைக் கதவுகளைக் குடிமக்கள் நலன் கருதி அடைத்து வைத்துள்ளேன். நாளை ஆதவன் உதிக்கும் வேளையில், கிழக்கு வாயிலைத் திறந்து கொண்டு என் படை வெளியே வரும், சந்திக்கத் தயாராய் இருங்கள்."

"பழையனின் ஓலையை நான் படித்து விட்டுத்தானே வில்லவன் கோதையிடம் தந்தேன். என்றாலும் அதை உரக்கப் படிக்கிறாரே, ஏன்?"– இளவரசனுக்குப் புரிய வில்லை.

"இளவரசே, பழையன் இந்த ஓலையை அனுப்பியதில் ஏதோ உள்நோக்கம் இருக்கக்கூடும்" என்ற வில்லவன் கோதை, "வானவா, மோகூரிலிருந்து பழையனின் குணங்களை நன்கு அறிந்தவனாயிற்றே, நீ! இந்த ஓலை யைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? பழையன் சொல்வது போல் நாளைக் காலை போர் தொடங்கலாமா? அல்லது இப்போதே நமது படை கோட்டைக்குள் நுழையும் என்று சொல்லியனுப்பலாமா?" என்று கேட்டார்.

படைத்தலைவர் ஒற்றனிடம் யோசனை கேட்பதைக் கண்டு இளவரசன் வியந்தான்.

"படைத்தலைவரே! இந்த ஓலையின் நோக்கம், நாம் இப்போதே கோட்டைக்குள் புகாமல் தடுப்பதாகவே இருக்கலாம். பழையனுக்கும் அறத்துக்கும் பகையன்றி நட்பில்லை. பழையன் கயவன். அதனால் அவன் சூழ்ச்சிகள் செய்யக் காலந்தராமல் இப்போதே கோட்டைக்குள் நமது படை புகுவதே சரி. வந்திருக்கும் வீரனிடம் இதைத் தெரிவித்து அனுப்பிவிட்டு, ஒரு நாழிகை கழித்துத் தாக்குதலைத் தொடங்கலாம்," என்றான் வானவன்.

வானவன் குரலில் ஒரு கரகரப்புத் தெரிந்தது. மிகவும் சிரமப்பட்டுப் பேசுவது போலவும் இருந்தது. அவன் யோசனை கூறியதும், வில்லவன் கோதை, "இளவரசே, வானவன் சொல்வதுபோல் செய்யலாம்" என்றார்.

இளவரசன் வில்லவனையும் வானவனையும் மாறி மாறிப் பார்த்தான். பிறகு, "இப்போதே கோட்டையைத் தாக்கினால், அது தகர்ந்து வழி விடுவதற்குள் இரவு வந்து விடும். உறங்கும் நேரத்தில் சேரர் படை ஒரு நகரத்துக் குள்ளே நுழைந்து போரிடுவது கயமை! அப்புறம் பழைய னுக்கும் பண்பாடு மிக்க நமக்கும் என்ன வேறுபாடு! அதனால் இப்போதே கோட்டையைத் தாக்க வேண்டாம்.

நாளைக் காலையில் போரிடலாம். கிழக்கு வாயிலில் அவன் படை வந்தால் அதை விரட்டியடித்து, அந்தக் கிழக்கு வாயில் வழியாகவே நாமும் உள்ளே புகுவோம். வல்லவரே, மோகூர் வீரனிடம் அவன் மன்னன் விருப்பப்படியே போர் தொடங்கட்டும் என்று கூறுங்கள்" என்று கட்டளையிட்டான்.

வில்லவன் கோதை விழித்தார். அவரும் வானவனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு, "இளவரசே, இன்னொருமுறை யோசனை செய்யுங்கள். புலியோடு புலிபோலப் போரிடுவதும், நரியோடு நரிபோலப் போரிடுவதும் குற்றமல்ல. கயவனிடம் கண்ணியம் காட்டினால், முடிவில் நாம் ஏமாற நேரும்," என்றார் படைத் தலைவர்.

"இளவரசே, பழையனின் படை குன்றத்தூரில் எப்படி நுழைந்தது என்பதை நினைத்துப் பாருங்கள். ஏறத்தாழ இதே நேரத்தில் எந்த எச்சரிக்கையும் இன்றி நுழைந்தது. உயிருக்கு அஞ்சி ஓடிய குடிமக்களை, இருள் சூழ்ந்த பிறகும் கொன்று குவித்த கொடுஞ்செயலை நினைத்துப் பாருங்கள். குன்றத்தூர் இளவரசி இந்தக் கோட்டைக்குள் சிறையிருப்பதை நினைத்துப் பாருங்கள். மோகூர்க் கோட்டையை இப்போதே தாக்க உத்தரவிடுங்கள்."

வானவன் இப்படிச் சொன்னதும், இளவரசன் திடுக்கிட்டான். 'கோதையை நினைவுபடுத்தும் இந்த வானவன் யார்?' என்று யோசித்தான். 'சேரர் படை மோகூருக்கு வந்ததே விடுதலை செய்வதற்குத்தானே! இது யாவரும் அறிந்தவுண்மை. வானவன் இதைக் கூறுவதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது' என்று தானே தனது ஐயத்தை அகற்றிக்கொண்டான்.

என்றாலும் இளவரசன் தன் முடிவை மாற்றிக்கொள்ளவில்லை.

“கோதை இந்தக் கோட்டைக்குள்ளே இருப்பதால்தான்; நமது போர் முறையில் கண்ணியம் வேண்டும் என்று சொல்கிறேன். நமது அவசர முடிவு பழையனுக்கு ஆத்திரமூட்டி, அதனால் கோதைக்கு எந்தத் தீதும் நேரக் கூடாது என்பது என் எண்ணம். வில்லவரே, பழையன் அனுப்பிய வீரனிடம், நாளைக் காலையிலே போர் தொடங்கலாம், கிழக்கு வாயில் என்றில்லை, எந்த வாயில் வழியாக வேண்டுமானாலும் பழையன் வரலாம்; எத்தனை ஆயிரம் பேரை வேண்டுமானாலும் அழைத்து வரலாம். சந்திக்க நாம் தயார் என்னும் செய்தியைச் சொல்லியனுப்புங்கள்” என்று கூறிய இளவரசன், வானவன் பக்கம் திரும்பினான். “வானவா, நீ என் மெய்யைக் காப்பதில் கவனம் செலுத்து. என் போர் முறையைப் பற்றிக் கவலைப்படாதே. நீ போகலாம்” என்றான்.

வில்லவன் திகைப்புற்றவனாய், “இளவரசே...” என்று அழைத்து ஏதோ சொல்ல விரும்பினார். ஆனால் குட்டுவன் குறுக்கிட்டு, “வில்லவரே, என் முடிவை நான் மாற்றிக் கொள்ள மாட்டேன். என்றாவது நான் உங்கள் தலைமையில் போரிட நேர்ந்தால் உங்கள் முடிவை மாற்றிக்கொள்ளச் சொல்ல மாட்டேன்” என்றான்.

வில்லவன் மேலே பேசாமல் வெளியே சென்றார்.

வானவன், “இளவரசே, ஒரு வேண்டுகோள்! உங்கள் மெய்யைக் காப்பது பற்றித்தான்” என்றான்.

“சொல்” என்றான் இளவரசன்.

“இளவரசே, இருட்டிய பிறகு நீங்கள் உங்கள் இடத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். இன்றிரவு இந்தக் கூடாரத்தில் தங்க வேண்டாம்.”

“ஏன்?”

"மெய்காக்கும் என் தொழிலுணர்வு உங்களை இக் கூடாரத்தில் தங்கச் செய்ய வேண்டாம் என்கிறது. அதைச் சொற்களால் விளக்குவதில் பலனில்லை."

"வேறெங்கே தங்கச் சொல்கிறாய்?"

"படைத்தலைவருடன், அவர் கூடாரத்தில் தங்குங்கள்."

இளவரசன் சற்று நேரம் வானவனையே உற்றுப் பார்த்தான். பிறகு 'சரி' என்று ஒப்புக்கொண்டான். மறு நொடி வானவனும் வெளியே சென்றான்.

*　　　*　　　*

நள்ளிரவு!

ஓய்வில்லாமல் ஓட்டமும் நடையுமாக வந்த சேரர் படை கண்ணயர்ந்து உறங்கியது. காவல் பொறுப்பேற்ற வீரர்கள் மட்டும் ஆங்காங்கே விழிப்போடு சுற்றிக்கொண்டிருந் தார்கள்.

ஓரிடத்தில் வில்லவனும் வானவனும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"படைத்தலைவரே, இளவரசர் உங்கள் கூடாரத்துக்கு வந்துவிட்டாரல்லவா?"

"ஆமாம், அதைப் பார்த்த பிறகுதான் நான் வெளியே வந்தேன்."

"இளவரசர் பிடிவாதமாக மறுக்கவில்லை என்றால் இந்நேரம் நமது படை மோகூரை வென்றிருக்கும்" என்ற வாறு மோகூர்க் கோட்டைப் பக்கம் பார்வை செலுத்திய வானவன், "படைத்தலைவரே, அதோ அங்கே பாருங்கள்" என்றான்.

வில்லவன் கோதை வானவன் சுட்டிய இடத்தைப் பார்த்தார்.

இரவின் இருட்போர்வையிலும் மோகூர்க் கோட்டையின் வடிவம் தெரிந்தது மதில் மேலே... நட்சத்திரங்களா? தீப்பொறிகளா?

வில்லவன் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தார்.

மதில் மேல் தீப்பொறிகள் பல்கின. அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கார்த்திகை விளக்கீடு போல அவை நூற்றுக்கணக்கில் பெருகின. அவை தீப்பிழம்புகள். தீப்பந்தங்களைப் பற்றிக்கொண்டு நூற்றுக்கணக்கான வீரர்கள் மதில்மேல் அணிவகுத்து நிற்கிறார்களோ?

வில்லவன் விழி இமைக்கவில்லை.

மதிலில் தெரிந்த நூற்றுக்கணக்கான தீப்பிழம்புகள் விர்ரென்று எழுந்து, மேலே மேலே, மேலே சென்று, பின் கீழ்நோக்கி இறங்கிக் கொண்டிருந்தன.

"வில்லவா, பழையன் தன் கயமையைக் காட்டி விட்டான். தீப்பிழம்பு கொண்ட அம்புகளால், அயர்ந்து தூங்கும் நம் படையைத் தாக்குகிறான்" என்றபடி எழுந்தான் வானவன்.

ஒரு மெய்க்காப்பாளன் தன்னை 'வில்லவா' என்று ஒருமையில் அழைத்ததைப் பொருட்படுத்தாத வில்லவன் கோதை, வானத்தைப் பார்த்தபடியே "பழையன் கயவன்! கயவன்! கயவனே!" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே, தீப்பிழம்புகள் சேரர் படை நோக்கிக் கீழிறங்கித் தாக்கின.

"ஐயோ, நெருப்பு, நெருப்பு" என்ற அலறல் எழுந்தது.

"வில்லவா, ஓடி வா, நம் படையைக் காப்பதுடன் பழையனுக்குச் சரியான பாடம் கற்பிக்கவேண்டும்" என்று கூறியவாறு வானவன் முன்னே ஓட, வில்லவன் பின் தொடர்ந்து சென்றார்.

இதற்குள் மற்றொரு தீப்பிழம்பு வரிசை கோட்டை யிலிருந்து கிளம்பி, சேரர் படையைத் தாக்கியது.

கயவனான பழையன் நள்ளிரவு நேரத்தில் வில்வீரர் களைக் கொண்டு தீப்பிழம்பு கொண்ட அம்புகளைச் சரமாரியாக எறியச் செய்தான். அவை வரிசை வரிசையாகச் சேர வீரர்களைத் தாக்கியது. கூடாரங்களைக் கொளுத்தியது.

சேரர் படையில் கலவரம்! கவலைக் குரல்! வீரர்கள் அமைத்த கூடாரங்கள் தீப்பற்றி எரிந்தன! இளவரசனின் கூடாரம் எரிந்து கரிந்தது! வில்லவன் கோதையின் கூடாரமும் எரிந்து அழிந்தது.

அத்தியாயம் இருபத்திரண்டு

வஞ்சிக்கோ வந்தார்

இளவரசன் குட்டுவன், வில்லவன் கோதையின் கூடாரத்தில், படுத்திருந்தான். வில்லவன், "நமது படையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன். நீங்கள் உறங்குங்கள்" என்று கூறிவிட்டு வெளியேறிவிட்டார். குட்டுவன் நித்திரை கொள்ள முடியாமல் தவித்தான்.

போர் எனச் சொன்னால் பூரிக்கும் குட்டுவன் இந்தப் போரில் அவ்வளவு மனத்திருப்தியோடு ஈடுபடவில்லை. இது கோதைக்காக நடக்கும் போர். கோதை மீட்கப்பட்டவுடன் அவளை அவனுக்கு மணமுடிக்க அரசர் முயல்வார்; அதை எதிர்க்கவேண்டும். வெற்றி தந்தைக்கா? தனயனுக்கா?

குட்டுவன் நெட்டுயிர்த்தான்.

கொல்லிமலைச் செல்வியை அவன் காண்பதற்கு முன்னர், 'கோதையை மணந்துகொள்' என்று அரசர் கூறியிருந்தால் அதை மறுத்திருப்பானா? எவ்வளவு மகிழ்ச்சி யோடு வரவேற்றிருப்பான்! செல்வியை மலைக்காட்டில் கண்டதும், பின் வஞ்சி நகரில் சந்தித்ததும், இளங்கோ அடிகள் முன் உரையாடியதும் அவன் எதிர்பாராத செயல்கள்! ஊழின் பெருவலியால் நிகழ்ந்த செயல்கள்! 'செல்வியே என் காதலி! செல்வியே என் துணைவி! செல்வி இல்லாமல் வாழ்வில்லை' என்னும் உறுதி,

இளங்கோ அடிகள் முன்னே அவளிடம் பேசியபோது தான் தோன்றியது! உலகவாழ்வைத் துறந்த அடிகள் முன்னர் அவன் காதல் உறுதியானது விந்தையே! குணவாயிற் கோட்டத்திலிருந்து செல்வியுடன் சேர்ந்து நடந்து சென்றபோது, அவள் தன்னை ஏற்கிறாள் என்பதை அவளது விழி பேசிய மொழி மூலம் உறுதி செய்து கொண்டான். அப்போது அவன் காதலுக்குக் குறுக்கே கோதை நிற்பாள் என்று நினைக்கவே இல்லை.

'கோதை! அன்று மாலைகூடக் கோதையை நினைவு படுத்தினானே வானவன்! உண்மையில் யாரவன்? எங்கோ பார்த்த முகம், எப்போதோ கேட்ட குரல் என்று என் மனம் சொல்லுகிறதே!'

குட்டுவனின் சிந்தனைகள் வளர்ந்தன! அதனால் கண்வளர முடியாமல் எழுந்தான். கூடாரத்தை விட்டு வெளியே வந்தான்!

, படை வந்து தங்கிய போதிருந்த ஆரவாரம் முற்றிலும் அடங்கிவிட்டது.

"பழையன் செய்த தவறுக்காக, சேரவீரர்கள் உண்ணவும் உறங்கவும் நேரமின்றி ஓடிவர நேர்ந்தது. இவர்களை இந்த ஓய்வுக்கும் இடந்தராமல் மாலையே போரில் ஈடுபடுத்திக் கோட்டையைத் தாக்கச் சொன்னாரே வில்லவர்! வில்லவ ரைக் காட்டிலும் அழுத்தமாகச் சொன்னவன் வானவன்! வில்லவர் கூட என்னைக் காட்டிலும் வானவனுக்கு அதிக மதிப்புத் தருவதாகத் தோன்றியதே! மெய்க்காப்பாளனுக்கு அத்தகைய சிறப்பு எப்படி ஏற்பட்டது?"

குட்டுவன் தலையை இருபுறமும் அசைத்து, 'சே... இந்தப் போர் நினைவுகளைக் கொஞ்ச நேரமாவது மறக்க வேண்டும்' என்று எண்ணியபடி, படையின் பின்னே

சென்றான். கூடாரங்களையெல்லாம் கடந்தான். படையிறங்கிய களத்தையே விட்டு வெளியே வந்தான்.

'அடடா! என்ன அமைதி' என்று அனுபவித்தவாறு இன்னும் நடந்தான்! தொடர்ந்து நடந்தான்!

நடந்து கொண்டிருந்த குட்டுவன் சட்டென்று நின்றான். அவன் செவி ஏதோ ஓர் ஒலியைக் கேட்டதே! காலடி ஓசையும் நின்ற அமைதியிலே, அவன் கேட்டதாய் நினைத்த ஒலி மீண்டும் கேட்டது!

"இசை... யாழிசை... யாரோ யாழ் மீட்டுகிறார்கள்."

குட்டுவன் இசையொலி வந்த திசையில் வேகமாக நடந்தான்.

யாழின் தேனிசை தென்றலில் கலந்து அவன் செவியில் நுழைந்து தேகத்தையே அமிழ்தமாக்கியது.

குட்டுவனது நடையின் வேகம் குறைந்தது; நீரில் மிதக்கும் அன்னம் போல, காற்றில் மிதக்கும் இறகுபோல, அவன் அந்த இசை ஒலியில் மிதந்து செல்வதாகத் தோன்றியது.

குட்டுவனை யாழிசை ஒரு மாந்தோப்புக்கு அழைத்து வந்தது; இல்லை இழுத்து வந்தது; இல்லை, இல்லை, ஈர்த்து வந்தது.

மாந்தோப்பின் எல்லையிலே, தாழ வளர்ந்த மரக் கிளையிலே, மயிலாய் அமர்ந்த மங்கை ஒருத்தி மகரயாழைக் குயிலாய் மாற்றிக் கொண்டிருப்பதைக் கண்டான். மரத்தின் நிழல் முகத்தின் எழிலை மறைத்தது. அதனால் அவள் யார் என்பதை அறிய முடியவில்லை. யாழின் இசையோடு அவளும் பாடியிருந்தால், அவள் செல்வியா என்பதை அறிந்திருக்கலாம்!

“இறைவா! அவள் செல்வியாக இருக்க அருள் செய்.”

குட்டுவன் வேண்டிய நேரத்தில் யாழிசை நின்றது. யாழிசையினும் இனிய இசை எழுந்தது. “இளவரசே!”

‘இந்தக் குரல், என் செல்வியின் குரல்தான்.’ இனம் கண்டுகொண்ட இளவரசன், “செல்வி” என்றழைத்தவாறு முன்னேற, யாழினை ஒரு கையிலேந்தி, கிளையிலிருந்து இறங்கி இளவரசனை நோக்கி வந்தாள், இசையரசி செல்வி.

மரத்தின் நிழலிலிருந்து நிலவின் ஒளி படும்படி வெளி வந்த செல்வியைக் கண்டதும் அறிவு மங்க, அகக்காதல் பொங்க, “செல்வீ...” என அழைத்தவாறு குட்டுவன் ஓடிச் சென்று அவளை இருகையாலும் அணைத்து இறுகத் தழுவிக்கொண்டான். செல்வியின் ஒரு கை யாழை மென்மையாகப் பற்ற, மறு கையால் குட்டுவனை வன்மை யாக அணைத்துத் தன் காதல் திண்மையை வெளிப்படுத்தி னாள். வெள்ளத்தினோடு வெள்ளம் கலந்தாற்போல், காற்றினோடு கானம் கலந்தாற்போல், செம்புலமண்ணும் விண்தருமழையும் சேர்ந்து கலந்தாற்போல் சேரர் செல்வ னும், இசைச் செல்வியும் அணைந்தனர்! இணைந்தனர்! பிணைந்தனர்!

எவ்வளவு நேரம் இப்படி இருந்தனர்!

சில நொடிகளா? சில நாழிகைகளா?

சில நொடிகள்தாம்! பல யுகங்கள் உயிர்வாழ்வதன் பலனை, அந்தச் சில நொடிகளில் பெற்றனர், இருவரும்!

குட்டுவன் விரல்கள் பட்டு யாழின் நரம்புகள் அதிர்ந்தன! செல்வி உடனே உணர்வு பெற்று, கொம்பைச் சுற்றிய கொடியை விடுவிப்பதுபோல, சேரனிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டாள்.

"நான் செல்வியை நினைத்து ஏங்கியது போல அவளும் ஏங்கியிருக்கிறாள்" என்பதை அவள் அணைப்பிலே அறிந்து மகிழ்ந்தான், குட்டுவன்.

மதுரையிலிருந்து திரும்பும் குன்றக் குமரனின் கலைஞர் குழு அன்றிரவுப் பொழுதைக் கழிக்க அங்கே தங்கியது. மற்றவர்கள் உறங்கச் செல்வி சேரனை நினைத்து, உறக்கம் வராமல் தவித்து, மனத்துயரை யாழிசையில் வடித்துக் கொண்டிருந்ததைச் சொன்னாள்.

"இளவரசே, அரசரின் பிறந்த நாள் விழாவில் தங்களைக் காணாமல் கவலையுற்றேன். அன்றே மதுரைக்கு எங்களை அனுப்பிவிட்டார் சேரவேந்தர். அந்த எதிர்பாராத பிரிவு, நான் உங்களிடம் கொண்ட அன்புப் பொறியை, அண்டத்தையே அழிக்கவல்ல அனற்பிழம்பாக மாற்றி விட்டது! செங்குட்டுவர் என்னையும் தந்தையையும் உடனே அனுப்பியது என்னையும் உங்களையும் பிரிக்கச் செய்த சூழ்ச்சியோ என்று கூட என் மனம் ஐயுற்றது."

செல்வி கூறினாள்.

"செல்வி! உன் அறிவு சீரியது. அதனால் அரசர் சூழ்ச்சியை உய்த்துணர முடிந்தது! இனி என்னையும் உன்னையும் எதுவுமே பிரிக்க முடியாது! சேரர், சோழர், செழியர், இன்னும் உள்ள எண்ணற்ற குறுநில வேந்தர், ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்தாலும் நம்மைப் பிரிக்க முடியாது! இது உண்மை! உறுதி!"

இளவரசன் செல்வியின் மலர்க்கையைப் பற்றிச் சூளுரைப்பது போலச் சொன்னான்.

"நீங்கள் சொல்வதைக் கேட்டால், நம்மைப் பிரிக்கப் பெரும் முயற்சி நடக்கிறது என்பது தெரிகிறதே."

"ஆமாம் செல்வி! அதைச் சொல்கிறேன்! நான் இங்கே எப்படி வந்தேன் என்பதையும் சொல்கிறேன்" என்ற இளவரசன், இரண்டையுமே எவ்வளவு சுருக்கமாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு சுருக்கமாகக் கூறினான்.

"செல்வி, இளங்கோ அடிகளிடம் என் காதலைச் சொன்னேன். அவர் குறை கூறவில்லை. அவர் நம் காதலை ஆதரிக்கிறார் என்பது உறுதி. அடிகளின் ஆசியிருக்கும் போது நீயும் நானும் எதற்கும் எப்போதும் எள்ளளவும் அஞ்ச வேண்டியதில்லை."

குட்டுவனின் இக்கூற்றே செல்வியின் சஞ்சலத்தை மாற்றியது. "அடிகள் ஆசி பயன்தரும் மாமருந்து! இளவரசே, என் மனம் கலங்காது" என்று கூறினாள், செல்வி.

இருவரும் பேச்சை நிறுத்தியதால், அமைதி நிலவியது. அது நீடிக்கவில்லை.

சேரர் படையிருந்த திசையிலிருந்து திடீரென்று ஏதோ பேரொலி கேட்டது!

குட்டுவன் தான் வந்த திசையைப் பார்த்தான்! வானத்தில் விண்மீன்கள் நூற்றுக்கணக்கில் வீழ்வது போன்ற காட்சியைக் கண்டு, திடீரென எழுந்த சத்தம் மேலும் பெருகுவதைக் கேட்டுத் திடுக்கிட்டான்.

"செல்வி, படையில் ஏதோ குழப்பம்! நான் உடனே செல்லவேண்டும். என்ன நடந்தாலும் சரி, நான் திரும்பி வரும்வரை நீயும் உன் குழுவினரும் இதே மாந்தோப்பிலேயே இருக்கவேண்டும்" என்று கூறிவிட்டு இளவரசன் அங்கிருந்து புறப்பட்டான்.

மோகூர்க் கோட்டையிலிருந்து தீப்பிழம்பு கொண்ட நூற்றுக்கணக்கான அம்புகள், சேரர் படையில் திடீர்க் கலவரத்தை உண்டுபண்ணின. கூடாரங்கள் எரிந்தன! யானைகளும் குதிரைகளும் மிரண்டன! வீரர்கள் அரற்றினர்!

வானவனும் வில்லவன் கோதையும் முதலில், இளவரசன் தங்கிய வில்லவனின் கூடாரத்தை நோக்கி ஓடினர். எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்து, கரிந்து போன பொருள்களைக் கலைத்து, உள்ளே இளவரசன் இருக்கிறானா என்று பார்த்தனர். இளவரசன் எரிந்த கூடாரத்தில் சிக்கவில்லை. கூடாரம் தீப்பற்றி எரியத் தொடங்கியபோதோ, அதற்கு முன்னரோ அவன் அங்கிருந்து சென்றிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட பிறகுதான், இருவரும், படையைக் கவனித்தனர்.

களைப்பினால் விளைந்த ஆழ்ந்த உறக்கம் திடீரென்று கலைந்ததனால், தூக்கக் கலக்கம் கலையாத நிலையில் படையில் ஆங்காங்கே தீப்பற்றி எரியும் காட்சியையும் கண்டதால் கட்டுப்பாடு மிகுந்த சேரர் படையினர் ஒழுங்கு முறையற்று இங்குமங்குமாக ஓடிக் குழப்பத்தை அதிகரித்தனர்.

"வில்லவா, இந்த வீரர்களை உடனடியாக ஒரு நிலைக்குக் கொண்டுவராவிட்டால், நம் விரலே நம் விழியைக் குத்துவது போல நம் வீரர்களே நம் வீரர் களை நசுக்கி மிதித்துக் கொன்றுவிடுவார்கள் போலிருக் கிறதே."— வானவன் வருத்தத்தோடு உரைத்தான்.

"நம் வீரர்களை ஒரு நிலைக்குக் கொண்டுவரும் தாரக மந்திரம் எனக்குத் தெரியும்! மெய்க்காப்பாளரே, உங்கள் மெய்யான பெயரை ஒருதரம் உச்சரித்தால் போதும், மதம் கொண்ட சேரநாட்டு வேழம்கூட மதி பெற்று உங்கள் அடி

பணியும்! இனியும் தாமதிப்பது ஆபத்து! தாரக மந்திரத்தை முழங்கட்டுமா?"

வில்லவன் கோதை கேட்டார். விழியைச் சுற்ற விட்டு வீரர்களின் நிலையைக் கண்ட வானவன் வேறு வழியில்லை என்பதை அறிந்தான் போலும்! ஒரு நொடி தாமதத்திற்குப் பின் தலையசைத்து அனுமதியளித்தான்.

வில்லவன் கோதை, உடனே அருகேயிருந்த தன் குதிரையில் தாவினார்; அதன் முதுகில் ஏறி நின்றார். பழக்கப்பட்ட குதிரை, பதுமையாய் நின்றது. வில்லவன் கோதை தொண்டை கிழியக் கத்தினார்.

"சேரவேந்தர் செங்குட்டுவன் வந்துவிட்டார்... செங்குட்டுவன் வந்துவிட்டார்... செங்குட்டுவன்..."

கோதையின் குரல் தொடர்ந்து ஒலிக்க, அருகேயிருந்த வீரர்கள், அதைக்கேட்டு நின்றனர். கோதையிருந்த திசையிலே விழியைத் துழாவவிட்டுச் செங்குட்டுவனைத் தேடினர்.

இதற்குள் மற்றொரு குதிரையில் ஏறியமர்ந்துகொண்ட வானவன், "சேரநாட்டு வீரர்காள்!" என்று குரல் கொடுத்தான்! தவறு! இனியும் இப்படி எழுதக்கூடாது! வானவன் தான் வஞ்சியின் வேந்தர் செங்குட்டுவன்! அதனால் உரிய மதிப்பை உடனே வழங்கவேண்டுமே! "சேரநாட்டு வீரர்காள்!" என்று குரல் கொடுத்தார், வானவன் வடிவிலே நின்ற செங்குட்டுவன்.

அந்தக் குரலில் கரகரப்பு இல்லை.

அது இடியின் முழக்கமாய் ஒலித்தது!

பகைவனைக் கூடப் பணிவிக்கும் அந்த வீரக் குரல், சேரக் குரல்தான். செங்குட்டுவன் குரல்தான்! இதை அறிந்த சில வீரர்கள், "சேரர்கோ வாழ்க! செங்குட்டுவர் வாழ்க!" என்று உவகையோடு குரல் கொடுத்தனர்.

"கடம்பரை வென்ற காவலர் வந்துவிட்டார்! கவலை விடுங்கள் வீரர்களே" என்று முழங்கினர், சிலர்.

இந்த முழக்கம் தொலைவில் இருந்த வீரர்கள் செவியிலும் விழுந்தது! உடனே அச்சம் அகன்றவர்களாய், சேர வேந்தர் நின்ற திசை நோக்கி நகர்ந்தனர்.

வில்லவன் கோதை இதற்குள் தம் குதிரையை வேறு பகுதிகளில் செலுத்தி, "வஞ்சிக்கோ வந்துவிட்டார்! பழையனின் வஞ்சம் இனி பலிக்காது" என்று முழங்கினார்.

பதற்றம் மறைந்து, படைவீரர்க்குரிய ஒழுக்கம் நிறைந்தது. அப்போதும் மோகூர் வீரர்களின் தீயம்புகள் வந்தன. ஆனாலும் வீரர்கள் ஓடவில்லை; ஓலமிடவில்லை!

இதற்குள் செங்குட்டுவனின் உடையையும் மணிமுடியையும் அவரிடம் கொணர்ந்து கொடுத்தான், ஒற்றர் தலைவன் அம்பலவாணன். வானவன், வடிவத்தாலும் சேர மன்னரானார். குதிரையை விட்டுவிட்டு அம்பலவாணனின் ஏற்பாட்டின்படி அங்கே வரவழைக்கப்பட்ட வேழத்தின் மேலே ஏறியமர்ந்தார்.

படை வீரர்களில் பெரும் பகுதியினர், வேழத்தின் மீது வீற்றிருக்கும் வேந்தரைக் கண்டு ஆரவாரித்தனர்.

"வீரர்களே, அவரவர்களுக்குரிய படைப் பகுதியில் சேருங்கள்! இரவு விடிவதற்குள் பழையன் அழிவான்! மோகூர் அழியும். உங்களை நோக்கி வரும் தீயம்புகளைக் கையால் பற்றிக் காலின் கீழ்போட்டு மிதியுங்கள்! அது நம் உடலைச் சுடலாம்! உள்ளத்தைச் சுடுமா? ஊக்கத்தைச் சுடுமா?"

செங்குட்டுவனின் உரை, வீரர்களுக்குப் புத்துணர்ச்சியைத் தர, அவர்கள் தத்தம் அணிகளுக்கு அமைதியாக நகர்ந்து சென்றனர். இடையே விழுந்த தீயம்புகளைச்

சீற்றத்தோடு பற்றியபோது, அவற்றின் வெம்மையை அவர்கள் உணரவில்லை. படை பழைய நிலைக்கு விரைந்து திரும்பிக்கொண்டிருந்தது.

"வில்லவா! நம் வில்படை அணிவகுத்து நிற்கட்டும். ஒரு தீயம்புக்குப் பதில் பத்து அம்புகள் என்னும் விகிதத்தில் கோட்டையை நோக்கி அம்பு மழை பொழியச் செய்! கோட்டையின் நான்கு வாயில்களையும் வேழப்படை தாக்கட்டும்! காலாட்படையினர் ஒரு பக்க மதிலை இடித்துத் தீர்க்கட்டும்! இரவுக்குள்ளேயே மோகூர் அழிய வேண்டும்!"

செங்குட்டுவன் கட்டளையிட்ட மறுநாழிகையில் சேரரின் எழுகடற் சேனை மோகூர்க் கோட்டையை நான்கு புறமும் தாக்கியது! நான்கு வாயில் வழியாகவும் வீரர் வெள்ளம், கங்கையைப் போல், காவிரி போல் நுழைந்து மோகூரை மூழ்கடித்தது.

அத்தியாயம் இருபத்து மூன்று

பழையனின் அழிவு

கதிரவன் குணதிசையில் எழுந்து, உலகம் ஒளிபெற்ற போது, மோகூர் மக்களின் வாழ்வு இருண்டுவிட்டது!

சேரநாட்டு வீரர்படை எதிர்த்தவரை மட்டும் கொன்றது; எதிர்க்காமல் ஓடியவர்களை, ஒளிந்தவர்களைச் சிறைப் படுத்தியது. குடிமக்கள் அனைவரையும், பெண்டிர், பிள்ளைகள் உட்பட அனைவரையும் கைது செய்தது.

மோகூரில் ஆங்காங்கே பிணக்குன்றுகள் எழுந்தன; குருதிக் குளங்கள் அமைந்தன. பெருமழையால் மோகூரின் பூமி நனைவது போலப் பழையன் வீரர்களின் குருதியால் நிலம் செம்புலமானது.

நள்ளிரவில் எறிந்த தீயம்புகளால், சேரர் படையில் கலவரம் எழுந்ததை அறிந்து, அதைக் கண்டுகளிக்கக் கோட்டைக்கு வந்த பழையன், அரண்மனைக்குத் திரும்பும் முன்னரே சேர வீரர்களிடம் சிக்கிவிட்டான். விறல்வேங்கையும் அருளாளரும் கோட்டை வாயிலில் நடந்த போரிலே உயிரிழந்தனர்.

மோகூர் முழுவதும் சேரர் வசமானது.

செங்குட்டுவன் தேரிலேறி நேரே பழையனின் அரண்மனைக்குச் சென்றான். கோதையிருக்கும் அறைக்குள்

நுழைந்தான். "அறுகை புதல்வி! அன்புக் கோதாய்!" என்றழைத்தபடி அவளை அணுகினான்.

"அரசே, நீங்கள் வருவீர்கள், வந்து எனக்கு விடுதலை தருவீர்கள் என்பது எனக்குத் தெரியும்" என்று பூரிப்புப் பொங்கித் ததும்பக் கூறினாள், கோதை.

இன்னும் அவள் விழி மூடியே இருந்தது.

"கோதை, ஏனம்மா கண்ணை மூடிக்கொண்டிருக் கிறாய்? உன்னை மீட்பதற்கு இத்தனை நாள் கழித்து வந்ததால் என்னைப் பார்க்க விரும்பாமல் விழியை மூடிக் கொண்டாயா?"– செங்குட்டுவன் கேட்டார்.

'இல்லை' என்ற கோதை தான் விழி மூடிய வரலாற் றைச் சொன்னாள். "அரசே, விழி திறக்கும் போது முதலில் அந்தப் பாதகப் பழையன் கைதியாக நிற்பதை அல்லது பிணமாகக் கிடப்பதைப் பார்க்க விரும்புகிறேன்" என்றாள்.

செங்குட்டுவன் உடனே அருகேயிருந்த வீரர்களிடம் ஆணை பிறப்பித்தான். கொஞ்ச நேரத்தில், சிறைப்பட்ட பழையன், கைகள் பின்னே பிணைத்த நிலையில், கால்களில் இரும்புத்தளை சுமையாகக் கிடக்க, அங்கே வரவழைக்கப்பட்டான்.

"கோதை, நீ விழிமூடக் காரணமான மூடனைப் பார்" என்ற அரசர், தம் கரங்களால் பழையனை முன்னே தள்ளி விட்டார். காற்சங்கிலியால் விரைந்து முன்னே செல்ல முடியாமல், இடறிய பழையன் தடாரென்று கீழே விழுந்த போது அவனது முடி, கோதையின் திருவடியைத் தொட்டது.

கோதையின் கோலமுகத்தில் நீலமலர்கள் விரிந்தாற் போல விழிகள் திறந்தன. தன் காலில் பணிபவனைப் போல விழுந்து கிடக்கும் பழையனைப் பார்த்தாள்.

விழிமலர்ந்த நிலையில் எவளுடைய திருமுகத்தைக் காணவேண்டும் என்று ஏங்கித் தவித்தானோ, அவள் அலர்ந்த கண்களோடு அவனைப் பார்த்தாள். ஆனால் பழையன் அவமானம் மீதூர அவளைப் பார்க்க நாணிப் பார்வையை வேறு திசைக்கு மாற்றினான்.

"பழையா, உன்னைப் பார்க்க மறுக்கும் என் கண்களைத் தோண்டிக் குருடாக்கி, கூந்தலை மழித்து மொட்டைத் தலையாக்கிக் கரும்புள்ளி, செம்புள்ளி குத்திக் கழுதைமேல் ஏற்றி, செங்குட்டுவருக்கு அவரது தோல்வியைப் பரிசாக அளிக்கப் போகிறேன் என்றாயே! பார்த்தாயா உன் நிலையை! ஒரு பெண்ணின் காலடியில் வீழ்ந்து கிடக்கிறாய்" என்றாள், கோதை.

கோதையின் சொற்கள் கேட்டு வஞ்சியர் கோமான் கொதித்தார்.

"உன்னைக் குருடாக்கி, உன் கூந்தலை மழித்து மொட்டையடிப்பதாகவா இந்தக் கயவன் சொன்னான். அடேய், பழையா, உன் அரண்மனை மகளிர் அத்தனைபேர் கண்களையும் பறித்துக் கூந்தலை மழித்து, நீ சொன்ன அலங்காரங்களைச் செய்வதை உன் கண்களாலேயே பார்."

செங்குட்டுவரின் சினமொழி கேட்டுக் கோதையும் நடுங்கினாள். "அரசே, இக்கயவனின் பிழைக்காக அரண் மனை மகளிரைக் குருடாக்குவதோ, கூந்தலை மழிப்பதோ வேண்டாம்" என்று வேண்டினாள்.

"கோதை, பண்பற்ற மன்னனின் ஆட்சியின் கீழ் வாழும் மக்கள் இத்தகைய தண்டனைகளை ஏற்பது தவிர்க்க முடியாதது. உன் கருணையுள்ளத்தின் வேண்டுகோளால்,

அரண்மனை மகளிரின் கண்களைக் குருடாக்காமல் விடுகிறேன். மற்றச் செயல்களை நிறுத்தமாட்டேன்.”

செங்குட்டுவன் உறுதியாய்க் கூறினார்.

பழையனுக்குத் திருமணமாகவில்லை. ஆனால் அவன் குடும்பத்தைச் சார்ந்த அரசமகளிர் மிகப் பலர் இருந்தனர். சேரனின் ஆணையின்படி அம்மகளிர் அனைவருடைய கருமேகம் போன்ற கூந்தலை, களிமயிலின் தோகை போன்ற கூந்தலை மழித்து மொட்டையடித்தனர். மகளிரின் முகத் திலும் மொட்டைத் தலையிலும் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தினர். அவர்களைக் கழுதை மேல் ஏற்றிப் பவனி வரச் செய்தனர். இத்தனை செயல்களையும் பழையன் பார்க்குமாறு செய்தார், செங்குட்டுவன்.

அரச மகளிரின் கூந்தல் வைக்கோற் போராய்க் குவிந் திருந்ததைக் கண்டார், வஞ்சி வேந்தர். அதே நேரத்தில் அரண்மனையின் முன் நின்ற, பல்நூறு ஆண்டுகள் பழமை மிக்க வேப்பமரத்தையும் கண்டார். வேம்பு பழையனின் காவல் மரம்!

சினம் மாறாத செங்குட்டுவன், “இந்தக் காவல் மரத்தை வெட்டுங்கள். இது பழமையான மரம்! முரசு செய்வதற்கு ஏற்றது. அதனால் பழையனின் பட்டத்து யானையைக் கொண்டே இதை இழுத்துவரச் செய்து, வஞ்சிக்கு எடுத்துச் செல்லுங்கள். மரத்தைக் கட்டி இழுக்கக் கயிறு தேவை! வீரர்களே, பழையன் மகளிரது கூந்தலைக் கயிறாகத் திரித்துப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்” என்று உத்தர விட்டார்.

பழையன் மகளிருடைய கூந்தலைத் திரித்துப் பெரும் வடமாக்கினர்; காவல் மரமான வேம்பினை வெட்டினர். அதைக் கூந்தல் கயிற்றால் கட்டி, அதைப் பழையனின்

பட்டத்து யானை இழுத்துச் செல்லச் செய்தனர்.* அதைக் கண்டு பழையனின் இதயம் வெடிப்பது போலத் துடிக்க, செங்குட்டுவன் மகிழ்ச்சிப் பெருக்கால் வெடிச்சிரிப்புச் சிரித்தார்.

"வீரர்களே, காவல் மரத்தைக் கட்டியிழுக்கும் பழைய னின் பட்டத்து யானைக்குப் பலியிட வேண்டாமோ? பழையனை அதன் முன் தள்ளுங்கள்" என்றார், சேரமன்னர்.

பழையனை உடனே வேம்பை இழுத்து வரும் வேழத்தின் முன்னே தள்ளினர்.

மோகூர் தந்த செல்வத்தால் செருக்குற்று, செருக்கால் சீரிழந்த பழையன், தோற்ற கணத்திலிருந்து அதுவரை ஒரு சொல்லும் சொல்லாமல், பிணமாய் உலவிய பழையன் அவனது பட்டத்து யானையின் பாதத்தின் கீழ் விழுந்தான். வேழம் மிதிக்க, ஆணவத்தால் கனத்த அவன் தலை கூழானது!

"வில்லவா, மோகூர் நகரத்தை இடித்துப் பாழாக்கு! இந்த நகரத்தின் செல்வத்தையெல்லாம், ஒன்றுவிடாமல் கைப்பற்று! அவற்றைச் சிறைப்பட்ட மக்களும் வீரர்களும் சுமக்கச் செய்து குன்றத்தூருக்கு எடுத்துச் செல். இந்த நகரத்தின் செல்வத்தைச் செலவிட்டு, சிதைந்த குன்றத் தூரைச் சிறப்புமிக்க நகரமாகப் புதுப்பிக்க வேண்டும். அந்தப் பணியை மோகூரினரே செய்யவேண்டும்! மோகூரினரால்

---

* பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழிந்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தல் முரற்சியால்
குஞ்சர ஒழுகை பூட்டி...

— *ஐந்தாம் பத்தின் பதிகம்— பதிற்றுப் பத்து*

அழிந்த குன்றத்தூர் மோகூர்ச் செல்வத்தின் துணையால், மோகூர் மக்களின் உழைப்பால் எழுந்து நிற்கவேண்டும். ஆடவர், பெண்டிர் அத்தனைபேரும் புதிய குன்றத்தூரின் நிர்மாணப் பணியில் ஈடுபட வேண்டும். இதற்குத் தேவை யான அளவு நம் வீரர்களை அழைத்துக்கொள். குன்றத் தூரை வஞ்சிநகர் போல மாடமாளிகைகளும் கூடகோபுரங் களும் கொண்ட மாநகராக மாற்றிய பின்பே திரும்ப வேண்டும்.''

சேரர் படையில் காற்பகுதியினரை வில்லவன் தம் பணிக்கு நிறுத்திக்கொள்ள, மீதிப்படையுடன் செங்குட்டுவன் வஞ்சினம் முடித்து வாகை சூடிய களிப்போடு வஞ்சிநகர் நோக்கிப் புறப்பட்டார்.

புறப்படுவதற்கு முன்பு கோதை தன் தந்தையைப்பற்றிக் கேட்டாள்.

“அறுகையை அழைத்துவர ஆட்களை அனுப்பியிருக் கிறேன். அவர் நேரே வஞ்சிக்கு வந்துவிடுவார்'' என்றார், அரசர்.

கோதை சிறிதுநேரம் பேசாமலிருந்தாள். பின்னர் “இளவரசர் படையுடன் வந்ததாகப் பேசிக்கொண் டார்களே...'' என்று கூறினாள்.

“ஆம் கோதை, உன்னை விடுவிக்கும் படைக்குக் குட்டுவனையே படைத்தலைவனாக்கி அனுப்பி வைத்தேன். பழையன் வஞ்சகன் என்பதால், நானும் உடன் புறப்பட்டு வந்தேன். குட்டுவன் புலிகளை எதிர்த்துப் போரிடும் புலி! நரிகளுடன் எப்படிப் போரிடுவது என்னும் கலை இன்னும் கைவரப் பெறாதவன். அதனால் நான் தலைமைப் பொறுப்பை ஏற்றேன். குட்டுவன் வஞ்சிக்குச் சென்று விட்டான்.''

செங்குட்டுவன் சொன்னார். அவர் சொல்லும் போதும் அவர் மடியில், மோகூர்க் கோட்டை வீழ்ந்த இரவில் குட்டுவன் அனுப்பிய ஓலையிருந்தது.

செல்வியிடம் விடைபெற்ற குட்டுவன் படைக்களத்தை அடையும்போது, "செங்குட்டுவர் வந்துவிட்டார்" என்று வில்லவன் முழக்குவதையும், அருகே ஒரு குதிரையில் வானவன் வீற்றிருப்பதையும், கொஞ்ச தூரத்திலிருந்து பார்த்தான். வானவன் உண்மையில் செங்குட்டுவன் என்பதை உணர்ந்த குட்டுவன், 'இனி என் துணை சேரர் படைக்குத் தேவையில்லை' என்று நினைத்தான். அதனால் தான் வஞ்சிக்குச் செல்வதாக ஓர் ஓலையில் எழுதி, அதை வீரன் ஒருவன் மூலம் அரசர்க்கு அனுப்பிவிட்டு, செல்வி தங்கிய மாந்தோப்புக்குச் சென்றுவிட்டான். ஓலையைப் பெற்ற அரசர், போரின் நெருக்கடி வேளையிலும் அம்பல வாணனை அனுப்பி இளவரசனைக் கண்காணிக்க ஏற்பாடு செய்தார். அம்பலவாணன் இரவுக்கிரவே அலைந்து, இளவரசனைக் கண்டுபிடித்துவிட்டான். அவன் செல்வியின் குழுவினருடன் சேர்ந்து, வஞ்சிக்குச் செல்லும் செய்தியை அறிந்து வந்து அரசர்க்குச் சொன்னான்.

'வஞ்சிக்குத் திரும்பியதும் எனது முதல் வேலை, குட்டுவன் செல்வியை மறக்கச் செய்வது; அடுத்த வேலை அவன் கோதையை மணக்கச் செய்வது.'

செங்குட்டுவன் மனம் அதற்கான வழிவகைகளை ஆராய்வதில் ஈடுபட்டது.

அத்தியாயம் இருபத்துநான்கு

அருகன் அருள் காக்கும்

குணவாயிற் கோட்டத்தில் இளங்கோ அடிகள் முன்னே வீற்றிருந்தான், இளவரசன் குட்டுவன் சேரல்.

இளவரசனின் எழில் வதனம் வாடியிருந்தது.

அடிகள் கருணை விழியை அவன்மேல் பதித்து, "குட்டுவா, மௌனமாக இருப்பதற்காக நீ இங்கு வரவில்லை என்று நினைக்கிறேன்" என்றார்.

இளவரசன் அடிகளின் அருள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

'அன்பும் அருளும் ஒருருக் கொண்ட இந்த அடிகளும், எண்ணியதை முடிக்க எத்தகைய கொடுஞ்செயலையும் செய்யத் துணியும் அரசரும் ஒரு தாய் மக்களா? பாலும் நஞ்சும் ஒரே பசுவின் மடியிலிருந்து வருவதுண்டா? எட்டியும் பலாவும் ஒரே மரத்தில் காய்ப்பதுண்டா?'

இளவரசனின் சிந்தனை அவன் முகத்தின் வேதனையை அதிகமாக்கியது.

"குட்டுவா, நீ கோதையை மணப்பதற்குச் சம்மதித்து விட்டாயாமே! இரு நாழிகைக்கு முன்னே என்னைக் காண வந்த அமைச்சர் அழும்பில் வேள் சொன்னார்."

அடிகள் சொன்னதைக் கேட்டதுமே, அணையுடைந்த வெள்ளமாய் அவனது துக்கம் வெடித்து வெளியே பாய்ந்தது. "அடிகளே, அடிகளே" என்று அலறியவாறு அடிகளின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு கண்ணீர் வடித்தான்.

மனத்தில் அடங்கி வருத்தும் துயரம் கொஞ்சம் வடியட்டும் என்று நினைப்பவர் போல அடிகள் சிறிது நேரம் அவன் கதறுவதை, கண்ணீர் வடிப்பதை அமைதி யாகப் பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு இரு கையாலும் அவனை எழுப்பி முன்போல இருக்கையில் அமரச் செய்தார்.

"குட்டுவா, என்ன நடந்தது என்பதைச் சொல்" என்று அடிகள் அருள, குட்டுவன் அன்று காலை நடந்த நிகழ்ச்சியை எடுத்துரைத்தான்.

வாகை வீரராகச் சேரவேந்தர் வஞ்சியை அடைந்த மறுநாள் காலையே தம் அறைக்கு வருமாறு இளவரசனுக்குச் சொல்லியனுப்பினார்.

தந்தையிடம் தன் காதலை அறிவித்துச் செல்வியை மணப்பது உறுதி என்பதைத் தெரிவித்துவிட வேண்டும் என்னும் திடமுடிவோடு குட்டுவன் செங்குட்டுவனைச் சந்தித்தான்.

"குட்டுவா, கோதையை மீட்டு வந்துவிட்டேன். அவளுக்கும் உனக்கும் திருமணம் என்பதை முன்னரே உனக்கு அறிவித்திருக்கிறேன். இத்திங்களுக்குள்ளே திருமணம் நடைபெறும்."

"தந்தையே..." என அழைத்த குட்டுவன் மேலே தொடரும் முன், மன்னரே பேசினார்.

"நீ பாணர் குலத்துப் பெண் செல்வியை விரும்புவதாக அறிகிறேன். சேரநாட்டு அரியணையில் ஒரு பாணர் குலப் பெண்ணுக்கு இடமில்லை. அதனால் நீ செல்வியை மணக்க முடியாது."

"தந்தையே! செல்வி சேரநாட்டு அரியணையில் அமரக்கூடாதென்றால், எனக்கு அரியணையே தேவை யில்லை. அரச வாழ்வை, அரியணையை நான் இக்கணமே துறக்கிறேன்."

"மகனே, என் தந்தைக்கு இருப்பதைப் போல எனக்கும் மைந்தர் பலர் இருந்தால், அவர்களில் ஒருவன் அரியணை யைத் துறப்பதை அனுமதித்திருப்பேன். எனக்கு ஒரே மகன்தான். அதனால் உன் விருப்பப்படி அரியணையைத் துறக்கவும் அனுமதிக்கமாட்டேன். நீ என் விருப்பப்படி நடந்தேயாக வேண்டும்! செல்வியை மறந்து கோதையை மணந்து, எனக்குப் பின்னே சேர நாட்டின் அரியணையில் அமர்ந்து ஆட்சி செய்தேயாக வேண்டும்! இதிலிருந்து உனக்கு மீட்சியில்லை."

"தந்தையே, உங்கள் விருப்பப்படி நடக்க முடியாது! செல்வியை மறக்கவும் முடியாது! கோதையை மணக்கவும் முடியாது!"

"குட்டுவா, யாரிடம் பேசுகிறாய் என்பதை நினைவில் கொள். செங்குட்டுவன் நினைத்ததைச் செய்து முடிப்பான்! என் விருப்பத்தை உன்னால் மீற முடியாது."

"மீறினால்..."

குட்டுவன் கேட்டவுடனே செங்குட்டுவன் பதில் சொல்லவில்லை.

"மீறினால்..."

குட்டுவன் மீண்டும் கேட்டான்.

"குட்டுவா, கோதையை மணக்க மறுத்தால், அரியணையைத் துறக்க நினைத்தால், செல்வியை மறக்க மறுத்தால்... மறுகணமே இசையரசியான செல்வியின் நாக்குத் துண்டிக்கப்படும்."

"தந்தையே" என்று அலறினான், குட்டுவன்.

"தந்தையே, ஈதென்ன கொடுமை! அரக்கர்கள் கூட இப்படிச் செய்யமாட்டார்களே!"

"குட்டுவா, அரக்கர்கள் செய்வார்களா, செய்ய மாட்டார்களா என்ற ஆராய்ச்சியில் நான் இறங்க விரும்பவில்லை. இந்த அரசன் செய்வான் என்பதை மட்டும் உனக்கு அறிவிக்க விரும்புகிறேன். குணவாயிற் கோட்டத்துக்கு எதிரே குன்றக்குமரனின் குழுவினர் தங்கியிருக்கிறார்களல்லவா! அவர்கள் அனைவருமே என் கண்காணிப்பில் இருக்கிறார்கள். என் விருப்பப்படி நடக்க நீ மறுத்தால், செல்வியின் நா..."

அரசர் முடிக்கும் முன்னரே, "வேண்டாம் தந்தையே! அந்தக் கொடுஞ்சொல்லை மீண்டும் சொல்லாதீர்கள். செல்வியைக் கொல்வதினும் கொடியதான செயலை மீண்டும் என் செவியில் விழச் சொல்லாதீர்கள். உங்கள் விருப்பப்படி நடக்கிறேன்! கோதையை மணக்கச் சொன்னாலும் ஒரு கோட்டானை மணக்கச் சொன்னாலும் நான் சித்தமாயிருக்கிறேன்" என்று கூறினான் இளவரசன்.

செங்குட்டுவன் முகத்திலே வெற்றிப் புன்னகை மிளிர்ந்தது!

"தந்தையே, உங்கள் விருப்பம் எதுவானாலும் அதன்படி நடப்பேன். இதில் ஐயமில்லை. அதனால் அவசரப்பட்டு..." குட்டுவன் நா நடுங்கச் சொன்னான்.

"அஞ்சாதே, குட்டுவா! நீ சம்மதித்த பிறகு, உன் செல்விக்குத் தீங்கு நேராது."

அரசரின் சொற்களைக் கேட்டு ஒருவகை ஆறுதலோடு இளவரசன் சென்றான்.

அப்போதே அரசர் குட்டுவன் கோதை திருமணத்தை அரசவைக்கு அறிவித்து விட்டார்.

இளவரசன் அடிகளுக்கு இந்தச் செய்தியைச் சொன்னான்.

"அடிகளே, செல்வியின் இசையைக் கேட்ட ஒருவரின் வாயிலிருந்து இத்தகைய கொடுஞ் சொற்கள் வருமா? செல்விக்கு அவர் இழைக்க நினைத்த கொடுஞ்செயலோடு ஒப்பிட்டால், மோகூரில் அவர் நடத்திய வெறிச் செயல்கள் மிகச் சாதாரணமானவை. அடிகளே, செல்வியை மணக்க முடியாது என்பதை அவளிடம் எப்படிச் சொல்வேன்?"

குட்டுவன் மீண்டும் தேம்பினான்.

இளங்கோ அடிகளின் கருணை முகத்திலும் சற்றுக் கடுமை நிலவியது.

"அடிகளே! நான் செல்வியை ஏமாற்றிவிட்டேன் என்பதை அறிந்தால், அவள் உயிர் நிலைக்குமா? ஏழேழு பிறவியிலும் கேட்க முடியாத கேட்டறியாத இசையை வழங்கும் செல்வியைக் காப்பாற்றுங்கள்! அடிகளே, என் காதலைக் காப்பாற்றுங்கள்! தமையனின் முக வாட்டத்தைக் கண்டே அகவாழ்வையும் அரசவாழ்வையும் துறந்த அண்ணலே! என்னைப் பாருங்கள்! என் வேதனையைத் தீருங்கள்! என் காதலியை மீட்டுத் தாருங்கள்!"

இளவரசன் அடிகளின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு அழுதான். அடிகளின் முகத்திலே படிந்த கடுமை

விலகியது! மென்னகை அரும்பியது. அவர் குட்டுவனை எடுத்து நிறுத்தினார்.

"குட்டுவா, உலக இன்பங்களைத் துறந்த என்னால் இசையின்பத்தைத் துறக்க முடியவில்லை. செல்வியின் இசை எனக்கு அருகனின் அருள்மொழி போல இன்பம் தரும். அந்த இசையரசியைப் புவியரசியாக்கும் பெறற்கரிய பேறு சேரநாடு பெறும் என்று நம்பினேன். அரசர், அரசராகவே இருக்கிறார்! மனிதராக, மகன் நலம் நாடும் தந்தையாக இருக்க மறுக்கிறார்! என்ன செய்வது? குட்டுவா, நீ அரசர் விருப்பப்படி நடப்பதாக வாக்களித்திருக்கிறாய், இல்லையா?"

அடிகள் வினாவினார்.

"ஆம்! அடிகளே! மறுத்தால் என்ன நடக்கும் என்று கூறியிருக்கிறாரே, அதற்குப் பின்னும் மறுக்க முடியுமா?"

"முடியாதுதான்!"

"அடிகளே! மறுத்தால் அரசரால் செல்விக்குத் தீங்கு நேரும். கோதையை மணந்தால், அதனாலும் செல்வி வேதனையடைந்து உயிர் துறக்கக்கூடும். அடிகளே, எங்கள் இருவரையும் காப்பாற்றுங்கள்! இல்லையென்றால் இசை யரசியை மட்டுமாவது காப்பாற்றுங்கள்."

"அடிகளை வேண்டுவதற்குப் பதில் அருகனை வேண்டு. அவரே துன்பம் துடைப்பவர்! இன்பம் படைப்பவர்!"

"எனக்கு நீங்களே அருகன்! நீங்களே அறுமுகன்! நீங்களே அனைத்தும்! எங்களைக் காப்பாற்றுவதாக வாக்களியுங்கள்."

"அருகனின் அருள் காக்கும்."

அடிகளின் குரலில் உறுதி தொனிப்பதை உணர்ந்தான், குட்டுவன்.

"சென்று வா குட்டுவா."

குட்டுவன் அடிகளைப் பணிந்தபின் திரும்பி நடந்தான். வாயிலை நெருங்கும்போது— "குட்டுவா" என்றழைத்தார், அடிகள்.

குட்டுவன் நின்றான். திரும்பினான்.

"புலவர் பரணர் இப்போது அரண்மனையில்தானே இருக்கிறார்?"

"பரணர் விருந்தினர் மாளிகையில் இருக்கிறார் அடிகளே."

"குட்டுவா, பரணரைக் கண்டு, அவரை நான் இப்போதே காண விரும்புவதாகக் கூற முடியுமா?"

"கூறுகிறேன், அடிகளே."

அடிகள் மேலே ஒன்றும் பேசவில்லை. குட்டுவன் மீண்டும் அடிகளைப் பணிந்து வெளியேறினான்.

பற்றற்ற அடிகளின் உள்ளத்தில் ஒரு பற்றுப் பற்றிக் கொள்ள, அவர் பரணரின் வரவை எதிர்பார்த்து வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தார்.

அத்தியாயம் இருபத்தைந்து

பரணர் கேட்ட பரிசு

வஞ்சி அரண்மனையில் அன்று காலை அரசவை கூடுகிறது. வழக்கமான அரசியற் பணிகளுக்கான கூட்டமல்ல அது. சேரன் செங்குட்டுவன் ஒரே ஒரு சிறப்புப் பணிக்காகக் கூட்டும் கூட்டம். அந்தச் சிறப்புப் பணி என்ன? பாவலர் உலகம் போற்றும் பரணர் தாம் செங்குட்டுவனைச் சிறப்பித்துத் தொடுத்த பாமாலையை அரசர்க்குச் சூட்டப் போகிறார். அதற்காகக் கூட்டப்படுவதே அக்கூட்டம்.

சேரன் செங்குட்டுவனின் சிறப்புகளைப் பாடிப் புகழ் பெற்ற பாவலர்கள் மிகப் பலர். என்றாலும் பால் எல்லாம் பசும் பாலாகுமா? பாடலெல்லாம் பரணர் பாடலாகுமா? அதனால் செங்குட்டுவன் உள்ளத்திலே பரணர் தம்மைப் பாடவேண்டும் என்னும் வேட்கை விதை விழுந்து, எழுந்து, முளைத்துக் கிளைத்துப் பெரும் விருட்சமாகி நின்றது. பரணரை அரசர் அடிக்கடி சேரநாட்டுக்கு வரவழைத்தார். தம் பிறந்த நாளின்போது பரணர் எந்த நாட்டிலிருந்தாலும் சரி, அவரை வஞ்சிக்கு வரவழைத்துவிடுவார். ஏதேனும் போரில் வாகை சூடித் திரும்பினாலும் உடனே பரணரை வரவழைப்பார்.

புலவர் திலகமான பரணர் வந்தார், பன்முறை வந்தார். அரசவை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்; என்றாலும்

அரசரைப் பாடவில்லை. அந்த ஆண்டும் அரசர் தம் பிறந்த நாள் விழாவுக்குப் பரணரை வரவழைத்திருந்தார். புலவர்கள் பலர் பாக்களால் அரசரைப் பாராட்ட, பரணர் வெறுஞ்சொற்கள் சிலவற்றால் வாழ்த்திவிட்டு அமர்ந்தார். செங்குட்டுவன் ஏமாந்தார். அவரது ஏக்கம் இமயமாய் வளர்ந்தது. பரணரை உடனே ஊர் திரும்பவிடவில்லை.. தமிழ்ச் சங்க விழாவில் கலந்துகொள்ளப் பாண்டி நாட்டுக்குச் செல்லவேண்டிய பரணர் செங்குட்டுவனின் விருப்பப்படி வஞ்சியிலே தங்கினார்.

பரணர் நாளும் அரசவையில் கலந்துகொண்டார். நாளும் அரசரைக் கண்டார்; பேசினார். ஆனால் பாடிப் புகழவில்லை.

மோகூர்ப் பழையனை வென்று திரும்பிய அன்று வஞ்சி வாயிலில் அரசரை வரவேற்ற பலருள் புலவர்கள் சிலர் இருந்தனர். அவர்களில் ஒருவர் பரணர். பிற புலவர்கள் செங்குட்டுவனின் மோகூர் வெற்றியைப் பாக்களால் பாராட்ட, பரணர் அப்போதும் வெறும் வாக்கியத்தால் வாழ்த்தினார்.

சேரவேந்தர் சோர்ந்துவிட்டார்; பரணர் தம்மைப் பாடும் நாளே தம் வாழ்வின் பயன்மிகுந்த நாள் என்று எண்ணி, அந்த நன்னாள் எந்நாளோ என்று ஏங்கினார்.

நேற்றிரவு!

செங்குட்டுவன் துயிலச் சென்றுவிட்டார். அந்தத் தூக்கத்தைக் கலைக்கும் உரிமை யாருக்குமேயில்லை. இன்றியமையாத செய்தியிருந்தால், அமைச்சரோ, படைத் தலைவரோ அவரை எழுப்பலாம். ஆனால் இதுவரை அவரது துயிலைக் கலைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்ட தில்லை.

அந்த இரவு உறக்கத்தைக் கலைத்து மன்னர் எழுப்பப் பட்டபோது, அவர் அடைந்த வியப்புக்கு அளவில்லை. அறைக்கு வெளியே அமைச்சர் காத்திருக்கிறார் என்பதைக் கேட்டு அவசர அவசரமாக வந்தார். உட்பகை, வெளிப்பகை என்று எப்பகையுமற்ற சேரநாட்டில் நள்ளிரவு நெருங்கும் நேரத்தில் அரசரின் உறக்கத்தைக் கலைத்த செய்தி என்ன?

அரசர் அமைச்சரைப் பார்த்தார். அமைச்சரின் முகத்தில் மகிழ்ச்சி தவழ்ந்தது.

"பேரரசே, உங்களது பல்லாண்டு ஏக்கத்தைப் போக்கும் செய்தி கொண்டு வந்திருக்கிறேன். என்னையும், உறக்கத்தைக் கலைத்து எழுப்பிப் பரணர் பார்க்க விரும்புகிறார் என்று சொன்னார்கள். பார்வேந்தரினும் இந்தப் பாவேந்தர் சிறந்தவரல்லவா! அதனால் ஓடினேன். ஏடும் எழுத்தாணியு மாக வீற்றிருந்த பரணர், 'அமைச்சரே, செங்குட்டுவரை என் செந்தமிழ்ப் பாடல்களில் சிறைப்படுத்திக்கொண்டிருக் கிறேன். இரவுக்குள் பாடல்களை முடித்து விடுவேன். நாளைக் காலையே அரசவையில் இப்பாடல்களை அரங் கேற்ற விரும்புகிறேன் என்பதை அரசர்க்கு அறிவியுங்கள்' என்றார். அரசே, இந்த இனிக்கும் செய்தியைச் சொல் வதற்காக ஓடிவந்தேன்; உங்கள் உறக்கத்தையும் கலைத்தேன்" என்றார்.

செங்குட்டுவன் மகிழ்ச்சிக்கு எல்லையேது! அவர் உடனே தமது கழுத்திலிருந்த மணியாரத்தைக் கழற்றினார். "அமைச்சரே, இந்தத் தேமதுரச் செய்தி கொண்டுவந்த உங்களுக்கு என் பரிசு" என்று மணியாரத்தை வழங்கினார்.

"அமைச்சரே, நாளைக் காலையில் அரசவையைப் பரணர் பாடலின் அரங்கேற்றத்துக்காகவே கூட்டுங்கள். அனைவரும் உரிய நேரத்துக்கு முன்னதாகவே வரவேண்டும் என்று அறிவியுங்கள். இந்த இரவு நேரத்திலேயே ஒவ்வொரு

வரையும் எழுப்பி இந்த இனிய செய்தியைச் சொல்லுங்கள். அரசவையும் அரண்மனையும் விழாக்கோலம் பூண வேண்டும். ஊர் முழுதும் இந்தச் செய்தி தெரியவேண்டும். வஞ்சி நகரத்துப் புலவர்கள் அனைவருக்கும் அறிவிக்க வேண்டும். நாளைய அரசவைக்குப் பொதுமக்கள் யார் வேண்டுமானாலும் வரலாம் என்று சொல்லுங்கள். அரண்மனையில் அத்தனை பேருக்கும் அறுசுவை விருந் தளிக்க ஏற்பாடு செய்யுங்கள். அமைச்சரே, இந்த வயதில், உங்களை இப்படித் தொல்லைப்படுத்துவதற்கு மன்னித்து விடுங்கள்."

"அரசே, பரணர் பாடவேண்டும் என்று தாங்கள் ஏங்குவதை நான் அறிவேன். உங்கள் ஏக்கத்தைப் போக்க முடியவில்லையே என்று நானும் ஏங்கினேன். நம் இருவர் ஏக்கமும் இன்று நீக்கப்பட்டது! அதனால் எனக்குத் தொல்லையில்லை. பொழுது விடியும்போது அரண்மனை மட்டுமன்றி, ஊரே விழாக்கோலம் பூணச் செய்கிறேன். ஒரே ஆண்டில், ஒரே திங்களில் இருமுறை பிறந்த நாள் விழா நடக்கிறது என்று பேசும்படி வஞ்சியை வனப்புறுத்துகிறேன்" என்றார் அமைச்சர்.

அன்று நள்ளிரவில் ஊரே விழித்துக்கொண்டது.

"பரணர் நம் வேந்தரைச் சிறப்பிக்கும் பாடல் நாளை அரங்கேறுகிறது."

இதே செய்தி ஒவ்வோர் இல்லத்திலும் பூரிப்போடு பேசப்பட்டது.

அதனால்தான் அன்றைய அரசவை இன்றியமையாத தாயிற்று.

வழக்கமாக அவைக்குரிய அனைவரும் வந்த பிறகு இறுதியாக அரசர் அவையில் நுழைவார். ஆனால் அன்று

அரசவைக்குப் பிறர் வருவதற்கு முன்னரே அரசர் வந்து விட்டார். பரணரை வரவேற்க அவரே வாயிலில் நின்றார். வேந்தரே வெளியே நிற்கும்போது, வேறு யார் உள்ளே அமரமுடியும்!

அதிகாரிகள், புலவர்கள், படைவீரர்கள், குடிமக்கள் என வெள்ளம் போல் கூட்டம் அரசவையின் வெளியே அணிவகுத்து நின்றது.

பரணரை விருந்தினர் மாளிகையிலிருந்து வேந்தன் அவைக்கு அழைத்துவர, செங்குட்டுவன் தமக்குரிய பொற்றேரை அனுப்பியிருந்தார்.

பொற்றேர் வந்தது!

கவியரசர் பரணர் இறங்கினார். புவியரசர் செங் குட்டுவன் அவரைப் பணிந்து வரவேற்று அத்தாணி மண்டபத்துக்குள் அழைத்துச் சென்றார். பரணருக்காக அமைக்கப்பட்ட சிறப்பு இருக்கையில் அவரை அமர்த்திவிட்டுப் பின் அரசர் அரியணையில் அமர்ந்தார்.

அரசருக்கு அருகே அரியாசனத்தில் சரியாசனம் பெற்று வேண்மாள் வீற்றிருந்தாள்.

செங்குட்டுவன் அவையினரைப் பார்வையிட்டான்.

அண்ணன் வாழ்வுக்காக அரசபோகத்தையும் பிற ஆசைகளையும் ஒரு கணத்தே துறந்த இளங்கோ அடிகள், தண்டமிழாசான் சாத்தனார் உட்படப் புலவர் பெருமக்கள் ஒருபுறம். அழும்பில்வேள் முதல்வராக அமர்ந்திருந்த அரசு அதிகாரிகள் ஒருபுறம். குன்றத்தூர் கோமான் அறுகை முதல்வராக அமர்ந்திருந்த நண்பர்கள் ஒருபுறம்! கோதை முதலில் வீற்றிருக்கக் கூடிய அரிவையர் ஒருபுறம்!

குலம் தழைக்க வந்த ஒரு மகனான திருமகன், இளவரசன் குட்டுவன் வீற்றிருக்க வேண்டிய இருக்கை

வெறிச்சென்றிருந்தது. அங்கே அமரவேண்டிய இளவரசன் எங்கே? தந்தையின் புகழைக் கேட்கத் தனயன் வர வேண்டாமா?

செங்குட்டுவரின் முகத்திலே சிறிது வாட்டம் தோன்றியது; தோன்றிய மறுகணமே அது மாறியது. காரணம் இள்வரசன் குட்டுவன் அப்போது அவையில் நுழைந்தான்! மனத்துயரால் முதலில் அவைக்குச் செல்ல விரும்பாத குட்டுவன், பரணரின் பைந்தமிழைக் கேட்டால் ஆறுதல் கிடைக்கும் என்று எண்ணிக் காலதாமதமானாலும் குற்ற மில்லை எனத் துணிந்து அவைக்கு வந்தான். அரசரைப் பணிந்து தன் இருக்கையில் அமர்ந்தான்.

புதல்வன் வந்த பிறகு அந்த அவையிலே குறையில்லை. அரசர் மனநிறைவு கண்டார்.

மன்னர் சிரமசைத்தார். அவரையே நோக்கியவாறு இருந்த அமைச்சர் அக்குறிப்புணர்ந்து எழுந்தார்.

"அவையோரே, இன்று சேரநாட்டுக்கு ஒரு திருநாள். செந்தமிழ் இலக்கியம் வளம் பெறும் பெருநாள்! கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனைக் கரணம் அமைந்த காசறு செய்யுட் பரணர்* பாடும் தமிழ்நாள்! பூமி முழுதும் வென்றால் கிடைக்கும் புகழினும், புலவர் பாடும் புகழ் பெரிது! புலவரின் தலைவரெனத் தகும் பரணரால் பாடப் பெறும் புகழ் பெரிதினும் பெரிது; பேரிசை இமயத்தினும் பெரிது! பெறற்கரிய இப்புகழை இன்று நம் மன்னர் எய்தவிருக்கிறார். சேரநாட்டுத் தெய்வம் எனத் தகும் இளங்கோ அடிகள், பாத்திறம் படைத்தோரும் ஏத்தி இன்புறும் சாத்தனார், முன்னிலையில் பாவலரேறு பரணர் தம் பாடலை அரங்கேற்றுவார்."

---

* பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தின் குறிப்புச் சொற்றொடர், இது. கரணம் – அறிவு.

அமைச்சர் அமர்ந்தார், ஆரவாரம் எழுந்தது. பரணர் எழுந்ததும் அது அடங்கியது. பரணர் தம் கரத்திலிருக்கும் ஏட்டுச் சுவடியைச் சுற்றிய நூலைப் பிரித்தபடி பேசினார்:

"செஞ்சடைக் கடவுள் அருளினாலே இந்த வஞ்சியில் தோன்றிய வானவா, உன்னைப் பல்கால் கண்டு பழகிப் பயன்பெற்றும் இதுநாள்வரை பாடிப் பரவசமுற்றதில்லை. வில்லவா, நின்புகழ் விண்ணளவு உயர்ந்தது! வையம் போல் பரந்தது! விரிகடல் துளிகளின் எண்ணிக்கை போல எண்ணற்ற பாக்கள் புனைந்தாலும் முழுதும் கூறி முடிக்க முடியாதது! நினக்கு முன் நின் நிலத்தை ஆண்ட உதியஞ் சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்குழு குட்டுவன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் ஆகிய நால்வரையும் பாடிய புலவர்கள், ஒவ்வொருவருக்கும் ஒரு பத்துப் பாடலையே பாடியருளினார்கள். நானோ உனக்கு ஒரு பத்துத் தருவதற்குப் பதில் பத்துப் பத்துப் படைக்க விரும்பினேன். அதனால்தான் இதுவரை பாடாமல் காலம் தாழ்த்தினேன். ஆனால் இன்று காலை உன் புகழ் மாலையை அரங்கேற்ற நேற்று மாலைதான் முடிவு செய்தேன். ஓர் இரவுக்குள் முடிக்க நினைத்ததால் சதகம் பாடாமல் பதிகம் பாடியுள்ளேன்.* அதிகம் பாடவில்லை. என் நூலுக்கு ஓர் இரவே எல்லையாகிப் போனதால், பத்துப் பாடல்களிலும் சிலவற்றைக் குறும்பாடல்களாகப் படைத்து விட்டேன்."**

---

* சதகம் – நூறுபாடல்; பதிகம் – பத்துப்பாடல்.

** பரணர் பாடிய பத்துப் பாடல்களில் முதல் ஐந்து பாடல்களும் பத்தாம் பாடலும் இருபது அடிகளுக்கு மேற்பட்டவை. பிற இருபது வரிகளுக்கு உட்பட்டவை. ஆறாம் பாடல் 14 அடிகளும், ஏழாம் பாடல் எட்டே அடிகளும் கொண்டவை.

பரணர் பேச்சைக் கேட்ட மன்னர் குழப்பமடைந்தார். 'ஓர் இரவுக்குள்ளேயே நூலை முடிக்க வேண்டிய அவசியம் என்ன?" என்று யோசித்தார். அதற்குள் பரணர் தம் பேச்சை முடித்து நூலை அரங்கேற்றினார்.

சேரன் செங்குட்டுவனின் கல்வி, செல்வம், வெற்றி, கொடை முதலிய குணங்களைப் பத்துப் பாடல்களில் பாடினார் பரணர். செங்குட்டுவன் சிறப்பும் செந்தமிழின் சிறப்பும் ஒருசேர வெளிப்பட்டன.

செங்குட்டுவன் அடைந்த மகிழ்ச்சியின் அளவுக்கு, இந்த வையகம், வானகம், வெங்கதிர் மண்டிலம், விண்மீன்களின் வெளிப்பரப்பு ஆகிய அனைத்தும் ஒன்றானாலும் உவமை யாகாது.

வசையில் நெடுந்தகை!
அண்ணல் யானை அடுபோர்க் குட்டுவ!
போரடு தானைப் பொலந்தார் குட்டுவ!
*தொலையாக் கற்ப**
கசடு இல் நெஞ்சத்து ஆடுநடை அண்ணல்!
*எழுமுடி மார்பின் எய்திய சேரல்!***
வெல்புகழ்க் குட்டுவன்!
கடலொடு உழந்த பனித்துறைப் பரதவ!
பெருஞ்சினக் குட்டுவன்!

---

* இத்தொடருக்கு அழியாத கல்வியறிவு, ஒழுக்கங்களை உடையன் என்பது பொருள்.

** சேரனால் வெல்லப்பட்ட ஏழு பகை அரசர்களின் ஏழு மணி முடியை அழித்து, அந்தப் பொன்னால் செய்த ஆரத்தை அணிந்தவன் செங்குட்டுவன்.

பரணர் அழைத்த பாராட்டுப் பெயர்கள் சேரனின் செவியைத் தேனாக்கிச் சிந்தையை அமிழ்தாக்கி, ஒவ்வோர் அணுவையும் சிலிர்க்கச் செய்தன! முன்னே நிகழ்ந்த கடற்போரின் வெற்றியையும், அண்மையில் நிகழ்ந்த மோகூர் வெற்றியையும் பரணர் சிறப்பித்துப் பாடியது கேட்டுச் சிரமசைத்துக் களித்தான்; களிப்பிலே விழிகளில் நீர் துளித்தது!

செங்குட்டுவன் சிங்காதனத்திலிருந்து எழுந்தான். இறங்கி வந்தான். பரணரின் திருவடியை வணங்கி எழுந்தான்!

"பாவலர் பரணர் வாழ்க! காவலர் சேரர் வாழ்க!" என்று அவை ஒரு குரலில் வாழ்த்திற்று.

"பரணரே, இந்தக் கணத்திலேயே நான் இறக்கச் சித்தமாயிருக்கிறேன்! ஏனென்றால் உங்கள் இறவாக் கவிதை என்றென்றும் இருந்து என்னை, என் புகழை வாழ்விக்கும். உங்கள் பாடலுக்கு அழிவில்லை. பாடற் பொருளான நானும் அழியப்போவதில்லை. பரணரே, பத்துப் பாடல் குறைவு என்றீர். அவற்றில் சில அளவில் குறைந்தன என்றீர்! பரணரே இந்தப் பத்துப் பாட்டில் ஒரு பாட்டுக்கூட போதும்! அதுவே எனக்கு நிலைப்பேற்றைத் தரும்" என்று பேரானந்த வெள்ளத்தில் மூழ்கித் திளைக்கும், களிக்கும் செங்குட்டுவன் கூறினார்.

அவையோர் மீண்டும் வாழ்த்தொலி எழுப்பினர்.

அரசர் அமைச்சரை நோக்கித் திரும்பினார்.

"அமைச்சரே, ஆண்டுதோறும் நம் அரண்மனைக் கருவூலத்திற்கு அதிக வருவாய், நம் நாட்டின் எந்தப் பகுதி யிலிருந்து வருகிறது?" என்று கேட்டார்.

"பரணர் பாடல் பெற்ற பார்வேந்தே! நம் கருவூலத்தின் வருவாயில் காற்பகுதி, உம்பற்காட்டிலிருந்து வருகிறது. உங்கள் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்தில் உம்பற்காட்டுப் பகுதி, அதைச் சுற்றிய ஐந்நூறு ஊர்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. அப்போது சேரநாட்டு வருவாயில் சரிபாதி அங்கிருந்தே வந்தது. தம்மைப் பாடிய புலவர் குமட்டூர்க் கண்ணனார்க்கு நெடுஞ்சேரலாதன் அந்த ஐந்நூறு ஊர்களையும் பரிசளித்து விட்டார். அதனால் ஊர்களை விலக்கிய உம்பற்காட்டின் வருவாய் குறைந்தது. என்றாலும் அகிலும் தேக்கும் சந்தனமும் நிறைந்ததும், விண்மீன் போல எண்ணத் தொலையாத வேழங்களைப் பெற்றதுமான உம்பற்காட்டின்* வருவாயே இன்றும் நம் கருவூலத்தை நிறைத்து வருகிறது" என்றார் அமைச்சர்.

அரசர் பரணர் பக்கம் திரும்பினார்.

"பாவேந்தரே, உங்கள் பத்துப் பாட்டிற்கும் உம்பற்காட்டைப் பரிசளிக்கிறேன். இன்று முதல் உம்பாற்காட்டின் வருவாய் உமக்கே உரியது."

மன்னர் அறிவித்தார். பின்னர் அரியணையில் முன்போல அரசியின் அருகே மன்னர் அமர்ந்தார்.

அரசரின் கொடைச் சிறப்பால் மற்றொரு முறை அவையில் ஆரவாரம் எழுந்தது!

பரணர் முகத்தில் பெறற்கரும் பரிசு பெற்ற களிப்பு அலைமோத வேண்டுமே?

பரணர் முகம் சலனமற்றிருந்தது.

ஆரவாரம் அடங்கிய பிறகு, பரணர் பேசினார்.

"சேர வேந்தே, உம்பற்காட்டு வருவாய் உலகம் வியக்கும் பரிசுதான். என்றாலும் எனக்கது தேவையில்லை. என்

* உம்பல். – யானை; உம்பற்காடு – யானைகள் நிறைந்த காடு.

உள்ளம் உவந்த பரிசினைத் தங்களிடம் கேட்டுப் பெறலாமா?"

பரணர் கேட்டதும் செங்குட்டுவன் நொடி கூடத் தாமதிக்காமல், "கேளுங்கள் புலவரே! நீங்கள் எதைக் கேட்டாலும் தருகிறேன்" என்று பூரிப்போடு சொன்னார்.

அவையில் அமைதி! பரணர் கேட்கும் பரிசு எது என்பதை அறியும் ஆவலால் பிறந்த பேரமைதி!

"தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாமல் எளிதினில் ஈயும் இயல்புமிக்க வேந்தே! யான் கோரும் பரிசில் நின் மகன் குட்டுவன் சேரல்! உங்கள் மகனை எனக்குப் பரிசளிக்க வேண்டுகிறேன்."

பரணர் சொன்னதும், "புலவரே" என்று பதறினார் அரசர்.

அத்தியாயம் இருபத்தாறு

இசை வெள்ளம்

பரணர் வேண்டிய பரிசினைக் கேட்டு அரசர் பதறினார்; அரசி கதறினாள்; கோதை குமுறினாள். அறுகை அயர்ந்தார். அவையோர், "இளவரசனைப் பரிசாய்க் கேட்பதா? இப்படியொரு பரிசை இதற்கு முன் கேட்டவர் இல்லை, கொடுத்தவர் இல்லை" எனப் பல்வேறு வகையில் தம் வியப்பையும் வேதனையையும் வெளிப்படுத்தினர்.

பரணரின் பரிசைக் கேட்டதுமே குட்டுவன் ஒரு நொடி குழப்பமடைந்தான்; மறுநொடி குழப்பம் குதூகலமானது. குட்டுவன் முகத்தில் பட்டொளி படர்ந்தது; பரவசம் தொடர்ந்தது.

அலையெறி கடல் போன்ற அவையினரின் குரலோசைக்கு மேலே தம் குரலை எழுப்பிப் பேசினார், பரணர்.

"செங்குட்டுவ! நான் பரிசு கேட்டேன். உன் பதற்றத்தைப் பார்க்கும் போது, கேட்ட பரிசைத் தர நீ விரும்பவில்லை என்பது தெரிகிறது; புலவர்கள் புரவலர்களிடம் பரிசு கேட்கலாமே தவிர, கேட்ட பரிசைக் கொடுத்தே தீர வேண்டும் என்று வற்புறுத்த முடியாது. அதனால் கவலையை விடு! உனக்கு விருப்பமில்லை என்றால் நான் கேட்ட பரிசைத் தர வேண்டாம்."

பரணர் அவையை விட்டு வெளியேற முனைந்தவராய்த் திரும்பி நடந்தார். அதைக் கண்ட அரசர், முன்னிலும் அதிக மாகப் பதறி எழுந்து "நில்லுங்கள் பரணரே" என்று கூறினார்.

பரணர் நின்றார்; திரும்பினார்; பார்வேந்தனைப் பார்த்தார்.

"பரணரே! புலவர் கேட்டதை ஒரு சேரன் கொடுக்க மறுத்தான் என்னும் பெரும்பழி சேரர் குடிக்கு என்னால் நேர வேண்டாம். பரணரே, நீங்கள் கேட்ட பரிசைத் தருகிறேன்."

செங்குட்டுவன் சொன்னதும், சிங்காதனத்திருந்த சேரமாதேவி வேண்மாள் அவர் திருவடியில் விழுந்தாள். "அரசே, நமக்கிருப்பது ஒரு குழந்தை! குட்டுவனை விட்டால் நம் குலம் தழைக்குமா? நாளைய அரசனை இன்றே கொடையாகக் கொடுத்தால் நாளை இந்த அரியாசனத்தில் யார் அமர்வது! சேரர் குலத்துதித்தோர் யாரோ ஒருவர் அமரலாம்! ஆனால் செங்குட்டுவரின் குருதியில் உருவான ஒருவன் அமர முடியுமா? செங்குட்டுவரின் செல்வன், அவன் பின் பேரன், அவனுக்குப்பின் பேரனுக்குப் பிறந்தவன் என்று உங்களை முதலாகக் கொண்டு ஒரு வீரக்குலம் தோன்றித் தொடர்வதை நீங்கள் தரும் பரிசு அழித்து விடுமே!"

வேண்மாள் விம்மினாள்.

"வேண்மாள், எனக்குப் பின் என் மகன், அவனுக்குப் பின் அவன் மகன், மகனுக்கு மகன் என்று தொடரும் சந்ததியினர் இந்த அரியணையில் அமர்ந்து எவ்வளவு நாள் என் புகழைக் கூறிக் கொண்டிருப்பார்கள் என்று நினைக் கிறாய்? வேண்மாள், பரணரின் பாடல் காலம் காலமாக வாழும். தமிழ் நிலம் உள்ளவரை, தமிழ் மொழி உள்ளவரை

செங்குட்டுவனின் சீரும் சிறப்பும் நிலைக்கும்; பரணர் பாடலால் நிலைக்கும். வேண்மாள், பரணர் பாடியதைக் கேட்டுக்கொண்டிருந்தபோது நீ தேனுண்ட வண்டாய் மயங்கினாயே! 'நன்னுதல் கணவ' என்று பரணர் பாடல் என்னை அழைத்த போது நாணினாயே! ஆயிரமாயிரம் ஆண்டுக்குப் பின்னே, 'நன்னுதல் கணவ' என்னும் பரணரின் பாடல் வரியைப் படிப்பவர், நல்ல நெற்றியை யுடைய இளங்கோ வேண்மாளுக்குக் கணவனே! என்று பொருள் கண்டு நின்னை நினைத்துப் பெருமிதமடைவாரே! அந்த நிலைப்பேற்றை, இந்த நில்லா உலகில் தரவல்ல பாடலுக்குக் குட்டுவனை மட்டுமா, என்னை, உன்னை இன்னும் சேரர் குடியிலிருக்கும் அனைவரையும், அவர்கள் வழியிலே இனித் தோன்றப்போகும் அனைவரையும் பரிசளித்தாலும் தகும். வேண்மாள், களித்து மகிழவேண்டிய நேரத்தில் கவலை கொள்ளாதே! எழு! அரசி என்ற நிலையில் இரு!"

செங்குட்டுவன் கூற, வேண்மாள் அன்னையுள்ளத்தை அடக்கி அரசியாக எழுந்து அரியணையில் அமர்ந்தாள். என்றாலும் அவள் விழிகளில் பேரியாறு போல ஈராறுகள் பெருகி வழிந்தன.

செங்குட்டுவன் அவையைப் பார்த்தார். குட்டுவனின் மகிழ்ச்சி அவர் கண்ணிலே பட்டது. 'என் பாடலுக்கு ஓர் இரவே எல்லையாகிப் போனது' என்று பரணர் சொன்னதை நினைவுபடுத்திக் கொண்டார். 'குட்டுவன் செல்வியை மறந்து கோதையை மணக்க நான் ஒரு சூழ்ச்சி செய்தேன். அந்தச் சூழ்ச்சியை இன்னொரு சூழ்ச்சியால் தோற்கடிக்கும் முயற்சியே பரணரின் பாடலும் பரிசும். இத்தகைய சூழ்ச்சி புலனழுக்கற்ற புலவருக்குத் தோன்றி யிருக்க முடியாது. அரசர் குடியின் குருதியிலேதான்

இத்தகைய சூழ்ச்சி இயல்பாகக் குடியிருக்கும். ஒருவேளை குட்டுவனே பரணரிடம் தம்மைப் பரிசாகப் பெறும்படி கூறியிருப்பானோ! சூழ்ச்சிக்குரியவன் யாராக இருந்தாலும் அவன் வாழ்க! அவனால் பரணரின் பாமாலை சூட்டப் பெற்றேன்! அதனால் என் மைந்தனை இழப்பதை எண்ணி வருந்தாமல் வாழ்த்துகிறேன். சூழ்ச்சிக்குரியனே, நீ வாழ்க! நீ வாழ்க! நீடுவாழ்க.'

செங்குட்டுவன் சிந்தனையை முடித்துச் செயலில் இறங்கினார். முன்போலவே அரியணையிலிருந்து இறங்கி வந்தார். 'குட்டுவா,' என்றழைத்தார்.

குட்டுவன் எழுந்து அரசர் அருகே சென்றான்.

"குட்டுவா, உன்னைப் பெற்று, பெயரிட்டு, பெரியவனாக, பெறற்கரும் கலைகளுக்கும் ஒழுக்கத்திற்கும் உரியவனாக வளர்த்திருக்கிறேன். மகனே, இத்தனைக்கும் கைமாறாக, உன்னிடம் கேட்பது இதுதான். பரணருக்கு உன்னைப் பரிசாக அளிப்பதை உவகையோடு ஏற்றுக் கொள்."

குட்டுவன் அவர் முன் வணங்கி, "ஏற்கிறேன் தந்தையே" என்றான்.

அரசர் அவன் கரத்தைப் பற்றிப் பரணரின் கரத்தோடு இணைத்தார்.

"இக்கணம் முதல் நீ பரணரின் உடைமை. அவர் விருப்பப்படி நடக்கவேண்டிய அடிமை" என்றவர், "பரணரே, நீங்கள் கேட்ட பரிசுப் பொருளை உள்ள நிறைவோடு உவந்தளிக்கிறேன். உம்பற்காட்டு வருவாயோடு இவனையும் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.

பரணர் குட்டுவனைப் பற்றித் தமதருகே நிறுத்திக் கொண்டார்.

"செங்குட்டுவா, சேரர் குடி கொடைக்குச் சிறப்புப் பெற்றது. இதுவரை சேரர்க்கு இணையாகப் புலவர்க்குப் பரிசளித்தவரைப் பாண்டியர் குலத்திலோ, சோழர் குலத்திலோ கண்டதில்லை. செங்குட்டுவா, தமிழ்ப் பாடலுக் காகத் தன் ஒரே மகனைக் கொடுத்த உனது கொடைச் செயல், இதுவரை தமிழுலகு அறியாத சிறப்புமிக்கது. ஒருவன் தன்னைத் தந்தாலும் தன் ஒரே மகனைத் தர மறுப்பான். நீயோ, உலகையே வென்று விற்கொடியின் நிழலில் நிறுத்தும் வல்லமை பெற்ற பிள்ளையைப் பரிசளித்துவிட்டாய். வில்லவா, என் பத்துப் பாடல்கள் மூலம் நின் புகழ் அழியாது நிலைக்கும் என்றாய். ஒருவேளை காலத்தின் கோலத்தால் என் பத்துப் பாடல்களும் அழிந்துவிட்டாலும், 'தன்னைப் பாடிய புலவர்க்கு உம்பற் காட்டு வருவாயும்,* தன் மகன் குட்டுவன் சேரலையும்

* *பரணரின் பாடலுக்காகச் சேர நாட்டு உம்பற் காடு என்ற பகுதியின் வருவாயைப் பரணற்கு நல்கித் தன் மகன் குட்டுவன் சேரல் என்பானை அவர் பால் கையடைப்படுத்திக் கல்வி கற்பிக்குமாறு செய்தான்" என்று ஔவை சு. துரைசாமிப் பிள்ளை தமது 'பண்டை நாளைச் சேரமன்னர் வரலாறு' என்னும் நூலில் கூறுகிறார்: இதைப்போல, குட்டுவன் சேரலைக் கல்விக்காகப் பரணரிடம் ஒப்படைத்தான் செங்குட்டுவன் என்று சொல்வார், வேறு சிலரும் உண்டு. இக்கூற்று ஏற்கத்தக்கதன்று.*

'பதிற்றுப் பத்து' நூலின் ஐந்தாம் பதிகத்தின் கீழுள்ள குறிப்பு, "பாடிப்பெற்ற பரிசில்; உம்பற் காட்டு வாரியையும் தன் மகன் குட்டுவன் சேரலையும் கொடுத்தான் அக்கோ" என்று ஐயத்திற்கிட மில்லா வ்கையில் தெளிவாகக் கூறுகிறது. கல்விக்காகத் தன் மகனைப் புலவரிடம் ஒப்படைக்கும் செயல், புலவர்க்களிக்கும் பரிசாகாது என்பது தெளிவு. அன்றியும் செங்குட்டுவனுக்குப் பின்னே குட்டுவன் சேரல் ஆட்சி செய்ததாக வரலாறு கூறவில்லை. அதனால் குட்டுவன் சேரலைக் கல்விக்காகச் சேரன் பரணரிடம் அனுப்ப வில்லை என்பதும், குட்டுவன சேரலைப் பரிசுப் பொருளாக வழங்கினான் என்பதும் உறுதிபெறுகின்றன— ஆசிரியர்.

பரிசளித்தான், செங்குட்டுவன்' என்னும் ஒரு சிறு குறிப்பு நிலைத்தாலும் போதும். உன் புகழ் நிலைக்கும்; நிலைக்கும்! ஞாலம் உள்ளவரை நிலைக்கும்! ஞாயிறும் திங்களும் உள்ளவரை நிலைக்கும். வேந்தே, நீ இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, பல வெற்றிபெற்று, சான்றோர் போற்ற வாழ்க! வாழ்க! வாழ்க!"

பரணர் கூறியதைத் தொடர்ந்து, "கொடைவள்ளல் செங்குட்டுவர் வாழ்க" என்று அவையினர் எழுப்பிய முழக்கம் விண்ணில் மோதி மண்ணுக்கு மீண்டது.

பரணர் அவையைவிட்டு நடந்தார். குட்டுவன் அவரைப் பின்தொடர்ந்தான். கண்டவர் அனைவரும் கண்கலங்க, மனம் புலம்ப நின்றனர்.

* * *

குணவாயிற் கோட்டத்துள் இளங்கோ அடிகளும் புலவர் பரணரும் உரையாடிக் கொண்டிருந்தனர்.

"அடிகளே, நேற்று நீங்கள் இட்ட பணியை முடித்து விட்டேன். நீங்கள் கோரியபடி அரசரைப் பாடிக் குட்டுவ னைப் பரிசாகப் பெற்றுத் தங்களிடம் ஒப்படைத்து விட்டேன்" என்றார், பரணர்.

"பரணரே, செங்குட்டுவர் இயல்பாகவே அரச மனோ பாவம் உடையவர். அரசகுலம், அரசபோகம், அரசபதவி, அரசப்பண்பு என்று அலைபவர். அவர் உடலின் ஒவ்வோர் அணுவிலும் அரசவுணர்வே தலைதூக்கி நிற்கும். அதனால் தான் எவனோ ஒரு நிமித்திகன் இளையவன் அரசனாவான் எனச் சொன்ன கணத்திலேயே கலங்கிவிட்டார். அரசர் 'செங்குட்டுவனின் சந்ததி இந்தச் சேரநாட்டை ஆள வேண்டும்' என்னும் ஆசை மிக்கவர். எனவே, குட்டுவன்

பிற கலைகளைவிடப் போர்க்கலையில் மிகுந்த தேர்ச்சி பெறுமாறு செய்தார். அத்தகைய அரசர் தம் மகனைப் பரிசளிப்பாரா என்னும் ஐயம் என்னிடம் இருந்தது. ஆனால் பரணர் பாடலுக்கு அவர் தம் உயிரையும் உவந்தளிப்பார் என்னும் நம்பிக்கையால்தான் தங்களிடம் பாடலைப் பாடி, குட்டுவனைப் பரிசாகக் கேட்கச் சொன்னேன். பரணரே, குட்டுவன் இல்லையென்றாலும், அரியணையில் அமர்ந்து சேரநாட்டை ஆளத்தக்க மாவீரர்கள் சேரர் குடியில் மிகப் பலர் உள்ளனர். ஆனால் செல்வியைப் போலத் தேனிசையை, தெய்வ கீதத்தைத் தருபவர் சேரநாட்டில் யாருமில்லை. அந்த இசையரசியின் வாழ்வுக்காக, நான் வேண்டியபடி நீங்கள் குட்டுவனைப் பரிசாகப் பெற்றது தகுந்த செயலே!"

"அடிகளே, நீங்கள் கூறியதை நானும் ஏற்கிறேன். சேர நாட்டு இசைச் செல்வத்தைக் காத்த பணிக்கு என் பாடல் பயன்பட்டதை எண்ணிப் பெருமையடைகிறேன். பாவம், கோதை! அவள் அதிகம் ஏமாந்திருப்பாள். என்னைச் சபித்துக்கொண்டிருக்கவும் கூடும்."

"இல்லை பரணரே! நீங்கள் வெளியேறிய பிறகு நான் அரசவையில் சிறிது நேரம் தங்கினேன். கோதை பிற பேதைப் பெண்களைப் போலக் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கவில்லை. குட்டுவனையே கணவனாக வரித்துவிட்ட அந்தப் பெண், அவன் எட்டாக் கனியானதை அறிந்த போதுதான் செல்வியின் காதலைப் பற்றி யாரோ கூற அறிந்தாள். உடனே அவள் குடும்ப வாழ்வைத் துறந்து, புனிதன் புத்தனின் பொன்னடி பணிந்து பௌத்தமதத் துறவியாக முடிவு செய்துவிட்டாள். சாத்தனார் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யப் போகிறார். புலவரே, துறந்தார் பெறும் இன்பத்தை அனுபவித்து அறிந்த நான் கோதையின்

முடிவு அவளுக்கு முடிவிலா இன்பம் தரும் என்றே நம்புகிறேன்.”

அடிகள் கூறிமுடித்தபோது கோட்டத்துக்குள் குன்றக் குமரன், செல்வி, குட்டுவன் ஆகிய மூவரும் நுழைந்தனர். மூவரும் அடிகளையும் புலவரையும் அணுகிப் பணிந்தனர்.

“செல்வி, என் அடிமை என்று நான் பெற்ற குட்டுவனை உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். இனி அவன் உன் அடிமை” என்று புலவர் கூறினார், புன்னகையுடன்.

“அடிகளே உங்கள் முயற்சியால் என் மனம் கவர்ந்தவரைப் பெற முடிந்தது. புலவரே, உங்கள் பாடலால் என் காதலரைக் கைப்பற்றினேன். இருவருக்கும் நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்” என்று கூறினாள், செல்வி.

“குன்றக்குமர, செல்வியையும் குட்டுவனையும் அழைத்துக்கொண்டு இன்றே உங்கள் கொல்லிமலைக்குச் செல். அங்கே பாணர்குல முறைப்படி குட்டுவனுக்கும் செல்விக்கும் திருமணம் நடத்து. நானும் புலவரும் எங்கள் நல்லாசிகளை இப்போதே வழங்கி விடுகிறோம். குட்டுவனும் செல்வியும் இனிமையும் தமிழும் போல இணைந்து வாழ்க” என்றார், அடிகள்.

“அடிகளும் அருளும் போல இணைந்து வாழ்க” என்று வாழ்த்தினார், பரணர்.

செல்வியும் குட்டுவனும் இருவர் முன்னும் வணங்கி எழுந்தனர்.

செல்வி, ‘இளவரசே’ என்று குட்டுவனிடம் ஏதோ சொல்ல அழைத்தாள்.

“செல்வி, நான் இனி இளவரசனல்ல!” என்றான், குட்டுவன்.

"ஆம் செல்வி, குட்டுவன் அரசன் மகனாய் இருந்தால் இளவரசன். அந்த உறவு நீங்கி, இசையரசியின் கணவனாய் விட்டான். அதனால் அவனை இசையரசன் என்று அழை" என்று குறுநகையுடன் கூறினார், அடிகள்.

"அடிகளே, எனக்குப் பல கலைகள் தெரியும். ஆனால் இசைக் கலையைப் பயின்றதில்லை. அதன் இலக்கணம் தெரியாது. எந்தக் கருவியையும் இசைக்கத் தெரியாது. சொந்தக் குரலில் இசையெழுப்பவும் தெரியாது. செல்வி யின் இசையிலே மயங்கி நிற்கவே தெரியும்," என்றான் குட்டுவன்.

"அதுதான் இசையின் சிறப்பு. இசைத்திறம் பெற்றவர் பெறும் இன்பத்தை, அதைக் கேட்கும் யாவரும் பெறுவர்; மாவும் புள்ளும் பெறும்; மரமும் செடியும் பெறும்; மலையும் மடுவும் பெறும்! அதனால் இசைப்பவரும், இசைக்கு இசைந்து நிற்பவரும் ஒரு தன்மையரே" என்றார், அடிகள்.

குன்றக்குமரன், "அடிகளே, விடைபெறலாமா?" என்று கேட்டான்.

"குன்றக்குமரா, செல்வியையும் குட்டுவனையும் கண்ணை இமை காப்பது போலக் காத்துவா! முன்போல அவ்வப்போது இங்கே வா! செல்வியின் இசையைக் கேட்கும் பேற்றை ஆண்டில் சில முறையாவது நான் பெற வேண்டும்" என்றார் அடிகள்.

"அப்படியே ஆகட்டும் அடிகளே" என்று ஒப்பினான், குன்றக்குமரன்.

"செல்வி, புறப்பட்டுச் செல்லும் முன், உன் இசை அமுதத்தால் எங்களை இன்புறச் செய்" என்றார், இளங்கோ அடிகள்.

செல்வி தேனூற்றுக் குரலால் அருகன் புகழ் கூறும் ஒரு பாடலைப் பாடினாள். அந்த இசைவெள்ளம் மெல்லப் பரவியது; துறவி, புலவர், பாணர், அரசர் என்னும் வரப்புகளை மூழ்கடித்து அந்த இசைவெள்ளம் பெருகிப் பாய்ந்தது. அந்த இசை வெள்ளத்தில் திளைத்தவர் பெற்ற இன்பத்துக்கு, இறைவனோடு ஆன்மா இரண்டறக் கலக்கும்போது பெறும் இன்பத்தைத் தவிர வேறு எதுவும் உவமையாகாது!

❖